# மாவீரர்

# மருதுபாண்டியர்



டாக்டர்
**S.M.கமால்**

சிவகங்கைச்சீமை (கி. பி. 1772 – 1801)



மாவீரர்

# மருதுபாண்டியர்

ஆசிரியர் :

டாக்டர் எஸ். எம். கமால்

வெளியீடு :

ஷர்மிளா,

21, ஈசா பள்ளிவாசல் தெரு,

இராமநாதபுரம் - 623 501.

# *BIBLIOGRAPHICAL DATA*


| | | |
|---|---|---|
| 1. | *Title* | : *Maaveerar Marudhupandiar* |
| 2. | *Author* | : *Dr. S.M. Kamal, Ramanathapuram-623 501* |
| 3. | *Language* | : *Tamil* |
| 4. | *Edition* | : *First (October 1989)* |
| 5. | *Copyright* | : *Author* |
| 6. | *Size of the Book* | : *21.5 × 14 Cms.* |
| 7. | *Type used for Text* | : *10pt. Tamil Roman* |
| 8. | *Pages* | : *248 + 16 = 264* |
| 9. | *No. of Copies* | : *1000* |
| 10. | *Printers* | : *Parani Achchaham, 78-A, Dhanappa Mudali St., Madurai - 625 001.* |
| 11. | *Publishers* | : *Sharmilah Publishers, 21, Esapallivasal St., Ramanathapuram-623 501.* |
| 12. | *Price* | : *Rs. 30-00* |
| 13. | *Subject* | : *Modern History of Tamil Nadu (18th Century) relating to the National Freedom Struggle.* |

---

● மாவீரர் மருதுபாண்டியர்
முதற்பதிப்பு : அக்டோபர் 1989


© டாக்டர் எஸ். எம். கமால்


அச்சிட்டோர் : பரணி அச்சகம் 78ஏ தானப்பமுதலிதெரு
மதுரை - 625 001 ● விலை ரூ 30-00

தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமொன் றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற்றிருக்க எவன்கொலோ விரும்புவன்?

— மகாகவி பாரதியார்.

# அறிமுகம்

பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதிப்பகுதி தமிழக வரலாற்றில் மிகவும் முக்கியமான திருப்பமாக விளங்குகிறது. மதுரை மண்ணில், குறிப்பாக மறவர் சீமையில் அரசியல் மாற்றங்கள் மிகவும் விரைவாக உருப்பெற்றன. அத்துடன் வரலாறு காணாத வறட்சியும் மக்களை வாட்டி வதைத்தது. இந்தக் கொடுமைக்கு இடையில், பரங்கியரது ஆதிக்க வெறி, அருகம்புல்லைப்போல தாவிப்பரவியது.

பழமையும் பெருமையும் மிக்க இராமநாதபுரம், தஞ்சாவூர் தன்னரசுகளை நிரந்தரமாக நீக்கி விடுவதற்கு கும்பெனியார் நடவடிக்கைகள் மேற்கொண்டனர். அத்துடன் முன்னூறு ஆண்டு கால நாயக்க அரசின் ஆணிவேராக அமைந்து இருந்த பாளைபட்டுக்களையும் அழித்தனர். கும்பெனியாரின் கோர எண்ணங்களைக் கண்டு குமைந்து எழுந்த இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி, வாழ்நாளெல்லாம் வாடி மடியுமாறு வெஞ்சிறையில் தள்ளப்பட்டார். பாஞ்சாலங்குறிச்சி, சாப்டூர் பாளையக்காரர்கள் தூக்கிலே தொங்கவிடப்பட்டனர். இந்தக் கொடுமைகளைக் கண்ட இராமநாதபுரம் சீமை மக்களுடன் மதுரை, திண்டுக்கல் சீமை பாளையக்காரர்கள் கொதித்து எழுந்தனர்.அவர்களில் காடல்குடி, குளத்தூர், கோல்வார்பட்டி, சிவகிரி, பழனி, விருபாட்சி, கன்னிவாடி, கோம்பை, தேவதானப்பட்டி, வாராப்பூர், நத்தம் பாளையக்காரர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இத்தகைய கொந்தளிப்பான நிலையில், சிவகங்கை அரசின் பிரதானிகளாகச் செயல்பட்ட மருது சேர்வைக்காரர்கள், தமிழக மக்களின் தன்மான உணர்வை அறுதியிட்டுக்காட்டும் துணிச்சலான முடிவை மேற்கொண்டனர். அதுவரை அவர்களது அருமை நண்பர்களாக இருந்து வந்த அவர்கள், ஆங்கில கிழக்கிந்திய கும்பெனியாரையும் அவர்களது ஆதிக்க கொள்ளையையும் எதிர்த்துப் போராடுவது என்பது அவர்களது முடிவு "நல்லினத்தின் ஊங்கும் துணை இல்லை, தீயினத்தின் அல்லல் படுப்ப தூஉம் இல்லை" யல்லவா? ஆனால் இந்த முடிவைச் செயல்படுத்த வல்லோ

ரின் துணை வேண்டும். நெல்கட்டும் செவ்வல் பூலித்தேவர்,
நவாப்பையும் அவரது கூலிப்படையான கும்பெனியாரையும்
பொருதுவதற்கு மைசூர் மன்னர் ஐதர்அலியின் பேராதரவு அவ
ருக்கு இருந்தது. மதுரையை முற்றுகையிட்ட நவாப்பின் படை
களை முறியடிக்க கம்மந்தான் கான்சாகிபுவிற்கு பிரஞ்சு ராணுவம்
கை கொடுத்து உதவியது. பாஞ்சாலங்குறிச்சி கோட்டை தாக்கு
தலை தொடுப்பதற்கு கட்டபொம்மு நாயக்கருக்கு டச்சுக்காரர்
களது ஆயுதங்களும் பணமும் உதவின. ஆனால், சிவகங்கை
சேர்வைக்காரர்கள், கும்பெனியாருடன் மோதுவதற்கு வெளியில்
இருந்து உதவி பெறும் வாய்ப்பு இல்லை. எனினும், சிவகங்கைச்
சீமை மக்களது மகத்தான துணிச்சலிலும், திறமையிலும் நம்
பிக்கை கொண்டவர்களாக பரங்கிகளுடன் பொருதினர். முழுமூச்
சுடன் போராடினர்.

அதுவரை, நேருக்கு நேர் நின்று போரிடும் இயல்பான
முறையுடன், கட்டுப்பாடும் ராணுவப்பயிற்சியும் மிக்க எதிரியை,
மறைந்து இருந்து தாக்கும் கொரில்லாப் போரினையும் மேற்
கொண்டனர். பலபோர்களில் நூற்றுக்கணக்கான மறவர் மடிந்
தனர். பிறந்த மண்ணைக் காப்பதற்காகப் போராடினோம் என்ற
மன நிறைவுடன், வெள்ளைப் பரங்கியரின் வெடிமருந்துச் சாத
னங்கள் - அவைகளைத் திறமையாகப் பயன்படுத்தும் பயிற்சி-
மறவர் சீமை மக்களது வீரத்தை வெற்றி, கொண்டன. அவர்க
ளது சூழ்ச்சியும் துரோகமும் போராளிகளது எதிர்ப்பு அணியைப்
பிளந்து, எளிதில் வெற்றி கொள்ள உதவின. என்றாலும் இந்த
ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை மக்கள் இயக்கமாக, மகத்
தான நாட்டுப்பணியாக இராமநாதபுரம், சிவகங்கைச் சீமை
களில் ஆறுமாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வந்த மருது
சகோதரர்களும் அவர்களது வழியினரும், உற்றமும் சுற்றமும் -
அனைத்து ஆண்மக்களும் - விடுதலைப்போரின் வெகுமதியாக
தூக்குமரங்களில் தொங்கவிடப்பட்டனர். இருநூறு ஆண்டு
களுக்கு முன்னர், நாட்டையும் நாட்டு மக்களையும் பற்றி சிந்
தித்து செயல்பட்டவர்களுக்கு, வெஞ்சினத்துடனும் வீர சாகசங்
களுடன் போரிட்ட நல்லவர்களுக்கு, ஏகாதிபத்தியத்தின் அன்
றைய வாரிசான ஆங்கில கிழக்கிந்திய கும்பெனியார் வழங்கிய
அரிய பரிசு-தூக்குத்தண்டனை.

அவர்களது வீரமிக்க போராட்டமும். தன்னலமற்ற தியாகமும், இந்திய தேசிய வரலாற்றில், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில், சிறப்பு மிக்க புனித ஏடுகளாக இருந்து வருகின்றன. ஆனால், இவர்களுக்கு முன்னால் மறவர் சீமையின் முன்னோடியாக விடுதலை வேள்வியில் களபலியாகிய இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி (கி. பி. 1762-95) மன்னரை மறந்தது போல, சிவகங்கைச் சேர்வைக்காரர்களது இணையற்ற போராற்றலையும் தியாகத்தையும் இந்திய தேசிய இயக்க வளர்ச்சிக்கு அவர்களது பங்களிப்பையும், தமிழகமக்களும், வரலாற்று ஆசிரியர்களும், அரசினரும் இதுவரை புரிந்து கொள்ளவில்லை. மறந்து விட்டனர். இந்திய தேசிய இயக்கம், கி. பி. 1857-ல் தான் ''சிப்பாய் கலகத்தின்'' வாயிலாக துவங்கியதாகக் கணிக்கப்படுகிறது. தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை உருவாக்கும் வகையில் உண்மையான வரலாற்றையும் பங்களிப்பையும் எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயமும் பொறுப்பும் வரலாற்று ஆசிரியர்களுக்கு இருப்பதால், நமது நாட்டு விடுதலைப் போராட்டங்களின் சரியான வடிவத்தை, ஆதாரபூர்வமான சித்திரத்தை வரைவதற்கு முனைந்துள்ளேன்.

தமிழகத்தின் சுயேச்சைத்தன்மை, சிந்தனைகள் — இவைகளின் அடிப்படையில் எழுந்த பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், பாரம்பரிய தொழில்கள் ஆகியவைகளை அழிக்க முனைந்த கும்பெனியார் என்ற ஏகாதிபத்திய வெறியர்களை அழிக்க 1792-95ல் முனைந்தார் முத்துராமலிங்க சேதுபதி மன்னர். அவருடைய நிறைவு பெறாத சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து மறவர் அணிகளை ஆங்காங்கு திரட்டி, வெள்ளைப்பரங்கிகளையும் அவர்களது கூலிப்படைகளையும் வீழ்த்தி அழிப்பதற்கு கி.பி. 1801ல் விடுதலைப் போரைத் துவக்கியவர்கள் சிவகங்கை சேர்வைக்காரர்கள். அவர்களும், அவர்களது ஆதரவாளர்களும், பிறந்த பொன்னாட்டின் பெருமையைக் காக்கப் போராடிய பாங்கும் தியாக உணர்வும், வேறுநாட்டுப் போராட்ட ஏடுகளிலும் காண இயலாததாக உள்ளன. ''மா ஆயிரம் பட மடிந்த களப்போர் உரைப்போருக்கு நாவு ஆயிரமும் நாள் ஆயிரமும் வேண்டும் ''என்ற ஜயங்கொண்டாவது பாடல்தான், அவர்களது விடுதலைப் போராட்டத்தைப் புலப்படுத்தப் பொருத்தமாக உள்ளது.

என்றாலும், இதுவரை சிவகங்கை சேர்வைக்காரர்கள் பற்றி புனையப்பட்டுள்ள நாடோடி இலக்கியங்கள், வாழ்க்கைவரலாற்று

நூல்கள், அவைகளில் கண்டுள்ள செய்திகள் அனைத்தும் பெரும் பாலும் மிகைப்படுத்தப்பட்டனவாகவே உள்ளன. ஆதலால், ஆவை களை விடுத்து, விடுதலைக்குப் போராடிய இந்த வீரர்கள் பற்றிய உண்மையான தியாகவடிவை, பல்வேறு ஆவணங்களின் துணைக் கொண்டு இந்த நூலில் சித்திரிக்க முயன்றுள்ளேன். சிவகங்கைச் சீமை சேர்வைக்காரர்கள் பற்றிய முழுமையான நூலாக இந்த நூல் அமையாவிட்டாலும், அவர்களது பொன்றாப் புகழுக்குப் பெருமை சேர்க்கும் விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய விரமான தகவல்களைத் தருகின்ற முதல்நூலாகக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் இந்த நூலில் பொதிந்துள்ள உண்மை விவரங் களை கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு ஆவணங்களில் இருந்து படித்து குறிப்புக்கள் எடுத்துக் கொள்வதற்கு மேலான அனுமதி வழங்கிய சென்னை, தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வர லாற்று ஆராய்ச்சி நிலைய ஆணையர் அவர்கட்கும், கோரிய ஆவணங்களை அப்பொழுதைக் கப்பொழுது வழங்கி உதவிய சென்னை தமிழ்நாடு அரசு ஆவணக்காப்பகப் பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இங்கு புலப்படுத்தி அமைகிறேன்.

இராமநாதபுரம் எஸ். எம். கமால்

நாள் : 24. 10. 89

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | இராமநாதபுரமும் சிவகங்கையும் | 1 |
| 2. | மருதுசகோதரர்கள் | 14 |
| 3. | கண்கள் திறந்தன | 24 |
| 4. | மீண்டும் மயிலப்பன் | 44 |
| 5. | பரங்கியரும் பாஞ்சாலங்குறிச்சியும் | 60 |
| 6. | கும்பெனியாருக்கு கடைசிகடிதம் | 83 |
| 7. | அழிந்து வந்த ஆர்காடு ஆட்சி | 90 |
| 8. | கிளர்ச்சிகளின் தொடர்ச்சி | 97 |
| 9. | காளையார் கோவில் நோக்கி | 113 |
| 10. | இறுதிப்போருக்கு | 129 |
| 11. | இரசியத்திட்டம் | 140 |
| 12. | கும்பெனியாரது கொடுமைகள் | 149 |
| 13. | புயல் மூய்கிறது | 165 |
| 14. | துரோகமும் தியாகமும் | 177 |
| 15. | சிவகங்கை மன்னர் பிரதானிகளது வழியினர் | 193 |
| 16. | மருதுபாண்டியர் பட்டயங்கள், கல்வெட்டுக்கள் | 197 |
| 17. | வரலாற்றில் வாழும் நிகழ்ச்சிகள் | 231 |
| 18. | நூற்பெயர்க்கோவை | 236 |
| 19. | பெயர் அகரவரிசை | 241 |

# சிறப்புரை

டாக்டர்
கோ. விசயவேணுகோபால்,
எம் ஏ., எம் லிட்., பிஎச்.டி.,
பேராசிரியர், தமிழியல் துறை'
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை - 625 021

கி.பி. 17ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரையிலான தமிழக வரலாறு வரலாற்றாசிரியர்களால் இன்னும் விளக்கப்படாத நிலையே உள்ளது. இக்காலகட்டத்தைச் சேர்ந்த ஆற்காடு நவாப்புகள், மதுரை நாயக்கர், தஞ்சை மராத்தியர், மைசூர் சுல்தான்கள், சேதுபதி மன்னர், பல்வேறு பாளையப் பட்டுகளின் சிற்றரசர்கள் ஆகியோரின் தனித்தனி வரலாறுகள் முழுமையாக எழுதப்படவில்லை. அத்தகைய வட்டார வரலாறுகள் நடுநிலையோடு எழுதி முடித்த நிலையில்தான் இவற்றை ஒப்பிட்டு ஒரு பொதுமையான தமிழக வரலாற்றினை எழுத முடியும். இவற்றிற்கான முதன்மை ஆதாரங்கள் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடப்பது ஒரு தடங்கல். கிடைக்கும் ஆதாரங்களையும் முறைப்பட எண்ணி வரலாறு எழுதும் முனைப்பும் குறைந்து நிற்கிற நிலை மற்றொன்று. இத்தகு சூழல்களில் டாக்டர் எஸ்.எம். கமால் அவர்களின் ''மாவீரர் மருதுபாண்டியர்'' என்ற நூல் வெளிவருவது வரவேற்கத்தக்கது; பாராட்டத்தக்கது. பல்கலைக்கழக அளவில் மேற்கொள்ளவேண்டிய ஆய்வுகளை அரசுப் பணியாளர் ஒருவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் செய்திருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும். கி.பி. 1780 முதல் கி.பி. 1801 வரை சிவகங்கைச் சீமையில் பிரதானிகளாக இருந்து பரங்கியரோடு போரிட்டு வீரமரணம் அடைந்த மருது சகோதரர்களது வாழ்வினை, கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் கோவையாக எழுதியுள்ளார். 20 ஆண்டு வரலாறே 250 பக்கங்களுக்குமேல் நீண்டுள்ளது. ''விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்'' என்ற தலைப்பில் இவ்வாசிரியரே ஒரு நூல் எழுதியுள்ளார். அந்நூலைக் காட்டிலும் இந்நூல் ஆய்வு அணுகுமுறைகளைப் பின்பற்றிச் சான்றாதாரங்களின் அடிப்படையில் செம்மையாக நடுநிலையோடு எழுதப்பட்ட நூலாகத் திகழ்கிறது. சிவகங்கைச் சீமை வரலாற்றோடு பிற சீமைகளின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளமையால் இயல்கள் தொடர்ச்சியாக ஒன்றினைப் பற்றியே அமையாமல்

வசதிக்கேற்ப அமைந்துள்ளன. இராமநாதபுரச் சேதுபதிகளோடு முரண்பட்ட நிலை, பரங்கியரோடு பணிந்தும் எதிர்த்தும் நின்ற நிலைகள் என மருது சகோதரர்களின் அரசியல் நிலைகள், தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மருது சேர்வைக்காரர்கள், மருதிருவர் எனக் குறிப்பிடப்படுகின்றனரேயன்றி வரலாற்று ஆவணங்களில் மருதுபாண்டியர் எனக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பரங்கியரை எதிர்த்து வெளியிட்ட பகிரங்கக் கடிதத்தில் 'மருது பாண்டியன்' என்ற வழக்கு இருப்பதை இந்நூலாசிரியர் குறித்திருப்பது புதிய செய்தி. 'மருதிருவர்' என்ற தலைப்பில் பல்லாண்டுகட்கு முன்பே மறைந்த தமிழறிஞர் டாக்டர் ந. சஞ்சீவி ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந்நூலிலிருந்து இந்நூல் எவ்வகையில் மாறுபட்டமைந்துள்ளது என்பதனை நூலாசிரியர் தெளிவாக்கியிருக்கலாம். ஸ்டார் பக்கோடா (பக். 25), பேஷ்குஷ் தொகை (பக். 26,27) சம்பிரிதி (பக். 46) அட்டவணை (பக். 53) போன்ற பொருள் விளங்காத சொற்களுக்கு விளக்கம் தந்திருக்கலாம்.

நல்ல ஆற்றொழுக்கு நடையில் எழுதப்பட்ட ஒரு வட்டார வரலாறு என்ற மனநிறைவை ஏற்படுத்துகிறது. பல ஆவணங்களையும், கல்வெட்டு, முனை செய்திகளையும் இறுதியில் எடுத்துக் காட்டியிருப்பது மேலும் இப்பொருள்பற்றி ஆய்வோர்க்குப் பெருந் துணையாகும். ஆசிரியரின் இச் சீரிய முயற்சியினைத் தமிழுலகம் [illegible] வரவேற்கும். ஆசிரியர் மேன்மேலும் இத்தகு முயற்சியின் வழிப்பட்டு நல்ல நூல்களை அளிக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

24 - 10 - 1989 டாக்டர் விசயவேணுகோபால்

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி–623206
23-10-89

# அணிந்துரை

மாவீரர் மருதுபாண்டியரின் வரலாற்று நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது நல்லபேறு. தன் நாட்டின் வரலாற்றை உள்ளவாறு கற்று உய்த்துணரும் ஒருவன் நாட்டின் பெருமை களை, வளங்களை, மரபுகளைப் பேணிக் காப்பாற்ற முன் வரு வான். வரலாறு, கற்கவேண்டிய ஒன்று. வாழ்வுக்கு ஊக்கமும் கிளர்ச்சியும் தருவது வரலாறு.

நமது நாடு விடுதலை பெற்றது ஒருநாளில் ஏற்பட்ட பரங்கி யருடைய ஆதிபத்திய எண்ணத்துறவாலன்று. அடி அடியாகப் போராடியே சுதந்திரத்தை அடைந்திருக்கின்றோம். பாரத நாட் டின் சுதந்திரம், மதிப்பீடு செய்ய இயலாத அளவுக்கு நடந்த போராட்டங்களுக்குப் பிறகு கிடைத்தது என்பதை மருதுபாண்டியர் வரலாறு எடுத்துக் கூறுகிறது. நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு கூட, பரங்கியர் நமது மறவர்களை வெற்றி கொள்ள வில்லை. சில ஐந்தாம் படைகளைச் சில வெள்ளிகளுக்கு விலை பேசித் துரோகத்தின் மூலமே ஆதிபத்தியத்தை ஏற்படுத்தி யுள்ளனர்.

இந்நூல் முழுதும் வரலாறு, தக்க ஆதாரங்களுடன் விளக் கப் பெற்றுள்ளது. நாடு தழுவிய நிலையில் சுதந்திரப் போராட்ட உணர்வு தலையெடுத்து இருந்ததை ஆசிரியர் திரு எஸ்.எம் கமால், ''எங்கு பார்த்தாலும் மக்கள் கிளர்ச்சியின் சுவாலை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது'' என்று புதுக்கோட்டைத் தொண்டைமான் எழுதியுள்ள கடிதத்தின் மூலம் எடுத்துக் காட்டு கிறார்.

பரங்கியர், கைக்கூலிகள் மூலம் மருதுபாண்டியரின் சீமைக் குள் ஊடுருவ முயன்றனர். சிவகங்கைச் சீமைக்கு பொம்மை ஜமீன்தார் நியமிக்கப்படுகின்றார். இந்தத் தருணத்தில் சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் ஒரு வேண்டுகோளை வெளியிட்டனர். இந்த வேண்டுகோள், ஒரு வேண்டுகோள் மட்டுமன்று. ஒரு சாசனம்.

அந்த வேண்டுகோள், ''உங்களிடையே ஒற்றுமை இல்லை; நேயமனப்பான்மை இல்லை'' என்று நாட்டு மக்களைச் சாடுகின்றது. எவ்வளவு உண்மை! இன்று மட்டும் என்ன வாழ்கின்றது! இன்றும் நம்மிடையில் ஒற்றுமை இல்லை நேயமனப்பான்மை இல்லை. அன்னிய ஆதிக்கத்திற்குத் துணை போகின்றவர்கள் ''பரங்கியரின் இரத்தக் கலப்புடையவர்கள்'' என்று பச்சைத் தமிழில் மருதுபாண்டியர்கள் திட்டித் தீர்த்துள்ளனர்.

மருதுபாண்டியர் வரலாறு தரும் படிப்பினைகளில் ஒன்று, வீரம் ஒன்று மட்டுமே வெற்றி தராது, விவேகமும் பழகும் பாங்குகளும் தேவை என்பதாகும். மருதுபாண்டியர், படமாத்தூர் ஒய்யாத்தேவரிடமும். அரசி வேலுநாச்சியார் முதலியவர்களுடனும் இராமநாதபுரம் அரசருடனும் பிணக்குகளை வளர்த்துக் கொண்டன விவேகமான செயல்களாகாது என்று நூலாசிரியர் கணித்துக் கூறும் உரை நாற்றுக்கு நூறு சரி! இது மட்டுமா? ''பொதுமக்களது நினைவாற்றல் மிகவும் பலவீனமானது'' என்ற வாசகத்தை நூலாசிரியர், சிவகங்கைச் சீமை மக்களுக்குப் பொருத்திக் காட்டுவதும் நூற்றுக்கு நூறு சரியே! ''சிவகங்கைச் சீமை [illegible] கழுவிச் சீமை'' என்ற சொல்வழக்கும் உண்டு. [illegible] என்றெல்லாம் பாராட்டப் [illegible] போராட்டத்தைச் சந்தித்தது! சூழ்ச்சி [illegible]! தமிழகமே! உனது வரலாற்றில் பெரும் பகுதி [illegible] ஆனது! இனியாவது புத்தி வருமா?

நூலாசிரியர் வரலாற்றுப் போக்கில் இன்றும் என்றும் பயன்படக் கூடிய அறிவுரைகளை வழங்கியுள்ளார். ''தருமம் தழைக்கத் தங்களது மண்ணில் அதருமர்களான ஏகாதிபத்திய நாய்கள் அட்டகாசம் செய்யக் கூடாது. மக்களது நலன்களைப் பாதுகாக்கும் மன்னர்களது தன்னரசுகள் தழைத்து ஓங்கவேண்டும்'' எனும் ஆசிரிய உரை அற்புதமானது.

நமது நாட்டின் வரலாற்றில் வீரர்கள் உண்டு; வீரத்தாய்மார்கள் உண்டு. ஆயினும் என் செய்வது? கோழைகள் கூட மாமேருவைச் சிற்றெறும்பாக்கி விடுகின்றனர். மகாராஷ்டிரத்து துந்தியா, இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னர் ஆகியோர். தியாக ஒளிவிளக்குகள்! மலைமேல் ஏற்றிய விளக்குகள்! ஆயினும் என் செய்வது? எழுதக் கை நடுங்குகிறது! இந்த நாளில்

தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வாது. காலச் சூழ்நிலைக் கேற்பப் புத்தியும் தடுமாறுகிறது. மாவீரர் மருதுபாண்டியர் இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னருடன் பகைக் சிவகங்கைச் சீமையில்–தமிழ் நாட்டில் "கும்பகர்ணர்கள்" இல்லை. காமல் இருந்திருந்தால் வரலாறு வேறுதிசையிலும் சென்றிருக்க வாய்ப்பிருந்தது.

நாடு தழுவிய நிலையில் நடந்த சுதந்திரப் போராட்டத்தை சிறப்பாகச் சிவகங்கைச் சீமைப் போரை, மாபாரதப் போருடன் ஒப்பிட்டு ஆசிரியர் எழுதியுள்ள பகுதி, மிகவும் சிறப்புடையது. மாபாரதப் போரில் அநீதியின் உருவமான துரியோதனன் அணி யில் தானே துரோணரும் பீஷ்மரும் இருந்தனர். அதுபோல, சிவகங்கைச் சீமைப் போரில் பலர் பரங்கியர் பக்கம் போய் விட் டனர் என்பது உண்மை. எப்போதுமே நல்லவர்கள் வல்லவர் களாக இருப்பது இல்லை. நன்மைக்கும் கோழைத் தனத்திற்கும் ஒட்டும் இல்லை; உறவும் இல்லை! ஆனால், சிவகங்கைச் சீமை வரலாறு வேறு மாதிரியாக அமைந்துவிட்டது!

மருது பாண்டியர் வீர வரலாறு ஒரு நல்ல நூல். வரலாற்று நூல்கள் எப்படி அமைய வேண்டுமோ அப்படி அமைந்துள்ளது. அனைத்துச் செய்திகளுக்கும் போதிய ஆதாரங்கள் திரட்டப் பெற்றுள்ளன. வரலாற்றுப் போக்கில் தடங்கள் வழி நமக்கு உணர்த்த வேண்டிய அறிவுரைகளை நூலாசிரியர் அமைவுறத் தந்திருப்பது நூலுக்குள்ள தனிச் சிறப்பு! இத்தகு சிறப்புடைய ஒரு வரலாற்று நூலை டாக்டர். எஸ்.எம். கமால் அவர்களைத் தவிர வேறு யாரால் எழுத முடியும்! ஒரு சிறந்த நூலைத் தந்து சிந் தனையைத் தூண்டிய டாக்டர் எஸ்.எம். கமால் அவர்களுக்கு நன்றி: கடப்பாடு. பாராட்டு! வாழ்த்துக்கள்!

— அடிகளார்.

# பதிப்புரை

வாழ்க்கை வசதிகளையும், உடமைகளையும் உதறி எறிந்து விட்டு, நமது நாட்டு விடுதலை இயக்கங்களில் தங்களை வீறுடன் ஒன்றிணைத்துக் கொண்டவர் பலர். ஆதிக்க வாதிகளது அடக்குமுறைக்கு ஆளாகி, அணு அணுவாக சித்திரவதை செய்யப்பட்டு அழிந்து பட்டவர் இன்னும் பலர். இவர்களைத் தொடர்ந்து ஏகாதிபத்திய ஆயுத பலத்தை நேருக்கு நேர் சந்தித்து அஞ்சாது போராடி, வெற்றி பெறாவிட்டாலும், வீரமரணம் அடைந்தவர் ஏரா ளம் ஏராளம்.

பிறந்த மண்ணின்மீது அவர்கள் கொண்டிருந்த பற்றும் பாசமும், அவர்களது எண்ணரிய தியாகங்களும் இந்திய நாட்டின் இழந்த விடுதலையை, ஈட்டித்தந்துள்ளது. இருபதாவது நூற்றாண்டை விரைவாக கடந்து முன்னேற்றம் காணத்துடிக்கும் நாம், நமது முன்னோர்கள் நடந்து வந்த பாதையைத் திரும்பி பார்ப்பதற்கு கூட, நாட்டமில்லாதவர்களாக இருக்கின்றோம். இது நன்றி மறந்த செயல் மட்டுமல்ல; நாட்டுணர்வு இல்லாததுங்கூட.

இந்த சமுதாய குறைபாட்டினைக் களைய, நாட்டிற்கு உழைத்த நல்லவர்களை இனங்காட்டி, நினைவூட்டி, பெருமைப்படுத்தி அவர்களது தியாகவரலாற்றை இன்றைய தலைமுறையினருக்கு தெரிவிக்க வேண்டியது தேசிய கடமையாகும்.

அந்த முறையில் முத்துராமலிங்க சேதுபதி மன்னரது தியாக வடிவினை, வரலாற்றுச் சான்றுகளுடன் "விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்" என வரைந்து, தமிழக அரசின் முதல் பரிசினையும், பாராட்டையும் பெற்று, தமிழக வாசகர்களுக்கு அறிமுகமானவர் இராமநாதபுரம் வரலாற்று ஆய்வாளர் டாக்டர் திரு. எஸ். எம். கமால் அவர்கள்.

அன்னாரது, மற்றொரு ஆய்வுத் திரட்டான "மாவீரர் மருதுபாண்டியர்" என்ற இந்த வீர வரலாற்றுக் காவியத்தை எங்களது முதல் படைப்பாக, நாட்டுப்பற்று மிக்க தமிழக

மக்கள்முன் சமர்ப்பிப்பதில் பெருமை அடைகிறோம். மாடக் குச்சித்திரமும், மாநகருக்குக் கோபுரமும் போன்று, இந்த நூலின் மகுடமான அணிந்துரையை நல்கிய தமிழ்முனிவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கட்கும், சிறப்புரை வழங்கியுள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர். திரு. கோ. விசைய வேணுகோபால் அவர்கட்கும், எங்களது நன்றிக் கடப்பாட்டினை பணிவுடன் புலப் படுத்திக் கொள்கிறோம்.

மற்றும், இந்தப் பணியில், எங்களது ஆர்வத்திற்கு ஆதர வாக இந்த அரிய நூலினை மிகக்குறுகிய காலத்தில் அழகுப் பெட்டகமாக அமைத்து, அச்சிட்டு, உதவிய மதுரை பரணி அச்சக உரிமையாளர் திரு. ந. அரியதம்பி அவர்கட்கும் அவரது அச்சகப் பணியாளர்களுக்கும் எங்களது ஆழிய நன்றி.

ஷர்மிளா பப்ளிஷர்ஸ்
இராமநாதபுரம்.

24 - 10 - 1989

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழையான சொல் | சரியான சொல் |
|---|---|---|---|
| 3 | 25 | கு.பி. 1736 | கி.பி. 1736 |
| 15 | 26 | பிரதானியாக | பிரதானிகளாக |
| 16 | 17 | போன்ற | போன்று |
| 18 | 22 | பரங்கிர் | பரங்கியர் |
| 24 | 12 | சிறையிலடைந்த | சிறையிலடைத்த |
| 36 | 17 | ஸ்ரீரங்கபட்டிணத்தை | ஸ்ரீரங்கபட்டணத்தை |
| 70 | 23 | பள்ளிக்குடி | பண்ணிக்குடி |
| 74 | 16 | ஒய்யாத் தேவன் | ஒய்யாத் தேவர் |
| 102 | 25 | கூட்டவான | கூட்டமான |
| 104 | 24 | கொள்வதற்குள் | கொள்வதற்கும் |
| 105 | 26 | சோழச்சீமை | சோழசீமை |
| 107 | 13 | ரெஜிமெண்டில் | ரெஜிமெண்டின் |
| 109 | 20 | சூரையாடி | சூறையாடி |
| 116 | 23 | என்பது | எண்பது |
| 138 | 1 | களாஞ்சி | காளாஞ்சி |
| 141 | 26 | கூமூர் | கூழுர் |
| 149 | 24 | காளையார்கோவில் | காளையார் கோவில் கோட்டை |
| 152 | 11 | இடுநாடாக | இடுகாடாக |
| 156 | — | எருகணி | சருகணி |
| 159 | 28 | பிடிப்பதற்காக | பிடித்ததற்காக |
| 160 | 22 | நாடு | நாடுகளில் |
| 163 | 13 | பாண்டிக்குடி | பாண்டுக்குடி |
| 164 | 16 | வாதிகளுக்கு | பழமை வாதிகளுக்கு |
| 168 | 5 | திறத்தவர்களின் | திறத்தவர்களில் |
| 168 | 26 | கீர்த்தவீர | கீர்த்திவீர |
| 169 | 6 | அணியிலும் | அந்த அணியிலும் |
| 170 | 8 | தாண்வடராய | தாண்டவராய |
| 170 | 25 | உதிர்ப்பேன் | எதிர்ப்பேன் |
| 177 | 16 | ஏழுதி | எழுதி |
| 192 | 2 | அளர்களது | அவர்களது |
| 192 | 25 | எப்பொழுது தண்ணீரை | எப்பொழுதும் கண்ணீரை |

# 1

## இராமநாதபுரமும் சிவகங்கையும்

சோழ சீமையை ஒட்டியுள்ள கோட்டைப்பட்டினம் துறை முகத்தில் இருந்து தெற்கே வேம்பாற்றங் கரையிலான நீண்ட பகுதி மறவர் சீமை என வழங்கப்பட்டு வந்தது. காடும் மேடும் முல்லையும் மருதமும், பாலையும் நெய்தலுமாக அமைந்த இந்த நிலக்கூற்றில் வாழ்ந்த மக்கள் கரடுமுரடான வாழ்க்கையினைக் கொண்டு இருந்தனர். மறமும் மாண்பும் மலிந்த மாபெரும் இனத்தினரான இந்த முதுகுடி மக்களது தலைமகன் சேதுபதி என சிறப்பாக வழங்கப்பட்டார். வில்லேர் சிலை இராமன் அமைத்த வியன்சேதுவின் காவலன் என்ற சிறப்பு நிலையில், மறவர் சீமையின் மன்னர் போற்றப்பட்டனர்.

சோழ பாண்டியரது சாமந்தராக விளங்கிய இந்தக்குடியினர் பிற்காலப் பாண்டியப் பேரரசின் மறைவிற்குப் பின்னர், மதுரை மண்டலத்தில் வடக்கே இருந்து வந்த வடுகரது ஆட்சி தொடர்ந்த பொழுது, அவர்களது ஆதிக்கத்தில் அடங்கியும் அடங்காமலும் தன்னரசு நிலை எய்தினார்கள். தமிழக வரலாற்றில் இவர்களைப் பற்றிய செய்திகள் பதினைந்தாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. இவர்களில் கி.பி. 1674 முதல் கி.பி. 1710 வரை மறவர் சீமையின் மாமன்னராகத் திகழ்ந்தவர் கிழவன் என்ற ரகுநாத சேதுபதியாகும். அவரது பட்டத்து யானையைச் சிறப்பித்துச் சொல்லுமாறு இந்த மன்னரை ஒரு புலவர் பாடினார்.[1]

''கடிவாங்கு மலர்த்தடஞ்சூழ் சேதுபதி
ரகுநாதன் களிநல் யானை
அடிவாங்கி முன்னடக்கில் வடகலிங்கம்
கிடு கிடெனும் அங்க தேசம்

---

1. தனிப்பாடல் – பெருந்தொகை (1935) பாடல் எண். 1294

குடிவாங்கும் கடல் ஏழும் உள்வாங்கும்
நன்னலர் தங்கோட்டை வாசல்
படி வாங்கும் அரசர்மணி முடிவாங்கும்
சேடன் முடி படியுந்தானே!"

இந்த மன்னரது முப்பத்திரண்டு ஆண்டுகால ஆட்சியில் மறவர் சீமையில் எல்லைகள் விரிந்து சோழவள நாட்டில் தென்பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தன. என்றாலும் அவரது ஆட்சியின் மாட்சியில், வீழ்ச்சியும் மெதுவாகத் தொடர்ந்தது.

இவரது படைத் தலைவர்களாக விளங்கிய கள்ளர் தலைவர்களான ரகுநாத தொண்டமானும், நமணத் தொண்டமானும், மன்னரது கட்டளைகளைச் சிறப்பாக நிறைவேற்றி அவரது அந்தரங்க நம்பிக்கைக்கு உரியவர்களாகினர். இந்த அரசியல் உறவுகளை இன்னும் நெருக்கமாக இணைத்து பிணைத்துக் கொள்ள சேதுபதி மன்னர், இவர்களது தங்கை காதலி நாச்சியாரைத் தமது இரண்டாவது மனைவியாக ஏற்றுக்கொண்டார்.[2] அவர்கள் சேதுபதி மன்னரது கானாட்டுக் கோட்டைகளான திருமெய்யம், குளத்தூர் ஆளுநர்களாகப் பதவி உயர்வு பெற்றனர். கி.பி. 1710ல் மன்னர் மறைந்த பிறகு மறவர் சீமையின் அரியணைக்கு எழுந்த குழப்பங்களைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு தன்னரசு நிலை பெற்றனர். நாளடைவில் ரகுநாதத் தொண்டமான், திருமெய்யம் குளத்தூர் பகுதிகளை இணைத்து தொண்டமான் சீமை என்ற தனிப்பிரிவை ஏற்படுத்தினார். அப்பொழுது புதிதாக அமைத்த கோட்டை "புதுக்கோட்டை." எனப் பெயர் பெற்றது. அந்த ஊர் அவர்களது தலைமை இடமாகவும் மாறியது.

ரகுநாத கிழவன் சேதுபதியின் ஆட்சியில் நாலுகோட்டை பாளையக்காரரான பெரிய உடையாத் தேவருக்கு[3] மன்னரிடத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது. இராமநாதபுரத்தின் மன்னராக முடிசூட்டிக் கொண்ட திருவுடையாத் தேவர் என்ற விஜயரகுநாத சேதுபதி தமது மகள் அகிலாண்டீசுவரி நாச்சியாரை, பெரிய

---

2 Rathakrishna Iyyer, Manual of Pudukottai State (1932) p.31

3 மறவர் சீமையின் எழுபத்துநான்கு பாளையங்களில் சிவகங்கையை அடுத்த நாலு கோட்டையும் ஒன்று.

உடையாத் தேவரது மகன் சசிவர்ண பெரிய உடையாத் தேவருக்கு திருமணம் செய்து கொடுத்து, நாலுகோட்டைப் பாளையத்தின் தகுதியை ஆயிரம் வீரருக்கான பாளையமாக உயர்த்தினார்.[4] மருமகனை தொண்டித் துறைக் காவலராகவும் பின்னர் வெள்ளிக்குறிச்சி[5] மாகாண ஆளுநராகவும் நியமனம் செய்தார். ஆனால் கி.பி. 1725ல் விஜயரகுநாத சேதுபதி மறைவை யடுத்து தோன்றிய ஆட்சிக் கிளர்ச்சியில் அவர் பதவியை இழந்து, தஞ்சை மராத்திய மன்னரிடம் தஞ்சம் அடைந்தார்.[6] அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் திருப்பத்தினால் இராமநாதபுரம் சீமையில் ஐந்தில் இரண்டு பகுதிக்கு மன்னராகும் வாய்ப்பை சசிவர்ணத்தேவர் பெற்று கி.பி. 1730ல் 'சிவகெங்கைச் சீமை' என்ற புதிய வளநாட்டை நிறுவினார்.[7] மதுரை திருமலை மன்னர் சூழ்ச்சியினால் கி.பி. 1639ல் மறவர் சீமையை ஐந்தாகப் பிரிக்க முயன்றபொழுது பிரிவினையைக் கடுமையாக எதிர்த்த மறவர்கள், அப்பொழுது மறவர் சீமை இரண்டாக, வடபகுதி பிரிக்கப்பட்டதற்கு எவ்வித எதிர்ப்பும் இயற்றவில்லை. அதனை ஏற்றுக் கொண்டனர். என்றாலும், இந்தப் பிரிவினை காரணமாக மறவர் சீமை, தமிழக அரசியலின் தனித் தன்மையை - வலுவை - இழந்து வந்தது என்பதை அடுத் தடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் தோலுரித்துக் காட்டின. கிழவன் சேதுபதி அமைத்த இராமநாதபுரம் தன்னரசு, சிவகங்கை பிரிவினை காரணமாக அளவில் சிறிய அரசாகியது.

அதேபோல, பாண்டிய மண்டலம் முழுவதையும் இருநூற்றாண்டுகளுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்திய மதுரை நாயக்க அரசும், ராணி மீனாட்சியின் மறைவுடன், கி.பி 1786ல் அழிந்தது. அந்த அரசின் நிலையில் புதிய ஆளவந்தார் என ஆற்காடு நவாப் தோன்றினார். கி.பி. 1751ல். நவாப் வாலாஜா முகம்மது அலி

---

4 Rajaram Row T. Manual of Ramnad Samasthanam (1891) p. 237.

5 திருப்பூவணத்தையடுத்து வைகை ஆற்றின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள ஊர்.

6 Revenue Consultations, vol. 122; p. 1102

7 Annasamy Ayyer - Sivaganga Origin and its Litigations (1899) Page. 4

திருச்சி, மதுரை, திருநெல்வேலிச் சீமைகளில் இருந்த பாளையக்காரர்களை ஆயுதவலிமையால் அடக்கி, அவர்களிடமிருந்து ஆண்டுதோறும் கப்பத்தொகையைப் பெற்று வந்தார். இந்தப் பாளையக்காரர் அனைவரும் முன்னர் நாயக்க மன்னர்களுக்குக் கட்டுப்பட்டு இருந்து வந்தவர்கள்.[8] அதேபோல தமிழகத்தில் தன்னரசாக இருந்த தஞ்சாவூர், இராமநாதபுரம் சிவகங்கை புதுக்கோட்டை மன்னர்களையும் வருடப் பணம் கோரி நிர்ப்பந்தித்து வந்தார் வாலாஜா முகம்மது அலி. ஆனால் மறவர்கள் அவரது கோரிக்கையை நிறைவு செய்யவில்லை. அதுவரை, அவர்கள் யாருக்காவது கப்பம் செலுத்தி பழக்கப்பட்டு இருந்தால் தானே! என்றாலும் நவாப் வாலாஜா முகம்மது அலியிடம், நேச உறவுடன் நடந்து வந்தனர். நவாப்பும் அன்றைய குழப்பமான அரசியல் சூழ்நிலை காரணமாக,மறவர்களை மிகுதியாக நெருக்கி கப்பம் கோரவில்லை. திருநெல்வேலி பாளையக்காரர்களது சிறு அணியொன்று நெற்கட்டும் செவ்வல் பாளையக்காரர் பூலித்தேவர் தலைமையில் நவாப்பின் ஆதிக்கத்திற்கு எதிரர்க கிளர்ச்சிகளில் ஈடுபட்ட பொழுதும், நவாப்பின் மதுரை ஆளுநரான கம்மந்தான் கான் சாகிபு நவாப்பின் நடவடிக்கைகளினால் வேறுபட்டு நவாப்பையும் அவரது கூட்டாளியான பரங்கிகளைப் பகைத்துப் போர் தொடுத்த பொழுதும், மறவர் சீமை மன்னர்களும் புதுக்கோட்டை தொண்டமானும் நவாப்பிற்கு உறுதுணையாக இருந்தனர். காலத்தாற் செய்த நன்றியை மறந்த நவாப் முகம்மது அலியின் கண்களில், இராமநாதபுரம் சீமையும், சிவகங்கை சீமையும் உறுத்திக் கொண்டு இருந்தன. நல்லதொரு வாய்ப்பை அவர் எதிர்பார்த்து இருந்தார் என்பது மறவர் சீமை மன்னர்களும் புரிந்து கொள்ளவில்லை.

கி.பி. 1772 மே மாத இறுதியில் மறவர்களைத் திடீரெனத் தாக்க நவாப் திட்டமிட்டார். கும்பெனியாரது ஆயுதப்படைகளைத் துணையாகக் கொண்டு அவரது மகன் உம்-தத்துல்-உம்ரா, கும்பெனித் தளபதி ஜோசப் ஸ்மித் ஆகியோரது கூட்டுத் தலைமையில் ராணுவ அணியொன்று திருச்சியிலிருந்தும்[9] மேஜர் பான் ஸோர் தலைமையில் இன்னொரு அணி மதுரையிலிருந்தும்[10]

---

8 Taylor, Oriental Historical Manuscripts (1868) vol I. p. 118

9 Military Despatches to Englands vol 7(20-6-1772) p.p.80-81

10 Military Consultations vol 42-(26-6-1772) p. 534.

மறவர் சீமைக்குள் புகுந்தன. தங்களது தன்னரசு உரிமையை நிலைநாட்டப் போராடிய மறவர் சீமை அரசுகள் ஆயிரக்கணக்கான மறவர்களை களபலி கொடுத்து தோல்வியுற்றன. பதினோரு வயதான இராமநாதபுரம் இளவரசர் முத்துஇராமலிங்க சேதுபதி, அவரது தாயார், தமக்கையருடன் திருச்சிக்கோட்டையில் பாதுகாப்புக் கைதியாக சிறை வைக்கப்பட்டனர்.[11] காளையார்கோவில் போரில் நவாப்பின் அணியைப் பொருதிய சிவகங்கை மன்னர் முத்துவடுகனாத பெரிய உடையாத்தேவர், பரங்கியரின் குண்டினால் உயிர் இழந்தார்.[12] அவரது விதவை ராணி வேலு நாச்சியார் தமது ஒரே பெண் குழந்தையுடன் பிரதானி தாண்டவராய பிள்ளையுடனும் மைசூர் மன்னர் ஐதர் அலியின் பகுதியான விருபாட்சியில் (திண்டுக்கல் நகரிலிருந்து வடமேற்கே இருபது கல் தொலைவில் அன்றைய மைசூர் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது) தஞ்சம் புகுந்தார்.[13]

மன்னர் இல்லாத இரண்டு சீமை மக்களும் ஆற்காட்டு நவாப்பின் ஆட்சியைப் புறக்கணித்து ஆங்காங்கு கிளர்ந்து எழுந்தனர். கைகலப்புகளும் மோதல்களும் தொடர்ந்தன. நவாப்பின் நிர்வாகம் நிலை குலைந்தது. மிகவும் பாதுகாப்பான கோட்டைகளுக்குள் மட்டும் இருந்து கொண்டு நவாப்பின் பணியாளர்கள் செயல்பட்டனர்.[14] ஆற்காட்டு நவாப்பிற்கும் வெள்ளையர்களுக்கும் எதிராக, ஐதர்அலி கி.பி. 1780ல் கர்நாடகப் போரைத் துவக்கிய பொழுது, திண்டுக்கல் கோட்டையில் இருந்த படைப்பிரிவு ஒன்றை மருது சகோதரர்கள் தலைமையில் சிவகங்கை சீமைக்குள் செல்லுமாறு பணித்தார். அவர்களும் மக்களது ஆதரவுடன் நவாப்பின் கூலிப்படைகளை சிவகங்கை மண்ணில் இருந்து விரட்டி அடித்தனர்.[15] எட்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, சிவகங்கை மீண்டும் தன்னரசாக இயங்

---

11 Maj Vibart H. Military History of Madras Engineers and Pioneers (1881), p. 120.

12 Military Consultations, vol 42 (1-6-1772), p. 442.

13 Dr. K. Rajayyan-History of Madurai (1974) p. 261.

14 Military Country Correspondence vol 21 (1772), p. 236.

15 Correspondence on the Permanent Settlement of Southern Pollams, Ramnad and Sivaganga Zamindar's p. 28.

கியது. ராணி வேலு நாச்சியாரது பாரம்பரிய ஆட்சிக்கு பக்கபல மாக மருது சேர்வைக்காரர்கள், பிரதானிகளாக இருந்து பணி யாற்றினார்.[16]

அதேநேரத்தில், இராமநாதபுரம் சீமையிலும் மக்களது கிளர்ச்சி ஆறுமுகக்கோட்டை மாப்பிள்ளைத்தேவர் தலைமையில் உச்சநிலையை அடைந்தது. வேறு வழி இல்லாமல், நவாப் சிறையில் இருந்த இளம் சேதுபதி மன்னரை விடுதலை செய்து மறவர் சீமையின் மன்னராக அங்கீகரித்தார்.[17] மீண்டும், இராம நாதபுரம் அரசு கட்டிலில் அமர்ந்த முத்துராமலிங்க சேதுபதி மன்னர், தமது அரசுரிமையைப் பறித்து தம்மை ஒன்பது ஆண்டு காலம் சிறையில் அடைத்து வைத்து இருந்த நவாப்பையும், அவரது எதிரிகளான கும்பெனியாரையும் மறந்துவிடவில்லை. இடையூறு செய்தவர்களை யானை எப்பொழுதும் மறப்பதில்லை அல்லவா! இதற்கிடையில், நவாப்பிடம் சலுகைகளைப் பெற்று இறுமாந்து இருந்த பரங்கிகள், இராமநாதபுரம் மன்னரை ஒரு தன்னரசு மன்னராக மதிக்காமல், நெல்லைச் சீமைப் பாளையக் காரர்களிடம் நடந்து கொள்ளும் பாணியில் நடந்து வந்தனர். மேலும் அவரது சீமையில் கைத்தறித்துணி உற்பத்தியை ஏக போகமாகக் கொள்முதல் செய்யவும், தானிய வியாபாரம் செய் வதற்கும், சுங்கவரி விலக்கையும் சலுகைகளையும் இராமநாதபுரம் சீமையின் பிரதான துறைமுகமான பாம்பன் நீர்வழிப் போக்கு வரத்தில் முன்னுரிமைகளையும் எதிர்பார்த்தனர். ஆனால் மன்ன ரது உறுதியான நடவடிக்கையால் ஏமாந்து வெறுப்படைந்தனர்.[18]

அடுத்து, இராமநாதபுரம், சிவகங்கை அரசுகளுக்கிடையே நிலவிய அரசியல் பிணக்குகளை பரங்கிகளது தலைமை அவ்வப் பொழுது தீர்த்து வைத்து சமரசம் செய்து வைக்காமல் அவைகள் பிரச்சினைகளாகி, பெரும் சிக்கல்களாக மாறுவதற்கு உதவினர். இதனால் பகைமை வளர்ந்து இராமநாதபுரம் அரசரும், சிவகங் கைப் பிரதானிகளும் எல்லைப் போர்களில் ஈடுபட்டனர். அதே சமயம், இராமநாதபுரம் மன்னர், புனித சேதுமண்ணில் இருந்து பேராசை பிடித்த ஆற்காட்டு நவாப்பின் மேல் ஆதிக்கத்தையும்

---

16 Ibid p.27.
17 Military Consultations, vol. 74,(30.4.1781), p.1076,
18 Military Consultations, vol. 190, (25.10.1794), pp 4266-68.

அவரது எடுபிடிகளான கும்பெனியாரது எதேச்சாதிகாரத்தையும் எடுத்து எறிவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டார். பாண்டிச் சேரியைத் தலைமை இடமாக கொண்டிருந்த பிரஞ்சுக்காரர்களு டன் இரகசியமாகத் தொடர்பு கொண்டு ஆயுத உதவி பெறுவ தற்குப் பாடுபட்டார்.[19] மேலும் இலங்கையில் உள்ள டச்சுக் காரர்களது உதவியுடன் இராமநாதபுரம் சீமையில் ஆயுதசாலை கள் அமைத்து வந்தார்[20]. எல்லாம் ரகசியமாக நடைபெற்று வந்தன. ஆனால் கி.பி. 1792ல் திடீரென கும்பெனியார் நவாப்பு டன் செய்து கொண்ட உடன்படிக்கை மூலமாக, மறவர் சீமை யின் வருடப்பணத்தை (நவாப்பிற்குப் பதிலாக அவர்களே) வசூ லித்துப் பெற்றுக் கொள்ளும் உரிமையை மூன்று ஆண்டுகளுக்குப் பெற்றனர்.[21] இதனால் மறவர் சீமை கும்பெனியாரது நேரடி யான தலையீட்டிற்கு இலக்காகியது.

கும்பெனியார், தங்களுக்குரிய வருடப்பண வசூலுடன் அமையாமல், மறவர் சீமையில் உற்பத்தியாகும் கைத்தறித்துணி களின் ஏற்றுமதியில் ஏகபோக கொள்ளைக்கு முயன்றனர். இந்த முயற்சிக்கு சேதுபதி மன்னர் இணங்காததுடன், அதனை வன்மை யாக எதிர்த்தார். மேலும், கும்பெனியாரது மேலிடமும், கும்பெனி யாரின் குட்டி தேவதையான கலைக்டரும் பிறப்பிக்கும் கட்டளை களுக்கு பணிய அடியோடு மறுத்தார்.[22] அதனால், கும்பெனி யாரின் சீற்றத்தை நேரடியாக அரசியல் நிலையில் சமாளிப்பதற் கும் தயாராகி வந்தார். ஆனால், கும்பெனியார் அவர்களது திட்டத்தை நிறைவேற்றுவதில் முந்திக் கொண்டனர். சேதுபதி மன்னர் எதிர்பாராத நிலையில் 8-2-1795ம் தேதி அதிகாலையில் திடீரென இராமநாதபுரம் கோட்டையை அவர்கள் தாக்கிப்பிடித் தனர். இராமநாதபுரம் மன்னரைக் கைது செய்து மீண்டும் திருச்சிக் கோட்டையில் பாதுகாப்புக் கைதியாக அடைத்தனர்.[23] குற்றச்சாட்டு, நீதி விசாரணை, தீர்ப்புரை - எதுவுமே இல்லை. உலகத்தின் மிகப் பழமையான ஜனநாயக அரசியலைப் பெற்று இருந்த வெள்ளைப் பரங்கிகளின் அரசியல் விவேகத்திற்கு இந்த

---

19 Kathirvelu, Dr. History of Marawa (1975) pp 512-19.

20 Military Consultations, vol 190 (25-2-1795) pp 512-19

21 Aitchison - Collection of Treaties. vol. 5

22 Military Country Correspondence vol. 45, (26-6-1794) p. 327.

23 Political Despatches to England vol' 2, pp 338-40.

நடவடிக்கை ஒரு சிறந்த உதாரணம். தன்னுரிமை காக்கப் புறப்பட்ட தன்மானச் செம்மல், சேதுபதி மன்னர் பதினான்கு ஆண்டு செல்லரித்துப்போன சிறைவாழ்க்கையினால் 24-2-1809ல் சென்னையில் மறைந்தார்.[24]

ஆனால், மன்னர் இல்லாது மனங்குமுறிய மறக்குடி மக்களது ஆவேசம் இரண்டு கிளர்ச்சிகளாக உருப்பெற்றன. முதலில் கி. பி. 1797ல், இராமநாதபுரம் சீமையின் தென்பகுதியில் கும்பெனியாருக்கு வரி செலுத்த மறுக்கும் குடிமக்கள் கிளர்ச்சியொன்று எழுந்து பரவியது. அப்பொழுது கும்பெனிக் கலெக்டராக இருந்த கலெக்டர் காலின்ஸ் ஜாக்ஸன் விரைவான நடவடிக்கை எடுத்து அதனை அடக்கி ஒடுக்கினார்.[25] ஆனால் மீண்டும் இரண்டு ஆண்டுகள் கழித்து அதே முதுகுளத்தூர் பகுதியில் மக்கள் கிளர்ச்சி எழுந்தது. ஆயுதப்புரட்சியாக. இராமநாதபுரம் மன்னரது சேவையில் இருந்த மயிலப்பன் என்ற குடிமகன் இந்தக்கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.[26] கும்பெனியாரிடம் குரோதமும் வெறுப்பும் கொண்டிருந்த பாஞ்சாலங்குறிச்சி, குளத்தூர் காடல்குடி, சாத்தூர் போன்ற பாளையக்காரர்களும் இந்தக் கிளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். கிளர்ச்சி சூறாவளி போலப் பரவியது. நாற்பத்து ஒரு நாட்கள் தொடர்ந்து பரவிய இந்தக் கிளர்ச்சியும், பாளையங்கோட்டை, மதுரைப் பாசறைகளில் இருந்து வந்த கும்பெனிப் படைகளின் கொடூரமான தாக்குதலால் அடக்கி நசுக்கப்பட்டது. இவர்களுக்கெல்லாம் மேலாக, இராமநாதபுரம் மன்னர் மீது கொண்டிருந்த முன் விரோதம் காரணமாக சிவகங்கை சேர்வைக்காரர்களது மறவர் படையும், கிளர்ச்சியின் கொடுமுடியாக விளங்கிய கமுதிக் கோட்டைப் பகுதியில் கிளர்ச்சிக்காரர்கள் பலர், வீரமரணம் அடைந்து தியாகிகள் ஆவதற்கும் உதவின''.[27] இங்ஙனம் ,நூற்றுக்கணக்கான வீரர்களது தியாகத்தினால் வளர்ந்த இந்த அந்நிய எதிர்ப்பு இயக்கம், துரோகிகளால் தளர்ந்தது. முதுகுளத்தூர் அமில்தார், ஆப்பனூர்

---

24 Madurai District Records vol 1197, (1-2-1899) pp135-36.
25 Pate. Tirunelveli Gazetter (1917), p. 79,
26 Madurai District Records, vol 1157 (27-4-1799), pp 75-78.
27 Military Country Correspondence vol. 253-4 (1799) pp 3031-46

மறவர்கள், சித்திரங்குடி நாட்டார்கள்; அபிராமம் வீசுகொண்டத் தேவன், போன்ற சொந்தமண்ணின் மீது முற்றும் பற்று இல்லாத முண்டங்களால், கும்பெனியாரது ஒடுங்கி நடுங்கிய கைகள் ஓங்கி, உயர்ந்து, உறுதி பெற்றன.

சிவகங்கைச்சீமை : சிவகங்கைச் சீமையை நவாப்பிடமிருந்தும் கும்பெனிப் படையினிடமிருந்தும் விடுவித்த மருது சேர்வைக்காரர்கள் ராணிவேலு நாச்சியாரை சிவகங்கைச் சீமையின் அரசியல் தலைவியாக அமரச்செய்து, அவர்களே பிரதானிகளாக இருந்து நிர்வாகத்தை இயக்கி வந்தனர்.[28] ராணியிடம் பெரிய மருதுவிற்குள்ள அந்தரங்க தொடர்பு காரணமாக அவரது சகோதரரான சின்ன மருதுவின் நடவடிக்கைகளில் சுயேச்சையான சிந்தனையும் இயல்பான முரட்டுத்தன்மையும் பிரதிபலித்தன. என்றாலும், அவரது கட்டளைகளுக்கு எதிரான கருத்துக்கள் அங்கு எழவில்லை. அவர் எதைச் செய்தாலும் அவரை ஆதரிப்பதற்கு மக்கள் தயாராக இருந்தனர். காரணம் சின்ன மருதுவிற்கும் பொதுமக்களுக்கும் நெருங்கிய இணைப்பும் உறவும் இருந்தது. எந்த நேரத்திலும் குடிமக்கள் அவரைச் சந்தித்துக் குறைபாடுகளைச் சொல்லித் தீர்வு காண்பதற்கு ஏற்றவாறு அவர் பாதுகாப்பற்ற மாளிகை யொன்றில் குடியிருந்து வந்தார்.[29] குறுகிய காலத்தில் இந்தப் பிரதானிகள் மக்களது முழுமையான செல்வாக்கைப் பெற்றனர். சிவகங்கைச் சீமையின் உண்மையான ஆட்சியாளராக அவர்கள் விளங்கினர்.

கி.பி. 1783 ஜுலைமாத இறுதி, ஆற்காட்டு நவாப் கும்பெனிப் படையை மீண்டும் சிவகங்கைச் சீமைக்கு அனுப்பி அவருக்குச் சேரவேண்டிய கப்பத்தொகையை வசூலித்து வருமாறு உத்தரவிட்டார். அந்த அணிக்கு தளபதி புல்லர்டன் தலைமை தாங்கிச் சென்றான்[30] இதனை அறிந்த பிரதானிகள், அந்தப் பரங்கிப் படையை காளையார்கோவிலில் எதிர்த்துப் பொருதுவது என முடிவு செய்தனர். ஆனால், அப்பொழுது கள்ளர் நாட்டில் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்காததாலும் அங்கும் பரங்கிகளது

---

28 Kathirvelan, Dr. S. History of Marawa (1977), p. 166.
29 Cal. Welsh - Military Remini Secnces (1890) vol. I, p. 130
30 Rajayyan, K Dr. History of Madura (1974), p. 290.

அடக்குமுறையும் பேயாட்டமும் தொடர்ந்ததாலும் மருதுசேர்வைக் காரர் அப்பொழுது கும்பெனியாருடன் இணக்கமாக நடந்து கொள்ள முடிவு செய்து, நவாப் நிர்ணயித்த ஒருலட்சம் ரூபாயினை வருடப்பணமாகச் செலுத்துவதற்கும் இணங்கினர். தவணைப் பணத்தில் ஒரு பகுதியாக ரூபாய் நாற்பதாயிரத்தை தளபதி புல்லர்ட்டனிடம் கையளித்தனர்.[31]

நாளடைவில் பிரதானிகளுக்கும் ராணி வேலு நாச்சியாருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. மருது சேர்வைக் காரர்களை ஆதரிப்பவர்களும் ராணியை பின்பற்றுபவர்களுமான அரசு ஊழியர்களும் குடிமக்களும் என இரு அணிகளாகப் பிரிந் தனர். இந்த நிலையில் தமது சீமையில் உள்ள குழப்பவாதி களை அடக்கி நாட்டில் அமைதியை நிலவச்செய்யுமாறு நவாப்பை வேலு நாச்சியார் கேட்டுக் கொண்டார். ஏற்கனவே தமக்கு வருடப் பணத்தை சரியாக அனுப்பி வைக்கவில்லையென்று கார ணத்தினாலும், இராமநாதபுரம் சீமையில் புகுந்து அட்டூழியம் செய்ததாக வரப்பெற்றுள்ள புகார்களின் ஆதாரத்தைக் கொண்டும் சிவகங்கை பிரதானிகள் மீது பாய்வதற்கு நவாப் துடிதுடித்துக் கொண்டிருந்தார். ஆனால் கும்பெனியார் அப்பொழுது நவாப் பிற்கு உதவத் தயங்கி நின்றனர்.[32] அப்பொழுது, ராணி வேலு நாச்சியார் ஆர்காடு நவாப்பிற்கு அனுப்பிய கடிதத்தில்" ... ... ... முன்பு நீங்களும் நவாப் முத்தபார்கானும் என்னைச் சந்தித்த பொழுது, எனது எதிரிகளை துரத்தியடிக்கப் போவதாக தெரிவித் தீர்கள். இரண்டாவது நாள் இங்கிருந்து சென்று, கொல்லங் குடியைக் கைப்பற்றிய பிறகு மருதுவைச்சேர்ந்த இருபது ஊர் நாட்டுத் தலைவர்கள் என்னிடம் வந்து விசுவாசம் தெரிவித்தனர். மருது சேர்வைக்காரர்களைப் பிடித்து வருமாறும், அவரது ஆட் களை ஒழித்து விடுமாறும் கூறி அனுப்பி வைத்தேன். பின்னர் கொஞ்ச காலத்திற்கு முன்னர் வரை, மருது சேர்வைக்காரர்கள் எனக்கும், எனது அரசாங்கத்திற்கும் விரோதமாக செயல்பட்டு வந்ததை நவாப்பிற்குத் தெரிவித்தேன். அவரும் என்னை குத்புதீன் கான் பொறுப்பில் வைத்து அரசையும் என்னிடம் ஒப்புவித்தார். மருது சேர்வைக்காரர்களையும் என்னிடத்தில் நேர்மையாகவும்

---

31 Ward B. S. Memoir of Madura and Dindigul vol. 3. p.9.
32 Military Country Correspondence vol. 35-p. 209-10.

மரியாதையாகவும் நடந்து கொள்ளுமாறு கட்டளை இட்டனர். ஆனால் அவர்கள் எனக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளனர். ... ...” என குறிப்பிட்டு இருந்தார்.[33]

கும்பெனித்தளபதி கர்னல் ஸ்டுவர்ட் தலைமையில் சிவகங்கை நோக்கி படை எடுப்பு துவங்கியது. வழியில் புதுக்கோட்டைத் தொண்டமானது மூவாயிரம் படைவீரர்களும் கும்பெனித் தளபதியின் உதவிக்கு ஓடோடி வந்தனர்.[34] இராமநாதபுரம் கோட்டையில் இருந்து உதவிப்படை யொன்றும் தளபதி மார்ட்டின்ஸ் தலைமையில் புறப்பட்டுச் சென்று கொல்லங்குடி அருகே தளபதி ஸ்டுவர்ட்டுடன் 13-5-1789ல் சேர்ந்து கொண்டது. மருது சேர்வைக்காரர்களது அணியில் கருமருந்து வெடி அணி இருந்தும் கூட, அங்கு நடந்த போரில் கும்பெனிப் படையினது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. ஆதலால் காளையார் கோவிலைச் சுற்றியுள்ள காட்டுப்பகுதிக்கு அவர்கள் பின்வாங்கினார்.[35] இதற்கிடையில் தளபதி ஸ்டுவர்ட்டுக்கு மதுரை, தஞ்சை, திருச்சியில் இருந்து அடுத்தடுத்து உதவி அணிகள் வந்து கொண்டிருந்தன இவைகளுக்கெல்லாம் மேலாக மருதுசேர்வைக்காரர்கள் படையினருக்கு பயிற்சி அளிப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்த பிரஞ்சுத் தளபதி டூபிரே கும்பெனியார் பக்கம் சேர்ந்து கொண்டு மருது சேர்வைக்காரர்களது ராணுவ அணிகள் நிலைகள், ஆயுத இருப்பு, காளையார்கோவில் கோட்டைக்கான குறுக்குப் பாதைகள். பற்றிய துப்புகளைத் தெரிவித்துவிட்டான்.[36] துரோகத்திற்கு எதிரே வீராதி வீரர்களும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லையே 14-5-1789ம் தேதி காளையார் கோவில் கோட்டை எதிரில், நடந்த போரில் கும்பெனிப்படை சிவகங்கை கிளர்ச்சிக்காரர்களைத் தோற்கடித்தது[37] மருது சேர்வைக்காரர்கள் திருப்பத்தூருக்குப் பின்னடைந்தனர். அங்கிருந்து மைசூர்

---

33 Military Consultations vol. 129C. (9 5-1789) pp 1552-56

34 Military Consultations. vol. 129, (6–5–1789), p. 1345

35 Ibid (21 5-1789) p 1346

36 Rajayyan K. Dr. History of Madurai (1974), p. 307

73 Military Consultations. vol. 129, (7-6-1789), p. 1552-56

அரசுப் பகுதியான விருபாட்சியில் புகலிடம் பெற்றனர்.[38] சிவகங்கைச் சீமை குழப்பம் நீங்கியதாகக் கருதி நான்கு மாதங்கள் தங்கி இருந்த கும்பெனிப்படை திருச்சிக்குத் திரும்பியது.[39] ராணி வேலு நாச்சியாரது பாதுகாவலுக்கு மட்டும் ஒரு சிறிய அணி சிவகங்கையில் தங்கி இருந்தது.

ஆனால் மருது சகோதரர்களும் அவரது ஆதரவாளர்களும் அடுத்த ஐந்து மாதங்களில் சிவகங்கைக்குத் திரும்பி வந்தனர். திடீர்த் தாக்குதலினால் நவாப்பினது பாதுகாப்புப்படையை நிலைகுலையச் செய்து, நிலைமையைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டனர். இதனை அறிந்த நவாப்பும் கும்பெனியாரும், ஆலோசனைகள் செய்து மருது சேர்வைக்காரர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்தனர். காரணம் மைசூர் மன்னர் திப்புசுல்தானது உதவி மருதுசேர்வைக்காரர்களுக்குக் கிடைத்துவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்ற பயம் அவர்களுக்கு. ராணி வேலு நாச்சியாரது மகளை மணந்து இருந்த சக்கந்தி வேங்கன் பெரிய உடையாத்தேவரை சிவகங்கை அரசராக ஏற்பது என்றும், அவரது பிரதானிகளாக மருதுசகோதரர்கள் பணியாற்றுவதென்றும், நவாப்பிற்கு சிவகங்கை அரசு ஆண்டுதோறும் மூன்று லட்சம் ரூபாயினை வருடப்பணமாக செலுத்த வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.[40] இந்த உடன்பாடு மருது சகோதரர்களுக்காகவே ஏற்பட்டதுபோன்ற குறைபாடு ராணி வேலு நாச்சியாருக்கு. ஏனெனில் சிவகங்கை இளவரசி வெள்ளச்சியின் கரங்களைப் பற்றுவதற்கு தகுதியும் உரிமையும் பெற்று இருந்த படைமாத்தூர் கௌரி வல்லப ஒய்யாத் தேவரைப் புறக்கணித்து, சக்கந்தி வேங்கன் பெரிய உடையாத்தேவரை சிவகங்கை அரச குடும்பத்தினருக்கு அறிமுகப்படுத்தியவர்களே மருது சேர்வைக்காரர்கள்தான் என்றாலும், அன்றைய அரசியலில் வலுப்பெற்று இருந்த ஆற்காட்டு நவாப்பையும் அவரது கூட்டாளியான கும்பெனியாரையும் பகைத்து ஒதுக்கத்தக்க துணிச்சலும் பலமும் ராணிவேலு நாச்சியாருக்கு இல்லை. கும்பெனியாருக்கு நிலைமை

38 Ibid vol. 130, (16-6-1789), p. 1683

39 Ibid vol. 131, (10-11-1789), p. 2910

40 Military Consultations vol 155, (24-1-1792.) p. 474

தெளிவாகப் புரிந்து இருந்த பொழுதிலும், மைசூர் மன்னர் திப்புவின் ஆதரவாளர்களான மருதுசகோதரர்கள் மூலம், தமிழ்நாட்டில் திப்புவின் படையெடுப்பு அபாயத்தைத் தோற்றுவிக்க அவர்கள் விரும்பவில்லை [41] இவைகளுக்கு எல்லாம் மேலாக, நாளடைவில் சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் கும்பெனியாருக்கும் நவாப்பிற்கும் விசுவாசமுள்ள நண்பர்களாக மாறினர். அவர்களது செல்வாக்கு வளர்ந்தது. கும்பினி தளபதி கர்னல் வெல்ஷின் தோழமையும் கலைக்டர் சுல்லிவனின் தொடர்பும் சிவகங்கை சீமைக்கும் கும்பெனியாருக்குமிடையே நெருக்கத்தை மிகுதிப்படுத்தின.

41 Rajayyan K. Dr : History of Madurai (1974,) p. 308.

# 2

## மருது சகோதரர்கள்

தமிழகத்தில் உள்ள சமூக கல்வி நிலைகளில் பிற்பட்ட வகுப்பினர்களில் "அகம்படிய" குலத்தினரும் ஆவர். இந்த சமூகத்தினர், தமிழகத்தில் பரவலாக இருப்பதாகவும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எனவும் அரசு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரைச் சீமை மக்கள் கணக்கெடுப்பு (1901) அறிக்கை[1] யில், வேளாளப் பெருமக்களை யொத்த வாழ்க்கை நிலையில் உள்ள இவர்கள், கோவை, செங்கை, சேலம், வடஆற்காடு மாவட்டங்களில், மற்றப் பகுதிகளைவிட குறைவாக இருப்பதாகவும், மதுரை மாவட்டத்தில் (இன்றைய இராமநாதபுரம், பசும்பொன் மாவட்டங்களில்) மறவர் சமூக ஜமீந்தார்களின் பணியாளர்களாக இருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் வாழ்க்கைநிலை, சமுதாய உறவுகள், மரபுகளைப் பின்பற்றுதல் ஆகியவைகளில் கள்ளர், மறவர் ஆகிய குலத்தவரை ஒத்து இருக்கின்றனர் என்றும் வசதிபடைத்த இந்த சமூகத்தினர் பிறப்பு, பூப்பு, மணவினை, இறப்பு ஆகிய சடங்குகளில் வெள்ளாளரையும் வசதிக்குறைவானவர்கள், மறவர்களையும், முன்னவர்களாகக் கொண்டுள்ளனர்.

பெரும்பாலான மக்கள் கணக்கு அறிக்கைகளில் இந்த மக்கள், கள்ளர், மறவர் குலத்தின் மற்றொரு பிரிவினராகவே குறிக்கப்பட்டுள்ளனர். சில பகுதிகளில் இவர்கள், தாங்கள் செம்பி நாட்டு மறவர் வழியினர் என்று கூறிக் கொள்வதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இவர்கள் ''தெற்கத்தியார்'' என வழங்கப் படுகின்றனர். காரணம் தெற்கே மதுரை,

---

1 Edgar Thurston : Castes and Tribes of South India, (1909) pp 1-10.

இராமநாதபுரம் மாவட்டங்களில் இருந்து குடியேறியவர்கள் என்ற பொருளில் இதனைப்போன்றே நெல்லை மாவட்டத்தில் இவர்கள் ''கோட்டைப் பிள்ளைமார்'' என்று அழைக்கப்படுகின்றனர்.[2] ''கள்ளர், மறவர், கனத்ததோர் அகம்படியார் மெல்ல மெல்ல வந்து வெள்ளாளரானாரே'' என்ற வழக்கும் இதனை உறுதி செய்கின்றது. இராமநாதபுரம், சிவகங்கைச்சீமை மன்னர்களது சேவையில் இருந்து வந்த காரணங்களினால் இராமநாதபுரம் மாவட்டத்தில் இவர்கள் ''சேர்வைக்காரர்'' எனவும் குறிக்கப்படுகின்றனர்.

ஆனால், சோழர் காலத்தில் இந்த சமூகத்தினர் ''அகமுடையார்" (தஞ்சை மாவட்டம்) ''அகம்படியார்'' (தஞ்சை, திருச்சிராப் பள்ளி, செங்கல்பட்டு மாவட்டங்களிலும்) ''அகம்படி முதலி'' (திருச்சிராப்பள்ளி, செங்கை, தென்னாற்காடு மாவட்டங்களிலும்) என வழங்கப்பட்டனர் என்பதை கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன.[3] இந்த சமூகத்தைச் சேர்ந்த மொக்கைப் பழனி சேர்வைக்காரரது வீரமக்கள்தான் மருது சகோதரர்கள். சிவகங்கைச் சீமை அரசியலில் சூன்யம் ஏற்பட்டு, குழப்பமும் கொடுங்கோன்மையும் நிலவிய பொழுது, மக்கள் தலைவர்களாக மாறி துணிச்சலுடனும், தீரத்துடனும் போராடி, சீமையின் மானத்தைக் காத்தவர்கள், அவர்கள். இருவரும் பேராற்றலும் போர்த்திறனும் மிகுந்தவர்களாக விளங்கினர். இராமநாதபுரம் சீமையின் தென்மேற்கே உள்ள முக்குளம் என்ற சிற்றூரில் பிறந்த இந்த சகோதரர்களும் அவரது தந்தையார் மொக்கைப் பழனி சேர்வைக்காரரும் இராமநாதபுரத்தில் குடியேறினர்.[4] பழனி சேர்வைக்காரர் இராமநாதபுரம் மன்னரது அரசுப் பணியில் இருந்த காரணத்தினால் தம்மக்களும் போர்மறவர்களைப் போன்று படைப்பயிற்சி பெற ஏற்பாடு செய்தார். காரணம் இராமநாதபுரம் மன்னரது பிரதானியாக சிறந்து விளங்கிய, வயிரவன் சேர்வைக்காரர், வெள்ளையன் சேர்வைக்காரரைப் போன்று தம்மக்களும், அறிவும் ஆற்றலும் மிக்கவர்களாக, அவையத்து முந்தி இருக்க வேண்டும் என ஆசைப்பட்டார்.

---

2 Edgar Thurston : Castes and Tribes of South India (1909) p. 101.

3 Rangacharya. K. Topographical Inscriptions in Madras Presidency (1919) vol IV p. 1743

4 எஸ்.எம். கமால் : விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987) பக் 162

தமிழகத்தில் உள்ள அகம்படியர் சமூகத்தில், வெள்ளையன் சேர்வைக்காரர் போன்ற சிறந்த ராஜதந்திரியும் தளகர்த்தரும் இதுவரை தோன்றவே இல்லை. கி. பி. 1746-62 வரை சேதுபதி மன்னரது பிரதானியாக இருந்தவர். திருநெல்வேலிப் பாளையக்காரர்கள் அனைவரும், மறவர்களும் நாயக்கர்களும் பயந்து நடுங்கும் வகையில், வெள்ளையன் சேர்வைக்காரர் போர்த்திறன்பெற்று இருந்தார். கி. பி. 1752ல் மைசூர் அரசரது எடுபிடியாக மதுரைக் கோட்டையைப் பிடிக்க வந்த வெள்ளைத்தளபதி கோப்புடன் வாள் போரிட்டு அவரை வீழ்த்தி வெற்றி வாகை சூடியதுடன், மதுரை அரியணைக்கு உரிய வாரிசும், மறைந்த மதுரை நாயக்க மன்னர் மரபினருமான விஜயகுமார பங்காரு திருமலை நாயக்கருக்கு சேதுபதி மன்னர் விருப்பப்படி மதுரை மன்னராக முடி சூட்டி வைத்து மகிழ்ந்தவர்.[5] அவரது மாமனார் வயிரவன் சேர்வைக்காரர் மறவர்சீமையின் சிறந்த தளபதியாக விளங்கியதுடன், வாதாபி போருக்குப் பின்னர், தம்மை ஆன்மீக வாழ்வில் ஈடுபடுத்திக் கொண்ட பல்லவ மன்னரது படைத்தளபதி பரஞ்சோதியாரைப் போன்ற அறவாழ்வை மேற்கொண்டவர். கோவில் திருப்பணி பல செய்தவர்.*

இந்த இருபெரும் தலைவர்களைப் போன்று தமது மக்களும் சிறந்த குடிமக்களாக வளர்ந்து வாழ வேண்டும் என மொக்கை பழனி சேர்வைக்காரர் விரும்பியது இயல்பானதுதான். மருது சகோதரர்களும், துரோணருக்கு வாய்த்த அர்ச்சுனன், ஏகலைவன் போன்று வாள்வீசிப் போரிடுவதிலும், வளரித்தண்டை எறிந்து விரும்பிய இலக்கைத் தாக்குவதிலும், அவர்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் உலகில் இல்லை என்னும் அளவில் சிறந்த வீரர்களாக வளர்ந்தனர். பல ஆண்டுகளுக்குப் பின்னர்[3] இவர்களுடன் நெருக்கமாகப் பழகி மகிழும் வாய்ப்பைப் பெற்ற வெள்ளைத்தளபதி வெல்ஷ்[4], அவர்களது வீரவாழ்வை தமது நாட்குறிப்புகளில் இவ்விதம் சித்தரித்து வரைந்துள்ளார். "......... மருதுசேர்வைக்

5 Rajaram Row T. : Manual of Ramnad Samasthanam (1898) p. 248.

* இராமநாதபுரம் -- தேவிப்பட்டினம் சாலைக்கு அண்மையில் உள்ள பெருவயல் கிராமத்தில் முருகவேளுக்கு பெரிய கோயில் ஒன்றை நிர்மாணித்தார், இன்றும் அந்தக் கோயில் ரணபலி முருகன் ஆலயம் என சிறப்பாக விளங்கி வருகிறது. சேதுபதி மன்னர்களது அறக்கொடையால் ஆலயம் நன்கு பராமரிக்கப்படுகிறது.

காரர்கள் என்று அடிக்கடி குறிப்பிடப் படுபவர்களில் மூத்தவர் வெள்ளை மருது. இவருக்கு நிர்வாகத்தைப் பற்றி எவ்வித சிந்தனையும் கிடையாது. வேட்டைப்பிரியர். தமது பெரும்பாலான பொழுதை வேட்டையாடுவதிலும், துப்பாக்கி சுடுவதிலும் கழித்து வருகிறார். காடுகளில் உள்ள வேங்கை, சிறுத்தை போன்ற மிருகங்களுடன் போராடுவதில் அவருக்கு பெருவிருப்பு இருந்தது. அசாதாரண மனிதனாக விளங்கிய அவர், தமது கை விரல்களுக்கிடையில் ஆற்காட்டு நவாப்பின் வெள்ளி ரூபாய் நாணயத்தை வைத்து வளைத்து ஒடித்து விடுவார். தஞ்சை, திருச்சி, மதுரையில் தங்கி இருந்த பரங்கியருடன் தொடர்பு கொண்டு அவர்களைப்போய் பார்த்து பழகிவந்தார். அவர்களும் இவரிடம் பெருமதிப்பு வைத்து இருந்தனர். அவர்களில் யாராவது காட்டில் வேட்டையாடுவதற்கு விரும்பினால் உடனே அவர்கள் வெள்ளை மருதுவிற்குத்தான் தகவல் அனுப்புவார்கள். அவரும் அதற்கான ஆயத்தங்களை செய்து, காட்டிற்கு அழைத்துச் செல்வார். அவர்களுக்குத் தகுந்த தற்காப்பும் அளிப்பார். அவரைச் சுற்றிப்பல ஈட்டிக்காரர்கள் இருந்தாலும், புலி, சிறுத்தை போன்ற கொடிய மிருகம் வந்தால் அதனை முதலில் சந்தித்துப் பொருதி, வீழ்த்துவது அவர்தான். ... ... ... ...

''அந்தப்பரந்த வளமான சீமையின் அரசராக இருந்தவர் சின்னமருது. பெரும்பாலும் அவர் சிறுவயலில் வசித்து வந்தார். அவர் கறுப்பாக இருந்தாலும் அவரது எண்ணத்தில், இதயத்தில், மாசு இல்லாதவராக இருந்தார். அழகாகவும், அன்புடனும் பழகும் பண்பாளராகவும் இருந்தார். அவரது தலையசைவைக் கட்டளையாகக் கொள்ளும் அந்த சீமை மக்கள் அவரை எளிதில் கண்டு பேசி தங்களது தேவைகளைத் தெரிவிக்கக் கூடிய வகையில் காவல் இல்லாத மாளிகையொன்றில் வாழ்ந்து இருந்தார். நான் கி.பி 1795 பிப்ரவரி மாதத்தில் ஒருநாள் அவரைப்போய்ச் சந்திக்கச் சென்ற பொழுது, அங்கு வந்திருந்த மக்கள் 'அவருக்கு வாழ்த்துக்கள் கூறி மகிழ்ச்சியுற்றதை நோட்டமிட்டேன். அதன்பின்னர் நானும் அவரும் நண்பர்களானோம். நான் மதுரையில் இருக்கும் வரை அவர் எனக்கு அன்பளிப்புக்களாக உயர்ந்த ரக அரிசி, பழங்கள் ஆகியவைகளை அனுப்புவதற்குத் தவறுவதில்லை. குறிப்பாக தடித்த தோலும் மிகவும் இனிப்பும் உள்ள பெரிய ஆரஞ்சுப்பழங்களை அனுப்பி வைப்பார். அந்த ரகப்பழங்களை இந்தியாவில் வேறு எந்தப்பகுதியிலும் நான் பார்த்ததே இல்லை.

ஈட்டி எறிவதற்கும், வாள்போர் செய்யவும், குறிப்பிட்ட தொலைவில் வளரித்தண்டு வீசித் தாக்குவதையும் எனக்கு கற்றுக் கொடுத்தவரே அவர்தான்" என கர்னல் வெல்ஷின் குறிப்புகள் கூறுகின்றன.[6] இந்தப் பொதுப் பண்புகளைத் தவிர பெரிய மருது என்ற வெள்ளை மருதுவை விட, சின்னமருதுவிடம் சில சிறப்பான பண்புகளும் இருந்தன. எதிரியின் இயல்புகளை — குறிப்பாக பலவீனங்களை விரைவாகப் புரிந்து கொள்ளுதல் — அவைகளைத் தமக்கு சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளுதல் ஆகியவைகளில் அவர் திறமை பெற்று இருந்தார். அத்துடன் தமக்கு நல்லது என்று நம்புவதை அதன் விளைவு கருதாது துணிந்து மேற்கொள்ளும் துணிச்சலும் அவருக்கு இருந்தது. அவரது நடவடிக்கைகளைக் கண்டு அவரது எதிரிகள் அச்சமும் பீதியும் அடைந்தனர். இந்த நாட்டு மக்களை மிகவும் இழிவாக எண்ணி இருந்த பரங்கியர்களுக்குக்கூட "சின்ன மருது" என்றால் சற்று நிதானமாக நடக்க வேண்டும் என்ற நினைப்பு ஏற்படுவது உண்டு. இராமநாதபுரம் கோட்டைப் பொறுப்பாளரான கர்னல் மார்ட்டின்ஸ் என்ற பரங்கி, சின்ன மருதுவின் வீர சாகசங்களில் மனத்தைப் பறிகொடுத்து அவரது நெருங்கிய நண்பராக இருந்தான். கர்னல் வெல்ஷ் சின்னமருதுவிடம் வளரி, வாள், வேல், ஆகிய தமிழர்களது ஆயுதங்களைத் திறமையாகப் பயன்படுத்தும் நுணுக்கங்களை சின்னமருதுவிடம் கற்று அவரை தனது குருவாக ஏற்றுக் கொண்டான். அவர் மீது பரங்கிர் கொண்ட மதிப்பும் பற்றும், அவரது வீர விளையாட்டுக்களுக்கு - முரட்டுத்தனத்திற்கு - சில நேரங்களில் மூடு திரையாகவும் உதவியதைச் சில நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

நவாப்பின் பொறுப்பில் உள்ள மறவர் சீமையின் முக்கியமான ஆறு கோட்டைகளில் இரண்டு சிவகங்கைச் சீமையில் இருந்தன. ஒன்று திருப்பத்தூர், மற்றொன்று திருப்பூவனம்.[7] திருப்பூவனம் கோட்டையை மதுரையை ஆட்சிபுரிந்த கூன் பாண்டியன் அமைத்ததாக சில ஆவணங்களில் காணப்படுகின்றது[8] பதினாறு கொத்தளங்களும் முப்பத்து மூன்று அடி உயரமும்

---

6 **Col. James Welsh : Military Reminiscenees (1968) vol. I pp. 129-130**

7 **Military Country Correspondence, vol 44 (14-8-1793)p. 390**

8 **Ibid. vol 44B (24-7-1793) p.p. 450-52**

இருபத்து நான்கு அடி அகலமும் கொண்ட நான்கு மேடைகளுடன் அந்தக்கோட்டை காணப்பட்டதாகக்குறிக்கப்பட்டுள்ளது.[9] மதுரையின் எல்லைக் காவல் அரணாக அமைந்துள்ள இந்த கோட்டையின் மீது சின்னமருது சேர்வைக்காரரது கவனம் திரும்பியது. மெதுவாக அதனை அழிக்கத் திட்டமிட்டார். அவரது ஆட்கள் அந்தக்கோட்டையை இரவுபகலாக மெதுவாக அழித்துவந்தனர்.[10] அந்தக்கோட்டைப் பொறுப்பில் இருந்த நவாப்பின் பணியாளர் (கிலேதார்) மீர் அகமது என்பவரைத் தாக்கி அவமானப்படுத்தினர். அவரது பணியில் இருந்து துரத்தினர். இந்த நிகழ்ச்சியைக் கேள்விபட்ட நவாப் தக்க நடவடிக்கை எடுக்குமாறு சென்னை கவர்னரைக் கோரினார். இராமநாதபுரம் கோட்டைப் பொறுப்பில் இருந்த கோட்டைப் பொறுப்பாளரும் சின்னமருதுவின் நண்பருமான கர்னல் மார்டின்ஸ் அனுப்பிய பொய்யான அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு திருப்பூவனத்தில் அத்தகைய நிகழ்ச்சி நடக்கவில்லையென்றும், அச்சமயம் சின்னமருது சேர்வைக்காரர் சுகவீனமாக இருப்பதாகவும் மார்டின்ஸ் அறிக்கையில் கண்டிருந்தது.[11] இதனை மறுத்து நவாப் மீண்டும் திருப்பூவன நிகழ்ச்சி பற்றிய ஆதாரங்களை அளித்தவுடன், சிக்கந்தர் மலையில் நிலைகொண்டு இருந்த கர்னல் பிரவுன் திருப்பூவனம்சென்று கோட்டையின் பொறுப்பை மேற்கொண்டான்.[12] இருபத்து இரண்டு ஆண்டுகள் அந்தக் கோட்டைப் பொறுப்பாளராக இருந்த மீர் அகமது மூஸாகான் மதுரைக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டார்.

இன்னொரு நிகழ்ச்சி: சிவகங்கைச் சீமை கழனிவாசல் கிராமத்திற்கு வந்த தொண்டமான் சீமையைச் சேர்ந்த இருவர், மருது சேர்வைக்காரர் பணியாளர்களால் அடித்துக் கொல்லப்பட்டனர். இந்த கோரச் செயலுக்கு சரியான காரணம் எது எனத் தெரியவில்லை. இதனை வன்மையாகக் கண்டித்து, அனுப்பிய தொண்டமானது குற்றச்சாட்டுக்களின் மீது சிவகங்கைச் சேர்வைக்காரர்

---

9 Ibid (1-7-1793), p. 350

10 Ibid (24-7-1793) p. 454-55.

11 Military Country Correspondence. vol 44; (8-8-1793,) 381.

12 Revenue Consultations. vol 91-(A) 7-1-1798 pp. 4857-58

களுக்கு கும்பெனியார் அறிவுரையைக் கூட வழங்காமல் மழுப்பி விட்டனர்.[13]

மற்றொரு நிகழ்ச்சியில், இராமநாதபுரம் சீமையைச் சேர்ந்த திருவாடானை சுங்கச்சாவடி வழியாகக் கடத்தப்பட்ட சிவகங்கைச் சீமைப் பொருட்களுக்குரிய சுங்கத்தீர்வைத் தொகையான ரூ. 15,000/-யை, இராமநாதபுரம் அரசுக்கு செலுத்தாமல் சிவகங்கைப் பிரதானி அலைக்கழிவு செய்து காலங்கடத்தி வந்தார். இதனால் ஆத்திரம் அடைந்த இராமநாதபுரம் மன்னர் விஜயரகுநாத முத்துராமலிங்க சேதுபதி, கும்பெனிக் கலெக்டரது கவனத்திற்கு இந்த விஷயத்தைக் கொண்டு சென்று பரிகாரம் கோரிய பொழுது, தமது இயலாத் தன்மையைத் தெரிவித்ததுடன் மேலிடத்திற்கு முறையீடு செய்யுமாறு மன்னருக்கு கலெக்டர் அறிவுறுத்தினார். அந்த முறையீட்டின்மீது கும்பெனியார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.[14] பொறுமை இழந்த சேதுபதி மன்னர், தமது நாட்டின் வழியே சிவகங்கைச் சீமைக்குச் செல்லும் வாணிபப் போக்குவரத்து வழியை மாற்றி முழுவதுமாக தமது சீமை வழியே வாணிபச் சாத்துக்கள் செல்லுமாறு நிர்ப்பந்தித்த பொழுது, வாணிபச் சாத்து வருமானத்தை இழந்த சிவகங்கைப் பிரதானிகள் இராமநாதபுரம் சீமைக்கு வருகிற ஆற்றுக்கால்களை அணை கட்டி ஆற்றுநீர் கிடைக்காமல் செய்ய முயன்றனர்.[15] இன்னும் இதனைப் போன்று பல எல்லைச் சிக்கல்கள் எழுந்தமைக்கும் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்தான் காரணம் என சின்னமருதுவுடன் சேர்ந்து, கும்பெனியாரும், நவாப்புமே ஓலமிட்டனர்.[16]

இங்ஙனம் சின்னமருது சேர்வைக்காரரது அத்துமீறல்களுக்கு அணையிடாது, மறைமுகமாக அவருக்கு ஆதரவு வழங்கி வந்ததற்குக் காரணம் அன்றைய சூழ்நிலையில் சின்னமருதுவின் மூலமாக மைசூர் மன்னர் திப்புசுல்தானது பகைமையை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்ற கும்பெனியரது பயம். அத்துடன்,

---

13 Madurai District Records : vol 1202. 5.2 1792.
சிக்கந்தர் மலை - மதுரைக்கு தென்மேற்கே 10 கி மீ தொலைவில் உள்ள திருப்பரங்குன்றம் மலை. இந்த மலை மீது அடக்கம் பெற்றுள்ள முஸ்லீம் பெரியாரது நினைவாக அந்தமலை இவ்விதம் அழைக்கப் படுகிறது

14 Military Country Correspondence vol. 45, p.103

15 Ibid (30-6-1794), p.230

16 Military Consultations vol. 184, (25-3-1794) pp.1236-70

சின்னமருதுவும் பரங்கிகளைப் பெரிதும் மதித்துப் போற்றி வந்தார். அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் அவ்வப்பொழுது செய்து வந்தார். இவைகளுக்கெல்லாம் மேலாக, சூழ்நிலைக்குத் தக்கவாறு வளைந்து பணிந்து நடக்கும் மனப்பாங்கும் அவரிடம் இருந்ததை அவரது கடிதங்கள் காட்டுகின்றன.

கி.பி. 1194ல் மறவர் சீமையில் ஏற்பட்ட வறட்சி நிலையைப் பயன்படுத்தி, தஞ்சை தரணியில் இருந்து ஏராளமான தானியங்களை அங்கு இறக்குமதி செய்து அபரிதமாக கொள்ளை லாபம் அடிக்க பரங்கிகள் துடித்தனர். அந்தக் கொள்கைக்கு உதவ, அவர்கள் மறவர் சீமையில் கொண்டு வந்து விற்கும் தானியங்களுக்கு சுங்கவரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென கோரினர்.[17] சுயநலம் மிகுந்த பரங்கிகளின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள இராமநாதபுரம் சேதுபதி மன்னர் முற்றும் மறுத்து விட்டார்.[18] ஆனால் சிவகங்கைப் பிரதானிகள் தயக்கம் எதுவும் இல்லாமல் சிவகங்கை சீமையில் பரங்கிகளுக்கு உடனடியாக இந்த சலுகையை வழங்கினர்.[19] தொடர்ந்து இராமநாதபுரம் மன்னருக்கும் சிவகங்கை பிரதானிகளுக்கும் எழுந்துள்ள பிரச்சனைகளையும் புகார்களையும் விசாரிக்க இருதரப்பினரையும் கும்பெனிக்கலெக்டர் பவுனி என்பவர் முத்துராமலிங்க பட்டணத்தில் ஆஜர் ஆகுமாறு "சம்மன்" கட்டளை அனுப்பினர். அதனை ஏற்று கலெக்டரைச் சந்திப்பது இராமநாதபுரம் சீமை மன்னரது மரபுகளுக்கு பொருத்தமானது அல்ல எனக் கருதி "சம்மனை" இராமநாதபுரம் மன்னர் உதாசீனம் செய்தபொழுது மருது சேர்வைக்காரர்கள் அதனைப் பெற்றுக் கொண்டதுடன் கலெக்டர் கட்டளைப்படி அவரை தொண்டி சென்று பேட்டி கண்டனர்.[20]

---

17 Military Consultations, vol. 182, (7-1-1794), p. 79

18 Military Consultations, vol. 184, (25-3-1794), pp. 1236-70

19 Military Consultations, vol 183 (1,9-1794),

* முத்துராமலிங்கபட்டினம் - இராமநாதபுரம் மாவட்டத்தின் கிழக்குக்கடற்கரைப் பகுதியில் தொண்டிக்கு வடக்கே 3 கி மீ. தொலைவில் உள்ள சிற்றூர்

20 Military Consultations; vol. 189, (A), 13-9-1794), pp.3920-28

இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளினால் பரங்கியரது பகைமையை வளர்த்துக் கொண்ட இராமநாதபுரம் மன்னரது, இராமநாதபுரம் கோட்டையை எதிர்பாராத நிலையில் கும்பெனிப் படைகள் திடீரென சூழ்ந்தது. 8-2-1795ம் தேதி காலையில் இராமநாதபுரம் மன்னரைக் கைது செய்து திருச்சிக்கோட்டைச் சிறையில் இட்டு, மறவர் சீமையைத் தங்கள் நிர்வாகத்தில் வைத்துக் கொண்டதை எதிர்த்து, கி.பி. 1797 மேமாதக் கடைசியில் முதுகுளத்தூர் பகுதி மக்கள் ஆயுதம் ஏந்தி கிளர்ச்சி செய்த பொழுது கும்பெனியாரது ஆயுதப்படைகளினால் சமாளிக்க முடியாத நிலைதோன்றியது. ஏறத்தாழ இரண்டு மாதம் நீடித்த அந்தக் கிளர்ச்சியில் குறிப்பாக அபிராமம் அருகே கும்பெனிப் படைக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே நிகழ்ந்த இறுதிப்போரில் நூற்றுக்கணக்கான மறவர்கள் நாட்டுப்பற்றும், ராஜ விசுவாசமும் மிகுந்தவர்களாக போராடி மடிவதற்கு, எட்டையாபுரம் வீரர்களைவிட, சின்ன மருது சேர்வைக்காரரது சிவகங்கைப் படைதான் காரணமாக இருந்தது. இந்த இக்கட்டான நிலையைச் சமாளித்து மறவர் சீமையில் கும்பெனியாரது கொடி தொடர்ந்து பறப்பதற்கு துணை நின்ற சிவகங்கை சேர்வைக்காரர்களது உதவியை பாராட்டி கும்பெனியார் பரிசுகள் வழங்கினர். இதற்கென சின்னமருது சேர்வைக்காரரது மகனை கும்பெனி கவர்னர் செனனைக்கு வரவழைத்து பேட்டி அளித்து பெருமைப்படுத்தினார்.[21]

அன்றைய அரசியல் சூழ்நிலையில் சிவகங்கைப் பிரதானிகள் ஏனைய பாளையக்காரர்களைப் போன்று கும்பெனியாரது ஆதரவாளர்களாக விசுவாசத்துடன் நடந்து வந்ததை அவர்களது கடிதங்களில் இருந்து தெரிய வருகிறது. இராமநாதபுரம் முத்து ராமலிங்க சேதுபதி மன்னரைப்பற்றிய முறையீடு ஒன்றில், அவர்கள் எப்பொழுதும் கும்பெனிக் கலெக்டரது கட்டளைகளுக்கு கீழ்ப்படியக் காத்து இருப்பதாகவும், கும்பெனியாருக்காகவே வாழ்ந்து வருவதாகவும், அதனால் மயிரிழையில் கூட வேறுபட்டு நடக்க மாட்டோம் என அவர்கள் உறுதியளித்து எழுதியுள்ளனர்.[22]

---

**21** Revenue Consultations - vol. 95 (7-6-1799), pp. 957-1054

**22** Madurai District Records-vol. 1133 (4.2.1801), pp. 171-172

4.2.1801, 30.3.1801 ஆகிய நாட்களில் எழுதிய அவர்களது மடல்களிலும், இந்த ''விசுவாசம்'' தெளிவாகக் காணப்படுகிறது.[23] இன்னொரு கடிதத்தில் அவர்கள் தங்களைக் கும்பெனியாரது குழந்தைகள் என்று கூட குறிப்பிட்டு இருக்கின்றனர்.[24]

இங்ஙனம் கும்பெனியாரது நேசத்தையும் விசுவாசத்தையும் பத்தாண்டுகளுக்கு மேலாக மதித்து வந்த சிவகங்கை சேர்வைக்காரர்களது மனநிலையில் திடீரென மாற்றம் ஏற்பட்டது. காரணம் அடுத்து அடுத்து ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகள்.

---

23 Military Country Correspondence: vol. 45 (8-7-1794) pp. 234-42

24 Madurai District Records: vol. 1133-(30-3-1801), pp. 200-210

# 3

## கண்கள் திறந்தன

கலிங்க நாட்டில் தொடுத்த கடுமையான போரின் வெறுக்கத்தக்க விளைவுகள் அசோகப் பேரரசரது சிந்தனையிலும் செயலிலும் மாற்றத்தைப் புகுத்தின. அவரது வாழ்க்கையிலும் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. அதனைப்போன்று சிவகங்கைச் சீமைப் பிரதானிகளது அரசியல் வாழ்க்கையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது இராமநாதபுரம் சீமையின் கமுதிப்போர். கி.பி.1799 மே மாத இறுதியில் கும்பெனிக் கலெக்டர் லூஷிங்டனது வேண்டுகோளுக்கு இணங்கி, சிவகங்கையிலிருந்து மறப்படையொன்று கமுதிக் கோட்டைக்குப் புறப்பட்டுச் சென்றது.[1] இந்தப் படையை சின்னமருது சேர்வைக்காரரது மகன் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். இராமநாதபுரம் சீமையின் சேதுபதி மன்னரைச் சிறையிலடைந்த கும்பெனியாரது கொடுமையை எதிர்த்துப் போரிட்ட கிளர்ச்சிக்காரர்கள், வெள்ளக்குளம் காட்டில் நடைபெற்ற போரில் படுதோல்வியடைந்ததற்கும் கும்பெனியாரது செல்வாக்கு தொடருவதற்கும் மருது சேர்வைக்காரர்களது இந்த ராணுவஉதவி துணையாக இருந்தது.

அப்பொழுது, மருது சகோதரர்கள் கும்பெனியாரை ஆதிக்க வெறிகொண்ட அந்நியராகக் கொள்ளவில்லை மாறாக அவர்களை அன்னியோன்னியம் கொண்ட அருமை நண்பர்களாகக் கருதினர். அதுவரை அவர்களிடம் மிகவும் நெருக்கமாகப் பழகி நட்புடன் திகழ்ந்த கர்னல் வெல்ஷ் போன்று அனைத்து வெள்ளைப் பரங்கிகளும் இருப்பார்கள் என அவர்கள் தவறான மதிப்பீடு செய்து இருந்தனர். ஆதலால், கலெக்டர் லூஷிங்டன், உதவி கோரியவுடன், உடனே தமதுபடைகளை கமுதிக்கு அனுப்பி வைத்தனர். அதன் விளைவு என்ன என்பதை விவேகத்துடன் சிந்திக்க

---

Revenue Consultation : vol. 229, 30-5-1799, p. 4849.

அவர்கள் தவறிவிட்டனர். அதன் பிரதிபலிப்பு முதுகுளத்தூர் பகுதி மக்களது புரட்சி மண்ணோடு மண்ணாக நசுக்கப்பட்டது. வெற்றியினால் திளைத்து மகிழ்ந்த கலெக்டர் லூஷிங்டன், மருது சகோதரர்களுக்குப் பாராட்டு தெரிவித்தார். சென்னைக் கோட்டையில் கும்பெனிக் கவர்னரது தலைமையில் கூடிய "கும்பெனியரது இயக்குநர்கள் குழு" மருது சேர்வைக்காரர்கள் தக்க சமயத்தில் உதவியதற்காகத் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டதுடன் கலெக்டர் லூஷிங்டன் பரிந்துரைத்தவாறு சேர்வைக்காரர் மக்களுக்கு 116-7-52 ஸ்டார் பக்கோடா பணமதிப்புள்ள அன்பளிப்புகளை வழங்க அனுமதித்தது. அத்துடன் போரில் உதவிய சிவகங்கைப் படையணியாளருக்கு உரிய "படி" வழங்கவும் முடிவு செய்தது.[2] பின்னர் மருது சேர்வைக்காரர் மக்களும் சென்னை சென்று கும்பெனிக் கவர்னரைப் பேட்டி கண்டனர். ஆரவாரத்துடன் வரவேற்கப் பெற்றனர்.[3] அன்பளிப்புகளை ஏற்று வந்தனர்.

இந்த விசுவாச நடவடிக்கைக்காகக் கும்பெனியாரது பாராட்டையும் பரிசினையும் பெற்றார், சின்னமருது சேர்வைக்காரர். என்றாலும், அபிராமம், கீழக்குளம் ஆகிய ஊர்களில் கிளர்ச்சித் தலைவர்கள் - மயிலப்பன், சிங்கன்செட்டி, புட்டூர் ஆகிய சாதாரண மக்கள் தலைவர்களது சிறிய அணிகள், கும்பெனியாரது வலிமைமிக்க ஆயுதப்படைகளைக் கட்டுப்பாடாக எதிர்த்து, ஆயுதம் ஏந்திப் போரிட்ட பாங்கு, சின்னமருது சேர்வைக்காரர் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுவரை சேதுபதி மன்னரது சேர்வைக்காரனான மயிலப்பன் தான் மக்களைத்திரட்டி வீணான கிளர்ச்சியில் கும்பெனியாருக்கு எதிராக ஈடுபட்டு இருப்பதாகக் கேள்விப்பட்டதைப் பொய்யாக்கி மறவர் சீமையின் அனைத்து மக்களும் அவர்களது மண்ணுக்குரிய நாட்டுப் பற்றுடனும், அன்னிய ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுடனும், போராடி மடிந்த நிகழ்ச்சிகளை அவரால் மறக்க முடியவில்லை. மேலும், மறவர் சீமை மக்களது கிளர்ச்சியில் உள்ள உயரிய நோக்கத்தை உணர்ந்த சாயல்குடி, குளத்தூர், நாகலா

---

2 vol 95-(7-6-1799) p.1078.

3 vol 110 (24-7-1799) p.p. 1361-69

4 vol 95. (7-6-1799)-p p. 957 1054.

புரம், சாத்தூர் ஆகிய பக்கத்துப் பாளையக்காரர்கள் (அனைவரும் வடுகர்கள்) முழு மூச்சுடன் இராமநாதபுரம் சீமை மறவர்களுக்கு இந்தக்கிளர்ச்சியின் பொழுது ஓடோடி வந்து உதவி புரிந்த பொழுது, அதே வட்டாரத்தில் பிறந்து, வளர்ந்த அவர் மட்டும், அந்த மக்களையும் அவர்களது மனநிலையையும் புரிந்து கொள்ளாமல், அவர்களது அழிவிற்குக் காரணமாக இருந்ததை அவரது மனச்சாட்சி உறுத்திக் கொண்டு இருந்தது. அந்த மறக்குல மக்களது வீர மரணப் போராட்டம், அவர்கள் கொட்டிய குருதி பாறையில் பட்ட பனியாகப் பயனற்றுப் போக அவர் காரணமாக இருந்ததைப் பற்றிய குழப்பம் அவரை ஆழ்த்தியது. அத்துடன் கும்பெனியாருக்கு, அவர் செலுத்திய பேஷ்குஷ் தொகையான 18,500/- போர்ட்டோ நோவா பக்கோடா பணத்தை ஏப்பமிட்ட கலெக்டர் ஜாக்ஸனது துபாஷ் ரங்கபிள்ளை மீது சுமத்திய குற்றச்சாட்டைப்பற்றி சிறிதும் அக்கரை கொள்ளாது, கலெக்டர் லூஷிங்டன் நடந்து கொண்டது கும்பெனியார் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையைச் சிதறடித்தது. இந்தத் தொகை வேறு காரணங்களுக்காக துபாஷ் ரெங்கபிள்ளை பெற்று இருக்க வேண்டும் என்பது கலெக்டர் லூஷிங்டன் கருத்து. இது பற்றி விசாரிப்பதற்காக கிரீம்ஸ் என்பவரை இராமநாதபுரம் சிறைக் காவலில் உள்ள ரங்கப்பிள்ளையிடம் கும்பெனியார் அனுப்பினர். ரங்கப்பிள்ளையும் அந்த தொகையை - 7000 போர்ட்டோ நோவோ பக்கோடா பணத்தை மருதுசேர்வைக்காரர் கலெக்டர் ஜாக்ஸனிடம் நேரில் கொடுத்தார், என்றும் 11,500 போ.நோ. பணத்தைத் தாமே பெற்றுச் சென்று ஜாக்ஸனிடம் ஒப்படைத்தாக ஒப்புக் கொண்டார்.[5] என்றாலும் சின்ன மருது சேர்வைக்காரரது குற்றச் சாட்டை ஏற்று பரிகாரம் காண கும்பெனியார் மறுத்தனர்.

இத்தகைய குழப்பமான சூழ்நிலையில், பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான கட்டபொம்மு நாயக்கர், தமது பரிவாரங்களுடன் சிவகங்கைச் சீமைக்கு வந்தார். சின்னமருது சேர்வைக்காரரை 5.6.1799ல் பழமானேரி கிராமத்தில் அவர் சந்தித்து உரையாடினார்.[6] சில மாதங்களுக்கு முன்னால் கலெக்டர் ஜாக்ஸன் தம்மைச்சந்திக்குமாறு ஓலை அனுப்பியதை மதித்து

---

5 Revenue Consultations-vol. 95, 3-7-1799 p. 1182.

6 Board of Revenue Consultations,: vol 229. (10-6-1799) p p. 4853-91.

அவரைப்பேட்டி காண குற்றாலம் சென்றதையும் அவரது பேட்டி கிடைக்காததால் அங்கிருந்து அவரைத் தொடர்ந்து சொக்கம் பட்டி, சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், பாவலி ஆகிய ஊர்களுக்குச் சென்றும், வேண்டுமென்றே அவருக்கு பேட்டி மறுத்து, நாற்பது நாட்கள் அலைக்கழிவு செய்த பின்னர் இராம நாதபுரம் இராமலிங்கம் விலாசம் அரண்மனையில் கலெக்டரைச் சந்தித்த பொழுது தமக்கு இருக்கைகூட அளிக்காமல் குற்றவாளி யைப்போல மூன்று மணி நேரம் நிற்கவைத்து விசாரித்து அவ மரியாதை செய்ததையும், சிறிது ஓய்விற்குப் பின்னர் மீண்டும் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து திரும்பிய அவரையும் அவரது பிரதானி சுப்பிரமணிய பிள்ளையையும் தடுத்து நிறுத்து மாறு உத்திரவிட்டதையும் விவரமாக எடுத்துச் சொன்னார். அவரும் அவரது குழுவினரும் இராமநாதபுரம் கோட்டையில் இருந்து தப்பி வந்ததையும், அவரது குழுவினரும் கோட்டை யில் இருந்து தப்பி வந்ததையும், அவரது குதிரைகளையும்[7] பொன், வெள்ளி ஆபரணங்களையும் கலெக்டர் ஜாக்ஸன் அபகரித் துக் கொண்டதுடன், அவரது பிரதானி சிவசுப்பிரமணியப்பிள் ளையை இராமநாதபுரம் கோட்டைக்குள் சிறை வைத்துள்ள கொடுமைகளை, கட்டபொம்மு நாயக்கர் தெரிவித்தார்.[8] மேலும் புதிதாகப் பணியேற்றுள்ள கலெக்டர் பேஷ்குஷ் தொகையை வசூலிப்பதில் மட்டும் கண்ணுங்கருத்துமாக இருப்பதையும், தமது பாளையத்தில் வறட்சியினால் குடிகள் படுகின்ற சிரமங்களைச் சிறிதும் உணராதவராக இருப்பதையும் தெரிவித்தார்.

கட்டபொம்மு நாயக்கரது கண்ணீர்க்கதையைக் கவனமு டன் கேட்ட சின்ன மருது சேர்வைக்காரரது சிந்தனை குழம்பியது; மனம் நெகிழ்ந்தது; நைந்தது. சிற்றரசரைப்போன்ற பாஞ்சைப் பாளையக்காரரை, வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்க இங்கு வந்த கும்பெனியார், இங்கிதம் இல்லாமல் இழிவாக நடத்தி யிருப்பது, தமக்கே ஏற்பட்ட துயரமும் தலைக்குனிவும் போல உணர்ச்சிவசப்பட்டு துடித்தார். பரங்கித் துரைகளைப்பற்றி அது வரை அவர் கொண்டு இருந்த நல்ல எண்ணம், நேச மனப் பான்மை ஆகியவை அனைத்தும் ஒரு நொடி நேரத்தில் பறந்து

---

7 Revenue Consultations vol. 88 B-27-9-1793, pp. 3103-3110

8 Vol 88 B 25-9-1798, pp. 3101 - 118.

மறைந்தன. ஆர்க்காட்டு நவாப்பின் அரச உடையின் பின்னே மறைந்து இருந்து கொண்டு, அவரது அடிவருடிகளாக, தமிழகத்திற்குள் நுழைந்த பரங்கிகளது ஆணவமும் ஆதிகார வெறியும் தொடர்ந்து வளர்ந்தால், தமிழகத்தின் மன்னர் பரம்பரையினருக்கும் அவர்களது பிரதிநிதிகளான பாளையக்காரர்களுக்கும் - ஏன் குடிமக்களுக்கும் கூட, தீராத தொல்லைகள்தான் என்பதை சிவகங்கைப் பிரதானிகள் உணர்ந்தனர். ஆதலால் அவர்கள் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு நாயக்கருக்கு வழங்கிய அறிவுரை - துணிந்து நில் - என்பதாகும். சின்னமருது சேர்வைக்காரரது உறுதியான ஆறுதல் வார்த்தைகள் அவருக்கு உத்வேகத்தை ஊட்டின. அதுவரை கும்பெனியாருக்கு பயந்து நடுங்கிய கட்டபொம்மு நாயக்கருக்கு துணிச்சல் ஏற்பட்டது. தமது எதிர்காலம் பற்றிய தெளிவான முடிவுடன், அவர் பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பினார். அன்று முதல் சிவகங்கைச் சீமைக்கும் பாஞ்சைப் பதிக்கும் நெருக்கமான தொடர்புகள் இரகசியமாகத் தொடர்ந்தன.

கட்டபொம்மு நாயக்கரது பழமானேரிப் பயணத்தையும் சிவகங்கைச் சேர்வைக்காரரது சந்திப்பையும் உளவாளிகள் மூலம் அறிந்த கலெக்டர் லூஷிங்டனுக்கு ஒன்றும் புரியவில்லை. மறவர் சீமைப்பகுதிக்கு கும்பெனிக் கலெக்டராகப் பணியேற்று ஆறு மாதங்கள் ஆகியும் மரியாதை நிமித்தம் கூட அவரைச் சந்திக்காத பாஞ்சைப்பாளையக்காரர் சிவகங்கைப் பிரதானிகளிடம் செல்வதற்கு காரணம் என்ன? கலெக்டரது சிந்தனை நீண்டது. முடிவிற்கும் வந்தார். அதுதான் பாஞ்சைப்பாளையக்காரர் கும்பெனியாரிடத்தில் கொண்டிருந்த விசுவாசத்தைக் கை கழுவி விட்டார். கட்சி மாறிவிட்டார் என்பது, அத்துடன் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக கும்பெனியார் கட்டளைகளை ஏற்று பணிவுடனும் பாசத்துடனும் நடந்து வந்த சிவகங்கைப் பிரதானிகளும், கும்பெனியாருக்கு எதிரான போரணியைத் துவக்க ஆயத்தமாகிவிட்டார் என்பது ஆகும். அதற்கான காரணங்கள் ... .... ... அப்பொழுது, திண்டுக்கல், இராமநாதபுரம், நெல்லை, மதுரை, சீமைகளில் உள்ள பாளையங்களில் உள்ள மக்கள் பரங்கியரது அதிகார வெறிக்கும் ஆணவப் போக்கிற்கும் ஆளாகி சொல்லொணாத் துயரங்களைத் தாங்கி வந்தனர். முந்தைய ஆண்டுகளில் நிலவிய வறட்சிக்கொடுமை மாறாத நிலையில், கும்பெனிக் கலெக்டர் மக்களைக் கசக்கிப் பிழிந்து தங்கள் வரித் தீர்வைகளை வசூலித்து வந்தார். ஏற்கனவே இராமநாதபுரம்

சேதுபதி மன்னரும், மைசூர் திப்பு சுல்தானும், அவர்களது பகுதிகளில் அக்கிரமமாக வரி வசூலை மேற்கொண்டு, குடிகளைக் கொடுமைப்படுத்தியதாக கூக்குரலிட்டு வந்த கும்பெனியார், இப்பொழுது, நவாப்பிடமிருந்து பெற்ற அதிகார மாற்றம் மூலம் சம்பந்தப்பட்ட பகுதிகளில் நடைமுறையில் இருந்த வரி வசூலைவிட மிகுதியான அளவு வசூல் செய்தனர். மதுரை, கூடலூர் பாளையங்களில் தொண்ணூற்று ஆறு விழுக்காட்டிற்குக் கூடுதலாகவும், கம்பம் பகுதியில் பதினேழு விழுக்காடும், பழனிப்பகுதியில் பதினேழரை விழுக்காடும், திண்டுக்கல் பகுதியில் இருபத்து ஐந்து விழுக்காடும், கோயம்பத்தூர் பகுதியில் நூற்றிப் பதினெட்டு விழுக்காடும், திருநெல்வேலிப் பகுதியில் நூற்றுப்பதினேழு விழுக்காடும், கூடுதலாக வசூல் செய்தனர்.[9] இராமநாதபுரம் பகுதியில் புதிய உத்திகளைப் புகுத்தி, வசூல் முறையிலும் மாற்றங்களைப் புகுத்தினர். மகசூலில் குடியானவர்களுக்குரிய பங்கைக் குறைத்து கூடுதலான தொகையை வசூலிக்க ஏதுவாக தானிய விலையை உயர்த்தினர். பஞ்சத்திலும், பசியிலும், துடிதுடித்துக் கொண்டிருந்த விவசாயிகள், பக்கத்தில் உள்ள தஞ்சாவூர் சீமைக்கு உயிர்பிழைக்க ஓடினர். மறவர் சீமையின் கிராமங்கள் களை இழந்து, மக்கள் நடமாட்டயில்லாது காணப்பட்டன.[10] ஆங்காங்கு தனிப்பட்ட ஒருசிலரும், அவர்களுக்கு வேறு எவ்வித நம்பிக்கையும் இல்லாத நிலையில், தங்களைக் காத்துக்கொள்ள, வளர்ந்து வரும் அல்லல்களைக் களைய, ஆயுதமேந்திப் போராட ஆயத்தமாகிக் கொண்டு வந்தனர்.[11]

பாளையக்காரர்களது நிலையும் அன்றைய சாதாரண குடிமக்களது நிலையைவிட, மாறுபட்டதாக இல்லை. மதுரை நாயக்க மன்னர்களது முன்னூறு வருடகால ஆட்சியில் குறுநில மன்னர்களாக, மக்களிடம் மரியாதையுடனும் மதிப்புடனும், வாழ்ந்த அவர்களை, சமுதாயத்தின் கீழ்நிலைக்குக் கும்பெனியார் தாழ்த்தி வருத்தினர். அவர்களது அளவுகடந்த செல்வாக்கை அகற்றினர். ஆண்டுக்கொரு முறை அவர்கள் மக்களிடமிருந்து பெற்று வந்த

---

9 Board of Revenue Consultations: vol 2 (1-10-1799). 2-13.

10 Madurai District Collectorate Records : vol, 1129 (1-8-1800,) p.192.

11 Board of Revenue Consultations, vol 3 (10-10-1801,) p.116

''தேசகாவல்'' காணிக்கையைக்கூட கும்பெனி துரைகள், வற் புறுத்திக் பெற்றுக் கொண்டனர்.[12] கும்பெனியாரது பேரா சையை, லஞ்ச லாவண்யத்தைத் திருப்திப்படுத்த முடியாத பாளையக்காரர்களது வரிவசூலிக்கும் உரிமையை,பொது ஏலத்தில் விட்டு, கூடுதல் தொகை பெறும் தந்திரத்தைக் கையாண்டனர். இந்த முறையிலும், லஞ்சமும், ஊழலும் ஒட்டிக் கொண்டு இருந்தன.[13]

மதுரைச்சீமையின் குழப்பம் தொடர்ந்தது. மறவர் சீமை நிலையை நன்கு புரிந்து இருந்த மதுரை கலெக்டர் மதுரைச் சீமைப்பாளையக்காரர்களையும் குடிமக்களையும் எச்சரித்து வந் தார்.[14] கம்பம், கூடலூர் பகுதிகளுக்குக் குத்தகைதாரராக இராம நாதபுரம் முத்துஇருளப்ப பிள்ளையை நியமித்து, மக்களது குரோ தத்தையும் வெறுப்பையும்குறைக்க முயன்றனர்.[15] கும்பெனியாரது கைக்கூலியும் சிறந்த நிர்வாகியுமான பிள்ளைவாளின் மந்திர தந்திரங்களுக்கு அங்கு மகிமை இல்லாமல் போய்விட்டது, அங்கே ஏமாற்றமடைந்த கும்பெனியார் பிள்ளையை திருப்பி அழைத்துக் கொண்டனர்.[16] என்றாலும் வெறுப்பும், எதிர்ப்பும் குறையவில்லை. குமாரப்பிள்ளை என்ற திண்டுக்கல் குத்தகைதாரரும் அவரது சகாக்களான தாஸ செட்டி. பந்தனச் செட்டி ஆகியோரும் கும் பெனியாருக்கு எதிரான கிளர்ச்சிகளைத் தூண்டி விட்டனர்.[17] தேவதானப்பட்டி பாளையக்காரர் கும்பெனியாரது கட்டளை களைத் தொடர்ந்து புறக்கணித்து வந்தார். கும்பெனியாருக்கு 30-1-1795 முதல் செலுத்த வேண்டிய கிஸ்திப் பாக்கியைச் செலுத்த மறுத்தார். கும்பெனியாரது பாளையமான கள்ளர்பட்டியை யும் கொள்ளையிட்டு தமது ஆத்திரத்தை வெளிப்படையாகக் காட்டினார். அதுவரை அக்கினிக் கொழுந்தாக இருந்த மக்களு டைய கொந்தளிப்பு, ஜுவாலையுடன் கூடிய காட்டுத்தீயாக மாறிப் பரவியது.

---

12 Board of Revenue Proceedings, vol 239,(18-11-1799.)

13 Revenue Consultations,vol. 110, (4-9-1801.) 1662-63.

14 Madurai District Records vol 1110, 8-1-1795

15 Ibid 8-1-1795.

16 Ibid. 1203 26-1-1795.

17 Madurai District Records vol : No 1110(27-2-1795)

அந்த வட்டாரத்தில் மிகுந்த செல்வாக்குடன் இருந்த கன்னிவாடி பாளையக்காரரைக் கும்பெனியார் அணுகி சந்தையூர் பாளையக்காரர் லோகையா நாயக்கருக்கு எந்தவகையிலும்,உதவி யோ புகலிடமோ அளிக்காது இருக்குமாறு கேட்டுக்கொண்டனர்.[18] அத்துடன் எப்படியாவது லோகையா நாயக்கரையும் அவரது கிளர்ச்சிக்காரர்கள் அணியையும் பிடித்துவிட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.[19] பின்னர் சிலரைத் துரத்திப்பிடித்துத் தூக்கில் ஏற்றினர்.[20] அந்தப் பட்டியலில் தேவதானப்பட்டி பாளையக் காரர் பூஜாரி நாயக்கரையும் சேர்த்தனர்.[21]

ஆனால், கும்பெனியாரது இந்த முயற்சிகள் பலனளிக்க வில்லை. மாறாக, அவர்கள் மீது, இன்னும் மிகுதியான வெறுப்பும் விரோதமும் வளர்ந்து வந்தன, என்பதை கி.பி. 1799ம் வருடத்திய கும்பெனியாரது ஆவணங்கள் புலப்படுத்துகின்றன. கன்னிவாடி பாளையக்காரர் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு கொடுத்துவந்தார். கும்பெனியாருக்கு செலுத்த வேண்டிய கிஸ்தியை தொடர்ச்சியாக செலுத்தவில்லை. கும்பெனிக் கலைக்டரது உத்திரவுகளுக்கும் அவர் தம்மை கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. இந்த நிலையில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள கும்பெனிக் கலெக்டர் திட்ட மிட்டார். ஆயுதபாணிகளாக இருந்த அனைத்து சேவகர்களையும் ஒன்று திரட்டி வைப்பதிலும், கிளர்ச்சிக்காரர்கள் திடீர் தாக்குதல் தொடுத்தால் அதனைச் சமாளிப்பதற்குமான திட்டத்தைத் தயா ரித்தார். இவ்விதம் மேலிடத்தில் இருந்து தக்க உதவிகளைப் பெறுவதற்குள்ளான இடைக்காலத்திற்கான ஏற்பாடு இது.[22]

வளர்ந்து வரும் பொதுமக்களது வெறுப்பிற்கு அன்றைய நாணயச் செலாவணி முறையில் இருந்த சிக்கல்களும் காரணமாக இருந்தன. மதுரைச் சீமையை பொறுத்தவரையில், மதுரை சுல் தான்கள், (கி.பி. 1334-78) மதுரை நாயக்க மன்னர்கள் (கி.பி. 1521-1736) ஆட்சிக்குப் பின்னர் முறையான பணம், காசுகள், வணி

---

18 Madurai District Records vol 1111, (28-7-1795)
19 Madurai District Records vol 1113. (27-6-1795)
20 Revenue Consultations vol 88 (11-10-1798)
21 Military Consultations vol 260 (6-5-1800) pp. 2681-96
22 Madurai District Records vol 1121. (16 1-1799).

கத் துறையில் செலாவணியில் பயன்படுத்தப்படவில்லை. ஆர்க்காடு நவாப்பின் ஆட்சி அலங்கோலத்திலும் ஆர்க்காட்டு வெள்ளி ரூபாய் பணம் பொதுமக்களது புழக்கத்திற்குப் போதுமான அளவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படவில்லை. அப்பொழுது செலாவணியில் இருந்த டச்சு கிழக்கிந்திய கம்பெனியாரது போர்ட்டோ நோவோ பக்கோடாக்கள்.[23] ஆர்க்காடு நவாப்பின் நிர்வாகத்தில் செல்லும் பணமாக மதிக்கப்பட்டன. வேறு வழி இல்லாத காரணத்தினால் ஆனால் கும்பெனி அலுவலர்கள், தங்களது ஒப்பந்தாரர் (Renters) களிடமிருந்து வசூலிக்க வேண்டிய தொகையை •போர்ட்டோ நோவோ பக்கோடா நாணயமாகக் கணக்கிட்டு வசூலிப்பது சிரமமாக இருந்தது. இராமநாதபுரம், திருநெல்வேலிப் பகுதிகளில் டச்சு வியாபாரிகள், தானியங்கள், கைத்தறி துணி, வணிகத்தில் ஈடுபட்ட பகுதிகளில்தான் இந்த நாணயங்கள் கிடைத்தன. ஆதலால், ஒப்பந்தக்காரர்களிடம் அங்காடி விலைகளில், சேரவேண்டிய தொகையைக் கணக்கிட்டு வசூலிப்பது கும்பெனியாருக்கு சாதகமாக இருந்தது. இந்த இருதரப்பு நிலைகளையும் சீர் செய்து, பாக்கி கணக்குகளை நேர் செய்வது கடினமான காரியமாக இருந்தது.

இதனால் கும்பெனியாரே, பொதுமக்களது செலாவணிக்கு வேண்டிய நாணயங்களைத் தயாரித்து வெளியிட வேண்டுமென கோரிக்கைகள் எழுந்தன.[24] ஆனால் பலன் இல்லை. என்றாலும் ஆர்க்காடு நவாப்பின் மானேஜர், செலாவணியில் இருந்த பிற நாட்டு நாணயங்களை அவர்களது ஆர்க்காட்டு வெள்ளிப் பணத்திற்கு ஈடாக அதாவது ஒரு பணத்திற்கு வெள்ளிப்பணம் தொன்னூற்று ஆறு என்று வாங்கி உருக்கி நவாப்பின் நாணயமாக மாற்றி வெளியிட்டார். இந்த நாணயப் புழக்கத்திற்கு மதிப்பு அதாவது நாற்பத்து ஆறு (இந்தப்)புது நாணயங்கள் ஆர்க்காட்டு வெள்ளி ரூபாய் ஒன்றிற்கு சமம் என மதிப்பிடப்பட்டது இதனால் பொதுமக்கள் தான் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.[25] இன்னொரு

---

23 டச்சுக் கிழக்கிந்திய கும்பெனியார், தஞ்சாவூரில் ஆட்சி செய்த நாயக்க மன்னரிடமிருந்து பெற்ற கடற்கரைப் பகுதியில், கோட்டையும் பண்டகசாலையும் அமைத்து இருந்தனர். புதிய துறைமுகம் என்ற பொருளில் Porto Novo எனப் பெயரிட்டு அழைத்தனர். இன்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள 'பொறை ஆறு' என்ற ஊர் தான் அந்தத் துறைமுகம்.

24 Madurai District Records vol. 1103, p. 17

25 Madurai District Records vol. 1103 p. 18.

வகையிலும் பொதுமக்கள் - குறிப்பாக விவசாயிகள் வீணான துன்பத்திற்கு ஆளாயினர். அறுவடையில், விவசாயிகளிடமிருந்து அரசுத் தீர்வையாகப் பெறுகிற நெல், மொத்தத்தில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மிகுதியாகச் சேர்ந்துவிட்டால், இந்த கூடுதலான அளவு நெல்லை, அந்தக் கிராமத்து குடிமக்களிடம் பிரித்துக் கொடுத்து, அதற்குரிய கிரையத் தொகையைக் கட்டாயமாக வசூலித்துப் பெறும் முறை ஒன்றும் நடைமுறையில் இருந்தது. இதற்கு ''குடியம்'' (Guddiyam) எனப் பெயர்.[26] இதன்மூலம் மிகுதியான தானியத்தை சேகரித்துப் பாதுகாக்கும் பொறுப்பு கும்பெனியாரால் தவிர்க்கப்பட்டது. இவ்வளவு இன்னல்களையும் குடிமக்களுக்கு ஏற்படுத்திவிட்டு, அவர்களது குறைகளைக் களைவதற்கான ஆலோசனை பெற தனி குழுவொன்றையும் கி.பி. 1796ல் கும்பெனியார் நியமனம் செய்தனர். அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாகச் சொல்லி மக்களது ஆதரவைத் தேட முயன்றனர். இதனால் மக்களது மனநிலையிலும், நிர்வாக இயக்கத்திலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இதற்கு மாறாக அண்மையில் உள்ள இராமநாதபுரம் சீமையில் கி. பி. 1797ல் எழுந்த பரங்கியர் எதிர்ப்புக் கிளர்ச்சிகள், மதுரைச் சீமை மக்களது மன நிலை மாற்றத்திற்கு, தெம்பு ஊட்டி, தீனிபோடுவதாக அமைந்தது.[27]

இராமநாதபுரம் சீமையின் கதையே வேறாக அமைந்து இருந்தது; கும்பெனியார் ஊழலின் ஒருமித்த உருவமாக வடக்கே விளங்கிய வாரன் ஹேஸ்டிங்ஸ் என்ற பரங்கிப் பெருமான், இந்தியாவில் உள்ள ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் தனிப் பெருந்தலைவர். தெற்கே அவரது திருவுருவாக நடமாடியவர் இராமநாதபுரம் சீமை கலெக்டர் காலின்ஸ் ஜாக்ஸன் துரை. இந்த துரை மகனாரின் முழு நம்பிக்கைக்குரிய அந்தரங்கப் பணியாளர் துபாஷ் ரங்கப்பிள்ளை. துபாஷ் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட மொழி வல்லவர் என்ற பொருள் தரும் பாரசீகச் சொல். இந்தியாவில் வாணிபத்திற்காக வந்த இந்தப்பரங்கிகள் கர்நாடக அரசியல் சூழ்நிலையில் நவாப் வாலாஜா முகம்மது அலியினை ஆதரித்து போர் உதவி புரிந்ததற்கு வெகுமதியாகவும், கி.பி. 1792ல்

---

26 Madurai District Records vol. 1103 p. 19.
27 Francis W: Gezetteer of Madurai (1914) p. 181.

நவாப்புடன் செய்து கொண்ட கர்நாடக உடன்பாடு காரணமாக வும் தெற்குச் சீமைகளில் வரி வசூலையும் பாளையக்காரர்களது கோட்டைகளது பராமரிப்பையும் மேற்கொண்ட பொழுது அவர் களுக்கு இந்த ''துபாஷ்''கள் தேவைப்பட்டனர். அந்தந்தப் பகுதி மக்களுடன் அவர்களது மொழியில் பேசி தொடர்பு கொள்ளுவதற் கும், கடிதப் போக்குவரத்துக்களை மேற்கொள்வதற்கும் ஆங்கில மும், பாரசீகமும் பயின்ற இந்த துபாஷ்கள் இடைத்தரகர்களாக விளங்கினர். ஆதலால் 18வது நூற்றாண்டில் இவர்களுக்கு கிராக்கி இருந்ததுடன், பரங்கிகளுடன் அவர்களது தொடர்பு காரணமாக அவர்களுக்கு மக்களிடம் மிகுந்த செல்வாக்கும் இருந்தது. ஏராள மான வருவாயும் அவர்களுக்குக் கிடைத்தது. அதன் காரணமாக அவர்கள் பல அறச் செயல்களையும் மேற்கொண்டு வந்தனர். புதுச்சேரி ஆனந்தரங்கப் பிள்ளை, பூண்டி, பச்சையப்ப முதலியார், அபிராமம் அப்துல்காதிர் ராவுத்தர் ஆகிய "துபாஷ்கள்'' மக்கள் மனத்தில் நிலைத்து நிற்கத் தக்கப் பொதுப்பணிகளை நிறை வேற்றி வைத்தனர். ஆனால் இராமநாதபுரம் கலெக்டரின் துபாஷான ரங்கப்பிள்ளையின் முறையே வேறு. தொண்டை மண்டல கருணீகர் குலத்தைச் சேர்ந்த அவருக்கும், காலின்ஸ் ஜாக்ஸன், சென்னைக் கோட்டையில் கும்பெனிச் செயலராகப் பணியாற்றிய காலத்தில் இருந்து நெருக்கமான தொடர்புகள் இருந்தன. இந்தக் காரணத்தினால் ஜாக்ஸன் இராமநாதபுரத் திற்கு பதவி மாற்றம் பெற்று வரும் பொழுது துபாஷ் ரங்க பிள்ளையையும் கையோடு அழைத்து வந்தார். ரங்கபிள்ளையும் அவரது உதவிக்காக வேறு இரு உறவினர்களையும் உடன் அழைத்து வந்தார்.

இந்த நால்வரும், இராமநாதபுரம் சீமையில் புதிய அரசியல் வரலாறு படைத்தன. அவர்களது நடவடிக்கைகள் அவர்களது பணிக்கு அழியாத களங்கத்தை ஏற்படுத்தியதுடன் நியாயத்திற் கும் நேர்மைக்கும் நிலைக்களனாக விளங்குவதாகப் பறைசாற்றி வந்த பரங்கிகளது முகமூடிக்குப் பின்னால் அமைந்துள்ள அவர் களது கோர வடிவையும் கோடிட்டுக் காட்டின.

அலுவலகப்பணியில் மட்டும் அல்லாமல் கலெக்டர் காலின்ஸ் ஜாக்ஸனுக்கு தனிப்பட்ட முறையிலும் பெரும் பொரு

ளும் சம்பாதித்துக் கொடுத்தார் துபாஷ்.[28] கும்பெனியாருக்கு வரவேண்டிய தீர்வை வரிவசூலில் ரங்கப்பிள்ளை மோசடிசெய்து, தனக்கும் தம்முடைய கலெக்டர் எஜமானருக்குமாக ஆதாயம் சேர்த்தார். தீர்வையாக வசூலிக்கப்பட்ட நெல் அம்பாரங்களுக் குக் குறைவான மதிப்பீடு செய்து, அதனை வாங்கிய தானிய வியாபாரிகளிடம் கையூட்டுப்பெற்று வந்தார். இத்தகைய வியா பார ஊழலினால் பாதிக்கப்பட்ட டச்சு நாட்டு வியாபாரி மெய்ஜியர் என்பவரது புகார்களும் இதனை உறுதிப்படுத்துகின் றன.[29] இத்தகைய பகல் கொள்ளையினால் பாதிக்கப் பட்ட நெல்லைச்சீமைப்பாளயக்காரரில் சிலரும், சென்னையிலுள்ள கும் பெனியாரது கவர்னருக்கு முறையீடு ஒன்றில்'' எங்களது காணி கள் அனைத்தையும் விற்றுக் காசாக்கினால் கூட கலைக்டரது (காலின்ஸ் ஜாக்ஸன்) தேவையில் நாலில் ஒரு பங்கினை நிறை வேற்ற இயலாதவர்களாக'' இருப்பதாகக் குறிப்பிட்டு இருந் தனர்.[30]

துபாஷ் ரங்கபிள்ளையின் பேச்சிலே, பேரத்திலே சிக்கி தங்கள் பணத்தைப் பறி கொடுத்தவர்கள் பலர். சிவகங்கைப் பிரதானி சின்னமருதுசேர்வைக்காரர், 18500 போ. நோ.பக்கோடா பணத்தை ரெங்கப்பிள்ளையிடம் ''பேஷ்குஷ் இனத்தில் செலுத்தி இருப்பதாக கும்பெனியாருக்கு அறிக்கை செய்தும் பலன் இல்லை.[31] கும்பெனியார் துபாஷ் ரங்கபிள்ளையினால் இழப்பிற் குள்ளான சிவகங்கை சேர்வைக்காரர்களுக்கு எவ்வித பரிகாரமும் செய்யவில்லை.[32] ஆனால், கலெக்டர் ஆதரவுடன் துபாஷ் ரங்கபிள்ளை கையாடல் செய்து இருந்த கும்பெனியாரது வருமானமாகிய 22,285 போ. நோ, பக்கோடா பணத்தை உடன டியாக வசூலிப்பது என கும்பெனித் தலைமை முடிவு செய்தது.[33] அதற்கான நடவடிக்கைகளையும் துரிதப்படுத்தியது. துபாஷ்

28 Rajaram Row T: Manual of Ramnad Samasthanam (1891) p 255.
29 Revenue Consultation, vol. 21 (A) 15-12-1797, p. 4561.
33 Board of Revenue Proceedings. vol 185, p 5961.
31 Military Consultations, vol 105(A) p.p 2513-14.
32 Revenue Consultations, vol 95,(5-7-1799),p.p.1-104.
33 Ibid, 93, 4-1-1799. p.p. 104.

பிள்ளையின் கைகளில் விலங்கு பூட்டி இராமநாதபுரம் கோட்டை வீதிகளில் கொண்டுசென்றதுடன் வசதி இல்லாத சிறு அறை யொன்றிலே அடைத்து சிறை வைத்தனர்,[34] அவரது மனைவி மக்களைக் கொடுமைப்படுத்தி, கையாடல் தொகையை அவர்க ளிடமிருந்து பறிப்பதற்கு ஆவன அனைத்தையும் செய்தனர். ஒருவாறு அவர்களிடமிருந்து 14,852போ. நோ. பக்கோடா பணத் தைப் பெற்ற பிறகு பரங்கியர் ஆறுதல் அடைந்தனர். ஆனால் சிவகங்கை சேர்வைக்காரர்கள், எட்டையாபுரம் பாளையக்காரர், சென்னை வணிகர் ஷாமல்ஜி, கீழக்கரை வணிகர் அப்துல் காதிரு மரைக்காயர் ஆகியோர்களிடம் கும்பெனியார் சார்பாக துபாஷ் ரங்கப் பிள்ளை மூட்டை போட்ட பணத்தைப் பற்றி கும்பெனியார் மூச்சுவிடவில்லை.

மதுரைச் சீமையின் வடக்குப்பகுதி, திண்டுக்கல் சீமை என வழங்கப்பட்டது. திண்டுக்கல் மலைமீது வலிமை மிக்க அரணை அமைத்து இராணுவச்சிறப்பு மிக்கதாகச் செய்தனர் மதுரை நாயக்க மன்னர்கள், அவர்களது ஆட்சிக்குப் பின்னர் கி பி. 1745 முதல் இந்தப் பகுதி முழுவதும் ஸ்ரீரங்கப்பட்டிணத்தை தலைநக ராகக் கொண்டு ஆட்சி செய்த மைசூர் மன்னருக்கு கட்டுப்பட்டு இருந்தது.[35] குறிப்பாக மைசூர் மன்னரான ஹைதர் அலியும் அவரை அடுத்து அரியணை ஏறிய திப்புசுல்தானும் திண்டுக்கல் சீமையின் நிர்வாகத்தில் மிகுந்த அக்கரை கொண்டு திண்டுக்கல் கோட்டையைச் சிறந்த ராணுவ தளமாக மாற்றினர். இதே கோட்டையில் பிரெஞ்சுக்காரர் உதவியுடன் ஆயுதக்கிடங்கு ஒன்றை அமைத்தனர். (கி.பி. 1756) இந்தப்பகுதிக்கு ஆளுநராக ஹைதர் அலிகான் தமது மைத்துனர் சையது சாயபுவை நியமனம் செய்து இருந்தார். மத்தூர், வடகரை, அம்மைநாயக்கனூர், இடையன் கோட்டை, கோம்பை, நிலக்கோட்டை, மாம்பாறை, பழனி, சந்தையூர், எரியோடு ஆகியவை. இந்தப் பகுதியைச் சேர்ந்த முக்கியமான பாளையங்களாகும்.[36]

மைசூர் மன்னர் திப்புசுல்தான் கி.பி. 1792ல் ஆங்கிலேய ருடன் ஏற்படுத்திக் கொண்ட மங்களூர் உடன்படிக்கையின்படி,

---

34 Ibid 95 (B) p. 1689.

35 Bowring L: Rulers of India - Hyder Ali and Tippu Sultan (1893) p. 73

36 Francis W: Gezetteer of Madurai (1914) pp. 70-71

இந்தச்சீமை ஆங்கிலேயர்களது சொத்தாக மாறியது. இந்தப் பகுதியை அடுத்துள்ள கம்பம் பள்ளத்தாக்கில் ஏற்கனவே கி.பி. 1787 ல் ஆற்காட்டு நவாப்பினால் ஆங்கிலேயருக்கு வரிவசூல் உரிமை கொடுக்கப்பட்டு இருந்தது. அதனால் முதன்முறையாக ஆங்கிலக் கலெக்டர்கள் நியமனம் செய்யப்பட்டனர். ஆனால் அவர்களால் அந்தப்பகுதி நிர்வாகத்தை இயக்க முடியவில்லை. முதலில் ஜியார்ஜ் பிராக்டர் என்பவரும், பின்னர் இர்வின் என்ப வரும், கலெக்டர் பதவி ஏற்றுப் பயன் இல்லாததால், கர்னல் புல்லர்டர்ன் பொறுப்பில், இராணுவ அணியொன்று சென்னையில் இருந்து திண்டுக்கல்லுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.[37] அந்த தளபதியின் அறிக்கை அப்பொழுது அங்கு நிலவிய குழப்பமான சூழ்நிலையைச் சித்தரிப்பதாக உள்ளது.

''... ... ஒரு நூறாயிரம் பாளையக்காரர்களும், கள்ளர்களும், தெற்குப்பிராந்தியம் முழுவதும் ஆயுதம் தாங்கியவர்களாக உள்ள னர். அரசுக்கு எதிராகவும், தங்களை தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் அவர்கள் குழப்பத்தை எதிர்நோக் கிக் காத்து இருக்கின்றனர். இவர்களது கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்குவதற்குள், நமது கருவூலப் பணம் முழுவதும் காலியாகி விடும். சீமையில் மக்களது நடமாட்டம் இல்லை. நமக்கு வர வேண்டிய வருமானத்தை எதிரிகள் வசூலித்து வருகின்றனர். நமது அணிகளில் கட்டுப்பாடு இல்லை. அவர்களுக்கு சரியான முறையில் ஊதியம் வழங்கப்படவில்லை. அவர்களை இயக்கு கின்ற தலைமையும் சரியாக இல்லை. .... ... எங்கும் குழப்பம் ... ....''[38].

இந்தப் பகுதிக்கு புதிய எஜமானர்களாக வந்த கும்பெனிக் கலெக்டர்களை இந்தப் பாளையக்காரர்கள் மதிக்கவில்லை. அவர் களைக் கும்பெனி நிர்வாகம் அங்கீகரித்து வழங்கிய சன்னதுகளைப் (சான்றிதழ்களை) பெற்றுக் கொள்வதற்கும் அவர்கள் மறுத்துவிட் டனர்.[39] இந்தச் சூழ்நிலையில் அவர்களிடம் கிஸ்திப்பணத்தை

37 Rajayyan Dr, K: Administration and Society of Carnatica (1966) pp. 45-60.

38. Francis W: Gezetteer of Madurai (1914) pp. 181-82

39. Ibid, p. 68.

வசூலிக்க இயலாமல் தவித்த கும்பெனி கலெக்டர்களும் அவர்களது முகவர்களான குத்தகைதாரர்களும் குடிமக்களைக் கசக்கிப் பிழிந்தனர். இவர்களுக்கு எல்லாம் மேலாக, அவர்களது எடுபிடிகளான கணக்குப்பிள்ளைகளும், வில்லைச் சேவகர்களும் மக்களை அல்லல்படுத்துவதையே தங்களது அன்றாடப் பணியாகக் கொண்டு இருந்தனர். இவ்வளவு கொடுமைகளுக்குப் பின்னரும், கும்பெனியார் நிர்ணயித்த கிஸ்திப் பணம் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. இடையிலே பல ஊழல்கள். குடிமக்களும், பாளையக்காரர்களும் இந்த கோர நாடகத்தில் பாதிக்கப்பட்டவர்களாக காட்சியளித்ததைத் தளபதி புல்லர்ட்டனின் அந்த அறிக்கை தெளிவாகச் சுட்டுகிறது.

இவைகளை அறிந்த கும்பெனி தலைமை, கலெக்டர்களை மாற்றினர். ஓரளவு குடிமக்களுக்கு இனந்தெரிந்தவர்களைத் தங்களது குத்தகைதாரர்களாக நியமனம் செய்தனர். இவைகளினால் நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த இயலவில்லை. இத்தகைய குழம்பிய நிலையைப் பொதுவாகக் கள்ளர்களும், குறிப்பாக சில பாளையக்காரர்களும் தங்களது சுயநலத்திற்காகப் பயன்படுத்தினர். ''இனாம்'' ''சுவந்திரம்'' ஆகியவை சம்பந்தப்பட்ட வசூல் தொகை கணக்கிற்குக் கொண்டு வரப்படாமல் கையாடல் செய்யப்பட்டது. கும்பெனியாரது பணியாளர்களான அமில்தார்களும், கணக்கப்பிள்ளைகளும், ஒன்று சேர்ந்து கொண்டு பொய்க்கணக்கு தயாரித்துப் பெரும்பாலான நிலத்தை வரிவிதிப்பில் இருந்து விலக்கு செய்து அவைகளின் வருமானத்தைக் கையாடல் செய்தனர்.[40]

பழனி பாளையக்காரர், தமது பாதுகாப்புக்கென ஆயிரம் பேர் கொண்ட படையணி ஒன்றைத் துவக்கினார். தேவதானப்பட்டி பாளையக்காரர் கும்பெனியாருக்குக் கிஸ்தி செலுத்துவதற்கான உடன்பாட்டில் கைச்சாத்திட மறுத்தார். விருபாட்சி பாளையக்காரர் கலெக்டர் வழங்கிய சன்னதைப் பெற்றுக் கொள்ளவில்லை. போடி பாளையக்காரரது பணியாட்கள், அந்தப் பாளையத்தில் கலெக்டரது முகாமில் இருந்த வில்லைச் சேவர்களைச் சுட்டனர். இந்த நிகழ்ச்சிக்கு வடகரை பாளையக்காரரும் உடந்தையாக

---

40 Ibid p. 186

இருந்தார். கோம்பை பாளையக்காரர் கம்பம் பள்ளத்தாக்கில் குழப்பத்தை உருவாக்கி வந்தார். இது கி.பி. 1794ல் மதுரை, திண்டுக்கல் சீமைகளின் நிலை.[41] இவைகளைக் கண்டு பீதி கொண்ட கும்பெனி நிர்வாகம், பாளையக்காரர்களை ஆயுதம் சேகரிக்கக்கூடாது என பயமுறுத்தியது. கேப்டன் ஆலிவர் தலைமையில் ஒரு சிறு பட்டாளத்தை பழனிக்கும் திண்டுக்கல்லுக்கும் அனுப்பிவைத்து பாளையக்காரர்களை பயமுறுத்திப் பார்த்தது.[42]

திண்டுக்கல் பாளையக்காரர்களின் கிளர்ச்சித் திட்டம் தீவிரமடைந்தது. கிளர்ச்சிக்காரர்களின் தலைவர் லோகையா நாயக்கர் பழனி பாளையக்காரராக வையாபுரி நாயக்கரை நியமனம் செய்ய ஏற்பாடு செய்தார். ஏனெனில் பழனி பாளையக்காரராக இருந்தவரைப் பிடித்து பரங்கிகள் பாலசமுத்திரம் சிறையில் அடைத்து விட்டனர். இங்ஙனம் பரங்கிகளுக்கு எதிராக பகிரங்கமாக செயல்படுவதன் மூலம் ஏனைய பாளையக்காரர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி கும்பெனியாருக்கு எதிரான அணியைப் பலப்படுத்துவது என்பது அவரது குறிக்கோள்.[43] பழனி பாளையக்காரரது முன்னாள் பிரதானி முத்து சேர்வைக்காரர் லோகையா நாயக்கருக்கு பக்கபலமாக விளங்கினார். விருபாட்சி பாளையக்காரரும் இந்த அணியில் சேர்ந்து இருந்தார். இடையக்கோட்டை போன்ற கும்பெனியாரின் ஆதரவு பாளையங்களைத்தாக்கி அழிக்க அவர்கள் திட்டம் தீட்டினர்.[44] திண்டுக்கல் சீமையின் வடகோடியை ஒட்டி அமைந்து இருந்த மணப்பாறை, அரவக்குறிச்சி பாளையக்காரர்களும் கிளர்ச்சிக்கு ஆதரவாக இருந்தனர்.[45] இவர்கள் அனைவருக்கும் முழு ஆதரவு வழங்கி வந்தவர் கன்னிவாடி பாளையக்காரர்.[46] மணப்பாறை, கன்னிவாடி பாளையக்காரர்கள் கும்பெனிக்கலெக்டர் உத்திரவை புறக்கணித்தனர். விசாரணைக்கு ஆஜராகுமாறு அனுப்பிய ''சம்மன்'' அழைப்பையும் நிராகரித்

---

41 Madurai District Records - vol 1123 (12-11-1799)

42 Francis W: Gazetteer of Madurai (1914). p. 185-308.

43 Madurai District Records, vol 1121 (26-1-1799)

44 Ibid 21-1-1799

45 Ibid 26-3-1799

46 Ibid 28-3-1799

47 Ibid 12-1-1799 and 5-9-1799

தனர்.[47] மணப்பாறை பாளையக்காரரது நடவடிக்கைகளை இரகசியமாகக் கண்காணித்து வருமாறு இராமநாதபுரம் கலெக்டருக்கு கும்பெனியார் உத்திரவு அனுப்பினர்'[48] மற்றும் குளத்தூர், கோல்வார் பட்டி, பாளையக்காரர்களைக் கைது செய்து இராமநாதபுரம் கோட்டைக்குள் சிறைவைத்தனர்.[49] முதுகுளத்தூர் பகுதி கிளர்ச்சிகளை ஊக்குவித்து வந்த முத்தையாபிள்ளை, பாண்டியன்பிள்ளை ஆகிய பெருந்தலைவர்களைக் கைது செய்து பாளையங்கோட்டை சிறையில் பூட்டி வைத்தனர். தளபதி மயிலப்பன் சேர்வைக்காரரைப் பிடிக்க இயலாத காரணத்தினால் அவரது குடும்பத்தினரை பிணையாளிகளாகக் கைப்பற்றி, இராமநாதபுரம் கோட்டையில் அடைத்து பாதுகாத்து வந்தனர்.[50]

கும்பெனியாரது மக்கள் விரோத காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை அப்போதைக்கப்போது அறிந்து வந்த சிவகங்கைச் சேர்வைக்காரர்களது உள்ளத்தில், கும்பெனியாரது, உண்மைக்கு மாற்றமான, பிரமையான தோற்றத்தை உணர்ந்த பிறகும் அவர்களது அகக்கண்கள் எப்படி திறக்காமல் இருக்க முடியும்? ''கடுமையான நடவடிக்கைகள் மூலம் பாளையங்களைப் பறிமுதல் செய்தல், தூக்குத்தண்டனை, நாடுகடத்தல், பாளையக்காரர்களது கோட்டைகளை இடித்து அழிமானம் செய்தல், அவர்களது பாரம்பரிய மரபுகளை அனுபவிக்க இயலாது செய்தல், இராணுவ, அரசுப்பணியாளர்களை அவர்களது பதவிகளின்றும் நீக்குதல், வரி வசூல் கொடுமைகள் - ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் எதிர்பார்த்த இணக்கமான சூழ்நிலைக்கு எதிரான விளைவுகளை உருவாக்கின. ஏற்கனவே சமுதாயத்தின் ஏனைய முக்கியமான பிரிவினரான விவசாயிகளும் தொழிலாளிகளும் பரங்கிகளது சுயநலம், தலையீடு ஆகிய காரணங்களினால் அருவருப்படைந்து இருந்த அணியினருடன் இந்த அணியினரும் இணைந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைப் பெரிது படுத்தினர். அன்றைய நிலையில் இத்தகைய பரங்கிகள் மீதான எதிர்ப்பு உணர்வு

---

48 Ibid 22-3-1799

49 Ibid vol. 1124 22-10-1799

50 Madurai District Records,: vol. 1133, 19-3-1800.

51 Rajayyan K. Dr: South Indian Rebellon, 1800-1801 AD (1977) page No. 42

தமிழகத்தின் தென்கோடியில் மட்டுமல்லாமல் இந்தியநாட்டின் தென்பகுதி முழுவதும்நிலவி வந்ததைப் பல ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது.

கும்பெனியாரது ஆதிக்கப் பேராசைக்கு இலக்கான மகராஷ்டிரம், கர்னாடகம், வயநாடு, கேரளம், தமிழகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிளர்ச்சித் தலைவர்கள், திண்டுக்கல் கோட்டையில் சந்தித்து தங்கள் பகுதிகளில் அன்னிய எதிர்ப்பு கிளர்ச்சிகளை மேலும் எவ்விதம் தீவிரப் படுத்துவது என்பதைப்பற்றி ஆய்வு செய்தனர். இறுதியில் தங்கள் முதல் நடவடிக்கையாக கோயம்புத்தூர் நகரில் 3-6-1800ஆம் தேதியன்று ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவது எனத் தீர்மானித்தனர். இந்த ரகசிய கூட்டத்தில் விருபாட்சி கோபால நாயக்கர், கோயம்புத்தூர் கௌஸ்கான், மலபார் கேரளவர்மா, மைசூர் கிருஷ்ணப்பா, மகாராஷ்டிரத்து துந்தியாவாக் ஆகிய முக்கிய கிளர்ச்சித் தலைவர்கள் பங்கு கொண்டனர்.[52] இந்த இரகசியக்கூட்டம் பற்றிய துப்புகளைப் பின்னர் விசாரித்து அறிந்த கும்பெனியார் இந்தக் கூட்டத்தில் சிவகங்கைப் பிரதானி சின்னமருதுவும் பங்கு கொண்டார் என்ற விபரத்தை அறிந்து ஆச்சரியப்பட்டனர்.

அதுவரை எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் அவர்களது விசுவாசமான நண்பர் எனக்கருதி, சின்னமருது சேர்வைக்காரரைப் பாராட்டிப் புகழ்ந்து வந்த கும்பெனியாருக்கு, அவர் மீது ஐயம் ஏற்பட்டது. அதனை உடனடியாக வெளிப்படுத்திக் காட்டிக் கொள்ளாமல் ராஜதந்திரத்துடன் அவரது நடவடிக்கை அனைத்தையும் இரகசியமாக கண்காணித்துவர ஏற்பாடு செய்தனர். சிவகங்கைச் சீமையை அடுத்துள்ள இராமநாதபுரம் சீமையில் உள்ள கும்பெனியாரது கைக்கூலிகளான அமில்தார்கள், சிவகங்கைச் சீமையில் இருந்து வரும் ஆட்களது நடமாட்டத்தை நோட்டமிட்டு அப்பொழுதைக்கப்பொழுது அவர்களது எஜமானரான இராமநாதபுரம் கலெக்டருக்கு அறிக்கைகள் அனுப்பி வந்தனர்.

''... ... மயிலப்பன், ஒரு இஸ்லாமியருடனும் நூறு வீரர்கள், இரண்டு குதிரைகளுடனும் இரண்டு வண்டி வெடிமருந்துப் பொதி

52. Rajayyan Dr. K: Selections from the History of Tamil Nadu (1978) p. 228.

களுடனும் சிவகங்கையில் இருந்து இன்று காலை நான்குமணிக்கு கட்டிக்குளம் வந்தனர். அங்கு துணிமணிகள், தானியங்கள், பணம் ஆகியவைகளைப் பறித்துக் கொண்டு போய்விட்டனர். ...''

—இராமநாதபுரம் பேஷ்காரரின் 18-2-1801ம் தேதி அறிக்கை.

''... ... ... சிவகங்கை ஆட்கள் காடல்குடிக்கு வந்தனர். அவர்களுடன் அய்யாத்தலைவனும், நாகராஜமணியக்காரர், இபுராகிம் சாயபு, மயிலப்பனும், குதிரைகளும் நூறு வீரர்களும் வந்துள்ளனர். நாகலாபுரம் தாலுகாவை கொள்ளையிடுவதற்காக''

— நாகலாபுரம் அமில்தாரது 7-3-1801 தேதிய அறிக்கை

''... ... ... ...சிவகங்கைச் சேர்வைக்காரரது பணியில் உள்ள பிராம்மணர் ஒருவர் ஆறு சிப்பந்திகளுடன் எட்டையாபுர பாளையத்தைச் சேர்ந்த மாவிலோடைக்கு வந்துள்ளார்.

''... ... ... .... மயிலப்பன் முந்நூறு வீரர்களுடன் மாவிலோடையில் இருந்து வருகிறார். காடல்குடி, குளத்தூர் பாளையக்காரர்களுக்கு உதவுவதற்காக அவர் மருதுசேர்வைக்காரரது தூண்டுதல் பேரில் அங்கு அனுப்பப்பட்டு இருக்கவேண்டும். இதுவரை சிவகங்கைச் சீமையில்தான் மயிலப்பன் பாதுகாக்கப்பட்டு வந்தார். இல்லையென்றால் மயிலப்பனுக்கு நூறு ஆயுதம் தாங்கிய போர் வீரர்கள் எப்படிக் கிடைத்தனர். சின்ன மருதுச்சேர்வைக்காரரது அலுவலரான சுப்பையரும் இன்னும் சிலரும் மண்டலமாணிக்கத்தில் தங்கி இருப்பதற்கு என்ன காரணம்? பாஞ்சைக்கும் சிவகங்கைக்கும் ஓலைகளை பரிமாறிக் கொள்வதற்குத் தானே!

— இராமநாதபுரம் பேஷ்காரது 7-3-1801 தேதிய கடிதம்

''... ... ... ... 23-2-1801 தேதி மயிலப்பனும் அவரது குழுவினரும் போதிய ஆயுதம் தாங்கிய நூறுவீரர்களும், இருபது பொதி வெடிமருந்து, துப்பாக்கி தோட்டாக்களுடன் பெருநாளி மாகாணத்து திம்மநாதபுரத்திற்குச் சென்றனர்.

— கமுதி பாப்பாங்குளம் பேஷ்காரது 2-3-1801 தேதிய கடிதம்

சென்னையில் உள்ள பிரமுகர் ஒருவருக்கு மருதுசேர்வைக்காரர் இவ்வாறு கடிதம் எழுதியுள்ளார்.

எங்களது கப்பத்தொகையை முறையாக கலெக்டரது உத்தர வின்படி செலுத்தி வருகிறோம். ஆனால் இதற்கு மாற்றமாக கலெக்டர் எங்களது பாளையத்தைப் பறிக்கத் திட்டமிட்டுள்ளார். இந்தநோக்கத்தை நிறைவேற்ற அவர் எங்களைப் பற்றி தவறான அறிக்கைகள் அனுப்பி வருகிறார். நாங்கள் அவ்விதம் தவறாக நடந்து இருந்தால் திருச்சியில் உள்ள துரையிடத்தில் அல்லது தஞ்சாவூர் கலெக்டரிடத்தில் நிரூபிக்கட்டும். அவர்கள் சரியான புலன் விசாரணையின் மூலம் எங்களைக் குற்றவாளியாக முடிவு செய்தால் அதற்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருக்கிறோம். மேலும் இந்தக் கலெக்டர், பொறுப்பு ஏற்றுக்கொண் டதில் இருந்து பாளையங்களைப் பறிமுதல் செய்வதில்தான் நாட்டமாக உள்ளார். அவர் இங்கு இருக்கும் வரை சந்தேகத்திற்கு இடமில்லாமல் எங்களது பாளைதையும் மேற்கொள்ள முனைவர். அதற்காக ராணுவம் எங்களை நோக்கி அனுப்பப்பட்டால் நாங்கள் எங்களது உயிரைத் தியாகம்செய்யவும் தயாராக இருக்கிறோம்.[53]

— கோட்டைப்பட்டினம் தாலுகா ஒரூர் அமில்தார் 18.3.1801 தேதிய கடிதம்

இந்த அறிக்கைகள் அனைத்தும் சின்னமருது சேர்வைக் காரர், பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரருக்கு பக்கத்துணையாக தங்களுக்கு எதிரான ஆயுதப்போராட்டத்திற்கு உதவி வருகிறார் என்பதையும், ஏற்கெனவே தேடப்பட்டு வரும் மயிலப்பன் தலைமை யில் இராமநாதபுரம் சீமை முழுவதும் மோதல்களை நிகழ்த்து வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன, என்பதையும் கும்பெனி யாருக்கு உணர்த்தினர். அத்துடன் சிவகங்கைச் சீமையிலும் போருக்கான ஆயத்தங்கள் துவக்கப்பட்டு இருப்பதையும் உறுதி யான தகவல்கள் மூலம் கும்பெனியார் புரிந்து கொண்டனர்.

---

53 Papers Relating to Polegar wars (Tinnevely District) Selections (1944).

# 4

## மீண்டும் மயிலப்பன்

மறவர் சீமையின் ஒரு பகுதியான முதுகுளத்தூர் நகருக்குத் தென் மேற்கே இருப்பது சித்திரங்குடி கிராமம். இந்த ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தான் மயிலப்பன் என்பவர். இவர் இராமநாதபுரம் சேதுபதி மன்னரது ராணுவப் பணியில் இருந்ததால் இவர் ''மயிலப்பன் சேர்வைக்காரர்'' என அழைக்கப்பட்டார். கி.பி. 1795ம் ஆண்டின் துவக்கத்தில் கும்பெனியார் திடீரென இராமநாதபுரம் அரண்மனையை வளைத்து சேதுபதி மன்னரைக் கைது செய்து திருச்சிக்கோட்டையில் அடைத்தனர். இந்தக் கொடுமையைக் களைந்தெறிய மயிலப்பன் இரவு பகலாகப் பாடு பட்டார். திருச்சிக் கோட்டையில் இருந்த மன்னரை, காவலர்களுக்கு கடுக்காய் கொடுத்துவிட்டு தப்புவிப்பதற்குக் கூட முயன்றார். திட்டம் நிறைவேறவில்லை. இராமநாதபுரம் சீமைக்கு திரும்பி வந்து நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து, மன்னர் விடுதலை பெறுவதற்கான முயற்சிகளைக் குறித்து ஆலோசித்தார்.[1]

கும்பெனியாரின் கவனமும் படையணிகளின் நடமாட்டமும் நான்காவது மைசூர் போரில் ஈடுபட்டிருந்த பொழுது, முதுகுளத்தூர் வட்டாரத்தில் கிளர்ந்து எழுந்த மக்கள் கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கி நடத்தினார். கும்பெனியாரது கச்சேரிகளையும், களஞ்சியங்களையும் தீயிட்டும் அவர்களது கூலிப்படைகளுடன் பொருதியும், அவர்களிடமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றியும், நாற்பத்து ஒரு நாட்கள், கும்பெனி நிர்வாகத்தைத் திக்குமுக்காடச் செய்தார். இறுதியில் துரோகிகளது துணையுடன் மக்களது கிளர்ச்சி நசுக்கப்பட்டதால் மனமுடைந்து தஞ்சை சீமை சென்று தலைமறைவு வாழ்க்கை நடத்தினார். ஆறு மாதங்களுக்

1 Madurai District Records vol. 1139, p. 185.

குப்பின்னர் நெட்டூருக்குத் திரும்பி வந்தார். நிலைமைகளை நோட்டமிட்டார். தகவல் அறிந்த சிவகங்கை சேர்வைக்காரர்கள் அவரை இராமநாதபுரம் சீமைக்குச் செல்ல வேண்டாம் என்றும் நெட்டூரிலேயே தங்கி இருக்குமாறும் செய்தி அனுப்பினர். சிவகங்கைப் பிரதானிகளது செய்தி மயிலப்பனுக்கு வியப்பை அளித்தது. அடுத்த இரண்டொரு நாட்களில் அவரிடம் சாப்பாட்டிற்காக பத்துக்கலம் நெல்லை சிவகங்கை அரசுப்பணியாளர்கள் அளித்தனர். இந்த நிகழ்ச்சியை அடுத்து, சூடியூருக்கு முகாம் வந்திருந்த பெரிய மருது சேர்வைக்காரர் மயிலப்பனை அங்கு சந்தித்தார்.[2] கடந்தவைகளை மறந்து சிவகங்கைச் சீமையில் தொடர்ந்து தங்கி இருந்து சிவகங்கை அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். அரசியல் நிலைமைகளை நன்கு புரிந்து கொண்ட மயிலப்பனும் மனமாற்றம் பெற்றுள்ள மருது சேர்வைக்காரரின் வேண்டுகோளை ஏற்று செயல்பட்டார்.

மறவர் சீமையின் மக்கள் கிளர்ச்சி, இறுதி தோல்வியுறுவதற்குக் காரணமான சிவகங்கை சேர்வைக்காரரது மாறுபட்ட மனநிலை மயிலப்பனுக்கு மகிழ்ச்சி அளித்தது. சேதுபதி மன்னரை சிறையிலே தள்ளி சேது நாட்டை அபகரித்துள்ள வெள்ளைப் பரங்கியரைப் அழித்து, மறவர் சீமையின் மானத்தைக் காப்பதற்கு தமக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கிடைத்து இருப்பதாக நம்பினார். ஓய்ந்து இருந்த அவரது உடல் நரம்புகள் முறுக்கேறின. அவரது நடையிலும் உடையிலும் ராணுவ மிடுக்கு மீண்டும் பிரதிபலித்தது. சிவகங்கையிலிருந்து பாஞ்சாலக்குறிச்சி கோட்டைக்கு புறப்பட்டுக் கொண்டிருந்த சரக்குகள் அணிக்கு பாதுகாப்பாக உடன் சென்றார். இந்த அணியில் குளத்தூர் நாகராச மணியக்காரரும், வெள்ளமருது சேர்வைக்காரரது மகன் சிவத்த தம்பியும் அன்னாரது மருமகன் ஆளஞ்சாத் தேவரும் இருபது துப்பாக்கி வீரர்களும், நூற்று எண்பத்து ஐந்து ஈட்டிக் காரர்களும் இருந்தனர். பதினாயிரம் துப்பாக்கித் தோட்டாக் களைக் கொண்டு சேர்ப்பதற்கான இருபத்து ஐந்து பொதி வண்டிகளுக்கு பாதுகாப்பாக இந்த அணியினர் சென்றனர். பாஞ்சையை அடைந்த இவர்களைப் பாராட்டி சிவத்தையா நாயக்கர்

---

2 Ibid. 18-4-1802. p. 46

அன்பளிப்புக்களையும் வழங்கி அவர்களை திருப்பி அனுப்பி வைத்தார்.[3]

வழியில் தரக்குடியில் கம்பளத்தார் அணி தளபதி மயிலப்பனைப் பாராட்டி அவருக்கு பல அன்பளிப்புகளை வழங்கினர். காதிற்கு தோடு, கழுத்திற்கு கண்டசரம், கைகளுக்கு காப்புகள் என பொன் ஆபரணங்கள், பட்டாடை, குதிரைகள் ஆகியன. அத்துடன் அவரது கிளர்ச்சிக்காரர்கள் அணியில் முந்நூறு வீரர்களும் சேர்ந்து கொண்டனர்.[4] கழுமுடியில் அன்று தங்கி கமுதி, அபிராமம் பகுதிகளில் கிளர்ச்சியைத் தொடர்வது பற்றிய ஆலோசனைகளில் ஈடுபட்டார். இந்நிலையில் மேலமந்தை பாளையக்காரர் கிளர்ச்சிக்காரர்களுக்குப் பயந்து குடும்பத்துடன் ஊரை விட்டு சாயல்குடிக்கு ஓடினார். அங்குள்ள கும்பெனியாரது தானியக் களஞ்சியங்களை மேற்பார்த்து வந்த பணியாளர்களும் பயந்து முதலியார் மடத்துக்கு ஓடினர். பின்னர் மேலமாந்தை தானியக் கிடங்குகளைக் கொள்ளையிட்டு, கும்பெனியாரது மணியக்காரரையும் சம்பிரிதியையும் தொடர்ந்து சென்று சிறைப் பிடித்து காடல்குடிக்கு அனுப்பி வைத்தார்.[5]

இதற்கிடையில் காடல்குடியை தாக்கியபிறகு நாகலாபுரத்தில் நிலை கொண்டு இருந்த கும்பெனித் துருப்புக்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சியினால் கும்பெனிப் பணியாளர்களும் குடிமக்களும் பீதியடைந்தனர். நாகலாபுரம் எட்டையாபுரம், ஆகிய ஊர்களுக்கு பீரங்கி அணிஒன்றை அனுப்புவதற்கும், பாப்பாங்குளத்தில் போர் வீரர்களையும் ஆயுதங்களையும் ஆயத்த நிலையில் வைத்திருக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.[6] இத்துடன் புரட்சியில் ஈடுபட்டுள்ள பாளயக்காரர்களுக்கு மக்கள் எந்த வகையிலும் புகலிடமோ அல்லது உதவியோ செய்யக் கூடாது என்றும், மீறினால் விசாரித்து உடனடியாக

---

3 Tinnevely District Records, vol. 3579 (1-3-1801) pp. 69-72.

4 Papers relating to Polgar war, Tinnevely District (1914).

5 Ibid

6 Madurai District Records, vol. 1182, (7-3-1801), pp. 5354, 83 84.

மரணதண்டனை வழங்கப்படும் எனவும் கலெக்டரது பயமுறுத்தல் விளம்பரம் வெளியிடப்பட்டது.[7]

அடுத்து கிளர்ச்சிக்காரர்கள் கூட்டம் கமுதி நோக்கிப் புறப் பட்டது. கமுதி கோட்டையை துப்பாக்கி, ஈட்டி வீரர்கள் தாக் கினர். அவைகளினால் பலன் இல்லை என்று புரிந்து கொண்டபின் அபிராமத்திற்குப் புறப்பட்டனர். ஆனால் கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் ஊரைத் தாக்கிவிடுவார்களோ என்ற பயத்தில் நாகலாபுரம் பள்ளிமடம் குடிகள் தங்களிடம் இருந்த நகை நட்டுக்களை திருச் சுழி கோயிலில் ஒப்படைத்துவிட்டு பக்கத்து கிராமங்களுக்கு பயந்து ஓடினர் என்ற விபரம் பள்ளிமடம் அமில்தாரது அறிக் கையில் இருந்து தெரிகிறது.[8] இதற்கிடையில் நிலைமையை அறிந்த திருநெல்வேலி கேப்டன் சாகிபர் லெப்டினண்ட் மில்லரை 16வது பட்டாளத்தின் முதல் அணியுடன் கமுதிக்குச் செல்ல உத்திர விட்டான். மில்லரும் 12-3-1801 கமுதி கோட்டை வந்து சேர்ந்தான்.[9] இதற்கிடையில் பாஞ்சாலங்குறிச்சி போராளிகளுக்கும் சிவகங்கை சேர்வைக்காரர்களுக்கும் உள்ள கடிதப் போக்குவரத்தைத் தடை செய்தனர். மண்டல மாணிக்கத்தில் தங்கி இருந்து இந்தப் பணி களைக் கவனித்து வந்த சுப்பையர் என்பவரையும் அவரது ஆறு பணியாட்களையும் பரங்கிகள் கைது செய்து இராமநாதபுரம் கோட்டையில் அடைத்து விலங்கிட்டனர்.[10]

சுப்பையரிடமிருந்து பெற்ற வாக்குமூலத்தில் இருந்து, சிவகங்கை சேர்வைக்காரர்களைப் பற்றிய சந்தேகத்தை கும்பெனி யார், உறுதிப்படுத்திக்கொண்டதுடன் சிவகங்கைக்கும் பாஞ்சாலங் குறிச்சிக்கும் இடைப்பட்ட இரகசிய இராணுவத் தொடர்பு விவரங் களையும், மீண்டும் இராமநாதபுரம் சீமையில் நடக்கவிருக்கும் கிளர்ச்சிகளின் சூத்திரதாரியாக மயிலப்பன் சேர்வைக்காரர் பங்கு வகிக்க இருப்பதையும் கும்பெனியார் புரிந்து கொண்டனர். இத் துடன் இந்த இரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிவகங்கை சேர்வைக்காரர்களது ஆதரவாளர்களான பெரும்புள்ளிகள் யாவர்

7 Ibid pp. 79-80
8 Madurai District Records. vol. 1182, (8-3-1801), pp 84-86.
9 Ibid pp. 86-92.
10 Ibid vol. 1133. (7-3-1801) p. 178.

என்பதையும் சுப்பையரது வாக்குமூலத்தில் இருந்து பெற்றனர்.[11] கும்பெனியார், எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவை எளிதாக அமைந்தன.

பாஞ்சையில் இருந்து திரும்பும் வழியில் தளபதி மயிலப்பன் சேர்வைக்காரரது அணியினர், கொடுமலூரிலும் அபிராமத்திலும் நிலை கொண்டிருந்த கும்பெனிப் படைகளை அழித்து நாசமாக்கினர்.[12] அவர்களது அடுத்த இலக்கு கமுதி கோட்டைதான். இந்தக்கோட்டை இராமநாதபுரம் சீமையில் உள்ள இராமநாதபுரம் கோட்டையைத் தவிர்த்து, கீழாநிலை, அனுமந்தக்குடி, ஆறுமுகம் கோட்டை, முஸ்டக்குறிச்சி, முதல்நாடு, பந்தல்குடி, பெருநாழி ஆகிய கோட்டைகள் அனைத்திலும் அமைப்பிலும், வலிமையிலும் சிறப்பானது மட்டுமின்றி இராமநாதபுரம் சீமைக்கு தெற்குவாயில் போல இராமநாதபுரம் - திருநெல்வேலி – வழியில் சிறப்பாக அமைந்து இருந்தது. பிரஞ்சு நாட்டுப் பொறியாளர்களது கட்டுமானத் திறத்தில் விஜயரகுநாத சேதுபதி மன்னரது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது.[13] அடர்ந்த காட்டுப்பகுதியின் நடுவில் குண்டாற்று வடகரையில் இயற்கையாக அமைந்துள்ள பாறைகளின் மேல் உறுதியான இரண்டு சுற்றுகல் மதிலுடனும் ஒன்பது அலங்கங்களுடனும் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டு இருந்தது.[14] ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கும்பெனிப்படையினருக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் நிகழ்ந்த போர்களின் பொழுது பழுதடைந்த அந்தக் கோட்டையின் சிதைவுகள் அப்படியே காட்சி அளித்தன. அதனைக் கண்ட பொழுது மயிலப்பன் சேர்வைக்காரரது மனத்திரையில் பல காட்சிகள்- சிந்தனைக்கதிர்கள்-துளிர்த்து மின்னி மறைந்தன.

மறவர் சீமை மண்ணின் மீது கொண்ட கட்டற்ற பாசத்தினாலும் மறக்குடி மக்களது மூத்தகுடி மகனாக பல நூற்றாண்டுகளாக விளங்கிவரும் சேதுபதி மன்னர் மீது வைத்து இருந்த

---

11 Ibid, vol. 1178 (A) pp, 315-16.

12 Tinnevely District Records, vol 3579, (14-3-1801), p. 74.

13 Rajaram Row T.: Manual of Ramnad Samasthanam (1891) p. 180.

14 Military Consultations vol. 21 (1772 AD) p. 160.

ராஜவிசுவாசத்தினாலும் உந்தப்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் முன்னூறு பேருடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்தக்கோட்டையில் இருந்த கும்பெனிப்படையினை ஆவேசமாகத் தாக்கி அழித்த நிகழ்ச்சியும், அதனையடுத்து அதே வருடம் நாட்டுப்பற்றும், அன்னிய எதிர்ப்பு ஆவேசமும் கொண்டு காட்டு வெள்ளம் போலத் திரண்ட சாதாரணக் குடிமக்களுடனும் சேர்ந்து மே, ஜூன் மாதங்களில் இந்தக் கோட்டையில் இருந்த பரங்கிப்பட்டாளத்தைப் பல முறை எதிர்த்துப் போராடிய நிகழ்ச்சிகளும்[15] இந்தப் போராட்டங்களுக்கு தம்முடைய வலதுகரமாக இருந்து உதவி போர்க்களத்தில் தியாகியான சிங்கன் செட்டியின் நினைவும் எழுந்து அவரது கண்ணின் ஓரத்தில் நீர்த் துளிகளாக அரும்பி உதிர்ந்தன. இவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகும் பரங்கியரது பாசறையாக அந்தக் கோட்டை இருந்து வருவதை நினைக்கும் பொழுது, அவருக்கு வெறுப்பும், வெஞ்சினமும் எல்லையற்ற விசுவரூபமாக வளர்ந்தது. ஒரு குதிரை மீது அவர் அமர்ந்து இருந்த பொழுதும் ஓராயிரம் குதிரைகளை அவர் ஒருவரே இயக்குவது போன்ற நினைப்பு விண்ணைச் சாடுவது போன்ற பயங்கரமான போர்க்குரல்! அலறல்! அவரது அணியில் இருந்த ஓராயிரம் மறவர்களும் அவரைப்பின் தொடர்ந்து கோட்டை மதில்மேலும், கோட்டை முகப்பிலும் அணி வகுத்து நின்ற பரங்கிகளையும் அவர்களது கூலிப்படைகளையும் தாக்கினர். வேல், ஈட்டி, வாள், வளரி ஆகிய ஆயுதங்களுடன் ஒரு சில துப்பாக்கிகளும் அவர்களது முன்னேற்றத்திற்குப் பாதையமைத்துக் கொடுத்தன. கொலைகாரன் லெப்டினண்ட்மில்லர் கட்டளைப்படி வெடித்த துப்பாக்கிச் சூடுகளும் பீரங்கி வெடிப்புகளும் மறவர்களது உக்கிரமான — ஏன் — மூர்க்கத்தனமான தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. கமுதிக் கோட்டையின் பிரம்மாண்டமான பிரதான கதவுகள் நொறுங்கி மக்களது சக்திக்கு வழிவிட்டு வீழ்ந்தன.[16]

மறவர்களது மகிழ்ச்சி ஆரவாரம் பெருகியது. இன்னும் சிலமணி நேரங்களில் இரண்டாவது சுற்று மதிலையும் கடந்து கோட்டைக்குள் புகுந்து விடலாம் என்ற நிலையில் போராடிய

15 கமால் S.M. டாக்டர்: விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987). 118-119

16 Madurai District Records, vol. 1182, (8-3-1801) pp.84-86.

மறவர்களுக்கு எதிர்பாராத திகைப்பும் ஏமாற்றமும் காத்து இருந்தன. திடீரென வடதிசையில் இருந்து பரங்கியர் உதவிக்கு இராமநாதபுரம் கோட்டை அணியினர் வந்து சேர்ந்தனர். போரின் இறுதி நிலையில் மாற்றம். கிளர்ச்சிக்காரர்கள் மிகவும் களைத்துப் போயிருந்தாலும் மீண்டும் கும்பெனியாரின் உதவிப்படைகளுடன் அவர்கள் மோதினர். ஆனால் அவர்களது எண்ணம் ஈடேறவில்லை. புதிய அணியினரின் சுறுசுறுப்பான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல், கோட்டைக்கு வடகிழக்கே உள்ள அடர்த்தியான காட்டுப் பகுதிக்கு பின்னடைந்து பரமக்குடி சென்றனர்.[17] ஆனால் லெப்டி. மில்லர் அவர்களைத் தொடர்ந்து துரத்தி வந்தான். காட்டுப் பரமக்குடி கிராமத்து அருகே கும்பெனிப்படையணியை கிளர்ச்சிக் காரர்கள் வீராவேசமாகப் பொருதி அவர்களது முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தினர்.[18] இதற்கிடையில், சிவகங்கையில் இருந்து கிளர்ச்சிக்காரர்கள் உதவிக்கு மறவர் அணி ஒன்று வந்து சேர்ந்த தால், மில்லரது கூலிப்படையை மயிலப்பன் அழித்து வாகை சூடினார். மில்லர் உயிர்தப்பி இராமநாதபுரம் கோட்டைக்கு ஓட்டம் பிடிக்க வேண்டியதாயிற்று. அப்படி ஓடும் பொழுதுகூட, சித்திரங்குடியில் கைது செய்து கொண்டு வந்த தளபதி மயிலப்பன் மனைவியையும் சகோதரியையும் விடாப்பிடியாக மில்லர் இராம நாதபுரம் கோட்டைக்குக் கொண்டு சென்று சேர்த்தான். தகவல் அறிந்த தளபதி மயிலப்பன் சேர்வைக்காரர் எஞ்சி நின்ற கும்பெனி அணியை துவம்சம் செய்ததுடன் காட்டுப் பரமக்குடியிலும், தெளி சாத்தநல்லூரிலும் கும்பெனியாருக்கு சொந்தமாக இருந்த தானியக் களஞ்சியங்களைச் சூறையாடி அழித்தார்.[19]

மயிலப்பனது குதிரைப்பிரிவு வீரர்கள், பரமக்குடிக்கு வட கிழக்கே பத்துக்கல் தொலைவில் உள்ள சாலைக் கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். இராமநாதபுரம் சிவகங்கை சீமைகளின் எல்லையில் உள்ள இந்த கிராமம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. அங்கு வைகையாற்றில் பலகால்களில் வரும் வெள்ளத்தைத்தேக்கி விவசாயம் செய்வதால் இந்தப்பகுதி வளமை பெற்று இருந்தது. ஆதலால், கும்பெனி நிர்வாகத்தின் அங்கமான கச்சேரி ஒன்று

---

17 Board of Revenue Proceedings, vol 278. p. 3318

18 Tinnevely District Records, vol. 3579 (24-3-1801) p. 81

19 Madurai District Records, vol. 1133 (12-3-1801) p. 188

அங்கு அமைக்கப்பட்டிருந்தது. அந்தக்கட்டிடத்தை தீக்கிரையாக்கி கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் வெஞ்சினத்தை ஆற்றிக் கொண்டனர். மற்றும் அங்குள்ள கும்பெனியாருக்கு சொந்தமான நெல் பட்டறைகளில் இருந்த நெல்லையும் சில கால்நடைகளையும் அங்கிருந்து கடத்திச் சென்றனர்.[20]

தொடர்ந்து அவர்கள் வடக்கே சென்று மறுநாள் விடியலில் வரவணி, செங்கப்படை கிராமங்களைத் தீயிட்டு அழிமானம் செய்து, மேற்கே திரும்பி பரத்தைவயலுக்குச் சென்றனர். அங்கு அவர்களுக்குக் கும்பெனியாரது நெல் ஏராளமாக கொள்ளைப் பொருளாக கிடைத்தது.[21] அப்பொழுது மானாமதுரைக்கும் பரமக்குடிக்கும் இடையில் உள்ள நெட்டூர் கிராமத்தில் நிலை கொண்டு இருந்த பரங்கிப்படைகளை மருது சேர்வைக்காரர் மக்கள் படை துரத்தியடித்த செய்திகிடைத்ததால் அவர்களது திட்டத்தை மாற்றி மீண்டும் வரவணி, செங்குடி கிராமங்களுக்குச் சென்று கொள்ளையிட்டனர். மேலும் கும்பெனியாருக்கு ஆதரவாக இருந்து உதவிய கொக்கூரணி கிராம மக்களைச் சூழ்ந்து பயமுறுத்தி அவர்களது உடமைகளைக் கொள்ளையிட்டனர், அதேபோல் அடுத்து, செட்டி கோட்டை கிராமத்தையும் அழித்துத் தீயிட்டனர். தகவல் தெரிந்து லெப்டி. மில்லர் பரமக்குடி வழியாக மயிலப்பன் அணியைத் தாக்குவதற்காக வந்தான். கொள்ளைப் பொருட்கள் அனைத்தையும் பத்திரமான இடங்களுக்கு அனுப்பிவைத்த மயிலப்பன் சேர்வைக்காரர் அவைகள் போய்ச் சேருவதற்காகமில்லரது அணியுடன் ஒரு மணி நேரத்திற்கும் மிகுதியாக சண்டையிட்டு தாமதப்படுத்திய பிறகு, தமது திட்டப்படி ஆனந்தூருக்கு புறப்பட்டுச் சென்றார்.[22]

மயிலப்பனது இத்தகைய வீர சாகஸங்களினால் இராமநாதபுரம் சீமையில் கும்பெனி நிர்வாகம் கலகலத்து தடுமாறியது. மக்கள் விரோதக் கொள்கையைக் கொண்டு அங்கு இயங்கி வந்த பரங்கியர் நிர்வாகம், மக்களை நேரடியாகச் சந்திப்பதற்கு அஞ்சி கோட்டை மதில்சூழ்ந்த பத்திரமான பகுதிக்குள் மட்டும் ''ஆட்சி'' நடத்தியது. ஏனைய பகுதிகள் அனைத்தும் கிளர்ச்சிக்காரர்கள்

20 Madurai District Records. vol 1138, (20-3-1801)

21 Tinnevely District Records vol 3579 (20-3-1801) p. 81

22 Madurai District Records vol 1133, (20-3-1801) p. 195

கட்டுப்பாட்டில் இருந்து வந்தன.[23] தங்களுக்கு அவ்விதம் பல வகைகளிலும் இடைஞ்சலை ஏற்படுத்துவதற்கு சிவகங்கைப் பிர தானிகள்தான் முழுக்க, முழுக்க மறைமுக ஆதரவு அளித்து வரு கின்றனர் என்பதை கும்பெனியார் ஒருமுகமாக முடிவு செய்தனர். மருது சேர்வைக்காரர்களது இந்த மறைமுக தாக்குதலை மடக்க இராமநாதபுரம் கலெக்டர் லூஷிங்டன் ஒரு வழியையும் கண்டு பிடித்தார்.

மறைந்த சிவகங்கை அரசி - ராணி வேலு நாச்சியாரது வம்சாவழி விவரங்களுடன் தம்மை அவசரமாகச் சந்திக்கும்படி சிவகங்கை பிரதானிக்கு கலெக்டரது ஓலை சென்றது. இந்த ஓலையின் பின்னணி எதுவாக இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்ட சின்னமருது சேர்வைக்காரர் இயல்பான பணிவுடன் பதிலையும் கோரிய விவரங்களையும் கலெக்டருக்கு அனுப்பி வைத்தார்.[24] நேரில் சென்று அவரைச் சந்திப்பதை தவிர்த்துக் கொண்டார். உடல் நலிவு காரணமாக தாம் சிவகங்கையை விட்டு வெளியேற இயலவில்லை என்ற காரணத்தை குறிப்பிட்டு இருந்தார். சின்னமருதுவை நேரில் அழைத்துப் பேசி எச்சரிக்கை செய்ய எண்ணிய லூஷிங்டனுக்கு மிக்க ஏமாற்றம் ஏற்பட்டது. சிவகங்கைச் சேர்வைக்காரருக்கு எழுதிய பதிலில் ''... ... ... ... நான் தங்களை நேரில் மிக முக்கியமான காரணத்திற்காக சந்திக்க விரும்பினேன். உங்களைத் தவிர வேறு யாரும் அந்தப்பணியில் ஈடுபட இயலாது ... ... ... ...'' என தமது வருத்தத்தை கலெக் டர் குறிப்பாகத் தெரிவித்து இருந்தார்.[25]

பொறுமை இழந்த கலெக்டர், மீண்டும் சின்னமருது சேர் வைக்காரருக்கு எழுதிய கடிதத்தில் இராமநாதபுரம் சீமை கிளர்ச் சிக்காரர்களுக்கு சிவகங்கை சீமை புகலிடமாக இருந்து வருவது பற்றிய புகார்கள் ஏராளமாக வரப்பெறுவதாகவும் சிவகங்கை சீமையில் நிலைகொண்டு இருக்கும் மயிலப்பனைப் பிடித்துக் கொடுக்குமாறும் கோரி இருந்தார். அந்தக்கடிதத்தின் வாசகம்,.[26]

---

23 Tinnevely District Records, vol 3579 (20-3-1801) p 81
24 Military Consultations, vol. 297, (4-2-1801) p. 171-72
25. Madurai District Records, vol. 1133, (6-2-1801), p. 174.
26. Ibid, (25-3-1801) p. 176,

''............ கும்பெனியாருக்கு எதிராக கிளர்ச்சிக்காரர் களுக்கு நீர் ஆதரவு அளித்து வருவது பற்றிய அறிக்கைகள் எனக்கு நாள் தவறாமல் வந்து கொண்டு இருக்கின்றன. உமது செல்வாக்கைச் சிதைப்பதற்காக உமது எதிரிகள் ஏற்பாடு செய் துள்ளவை இவை என நான் கருதியது உண்டு. ஆனால் இப் பொழுது, முறையாக லெப்டி. மில்லர் மூலமாக, சிவகங்கைச் சீமையில் மயிலப்பன் புகலிடம் பெற்று இருப்பதை அறிகிறேன். நம்மீது கொண்டு உள்ள விசுவாசத்தை நீர் பகிரங்கமாக மீறும் இந்தக்குற்றத்தின் கொடுமையை எவ்விதம் சகித்துக் கொள்வது என்பதை என்னால் நினைத்துப் பார்க்க இயலவில்லை.

''ஏற்கனவே துரைத்தனத்தாரின் மிகுதியான வெறுப்பைப் பெற்றுள்ள மயிலப்பனையும் அவனது கூட்டாளிகளையும் உடனே கைப்பற்றி ஒப்படைக்குமாறு கோரி இருந்தேன். இதுவரை உம்மிடமிருந்து எந்த பதிலும் இல்லை. ஆதலால், இப்பொழுது மீண்டும் அதே கோரிக்கையை நினைவுறுத்த வேண்டிய நிலை யில் இருக்கிறேன். மேலும், இந்தக் கட்டளையை மதிக்காவிட் டால், அல்லது அதனை நிறைவேற்றாது - அரசாங்கத்தைத் திருப்திப்படுத்த இயலாவிட்டால் கும்பெனியாரது பாதுகாப்பு உமக்கு எப்பொழுதும் இருக்காது என்பதை நேர்மையான முறை யில் எச்சரிக்கை செய்கிறேன்.

''உண்மையில், உம்மிடம் பணிவுடைமை இருந்தால் உமக் குப் பாதுகாப்பான வழி யொன்றையும் கூற விரும்புகிறேன். கொடுமைகள், சூழ்ச்சிகளால் உம்மை வழி நடத்துபவர்களது பல வீனமான ஆலோசனைப்படி நடப்பதைவிட்டு நீங்கிக் கொள்ளவும். அவை உம்மீது வெறுப்பைத்தான் ஏற்படுத்தும்.முன்பு கட்டனூரில் நாம் சந்தித்த பொழுது உமக்கு ஆதரவும் பாதுகாப்பும் தருவ தாக உறுதி சொன்னேன். நீர் கும்பெனியாருக்கு கீழ்ப்படிந்து கடமைகளை நிறைவேற்றும் வரை, அந்த உறுதிமொழிக்கு மதிப்பு உண்டு. அதற்குத்தக்க தருணம் இப்பொழுது வாய்த்துள்ளது. இப்பொழுது உமக்குத் தேவையானது கும்பெனி துரைத்தனத் தாரின் சலுகையா அல்லது சீற்றமா? இதில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்து கொள்ளவும். ......''

இதனை அரண்மனை அட்டவணை படித்து முடிக்கக் கேட்டதும் சின்னமருது சேர்வைக்காரருக்கு சிரிப்புத்தான் வந்தது.

கேவலம்! ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள தங்கள் நாட்டில் வாழ்வதற்கு வாய்ப்பு இல்லாததால் செல்வம் கொழிக்கும் இந்திய நாட்டில் மிகுதியாகவும் விலை குறைவாகவும் உள்ள தேவையான பொருட்களை வாங்கிச் சென்று பிழைக்க வந்தவர்கள் இந்த மிலேச்சர்கள். அவர்களது எழுத்தில் எவ்வளவு ஆணவமும் அழுத்தமும் பொதிந்து இருக்கின்றன! பரம்பரையாக இந்த நாட்டை ஆண்டு வந்த பேரரசர்களைப்போல் அல்லவா இவர்கள் பாவனை செய்கிறார்கள்! வளைந்து செல்லும் வணிகர்களுக்கு அதிகாரம் செய்யும் வலிமை வந்துவிட்டது! இருந்தாலும் தமக்கே உரிய ராஜதந்திரப் பணிவுடன் சின்னமருது கலெக்டருக்கு பதில் ஒன்றை அனுப்பி வைத்தார்.[27] கும்பெனியாருக்குத் தொடர்ந்து விசுவாசத்துடன் இருப்பவர் போலவும் மயிலப்பனுக்கும் அவருக்கும் தொடர்பு இல்லாதது போலவும், கும்பெனியாரது அதிருப்தியை உண்டு பண்ணக்கூடிய அபாயத்தைத் தோற்றுவிக்கப் போவதில்லை என்னும் பாணியில் அவரது பதில் கடித வாசகம் அமையப் பெற்று இருந்தது அந்தக்கடிதம்.

"... ... 23.3. 1801 தேதிய கடிதத்தைப் பெற்றுக் கொண்டு அதன் அடக்கத்தைப் புரிந்து கொண்டேன். அதில் கடந்த சில காலமாக கும்பெனியாருக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களுக்கு அடைக்கலம் அளித்து வருவதாகவும், ஆயுதபாணிகளான வீரர்களைத் திரட்டி வருவதாகவும், இரண்டாவது முறையாக கிளர்ச்சிக்காரர் மயிலப்பனுக்கு ஆதரவு அளித்து இருப்பதாகவும், அவரைப் பிடித்துக் கொடுத்து கும்பெனியாருக்குக் கட்டுப்பட்டவனாக நடந்து கொள்ளுமாறும் குறிப்பிடபட்டுள்ளது. கும்பெனியாருக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களுக்கு நாங்கள் அடைக்கலம் அளிப்பதா? எங்களது கனவிலும் நினைக்காத ஒன்று. இவ்விதம் நிகழ்ந்து இருந்தால், அதற்குரிய குற்றவாளி நாங்களாக இருந்தால், அது எங்களுடைய பொல்லாத காலம் என்பதைத்தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

"மயிலப்பன் எங்களது சீமைக்குள் வந்தால், சந்தேகத்துக்கு இடமில்லால், தாமதிக்காமல் உடனே அவனைப் பிடித்து அனுப்பி விடுவோம். மதுரை, திண்டுக்கல் சீமையைச் சேர்ந்தவர்கள், மதுரைக்குத் திரும்பும் வழியில் எங்களது சீமையில் உள்ள

---

27 Madurai District Records, vol.1133.(30-3-1801) pp.200-203

எமனேசுவரம் கன்னியப்பிள்ளை மடத்தில் ஒரு இரவு தங்கு வார்கள். திருடர்கள் அவர்களை மடக்கி திருடிச் சென்று விடு வார்கள். காயமடைந்தவர்களுக்குக் கட்டுப்போட்டும், கையில் பணமும் கொடுத்து தக்க பாதுகாப்புடன் மதுரைக்கு அனுப்பி வைக்கின்றோம். மற்றும் எங்களது சீமை எல்லையில் உள்ள பரமக்குடி முதலான ஊர்களில் இருந்து பதறி ஓடி வந்தவர் களுக்கும் பாதுகாப்பு அளித்து வருகிறோம்.

''ஏற்கனவே மயிலப்பனைப் பிடித்துக்கொடுக்குமாறு, வந்த கடிதத்தைப் பார்த்தவுடன், எங்களது ஆட்களை நாலாபுறமும் அனுப்பிப் பிடித்து வருமாறு செய்தோம். ஆனால் எவ்வளவோ தேடிப்பார்த்தும், முயற்சி செய்தும் அவன் எங்கும் அகப்பட வில்லை. முன்பு சிங்கன் செட்டியுடன் சேர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட்ட காட்டுப் பகுதிகளுக்குச் சென்று அவனைப் பிடித்து வருமாறு எங்களது கோட்டை சேர்வைக்காரரையும், பாப்பூர் நாயக்கரையும் அனுப்பி வைத்தேன். மயிலப்பன் ஒரு முரடன். அவனால் எங்களுக்கு என்ன உதவி செய்ய இயலும்? பயனற்ற ஒருவனுக்காக ஆதரவு அளித்து வீணாக கும்பெனியாரதும் உங்களதுமான வெறுப்பை அல்லவா சம்பாதித்துக் கொள்ள நேரிடும்? நாங்கள் சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் விசுவாசத்துடன் இருந்து உங்களது சலுகைகளைப் பெறுவதற்கு முயன்று வருகிறோம். அதனால், நாங்களும் எங்களது குடும்பத் தினரும் முன்னேற்றம் எய்த முடியும்.

''தாங்களும் எங்களுக்கு கட்டனூரில் கொடுத்த வாக்குறு தியை மறக்காமல் நினைவில் இருத்தி வைத்து கும்பெனி யாருக்குக் கட்டுப்பட்டு நடந்து வருகிறோம். நாங்கள் இவ்விதம் உள்ளச்சத்துடனும் நேர்மையுடனும் நடந்து வரும்பொழுது எங்களைப்பற்றி இத்தகைய புகார்கள் எங்களது எதிரிகளால், எங்களுக்கு எதிராகக் கொண்டு வரப்படுவது எங்களது பொல்லாத காலந்தான். முறையான விசாரணையின் மூலம் எங்களது நேர் மையைப் புரிந்து, எங்களைப் பாதுகாப்பீர்கள் என நம்புகிறோம்.

''இரண்டு கடிதங்கள் மதுரை வழியாக கிடைத்தன. அவைகளுக்கு உடனே பதில்கள் அளிக்கப்பட்டுவிட்டன. திருச்சுழி வழியாக வரப்பெற்ற கடிதத்திற்கும் பதில் அனுப்பப்பட்டு விட்டது.

எங்களது பேஷ்குஷ் தொகையை இராமநாதபுரம் பேஷ்காரிடம் செலுத்திவிட முதலில் கட்டளை இடப்பட்டது. அந்த தொகையைப் பெற்றுக் கொள்ளுமாறு எழுதினேன். தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு அவருக்கு கட்டனள யிடப்படவில்லை என அவர் பதில் கொடுத்தார்.

''இதனை உங்களுக்கும் தெரிவித்து இருக்கிறேன். இங்குள்ள குழப்பமான சூழ்நிலை காரணமாக பொதி வண்டிக்காரர்கள் இங்கு வருவது இல்லை. தானியங்களுக்கும் தவசங்களுக்கும் கிராக்கி இல்லை. பக்கோடா பணம் கிடைப்பது மிகவும் அபூர்வமாக இருக்கிறது. இப்பொழுது கட்டளை யிட்டுள்ளபடி இராமநாதபுரத்தில் கிஸ்தியைச் செலுத்தி விடுகிறோம். நாங்கள் மிகுந்த அச்சத்துடன் நடந்து வருகிறோம். கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு கொடுக்கமாட்டோம். கும்பெனியார் குற்றம் காணும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டோம். ......''

மருது சேர்வைக்காரரது இந்தக் கடித வாசகம் கும்பெனியாருக்கு, அவர்கள் முன்னர் கட்டுப்பட்டு இருந்த விசுவாசிகள் போன்று அமைந்து இருந்ததே யொழிய. அவரது நடவடிக்கைகள் தொடர்ந்து கும்பெனியாருக்கு எதிராக இருந்தன என்பதை கும்பெனியாரது ஒற்றர்களது அறிக்கைகள் தெரிவிக்கின்றன. திருவாடானை வட்டம் ஒரூரில் இருந்து கும்பெனியாருக்கு கிடைக்கப்பெற்ற அறிக்கையொன்றில் வெள்ளைமருது சேர்வைக்காரரது மைத்துனர் பொன்னளிக் கோட்டை உடையார் சேர்வைக்காரர், சுந்தரபாண்டிய பட்டினத்தில் மூன்று நாட்களாக தங்கி இருப்பதாகவும், கும்பெனியாருக்கு ஆதரவாக உள்ள பெருவாக் கோட்டை சேர்வைக்காரரை ஓலம் கலுங்கு என்ற இடத்தில் சந்தித்துப்பேசுவதற்கு ஏற்பாடுகள் நடப்பதாகத் தெரிவித்தது.[28] சிவகங்கை வட்டார மங்கலத்தில் இருந்து வரப்பெற்ற கடிதத்தில்[29] ''சின்னமருது சேர்வைக்காரர், மேலூர் நாட்டு கள்ளர் தலைவர்கள் பதினோரு பேர்களை வரவழைத்து சிறப்புக்கள் செய்தார். பல்லக்கும், குதிரையும், பட்டாடைகளும், மானியங்களும் அவர்களுக்கு வழங்கி, அவருக்கு உதவி பெறுவதற்கான உறுதிமொழி

28 Madurai District Records, Vol. 1133, (29-3-1801) p. 49.
29 Madurai District Records Vol. p. 198.

களைப் பெற்ற பின்னர், அவர்களை வழியனுப்பி வைத்துள்ளார். மேலும் அவர் பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு வெடி மருந்துப் பொதிகளையும், ஆயுதங்களையும் அனுப்பி வைத்தது உறுதி. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இங்கு, காளையார்கோவில் காடுகளிலும் எல்லாவிதமான சாமான்களையும் சேகரித்து இருப்பு வைத்து வருவதுடன் பகிரங்கமான போருக்குரிய எல்லா ஆயத்தங் களையும் அவர் செய்து வருகிறார். ...'' என்று தெளிவாக சிவகங்கை பிரதானிமீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவைபோன்ற. கடிதங்களில் இருந்து சிவகங்கை சேர்வைக் காரர்கள், தங்களது சீமையில் உள்ள கும்பெனியாருக்கு ஆதர வான ''நாட்டுத் தலைவர்களை"ச் சந்தித்து அவர்களுக்கு மன மாற்றம் ஏற்படுத்துவதிலும், சிவகங்கைச் சீமையின் வரலாற்றுச் சிறப்புமிக்க அந்நிய எதிர்ப்புப்போரை, காளையார் கோவில் கோட்டையில் நிகழ்த்தி, அந்த மண்ணின் மகத்தான பெருமை யையும், மறவர்களது மானத்தையும் வீரத்தையும் நிலைநாட் டுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தனர், என்ற உண்மையை கும்பெனியார் கண்டு கொண்டதில் புதுமை எதுவும் இல்லை. சிவகங்கை, இராமநாதபுரம் பகுதிகளைக் கொண்ட பரந்த மறவர் சீமையின் புறக்காவல் நிலையமாக பாஞ்சாலங் குறிச்சியும் தலைவாயில் போன்று கமுதிக் கோட்டையும், தலைமை இடமாக காளையார்கோவில் கோட்டையும் அப்பொழுது திகழ்ந்து வந்தன. இந்த ராணுவ மையங்களின் நிலைமையைப் பொறுத்துத்தான் மறவர் சீமையின் எதிர்காலம் அமைந்துஇருப் பது போன்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்தது.

மயிலப்பன் மீண்டும் இராமநாதபுரம் சீமைக்குத் திரும்பி னார். அவரது பணி முழுவதும் அங்குதானே உள்ளது. வழியில் கமுதிப்பேட்டையில் உள்ள சில கடைகளை அவரது அணியினர் சூறையிட்டனர். அபிராமத்தில் கும்பெனியாருக்கு ஆதரவாக இருந்த காதர்மீரான் என்ற முஸ்லீம் பிரமுகரைத் தேடிப்பிடித் தனர். கொன்று போடுவதற்கு. ஆனால் மயிலப்பன் தலையிட்டு அவருக்கு மனந் திருந்துவதற்கு வாய்ப்பாக மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். விபரம் அறிந்த சின்னமருது சேர்வைக் காரர் இத்தகைய இரக்கமான செயலுக்கு மயிலப்பனை கடிந்து

எச்சரித்தார்.[30] போர்க்களத்தில் ஒப்பாரி வைப்பதுண்டா? இலட்சியத்திற்கு எதிராக நடப்பவர்களின் தனிப்பட்ட தன்மைகளைப் பரிசீலித்து பச்சாத்தாபப்படுவதற்கு அது சந்தர்ப்பம் இல்லை என்பது சிவகங்கை சேர்வைக்காரரது கருத்து.

அடுத்து அந்த அணியினர் அபிராமத்துக்கு வடகிழக்கேஉள்ள கொடுமலூருக்குச் சென்றனர். அங்குள்ள கும்பெனியாரது சேகரம் பட்டறையில் இருந்த நெல் இருப்புக்களைக் கொள்ளையிட்டனர். இவ்விதம் கும்பெனியாரது சேகரம்பட்டறைகளில் இருந்து மருது வின் வீரர்களால் சூறையிடப்பட்ட நெல்லின் அளவு 7339 கலம் 4 மரக்கால்-4, 3/4 படி என்றும், மருதுசேர்வைக்காரர்களது உறவினரான பொன்னளிக்கோட்டை உடையார் சேர்வையும் அவரது குழுவினரும் கொள்ளை கொண்டது 9085-கலம்-9 மரக்கால் 4, 3/4 படி எனவும் கும்பெனியாரின் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.[31] இவை பெரும்பாலும் இராமநாதபுரம் சீமையைச் சேர்ந்த சிக்கல், முதுகுளத்தூர், கமுதி, அபிராமம், வெந்தோணி, ராஜசிங்க மங்கலம், அருநூத்திமங்கலம், அனுமந்தக்குடி, குத்தகை நாடு, ஒரூர், கோட்டைப்பட்டினம், புல்லுமாரி ஆகிய கிராமங்களில் இருந்து பெறப்பட்டவை எனத் தெரிகிறது.

இன்னொரு ஆவணத்தின்படி கிளர்ச்சிக்காரர்கள் இராமநாதபுரம் சீமையில் 24, 474, ஸ்டார்பக்கோடா பெறுமானமுள்ள தானியங்களையும் ரொக்கத்தையும் கைப்பற்றியதாகவும், சிவகங்கைச் சீமையின் கொள்ளை 12, 413. பக்கோடா பெறுமானம் உள்ளது என்றும் தெரியவருகிறது.[32] இந்த தகவல்களைத்தெரிந்த தளபதி மில்லர் நாகலாபுரத்திலிருந்து திருநெல்வேலிச் சீமையின் கூலிப்படையுடன் இராமநாதபுரம் சீமைக்கு விரைந்தான். அதற்குள்ளாக, கிளர்ச்சிக்காரர்கள் அபிராமம் பகுதியிலிருந்து பரமக்குடி பகுதிக்கு புறப்பட்டுச் சென்றனர். ஆனால் விரைவிலேயே சிவகங்கையிலிருந்து தளபதி மயிலப்பன் அணிக்கு உதவிப் படைகளும் ஆயுதங்களும் தொடர்ந்து வந்து சேர்ந்தன.[33] இராமநாதபுரம்

30. Ibid vol. 1139 (1802-AD) p p. 46-48.
31 Madurai District Records, vol. 1132. (14-6-1802) p25.
32 Ibid vol. 1142 p,p. 41-42.
33 Revenue Consultations, vol. 107 (1806-1810) p.228.

சீமை முழுவதும் கிளர்ச்சியை முடக்கிவிட்டு கும்பெனியாரைத் திக்கு முக்காடச் செய்ய வேண்டும்; இதனால் எதிரியின் வலுவனைத்தையும் அங்கேயே வீணாக்கிவிட்டால் சிவகங்கைச் சீமைப் போரில் அவர்களை எளிதில் மடக்கிவிடலாம் என்பது மருதுசேர்வைக்காரர்கள் திட்டம். இராமநாதபுரம் சீமையின் வடகிழக்கே பாண்டுகுடியில், மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரது தலைமையில் அமைக்கப்பட்ட இராமநாதபுரம் சீமைக்கான தற்காலிக அரசாங்கம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முனைந்து இருந்தது.[34] அவரது இளைய சகோதரர் கனக சபாபதித் தேவர் முதுகுளத்தூர் பகுதியில் தீவிரமாக இயங்கி வந்தார். அத்துடன், இராமநாதபுரம் சீமையில் இருந்து நூறு பொதி வண்டியில் ஆயுதங்களும் இருபது பொதி வண்டிகளில் வெடிமருந்தும் பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்பப்பட்டன.[35] ஏற்கனவே சிவகங்கைச் சீமை வீரர்களும் அங்கு போய்ச்சேர்ந்து இருந்தனர். மொத்தத்தில் இரண்டு மறவர் சீமைகளில் இருந்து முப்பது ஆயிரம் மறவர்கள் திரண்டு இருந்தனர்.

அன்றைய அரசியல் சூழ்நிலையில், இராமநாதபுரம் - சிவகங்கைச் சீமைகளின் பத்திரத்திற்கு புறக்காவல் நிலையமாக அந்தக்கோட்டை விளங்கியது. அதனால் அந்தக் கோட்டையின் பாதுகாப்பிற்கும், உறுதிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் செய்து வந்தனர். மறவர் சீமை வீரர்களின் பணியும் அந்தக்கோட்டைப் பாதுகாப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. ஏறத்தாழ இருநூறு கல் தொலைவு இடைவெளி சிவகங்கைக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் இருந்தாலும், அரசியலில் இரு பாளையங்களும் மிகவும் நெருக்கமாக இணைந்து நின்றன.

---

34 Tinnevely District Records, vol. 3579, (18-3-1801) p.77.

35 Ibid. p. 69-72.

# 5

## பரங்கியரும் பாஞ்சாலங்குறிச்சியும்

தமிழ்நாட்டில் விஜயநகர நாயக்கர் ஆட்சியை நிலைநிறுத்திய விசுவநாதநாயக்கர், கோயம்புத்தூரில் இருந்து கன்னியாகுமரி வரையான பரந்த தமிழ் நிலப்பகுதியை இறுக்கமான நிருவாக அமைப்பிற்குள் கொண்டு வந்தார். மதுரை நாயக்கருக்கு எந்தவித அவசர, ஆபத்தான, நிலையிலும் பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்றதாக எழுபத்து இரண்டு பாளையக்காரர்களை நியமனம் செய்தார்.[1] இவர்களில் முப்பத்து இரண்டு பாளையக்காரர் தெற்கே திருநெல்வேலிப் பகுதியில் இருந்தனர். அவைகளில் ஒன்றுதான் பாஞ்சாலங்குறிச்சி என்பதாகும். மிகச்சிறிய பாளையம்; போதுமான இயற்கை வளங்கள் இல்லாதது, இந்தப் பாளையத்தின் தலைவராக ஆந்திரமாநிலத்தில் இருந்து வந்து, நாயக்க மன்னரது பணியில் இருந்த கம்பளத்தார்[2] ஒருவர் நியமனம் செய்யப்பட்டார். அவரது இயற்பெயர் தெரியவில்லை ''கெட்டி பொம்மு'' என்ற (தெலுங்கு) சிறப்பு பெயரால் அவரும் அவரது வழியினரும் வழங்கப்பட்டனர். தமிழில் அந்தப்பெயர் ''கட்ட பொம்மு'' ''கட்டபொம்மன்'' குலவழிப்பெயராக மாறியது. கட்ட பிரம்மய்யா என இந்தப் பாளையக்காரர்களை சில நூலாசிரியர்களும் குறிப்பிட்டு உள்ளனர்.

மதுரை நாயக்கமன்னர் மரபின் கடைசி வாரிசான ராணி மீனாட்சி கி.பி. 1736ல் இறந்தவுடன், தமிழகத்தின் ஏனைய

---

1 Sathianathaier S; History of Madura Nayaks (1924) p.p. 58-60

2 ஆந்திர நாட்டில் இருந்து தமிழகத்தில் குடியிருந்த ஒன்பது பிரிவினரான வடுகரில் ஒரு பிரிவு. இவர்கள் தொட்டியர் எனவும் வழங்கப்பட்டனர்.
Edgar Thurstion; Castes and Tribes of South India vol. III. p 92

பாளையக்காரர்களைப் போன்று பாஞ்சைப் பாளையக்காரரும் ஆர்க்காட்டு நவாப்பிற்கு கப்பத் தொகையைச் செலுத்தாமல் கி.பி. 1766 வரை வசதியாக இருந்து வந்தார். ஆனால் நவாப் பிற்காக கும்பெனிப்படைகள், மேஜர் பிலின்ட் தலைமையில் இந்தப் பாளையத்தை தாக்கிப்பிடித்தனர். மீண்டும் கி.பி. 1768ல் பாளையத்தைக் கைப்பற்றி கப்பத்தொகையை வசூலித்தார். இந்தப் பாளையத்தின் தலைவராக கி.பி. 1791ல் நியமிக்கப்பட்ட வர்தான் ''வீரபாண்டிய'' என்ற சிறப்புப் பெயருடன் அழைக்கப் பெற்ற ''கட்டபொம்மன்''.

இவர் கும்பெனியாரால் சிறைப்பிடிக்கப்பட்டு 16-10-1799ம் தேதி தூக்கிலிடப்பட்டார். அப்பொழுது அவருடன் கைது செய்யப் பட்ட அவரது சகோதரன் ஊமை குமாரசுவாமியும் மற்றவர்களும் பாளையங்கோட்டையில் சிறைப்படுத்தப்பட்டனர்.

ஊமைத்துரையும் அவரது தோழர்களும் 2. 2. 1801ம்தேதி மாலையில் அங்கிருந்து தப்பித்து ஓடினர்.[3] அங்கிருந்து முப்பத்து ஐந்து கல் தொலைவில் உள்ள பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு இரவோடு இரவாக ஓடி வந்து சேர்ந்தனர். அவர்களைத் தொடர்ந்து பரங்கிப்படை வந்து சேரும் வாய்ப்பு இருந்ததால் தற்காப்பு போருக்கான எல்லா ஏற்பாடுகளும் உடனே செய்யப் பட்டன. எதிர்பார்த்தபடி பாளையங்கோட்டையிலிருந்து பரங்கிப் படை 6–2-1801 ம்தேதி பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து சேர்ந்தது.

அப்பொழுது அவர்கள் கண்ட காட்சியை அவர்களால் நம்ப இயலவில்லை. கடந்த ஓராண்டுக்கால இடைவெளியில் தரையோடு தரையாக அழித்து நாசம் செய்யப்பட்ட இடத்தில், மீண்டும் பலம்வாய்ந்த கோட்டை ஒன்று எழுப்பப்பட்டு கொத்த ளங்களில் 1500க்கும் மேற்பட்ட வீரர்கள் காவலாக நின்றனர். அந்தக் கோட்டையின் தோற்றமே அவர்களை கதிகலங்கச் செய்தது. ஆதலால் பரங்கிப்படை வந்தவழியே பாளையங் கோட்டைக்கு 10. 2. 1801 அன்று திரும்பி ஓடியது. பாஞ்சாலங் குறிச்சிக் கிளர்ச்சிக்காரர்கள் அவர்களை துரத்திச் சென்று மிகுந்த சேதத்தை விளைவித்தனர். அத்துடன் பக்கத்தில் உள்ள

3 குருகுகதாசப் பிள்ளை-திருநெல்வேலி சீமைச் சரித்திரம் (1931) பக்கம் 263

ஸ்ரீவைகுண்டம் பகுதிகளையும் ஆக்கிரமித்து அவர்களது கைப் பற்றுதலில் வைத்துக் கொண்டனர்.

''ஆனால் அடுத்த ஒன்றரை மாத அவகாசத்திற்குள் பல இடங்களில் இருந்தும் உதவி பெற்று தங்களைத் தயார் செய்து கொண்ட பரங்கிகள் மீண்டும் 30-3-1801ம்தேதி பாஞ்சாலங்குறிச்சி யின் மீது படை எடுத்தனர். இந்தப் படையெடுப்பிற்கு பக்கத்து பாளையமான எட்டையாபுரம் பாளையக்காரர் எல்லாவிதமான ஊழியங்களைச் செய்து வந்தார். ஆனால் பரங்கிகளால் பாஞ்சைக் கோட்டையை நெருங்க இயலவில்லை. ஒவ்வொரு நாள் போரி லும் எத்துணைவிதமான தாக்குதலைத் தொடர்ந்தும் உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் பரங்கிகள் பக்கம்தான் இருந்து வந்தது! இலங்கையில் இருந்த மலாய் நாட்டு அணியும், கர்நாடக, மலையாளப் படை அணிகளும் பரங்கிகள் உதவிக்கு வரவழைக் கப்பட்டன.[4] என்றாலும், இரண்டு மாதமாகத் தொடர்ந்த அந்த போரின் நிலைபற்றி கவலையடைந்த கும்பெனி மேலிடம் பாஞ் சாலக்குறிச்சியில் உள்ள கும்பெனி அணியின் தலைமையை மாற் றியது. சென்னைக்கோட்டையில் பணியாற்றிய கர்னல் அக்கினி யூவை நியமித்தது. அதுவரை பாஞ்சைப்போரில் கும்பெனிப் படைகள் தோல்வியடைந்து நிலை குலைந்திருந்தது.

புதிய தளபதி அக்கினியூம் தமது போர் நடவடிக்கையை 21-5-1801-ல் துவக்கினான். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை உடைத்து அழித்துவிட்டால்,எதிரிகளை எளிதில் ஒழித்து விடலாம் என்பது அவனது முடிவு. அவனது திட்டப்பட்டி படபடவென வெடிக்கும் பீரங்கிக் குண்டுகள் தொடர்ந்து கோட்டை மதிலை துளைத்து நொறுக்கின. நான்கு நாட்களில், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை பிய்த்து எறியப்பட்ட தூக்கணாங் குருவிக் கூடு போல துயரக்காட்சி அளித்தது. பொதுவாக பேசமுடியாத ஊமத்துரை பரங்கிகளை அழித்து விடுவேன் என சைகையால் சூளுரைத்து, சின்னஞ்சிறு குச்சிகளை எடுத்து தமது உள்ளங்கையில் வைத்து பொடியாக்கி, தலையைச் சுற்றி, வாயினால் ஊதிவிட்டு, அவை கள் பறந்து விழுவதைப்பார்த்து மகிழ்ச்சி கொள்ளும்[5] அவரது

---

4 குருகுகதாசப்பிள்ளை : திருநெல்வேலி சீமை சரித்திரம் (1931) பக் - 278-79

5 Col. Welish : Military Reminiscences vol. II (1868)

திட்டங்களும் அவர் தோழர்களது எதிர்ப்பு உத்திகளும் நிலை குலைந்தன. வேறு வழியில்லாமல் அதுவரை ஈடுபட்டு இருந்த தற்காப்புப்போர் உத்திகளை மாற்றிக்கொண்டு, பரங்கிகளுடன் நேருக்குநேர் பொருதினர்.

புறநானூற்றுப் பாடல்களை நினைவுப்படுத்தும் வண்ணம் பாஞ்சை மறவர்கள் புறமுதுகு இடாது வீரத்துடன் போரிட்டு மடிந்தனர். ஏகாதிபத்திய வெறியர்களான பரங்கிகளது அழிவுப் படைகள், வெடிகுண்டுகள் தங்களது புனித மண்ணில் புதைந்து பழி சேர்க்கக்கூடாது என்பதற்காக அவைகளைத் தங்களது பரந்த நெஞ்சங்களில் தாங்கியவர்களாக மடிந்து சாய்ந்தனர். அவர்களது வீரமும் மானமும் விடுதலை இயக்க வரலாற்று பள்ளாக கால மெல்லாம் ஒலிக்கும் என்பது உறுதி.

பாஞ்சாலங்குறிச்சிப் போரில், பரங்கிகளது அணியில் பங்கு கொண்ட கர்னல் வெல்ஷ், அந்தப்போரின் காட்சிகளை, வேதனை யும், வியப்பும் விரவிய வார்த்தைகளால் தமது நாட்குறிப்புக் களில் பதிவு செய்துள்ளார். பதினெட்டு பக்கங்களில் அச்சிடப் பட்டிருக்கும் அவரது குறிப்புகள் வரலாற்று நோக்கில் சிறப்புடை யனவாக விளங்குகின்றன. மாற்று அணியைச் சேர்ந்தவரானா லும் உண்மையான வீரத்தை உள்ளத்தின் ஆழத்திலிருந்து விருப்பு வெறுப்பு இல்லாமல், விவேகத்துடன், புகழ்ந்து, தொடுத்த அஞ்சலிபோல அமைந்துள்ளது அவரது சொற்கள். 24-5-1801ம் தேதி, உச்சி வேளைக்குப் பின்னர் உயர்ந்து நின்ற ஆதவன், மேற்கு நோக்கி தாழ்ந்ததுபோல போரின் எதிர்ப்பு வேகம் தணிந்தது. நான்கு மாதங்களாக நிமிர்ந்து நின்ற பாஞ்சாலங் குறிச்சி கோட்டை வீழ்ந்தது. வீரர்கள் சாய்ந்தனர். அந்த இறுதிப் போர்க்காட்சியை கர்னல் வெல்ஷின் ஆங்கிலச் சொற்கள் இவ்விதம் சித்திரிக்கின்றன.[6]

"... ... ... ... வெற்றியைக் காணாத அந்த தாக்குதலில் அதுவரை மோசமாக பாதிக்கப்பட்டு இருந்த நமக்கு, நரிப்பள்ளம்*

6 Ibid vol. II

* நரிப்பள்ளம் - பரந்த ஆற்று மணல்படுகையில் நரிகள் இரவு நேரத்தில் தங்கு வதற்கு, மணலைக் கால்களினால் வாரி அமைக்கும் பள்ளங்கள்.

போன்று கோட்டையின் உட்பகுதியை முதன் முறையாகக் கண்ட பொழுது உள்ளத்திற்கு ஆறுதலாக இருந்தது. இதனைக் கைப் பற்றுவதற்காக ஏற்கனவே பல முறை முயற்சித்தது உண்டு. அந்த இடம் தரைமட்டத்திற்கு கீழே, மூவாயிரம் வீரர்கள் சில சமயங்களில் ஆபத்து மிகுந்த வேளையில் அவர்களது குடும்பத் தினரும், தற்காப்பாக தங்குவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டு இருந்தது, வியப்பாகத் தோன்றியது. எதிரிகளது துப்பாக்கி, பீரங்கி குண்டுகளது தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள் வதற்காக அந்தக்கோட்டையின் பல பகுதிகளிலும், இத்தகைய பள்ளங்கள் தோண்டப்பட்டு இருந்தன ... ... ... ... இந்தப் பள்ளங் களில் உள்ளவர்கள் பயன்படுத்திய நீண்ட ஈட்டிகள், நல்ல பலனைத் தந்தன. அந்தப்பகுதியை அடைந்த எந்த எதிரியும் உடனே குத்திக் கொல்லப்பட்டதில் ஆச்சரியமில்லை. அங்கு அவர்கள் பதுங்கி இருக்கும் வரை எதிரிகள் யாரும் நெருங்கிச் செல்லமுடியாது. ஆனால் தாக்குதல் எங்கிருந்து வருகிறது என்பதனை உணரமுடியும். இத்தகைய காட்டுமிராண்டித்தன மான தற்காப்பு முறையை அங்கு அமைத்த பொறியாளரைப் போற்றாமல் இருக்க முடியாது. அந்தக் கோட்டை மதில் மட்டும் இன்னும் சற்று உறுதியாக இருந்து தற்காப்பிற்கு துப்பாக்கி யையும் சனியன்களையும் பயன்படுத்தி இருந்தால், நாம் இன்னும் இரண்டு மாதங்களுக்கு அந்தக்கோட்டை முன்னே காத்துக் கொண்டிருக்க வேண்டியதாகிவிடும் ... ... ... ... ''[7]

பஞ்சாலங்குறிச்சி 24-5-1801 அன்று வீழ்ந்தது. அதனைக் குறிப்பிட்டுள்ள '' திருநெல்வேலி சீமை சரித்திர '' ஆசிரியர், '' ... ... ... பிடிபட்ட கோட்டைக்குள் பிரவேசித்த கும்பெனியாரின் ராணுவ அலுவலர்கள் அதன் சிறுமையைக் கண்டு அலட்சிய மடைந்தனர். ஆனால் அதன் வலுவையும், அதனைக் கட்டி முடித்த கண்ணிமைப் பொழுதினை யொத்த இந்திரசால நொடி யின் அளவையும், எதிரிகளின் மாயாவினோத திறமை, சாமர்த் தியத்தையும் அவர்கள் பிரயோகித்த ஆயுத முறைகளின் !தேர்ச்சி யையும் கண்டு பிரமித்துப் போய்விட்டனர்.'' என வெற்றிப் படைத்தலைவர்களது மனப்பான்மையைத் தெளிவாகச் சுட்டியுள்

---

7 Col. Welsh: Military Reminiscences (1830) vol. I p.p. 132-33.,

ளார்.[8] இத்தகைய கோட்டைப் போரினைத் திறம்பட இயக்கிய புதுமை மனிதர் ஊமைக் குமாரசுவாமியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, கர்னல் வெல்ஷின் கருத்துத்தான் இங்கு பொருத்தமாக உள்ளது. ''ஊமையை மக்கள் பெரிதும் பாராட்டி மதித்தனர். அவரது சிறு அசைவு கூட அற்புதமாகக் கருதப்பட்டது. அவரது ஆணையை நிறைவேற்ற அனைவரும் ஓடோடி வந்தனர். அவர் இல்லாமல் எந்த ஆலோசனையும் இல்லை. அவர் தலைமை இல்லாத போராட்டமும் கிடையாது.''[9]

போரில் இறந்துவிட்ட பாஞ்சைத் தலைவர்களை இனங் கண்டு கொள்வதற்காக மடிந்து கிடக்கும் பாஞ்சை மறவர்களது பிணக்குவியல்களைச் சுற்றிப்பார்த்து வந்தனர் எட்டையாபுரத்து துரோகிகள். அதே சமயம் பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்த தாய் ஒருத்தி, போரில் கலந்து கொண்ட தனது ஒரே மகனின் சடலத்தை போர்க்களத்தின் இன்னொரு பக்கத்தில் தேடிக் கொண்டு இருந் தாள். குற்றுயிராகக் கிடந்த அந்த வீரனை இனங்கண்டு அவள் அழுது தவித்தாள். அப்பொழுது அந்த வீரன் தனது தாய்க்கு ஆறுதல் சொல்லியதுடன் தனக்கு அண்மையிலேயே தன்னைப் போல மரண காயங்களுடன் தவித்துக் கொண்டிருக்கும் ''ஊமைச் சாமி''யைக் காப்பாற்றச் சொல்லிவிட்டு இறந்துவிட்டான். தனது மகனைப் பிரிந்த துக்கச் சுமையுடன் அவனது இறுதி ஆசையை நிறைவேற்ற ஊமைத்துரையைத் தூக்கி தனது தோளிலே சுமந்து தனது இல்லத்திற்கு எடுத்துச் சென்றாள், அந்த வீரத்தாய். வழியில் அவளைத் தடுத்து விசாரித்த பரங்கிப்படையினரிடம் தனது மகன் அம்மையால் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் அதனால் சுமந்து செல்வதாக தந்திரமாகச் சொன்னவுடன் அவர்கள் பயந்து ஓடிவிட்டனர்.[10] அடுத்த மூன்று நாட்களும் ஊமைத்துரை காயங் களுக்கு மருந்திட்டு உதவி செய்தாள். அவரும் ஓரளவு உடல் தேறியவராக மேலும் அங்கிருப்பது ஆபத்து என உணர்ந்து எஞ் சிய தோழர் சிலருடன் இராமநாதபுரம் சீமைக்குப் புறப்பட்டார்.[11] கமுதி கோட்டைக்குப் போய்ச்சேர்ந்தபொழுது, அங்கு நடை

---

8 குருகுகதாசப்பிள்ளை - திருநெல்வேலி சீமை சரித்திரம் (1931) பக். 289
9 Ibid vol. I p.p. 131-33.
10 Military Reminiscences 1930 vol. I, p. 132-33
11 Military Consultations, vol. 284, (9-6-1801) p. 4280

பெற்று வந்த தாக்குதலில் ஈடுபட்டு இருந்த சின்னமருது சேர்வைக் காரர், பாஞ்சாலங்குறிச்சி கோட்டை விழுந்த தகவல் வந்தவுடன் சிவகங்கைக்குப் போய்விட்டதாக அவருக்கு அறிவிக்கப்பட்டது, என்றாலும் அங்கிருந்த கிளர்ச்சிக்காரர்கள் அவரை அன்புடனும், மரியாதையுடனும் வரவேற்று தக்க பாதுகாப்புடன் அவரை அரண்மனை சிறுவயலுக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அரச மரியாதைகள் காத்திருப்பது அவருக்கு தெரியாதல்லவா?

சின்னமருது சேர்வைக்காரரது குடும்பத்தினரும் அவரது மக்களது குடும்பங்களும் அரமண்மனை சிறுவயலில் வாழ்ந்து வந் தனர். அந்த ஊரின் எல்லையை அடைந்த ஊமைத்துரையை பல்லக்கில் அமரச் செய்து சின்னமருது சேர்வைக்காரது இல்லத் திற்கு அழைத்துச் சென்றனர். கூடியிருந்த தாய்க்குலத்தினர் குளவை இட்டு அந்த வீர விருந்தாளியை வரவேற்றனர். சிறிது நேரத்தில் ஐநூறுசக்கரம்[12] பணம்* வசூலித்து ஊமைத்துரையின் உடல்நலத்திற்காக ஏழை எளியவர்களுக்கு தானமாக வழங்கினர்.[13] வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீரப்போரிட்டு மரணப் பிடியில் இருந்து உயிர் தப்பிய விந்தை மனிதர் அல்லவா? அவர்! சிவகங்கைச்சீமை மக்களது அன்பும் விருந்தோம்பலும் கண்டு மனம் நெகிழ்ந்து காணப்பட்டார். பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஒரு உன்னதமான தாய் காப்பாற்றியதையும் தொடர்ந்து தம்மைக் கரிசனத்துடன் பேணிக் காப்பதற்கு பல தாய்மார்கள் சிவகங்கைச் சீமையில் இருப்பதையும் எண்ணி எண்ணி ஊமைத்துரை உள்ளம் நெகிழ்ந்தது. அவரது உடலில் இருந்த ஆறு மரண காயங்களும் அப்பொழுதே ஆறிவிட்டது போன்ற பிரமை, தெம்பு, அவருக்கு. தமக்கு புகலிடம் கொடுத்து, தாளாத அன்பினைச் சொரிந்து ஆதரவு நல்கும் அந்தத் தாய்மார்களைப் பாராட்டிச் சொல் வதற்கு தமக்குப் பேச்சுத்திறன் இல்லையே என்ற கவலையை ஊமையான அவரது கண்களில் இருந்து வழிந்த கண்ணீரின் கனி வான பார்வை பிரதிபலித்தது.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை கும்பெனியாரது பீரங்கி கள் புடைத்து நொறுக்கிக் கொண்டு இருந்தபொழுது கிளர்ச்சிக்

---

* மறவர் சீமையில் அப்பொழுது செலாவணியில் இருந்த வெள்ளிபணம்

12 Military Consultations, vol. 285 (A) 11-6-1801 p. 505-52

13 Ibid vol. 284, 26-5-1801 p. 4040-41

காரர்கள் இராமநாதபுரம் சீமையின் தென்பகுதியில் கமுதிக் கோட்டையில் நிலைகொண்டிருந்த கும்பெனியாரைத் தாக்கி நெருக்கிக் கொண்டு இருந்தனர். இந்தத் தாக்குதல் சிவகங்கைப் பிரதானியின் நேரிடையான ஆணைப்படி நடந்து வந்தது. மருதுசேர்வைக் காரர் மக்களும், காடல்குடி பாளையக்காரரும் மும்முரமுமாக கோட்டை முற்றுகையில் ஈடுபட்டனர். ஓராயிரம் மறவர்கள் கும்பெனித் தளபதி மார்ட்டின்ஸ் அணிகள் மிகவும் கடுமையாக நெருக்கப்பட்டு அவர்கள் தங்கள் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலைக்கு நிர்பந்திக்கப்பட்டனர்.[14] எந்த நிமிடத்திலும் கும்பெனியாரது தோல்வி எதிர்பார்க்கப்பட்டது. அந்தநிலையில் பாஞ்சாலங்குறிச்சிப்போரில் கும்பெனியாருக்கு ஏற்பட்டுள்ள சாதகமான போக்கும், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை விரைவில் பரங்கிகள் கையில் விழுந்து விடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ள செய்தியைக் கொண்டுவந்த தூதுவர்களை சின்னமருது சேர்வைக்காரரிடம் சேர்ப்பித்தனர். பாஞ்சாலங்குறிச்சிப் போரின் தோல்விக்குப்பிறகு கமுதிக் கோட்டைப்போரினைத் தொடர்ந்து கொண்டிருப்பதில் மேலும் காலம் வீணாகலாமே தவிர, வெற்றி பெற்றுள்ள பரங்கியர் விரைவில் கமுதிக்கும் சிவகங்கைச் சீமைக்கும் வந்து விடுவது திண்ணம் என்பதை உடனே சின்னமருது சேர்வைக்காரர் உணர்ந்தார். பரங்கிகளுடன் பொருதும் அடுத்த இறுதிப்போர்க்களம் காளையார் கோவில் கோட்டைதான் என்பதையும் அவர் அப்பொழுது தீர்மானித்துவிட்டார். அதற்கான ஆயத்தங்களை உடனடியாகச் செய்வதற்காக சின்னமருது சேர்வைக்காரர் சிவகங்கைக்கு விரைந்தார்.

சிவகங்கைக் கிளர்ச்சிக்காரர்களின் ஒரு பிரிவினர் இராமநாதபுரம் அரசர் பட்டத்திற்கு மீனங்குடி முத்துக்கருப்பத்தேவரை நியமனம் செய்து ஆர்ப்பரித்தனர்.[15] அடுத்து அவர்கள் வடக்கு நோக்கிச் சென்று சிவகங்கைச் சீமையின் தற்காப்பு நிலையாக கும்பெனியாரது ஆக்கிரமிப்பில் இருந்த திருப்பத்தூர் கோட்டையைக் கைப்பற்றி அங்கிருந்த கும்பெனியாரின் கூலிப்பட்டாளத்தைத் துரத்தி அடித்தனர். அதேபோல தொடர்ந்து சென்று, நத்தம், கிராமத்தையும் கைப்பற்றி அங்கிருந்த கும்பெனிப்பட்டாளம் மதுரைக்கு ஓட்டம்பிடிக்குமாறு செய்தனர்.[16] அவர்களைப்

14 Military Consultations vol. 289 (1-12-1801) p. 7680
15 Ibid vol. 284, (1-6-1801) p. 3870
16 Ibid vol 285, (7-7-1801) pp. 547-48

பின் தொடர்ந்து தெற்கே சென்று மேலூரையும் திருமோகூரையும் கைப்பற்றினர். இந்த இரு கோட்டைகளில் இருப்பில் இருந்த ஏராளமான ஆயுதங்களும்,வெடிமருந்துகளும் அவர்களது கைகளில் சிக்கின.[17]

கிளர்ச்சிக்காரர்களின் பிற பிரிவுகளும் பரங்கிகளது வலு வான நிலைகளைப் பலவீனப்படுத்துவதில் முனைந்து இருந்ததால் இராமநாதபுரம் சீமையின் வடகிழக்குப் பகுதியான குத்தகை நாட்டில் தங்கள் கைவரிசையைக் காட்டினர். இராமநாதபுரம் அமில்தாரது அறிக்கைப்படி சிவகங்கையில் இருந்து வந்த அணி யொன்று குத்தகை நாட்டைக்* கொள்ளையிட்டது என்றும் உஞ்சனையில்* இருந்த கும்பெனி அணியுடன் பொருதி அவர்க ளில் சிலரைக் கொன்றுவிட்டு, இருப்பில் இருந்த மிகவும் அதிக மான அளவு வெடிமருந்தினைக் கைப்பற்றி, தொண்டிக்கு எடுத் துச் சென்றனர். பீதியுற்ற மக்களது அச்சத்தை நீக்குவதற்கு கும்பெனியாரது இரு அணிகள் தேவை என்பதையும் அவரது கடிதங்கள் தெரிவித்தன.[18] அப்பொழுது கிளர்ச்சிக்காரர்கள், இலங்கையில் இருந்து ஆயுதங்களையும், வெடிமருந்துப் பொதி களையும் படகுகள் மூலம் பெறுவதற்கு தொண்டி துறைமுகத்தை பயன்படுத்தி வந்தனர்.[19]

கிளர்ச்சிக்காரர்கள் எதிர்பார்த்தபடி பாஞ்சை கோட்டைப் போரை முடித்த பரங்கியர் கமுதிக்கு வரவில்லை. அவர்களில் ஒரு அணி கர்னல் அக்கினியூ தலைமையில் பள்ளிமடம் சென்றது. அப்பொழுது அவருக்கு இராமநாதபுரம் சீமையின் நடப்பு விவரம் தெரியாதவகையில் செய்திப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு

---

* இராமநாதபுரம் மன்னரது பதினேழு மாகாணங்களில் ஒன்று இன்றைய திருவாடனை தேவகோட்டை வட்டங்களைக் கொண்டது.

* காரைக்குடி-தேவகோட்டை சாலையில் அமராவதி புதூருக்கு கிழக்கே 5கி.மீ. தொலைவில் உள்ள ஊர்.

17 Madurai District Records, vol. 1182. (9-5-1801) p.p. 149-51.

18 Military Consultations vol. 288, (20-10-1801), pp. 1657

19 Ibid, vol 284, 30-5-1801. pp. 420-30

இருந்தது.[20] ஆதலால் அவர் கிழக்கே கமுதிக்கு வராமல் திருச்சுழி வழியாக வடக்குத் திசையில் திருப்பூவணம் சென்றார். ஆனால் கமுதி கோட்டையில் உள்ள பரங்கிகள் உதவிக்கு இராமநாதபுரத்தில் இருந்து படையணிகள் வந்து சேர்ந்தன. கிளர்ச்சிக்காரர்கள் தாக்குதலில் மாற்றம் ஏற்பட்டது. கோட்டையில் ஏற்கனவே உள்ள பரங்கியர் தாக்குதலுக்கும் இப்பொழுது புதிதாக வந்துள்ள புதிய அணிகளுக்கும் இடையில் அகப்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் வேறுவழி இல்லாமல் தாக்குதலை நிறுத்தி வடகிழக்கில் பின்னடைந்தனர்.

அவர்கள் அபிராமம் சென்றனர். பரங்கியரது கச்சேரியும் கிட்டங்கிகளும் அந்த ஊரில் இருந்தன. நெசவாளர்களும், விவசாயிகளும் நிறைந்த அந்த ஊர் குடிமக்கள் கிளர்ச்சிக்கு ஆரம்ப முதலே தகுந்த ஆதரவு அளிக்கத் தயங்கி வந்தனர். கோபமுற்ற கிளர்ச்சிக்காரர்கள் கும்பெனியாரது சொத்துக்களுக்கு நெருப்பு வைத்து அழித்தனர். பல்லாயிரக்கணக்கான பக்கோடா பண மதிப்புள்ள கைத்தறித்துணிகளும், தானியங்களும் அழிந்ததுடன் குடிகளது சில வீடுகளும் அந்தப் பேரழிவிற்குத் தப்பவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து அதே ஊருக்கு வந்து அழிமானத்தை பார்வையிட்ட இராமநாதபுரம் கலெக்டர் லூஷிங்டன், சென்னையில் உள்ள கும்பெனி கவர்னருக்கு அனுப்பிய அறிக்கையில், ''இன்று காலையில் பயங்கரமான அழிமானத்தில் சிக்கியுள்ள அபிராமத்தைப் பார்வையிட்டேன். முன்னூற்று ஐம்பது வீடுகள் அழிந்து மொட்டையாக நின்று கொண்டு இருக்கின்றன. இரண்டு குழந்தைகளும், கால்நடைகளும், விவசாய வித்துக்களும், நூல் சிப்பங்களும் நெருப்பில் வெந்து போய்விட்டன. எஞ்சியுள்ள இருப்புத் தானியங்களையும் கிளர்ச்சிக்காரர்கள் கொள்ளை கொண்டு போய்விட்டனர். இத்தகைய கொடுமைகளை அவர்கள் நேற்று முன்தினம் காமன்கோட்டையிலும், இராமநாதபுரத்திற்கு அண்மையில் உள்ள இன்னொரு கிராமத்திலும் மேற்கொண்டுள்ளனர்.'' எனக்குறிப்பிட்டு இருந்தார்.[21]

---

20 Madurai District Records. vol. 1133, 26-6-1801. pp. 22-24

21 Tinnevely District Records, vol. 3579, 23-6-1801, pp.14-20

மேலும், கிளர்ச்சிக்காரர்கள் கும்பெனியாரது தானியங்களுக்கு சேதம் உண்டாக்கி இருப்பதையும், கும்பெனியார் பெற வேண்டிய ஜுன் மாத கிஸ்தியையும் அவர்களே வசூலித்துக் கொண்டுபோய்விட்டனர் என்றும், பக்கத்தில் உள்ள ஐந்து ஊர்களையும் கொளுத்தி சாம்பல் ஆக்கிவிட்டனர் என்றும், இதற்கு முதன்மையான காரணம் அபிராமம் குடிகள் கும்பெனியாரது கால்நடை, குதிரைகளுக்கு வைக்கோலும், இதர தீனியும் அளித்து உதவியிருப்பது என்றும் கர்னல் அக்னியூவுக்கு அனுப்பியுள்ள இன்னொரு கடிதத்தில் கலெக்டர் தெரிவித்து இருந்தார்.[22]

கிளர்ச்சிக்காரர்களது வெறுப்பு அபிராமம் அழிமானத்துடன் அமைதி பெறவில்லை. அவர்கள் மீண்டும் கமுதிக்கு சென்றனர். அங்குள்ள கும்பெனியாரது கச்சேரிக்கும் தீ வைத்து அழித்தனர். கோயிலை ஒட்டிய குடியிருப்பு ஒன்றுக்கும் தீ பரவியது. இந்த நெருப்பில் சிக்கி இரு குழந்தைகள் மாண்டது பரிதாபமாக இருந்தது. அத்துடன் கும்பெனியாரது தானியக் கிடங்கில் இருந்த ஆறாயிரம் கலம் நெல்லும் அழிந்து நாசமாகியது. இந்தத் தாக்குதலில் மருதுசேர்வைக்காரர் மக்களுடன் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் சிவத்தையாவும் கலந்து கொண்டார்.[23] கிளர்ச்சிக்காரர்கள் பள்ளிமடம் சென்று தங்கினர்.

கிளர்ச்சிக்காரர்களது இத்தகைய அழிமானங்கள் மேலும் ஏற்படாது இருக்க கர்னல் அக்கினியூ திருச்சுழியல் கோவிலைச் சுற்றி மணல் மூட்டைகளைக் கொண்டு அரண் அமைக்க உத்திர விட்டான்.[24] எனெனில் அப்பொழுது பள்ளிக்குடி, பள்ளிமடம் ஆகிய ஊர்களில் திரண்டுள்ள கிளர்ச்சிக்காரர்கள் அடுத்து திருச்சுழியலுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்பட்டது.[25]

கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் கைவரிசையை இராமநாதபுரம் சிவகங்கைச் சீமைகளில் காட்டியதுடன் அமையாமல் தங்களது

---

22 Madurai District Records, vol. 1182, 23-6-1801 p p. 209-210.
23 Ibid (30-6-1801) p. 218.
24 Ibid (19-5-1801) (25-5-1801) p, 155-58.
25 Madurai District Records, vol. 1134, (29-5-1801.)

சீமையை அடுத்துள்ள மதுரைச்சீமையிலும் உள்ள மக்களைக் கும்பெனியாருக்கு எதிராகத் தூண்டிவிட்டனர். குறிப்பாக, மேலூரை அடுத்துள்ள நத்தம் பாளையம் முழுவதும் கிளர்ச்சிக் காரர்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. நத்தம்,மேலூர், திருமோகூர் ஆகிய ஊர்களில் அமைந்து இருந்த கும்பெனியாரது ஆயுதக் கிடங்குகளைக் கைப்பற்றியதையும் ஏற்கெனவே பார்த்தோம். இந்த மோதல்களில் பலர் உயிர் இழந்தனர். குறிப்பாக, நத்தம் மணியக்காரராக, சின்னமருது சேர்வைக்காரரால் நியமனம் செய்யப்பட்ட வெங்கடாசலம் என்பவர் நத்தம் தாசில்தாரைக் கொன்றார்.[26] இந்த அலுவலர் 6-5-1801 விருபாட்சி கிளர்ச்சிக் காரர் கோபாலநாயக்கரைப் பிடித்து கும்பெனியாரிடம் ஒப்படைந்தவர்.[27] இதற்கு கைக்கூலியாக கும்பெனியார், தாசில்தாரது துரோகப்பணியைப் பாராட்டி, அவருக்குப் பிடித்தமான சிறந்த குதிரை ஒன்றை வாங்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தனர்.

சின்னமருது சேர்வைக்காரது மகன் தலைமையில் ஒரு அணி இராமநாதபுரம் கோட்டையை நோக்கிச் சென்றது. மற்றொரு அணி, ஊமைக்குமாரசுவாமி தலைமையில் மதுரைக்கு விரைந்தது. இந்தக்கால கட்ட அரசியல் நிலைமை பற்றி புதுக்கோட்டை தொண்டமான் வரைந்த கடிதத்தில் ''எங்கு பார்த்தாலும் மக்கள் கிளர்ச்சியின் ஜுவாலை கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருப்பதாக'' வர்ணித்து இருந்தார்.[28] நாலாபுறமும் காட்டுத்தீ போல பரந்து நின்ற மக்களது அன்னிய ஆதிக்க எதிர்ப்பு உணர்வை, ஆயுதம் கொண்டு எல்லாப் பகுதிகளிலும், எதிர்த்து சமாளித்து வெல்லுவது அவ்வளவு எளிதான செயல் அல்ல என்பதை கர்னல் அக்கினியூ உணர்ந்தான்.

கிளர்ச்சிக்காரர்களது அரக்கத்தனமான கொடிய எதிர்ப்பை பாஞ்சாலங்குறிச்சிப் போரில் நேரடியாக சந்தித்த அனுபவம் அவனுக்கு இருந்தது. ஆதலால், இந்தப்பிரச்சினையை பல கோணங்களில் இருந்தும் ஆய்வு செய்து முடிவுகாண முயன்றான். கிளர்ச்சிக்காரர்களுடன் போரில் ஈடுபடும் மக்களது மனநிலை,

---

26 Ibid (24-5-1801).
27 Military Consultations-vol. 285(A) (27-5-1801), pp. 5047-48
28 Military Consultations, vol. 284, (9-6-1801) pp. 4280-81

உயிர் உடமைகள் அழிவு, போர் தொடரும் காலஅளவு, சூழ் நிலை, அப்பொழுது கிளர்ச்சியினை நசுக்க கும்பெனித்தரப்பில் தேவைப்படும் ஆட்கள், வெடிமருந்து, தளவாடங்கள்: வாகனங் கள், உணவுப்பொருள், பணம் என்ற பல வேறு தொடர்புடை யவைகளைப்பற்றி ஆழமாகச் சிந்தித்தான். போரில் பொருதி வெற்றி பெறுவது, அதற்குத் தகுதியான அனைத்து முயற்சிகளை யும் மேற்கொள்வது என்பன போரில் சம்பந்தப்பட்ட இருதரப் பினரும் கைக்கொள்ளும் இயல்பான நடவடிக்கைகள், ஆனால் அந்த முயற்சியில் ஒருவரைவிட மற்றவர் மட்டும், எவ்விதம் விரைவாக எளிதாக வெற்றியைப் பெறுவது என்பது போர்த் தந்திரமாகும்.

இத்தகைய நிலையில், சரியான முடிவு ஒன்றிற்கு வருவ தற்கு முன்னர், இராமநாதபுரம் சீமையின் நிலையை நேரில் அறிந்து கொள்வது அவசியமானது என அக்கினியூ விரும்பி னான். பாஞ்சாலங்குறிச்சியில் இருந்து கமுதி வழியாக இராம நாதபுரம் அடைவதுதான் சரியான வழி என்றாலும் கமுதி, பாப்பாங்குளம், மண்டலமாணிக்கம் பகுதிகளில் கிளர்ச்சிக் காரர்களது நிலை வலுவாக இருந்ததால், அக்கினியூ, பள்ளி மடம் வழியாக 1-6-1801ம் தேதி திருப்பூவனம் போய்ச் சேர்ந் தான். அங்கும் கிளர்ச்சிக்காரர்கள் குழுமி இருந்தனர். இராமநாதபுரம் நோக்கிச் செல்லும் அவனது பயணத்திற்கு இடையூறாக அவர்கள் இருந்தனர். இதனால் கும்பெனி அணிக் கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையில் கடுமையான கல கலப்பு ஏற்பட்டது. மதுரைக் கோட்டையில் இருந்து மேஜர் கிரகாம் என்பவன் தலைமையில் அணி யொன்றும் திருப்பூ வனம் வந்து சேர்ந்தது. கிளர்ச்சிக்காரர்களது கடுமையான தாக்குதலுக்கு இலக்காகிய இந்த அணித்தலைவன் கிரகாம், மேஜர் ஷெப்பர்டு என்பவனது அரிய முயற்சியால் உயிர் தப்பி னான்.[29] கிளர்ச்சிக்காரர்கள் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் இருந் தது. தொடர்ந்து பயணம் மேற்கொண்ட அக்கினியூவின் அணியை, திருப்பாச்சேத்தி அருகிலும் கிளர்ச்சிக்காரர்கள் பொரு தினர். 8-6-1801ம் தேதி அன்று நடைபெற்ற போரில் எழுபது கிளர்ச்சிக்காரர்கள் தியாகிகளாயினர்.[30] தொடர்ந்து வழி நெடுகி

29 Ibid vol. 285, (21-6-1801) pp. 4550-55
30 Ibid. vol ,285 (A) (18-6-1801) pp 4965-80

லும், பல இடங்களில் பரங்கிகளை கிளர்ச்சிக்காரர்களை வழி மறித்தனர். இருதரப்பினருக்கும் மிகுதியான உயிர் இழப்பு ஏற் பட்டது. என்றாலும், அக்கினியூவும் அவனது குழுவினரும் கிளர்ச் சிக்காரர் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, தந்திரமாக இராம நாதபுரம் கோட்டை போய்ச் சேர்ந்தனர். அங்கிருந்து கொண்டு கர்னல் அக்கினியூ, சென்னையில் உள்ள கும்பெனி கவர்னருக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைத்தான்.[31] அதில் தமக்கு சாதக மான இராமநாதபுரம் சீமைப்பகுதியில் இருந்து சிவகங்கைச்சீமை மீது போர் தொடுத்தால், தேவையான உணவுப் பொருட்களையும் ராணுவ சாதனங்களையும் எளிதில் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற தாக இருக்குமென்று எண்ணியதாகவும், ஆனால் இராமநாதபுரம் சீமைக்கு நேரில் சென்று நிலமையை நேரில் ஆய்வு செய்தபிறகு தமது கருத்தை மாற்றிக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந் தான். காரணம், இராமநாதபுரம் சீமை வடக்குப்பகுதி முழுவதும் கும்பெனியாரை எதிர்த்துப் போராடும் கிளர்ச்சிக்காரர்கள் கையில் இருந்து வந்தது. அதனால் அப்பொழுது காளையார்கோவில் எல்லையில், ஓரிடத்தில் தமக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் சேமித்து வைப்பது மிகவும் அவசரமாகி உள்ளது என்றும் வலியுறுத்தி இருந்தான். கி.பி. 1789ல் மருதுசேர்வைக் காரர்களை அடக்குவதற்கு அனுப்பப்பட்ட கர்னல் ஸ்டுவர்டிற்கு ஏற்பட்ட அவதிகளையும் அவர் சந்தித்த கடுமையான அனுபவங் களில் இருந்து இந்தக்கருத்தை வலியுறுத்துவதாக, பழைய முந் தைய நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தி இருந்தான்.

அத்துடன் அன்றைய நிலை மிகவும் அபாயகரமாக' இருப் பதாகவும், சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் மன்னிப்பு பெற முடியாத அளவிற்கு கும்பெனித்துரைத்தனத்தை இக்கட்டான நிலையொன்றில் இருத்தி வைத்துள்ளனர் என்றும், அதிருப்தி அடைந்துள்ள அனைத்துப் பகுதியினரையும், தமது அணியில் சேர்த்து வைத்து இருப்பதுடன், பாளையக்காரர்களையும், குடி களையும் கொடுமைப்படுத்தி தங்களுக்கு இணக்கமானவர்களாக மாற்றி வைத்துக் கொண்டு இருப்பதாகவும் புதுக்கோட்டைத் தொண்டமான் கூட அவர்களுடன் சேர்ந்து கொள்ளுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் விளக்கி இருந்தான். நமது கோட்

31 Ibid vol. 285 (A), (18-6-1801), pp. 4965-80

டைக்கு அப்பாலுள்ள அனைத்து குடிகளும் ஆயுதம் ஏந்தியவர்களாக நமக்கு எதிரியாக உள்ளனர். ஆதலால் இந்தக்கடினமான சூழ்நிலையில், சுதேசி வீரர்களைச் சார்ந்து இருக்காமல் கும்பெனியாரது பரங்கி வீரர்களது அணிகளையும் குதிரைப்படையணிகளையும் மட்டும் நம்பி, நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியதாக இருக்கிறது, என்பதையும் துலக்கமாகக் குறிப்பிட்டு இருந்தான்.[32]

இருபது நாட்கள் இராமநாதபுரம் கோட்டையில் தங்கி இருந்து அரிய துப்புகளைச் சேகரித்து திரும்பிய பின்னர், மதுரையில் இருந்து மற்றொரு அறிக்கையினையும் கர்னல் அக்கினியூ சென்னைக்கு அனுப்பி வைத்தான்.[33] இராமநாதபுரம், சிவகங்கைச் சீமைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருப்பதாகவும், மருது சேர்வைக்காரர்களை தண்டிக்க வேண்டிய அவசியம், கலெக்டர் லூஷிங்டன் அளித்த சிவகங்கையின் சுருக்கமான வரலாறு. சிவகங்கை அரசவழியினரான படைமாத்தூர் ஒய்யாத்தேவன் தொண்டமான் சீமையில், மருது சேர்வைக்காரர்களுக்கு அஞ்சி வாழ்ந்து வருவது, சிவகங்கைச்சீமையின் இன்னொரு வாரிசான வேங்கன் உடையாத்தேவர் ராணி வேலுநாச்சியரது மகள் வெள்ளச்சியை மணந்து அவர் இறந்த பிறகு, பெரியமருதுவின் மகளை மணந்து அவர்களுடன் வாழ்ந்து வருவது ஆகிய விவரங்களை விரிவாக வரைந்து அனுப்பியதுடன், சிவகங்கைச்சீமையின் அதிகார பூர்வமான ஜமீந்தாராக படைமாத்தூர் ஒய்யாத்தேவரைக் கும்பெனியார் அங்கீகரிப்பது பற்றியும் பரிந்துரைத்து இருந்தான்.[34]

ஒய்யாத்தேவர், ஏற்கனவே சிவகங்கை மக்களுக்கு சிவகங்கையின் வாரிசு என அறிமுகப்படுத்தப்பட்டார். மக்களது மரியாதைக்குரியவராகவும், இளவரசி வெள்ளச்சியை மணந்து கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டவரும் ஆவார். சிவகங்கை சேர்வைக்

---

32 Revenue Sundries vol. 26 (18-6-1801) p. 598
Military Consultations, 285 (A) 18-6-1801 pp. 4965-79

33 Ibid 25-6-1801

34 Ibid, 25-6-1801. pp. 4333-37

சாரர்களது சூழ்ச்சியினால்தான் அவர் சிவகங்கைச் சீமையை விட்டு உயிர் தப்புவதற்காகத் தொண்டமானின் அறந்தாங்கிச் சீமைக்கு ஓடினார்.[35] ஆதலால், பழைய பாரம்பரிய முறைகளைத் தொடர்ந்து சிவகங்கை மன்னராக படைமாத்தூர் ஒய்யாத்தேவ ரைப் பிரகடனம் செய்தால் சம்பிரதாயம், பழமை, ஜாதி ஆகிய வைகளில் பிடிப்புள்ள நாட்டுத்தலைவர்களும், மக்களும் கிளர்ச்சிக் காரர்களது அணியில் இருந்து கணிசமான அளவு பிரிந்து வந்து புதிய அரசின் ஆதரவாளர்களாக மாறுவதற்கும், மருது சகோதரர் களது செல்வாக்கைப் பலவீனப் படுத்தி பரங்கி எதிர்ப்பு அணியை உடைப்பதற்குப் பயன்படும் என்பதும் அக்கினியூவின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது. அவரது எதிர்பார்ப்பு உண்மை என்ப தைப் பிந்தைய நிகழ்ச்சிகள் நிரூபித்தன.

கர்னல் அக்கினியூவின் கடிதங்கள், பரங்கிகளை எதிர்த்து சிவகங்கை சேர்வைக்காரர்களது நிலை, அவர்களது தலைமையில் அணி திரண்ட நாட்டுப்பற்று மிக்க மக்களது இயக்கம், மறவர் சீமையின் அரசியல்நிலை ஆகியவைகளைத் தெளிவாக சித்திரிப் பவையாக இருந்தன. இந்நிலையில், தலைமறைவாக இருந்த படைமாத்தூர் ஒய்யாத்தேவர் கும்பெனி கவர்னருக்கு ஒரு விண் ணப்பம் ஒன்றையும் அனுப்பி வைத்தார்.[36] அதில், மறைந்த சிவ கங்கை மன்னர் முத்துவடுகனாதத்தேவர், அவரது வாரிசாக அவரை நியமனம் செய்து, அவரது மகள் வெள்ளச்சியையும் அவருக்குத் திருமணம் செய்ய முடிவு செய்திருந்தார் என்றும் மருது சேர்வைக்காரர்கள் சிவகங்கைச்சீமையைக் கைப்பற்றிய பின்னரும் தமக்கு மரியாதை செலுத்திவந்து பின்னர் அவர்களுக் கிடையில் எழுந்த கருத்துவேற்றுமை காரணமாக அவரையும் அவரது நண்பர்களையும் திடீரென சிறையில் அடைத்து வைத்து பல அக்கிரமங்களைச் செய்து வந்ததாகவும் அவர்களிடம் இருந்து தப்பி வந்து கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக அறந்தாங்கிச் சீமை யில் வாழ்ந்து வருவதாகவும், அந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டு இருந்தார். தஞ்சாவூரில் கும்பெனியாரின் ரெஸிடெண்டாக இருந்த கேப்டன் பிளாக்பர்ன் ஒய்யாத்தேவரைத் சந்தித்து இந்த விண்ணப்பத்தைப் பெற்று சென்னை கவர்னருக்கு அனுப்பி வைத்தார்.

---

35 Ibid 28-6-1801, pp. 5039-40
36 Ibid 28-6-1801, pp 5038:44

இதில் கூறப்பட்டிருந்த மருதுசேர்வைக்காரர்கள் பற்றிய புகார்கள் அனைத்தும் கும்பெனியாருடைய கவனத்திற்கு ஏற்கனவே கொண்டுவரப்பட்டவைதான். இராமநாதபுரம் சீமையின் முத்துராமலிங்க சேதுபதி மன்னர்கூட சிவகங்கை அரசபீடத்திற்கு ஒய்யாத் தேவருக்கு உள்ள தகுதி பற்றி கவர்னருக்கு ஒருமுறை அறிக்கை அனுப்பிவைத்தார்.[37] ஆனால் அப்பொழுது சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் கும்பெனியரது மதிப்பிற்குரிய நண்பர்களாக இருந்ததால், அதனைப்பற்றி எவ்வித அக்கரையும் காட்டவில்லை. ஆனால் இப்பொழுது சிவகங்கைச்சீமை அரசியல் சூதாட்டத்திற்குத் தேவையான பகடைக் காயாக ஒய்யாத்தேவரைப் பயன்படுத்த முடிவு செய்தனர், இறந்து போன சிவகங்கை மன்னர் முத்துவடுகநாத பெரிய உடையாத் தேவருக்கோ அல்லது அவரது மனைவியான மறைந்துபோன வேலுநாச்சியாருக்கோ, படைமாத்தூர் தேவர் நேரடியான வாரிசு அல்ல. அத்துடன் வேலுநாச்சியாரது ஒரே மகளான வெள்ளச்சியை மணந்து அதன்மூலம் சிவகங்கை அரசக் கட்டிலுக்கு உரியவரான சக்கந்தி வேங்கன் பெரிய உடையாத் தேவர் அப்பொழுது உயிரோடுதான் இருந்தார். அவரையே ஆர்க்காட்டு நவாப்பும் கும்பெனியாரும் சிவகங்கை அரசரது வாரிசாக ஏற்கனவே அங்கீகரித்து இருந்தனர்.[38] இதுவரையிலும் அவர் அதிகாரபூர்வமான சிவகங்கை அரசராகத்தான் இருந்து வந்தார்.

ஆனால் சிவகங்கைச் சீமையை, தங்களது உடமையாக மாற்றுவதற்குத் திட்டமிட்ட கும்பெனியார், தங்களுடைய திடீர் பகைவர்களான மருது சேர்வைக்காரர்களையும் அவர்கள் அமைத்துள்ள ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியையும், விடுதலை இயக்கத்தையும், அழித்து ஒழிக்க முடிவு செய்தனர். அதற்கு முதல்நடவடிக்கையாக சிவகங்கை சீமையில் தங்களது கைக்கூலியொருவரை மன்னரது வாரிசு என்றும் சிவகங்கையின் அதிகாரபூர்வமான "ஜமீன்தார்" என்றும் அறிவிப்பு செய்வதற்கு ஏற்ற தகுதி உள்ளவராக படைமாத்தூர் தேவர் அகப்பட்டார். ஆதலால் அவரை சிவகங்கைச் சீமைக்கு அரசர் அல்ல ஜமீன்தார் என கும்பெனி கவர்னர் நியமனம் செய்து உத்தரவு பிறப்

37 Military Consultations, vol. 285 (A) (28-6-1801), pp. 5043-44

38 Ibid vol.155, (24-1-1792) p. 474

பித்தார்.[39] அதுவரை சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் தமக்கு ஏற்படுத்திய இன்னல்களை அடிபட்ட பாம்பு போல் சகித்துக் கொண்டு அறந்தாங்கியில் வாழ்ந்த படைமாத்தூர் தேவருக்கு சிவகங்கை ஆட்சியாளர்களைப் பழிவாங்குவதற்கும் வாய்ப்புக் கிடைத்ததற்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

இத்துடன் தங்களது நடவடிக்கையை நியாயப்படுத்த சிவ கங்கைச் சீமை எங்கும் பிரசித்தம் செய்வதற்காக கும்பெனியார், பொது அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டனர். அந்த அறிவிப் பில்.[40]

''ஆர்க்காட்டு நவாப் வாலாஜா முகம்மது அலியுடன் கையெழுத்து இட்டுள்ள 12-7-1792ந்தேதிய உடன்பாட்டின் மூலம் தென்னகத்தின் பாளையக்காரர் (சிவகங்கை ஜமீன்தார் உட்பட்ட) அனைவரது கப்பத்தொகையை நிர்ணயித்து வசூலித்து வகைப் படுத்தும் உரிமையைக் கும்பெனியார் பெற்று இருப்பதையும், அதனால் சிவகங்கைப் பாளையத்திலிருந்தும் கப்பத்தொகையைப் பெற தகுதி பெற்று இருப்பதையும் தெரியப்படுத்துகின்றனர். ஆனால் நாலுகோட்டை பாளையத்தின் பணியாளர்களான வெள்ளைமருதுவும் சின்னமருதுவும், தங்கள் சூழ்ச்சியினால் இந்த உரிமைகளும் அதிகாரங்களும் தடைப்படுத்தப்பட்டு உள்ளன. இந்தச் சீமையின் அரசியல் தலைவர் ஒரு பெண்ணாக இருந்த தால், அவர்கள் அந்த அரசின் அமைச்சர்களாகத் தங்களை நிய மித்துக் கொண்டு அந்த அரசியார் மீதும் குடிமக்கள் அனைவர் மீதும் தங்களது பிடிப்பையும் சர்வாதிகாரத்தையும் நிலைநிறுத்தி வந்தனர்.

''நாலுகோட்டை பரம்பரையின் கடைசி வாரிசு இறந்த பிறகு வெள்ளைமருதுவும், சின்னமருதுவும் அடக்குமுறையினால் அரசியலை நடத்தி வந்தனர். இப்பொழுது கும்பெனியார் படை களுடன் நேரடியான மோதல்களை ஏற்படுத்தி, சிவகங்கைச் சீமையைத் தவறான வழியில் அழிவிலும் நாசத்திலும் இட்டுச்

---

39 Ibid vol. 285 (A) (6-7-1801), pp. 4977-74

40 Revenue Sundries, vol. 26, (6-7-1801), pp. 432-48
Revenue Consultations vol. 110 (6-7-1801), pp.1299-1365

சென்று கொண்டு இருக்கின்றனர். இளவரசியை மணம் செய்து கொண்டதன் மூலம் சிவகங்கை அரசராகிய வேங்கன் பெரிய உடையாத் தேவரும் தம்முடைய நலன்களை இவர்களுடன் இணைத்துக் கொண்டுள்ளார்.

''இவர்களை அடக்கி, ஒடுக்கி, கும்பெனியாரது ஆதிக்கத்தை நிலைநாட்ட சகல அதிகாரங்களையும் பெற்றவராக கர்னல் அக்கினியூ நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார். சிவகங்கைச்சீமையில் உள்ள குடிமக்கள் எவரும் பிரிட்டிஷ் அரசின் மானத்தையும் மதிப்பையும் குறைக்கும் வகையில், ஆயுதம் தாங்கினால், அவர்கள் மரண தண்டனை பெறுவார்கள் என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். சிவகங்கைச் சீமை மக்கள் அனைவரும், இந்த மருது சகோதரர்களை விடுத்து, தங்களது முறையான ஜமீன்தாருக்கு விசுவாசங்கொண்டவர்களாக, தங்கள் தொழில் முறைகளைக் கவனித்து வர வேண்டியது. அதற்கு பிரிட்டிஷ் அரசு தகுந்த பாதுகாப்பு வழங்கும்,'' என்ற வாசகங்கள் அதில் கண்டிருந்தது. அப்பொழுது அவர்களது ஆதிக்க வெறியையும் நட்பைப் பிரித்து பகையாக்கும் நரித்தந்திரத்தையும் ஆயுதவலிமையையும் எதிர்த்துப் போராடக்கூடிய வேறு தலைவர்கள் கர்நாடகத்தில் யாரும் இல்லாததால் பரங்கிகள் தங்களது ஆயுத வலிமை அனைத்தையும் சிவகங்கைச்சீமை மீது திணிப்பது எளிதாகிவிட்டது.

அதே சமயத்தில் பொதுமக்களுடைய தகவலுக்காக சிவகங்கைச் சேர்வைக்காரர்களும் ஒரு வேண்டுகோளை[41] வெளியிட்டனர்.

யார் இந்த அறிவிப்பைப் பார்த்தாலும் அக்கறையுடன் படியுங்கள்

''அனைத்து சமூகத்தினருக்கும் -- பிராமணர்களாக இருந்தாலும் — சரி, அல்லது செட்டியார், வைசியர், சூத்திரர், முஸ்லீம்களாக இருந்தாலும் சரி — நாவலந்தீவு எனப்படும் இந்த நாட்டின் அனைத்து சமூகத்தினருக்கும் இந்த அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

41 Revenue Sundries, vol. 26, (16-6-1801). p.p. 441-70.

''மாட்சிமை மிக்க நவாப் முகமது அலிகான் முட்டாள் தனமாகப் பரங்கிகளுக்கு இடங்கொடுத்துவிட்டு மூளி போலாகிவிட்டார். பரங்கிகளும் தாங்கள் செலுத்திவந்த விசுவாசத்திற்கு மாற்றமாக, மோசடியாக இந்த நாட்டு அரசைத் தங்களதாக்கிக் கொண்டனர். இங்குள்ள மக்களை நாயினுங் கேடாக மதித்து, தங்களது அதிகா ரத்தை நிலைநாட்டி வருகின்றனர் உங்களிடையே ஒற் றுமை இல்லை. நேயமனப்பான்மை இல்லை. பரங்கி களது அந்தரங்கத்தை அறியாத நீங்கள், உங்களுக்குள் ஒத்துப்போகாமல், இந்த நாட்டை அவர்களிடத்தில் ஒப்படைத்துவிட்டீர்கள். அவர்கள் அதிகாரம் செலுத் தும் சீமைகளில் குடிமக்கள் ஆண்டிகளாகி விட்ட னர். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அரிசி, வெல்லம் போல அருமையாகிவிட்டது. இந்த அவல நிலையை நேரடியாக அனுபவித்தாலும், இதனைப்புரிந்து கொள்ளும் மனப்பக்குவமும் நம்மிடம் இல்லை.

''மனிதன் ஆயிரம் ஆண்டுகளுக்கு வாழ்ந்தாலும் அவன் ஒருநாள் மரணமடைவது திண்ணம். அதைப்போன்றே அவனது புகழும், சூரியனும், சந்திரனும் இருக்கும்வரை நிலைத்து நிற்பது நிச்சயம்.

''ஆதலால், எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் தங்களது பாரம்பரிய உரிமைகளை அனுபவித்தல் வேண்டும். குறிப் பாக ஆர்க்காட்டு ஸுபாவை மாட்சிமை தங்கிய நவாப்பும், கர்நாடகத்தை வேதய்யா, ராமண்ணாவும், வடுகநாத நாயக்கர் மைந்தன் திருமலைநாயக்கரும், தஞ்சாவூராரும் தங்களுக்குரிய தன்னாட்சியை, நமது நாட்டுக்கே உரிய மரபுகளுக்குக் குந்தகம் ஏற்படாமல் உடனே பெறுதல் வேண்டும். அப்பொழுது தான் எல்லா ஏழை எளியவர் களும் நிம்மதி அடைவார்கள்.

''ஆனால் உங்களில் யாராவது தாழ்ந்த பிறவிகளான நாய்களைப் போன்றவர்கள், பரங்கிகளது கட்டளைகளுக் குப் பணிந்து நடந்து வந்தால் அவர்களது ... ... .... ... வெட்டப்படும். இத்தகைய இழிகுலத்தவர், பரங்கிகளு டன் இணைந்து இந்த நாட்டை அடிமைப்படுத்தியுள் ளது நாம் அனைவரும் அறிந்த விஷயம்.

''ஆகையால் நீங்கள் பிராம்மணர்கள், வைசியர், செட்டியார், சூத்திரர், இசுலாமியர் — ஆகிய அனைவரும் — மீசை வைத்துள்ள அனைத்து ஆண் மக்களும் — பொதுப் பணியிலோ, ராணுவசேவையிலோ அல்லது சுபேதாராகவோ, ஜமேதாராகவோ, நாயக்கு, சிராங்கு ஆகிய பரங்கியர் பணியில் இருப்பவர்களும் — ஆயுதம் தாங்கிப் போராடும் வல்லமை பெற்ற அனைவரும், தங்கள் ஆண்மையை, திறமையை முதன்முறையாக நிரூபித்துக் காட்டுங்கள்.

''நீங்கள் பரங்கிகளை எங்கு கண்டாலும், அவர்களை அழித்து ஒழியுங்கள். மாறாக, தொடர்ந்து அதே இழி பிறப்புக்களிடம் பணியாற்றினால், உங்கள் சாவிற்குப் பின்னர் மறுமை இன்பங் கிடைக்காது. இந்த உண்மையை அறிந்தவன் நான். ஆதலால் இதில் நான் தீவிரமாக இருக்கிறேன். இதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கழிசடைகள்! அவர்களுக்கு அறுசுவை உணவு கிடைக்காமல் போகட்டும். அவர்களது மனைவிகள் மாற்றானது மனைவியாகட்டும். அவர்களது மக்கள் இழிபிறப்புக்களாகப் போகட்டும். பரங்கிகள் இரத்தக் கலப்பில்லாத அனைவரும் உடனே ஒற்றுமைப்படுங்கள்.

''இந்த அறிவிப்பை படிக்கின்றவர்கள், கேள்விப்படுகின்றவர்கள், இதற்கு நகல் எடுத்து. தங்களது நண்பர்களுக்கு அனுப்பி வையுங்கள். பொது இடங்களில் இங்குள்ளதைப் போன்று இந்த அறிவிப்பை ஒட்டி அவசியம் பிரசித்தம் செய்யுங்கள்.

''இவ்விதம் செய்யாதவர்கள்—பஞ்சமா பாதகங்களைச் செய்த தோஷத்திற்கும், கங்கைக்கரையில் பசுவதை செய்த பாவத்திற்கும் உரிய தண்டனையைப் பெறுவார்களாக!

''இந்த வேண்டுகோளை மதிக்காத இசுலாமியர், விலக்கப்பட்ட பன்றியின் இரத்தத்தைப் பருகிய பாதகர்களாகப் போகட்டும்!

''இந்த அறிவிப்பை இந்தச் சுவற்றில் இருந்து அகற்றியவர்கள், பஞ்சமாபாதகங்களுக்கும் கூடுதலான பாவத்தைப் புரிந்தவர்களாகப் போகட்டும்!

இதனைப்படிப்பவர்கள் இந்த வேண்டுகோள் நகலை வரைந்து வைத்துக் கொள்ளுங்கள்!

இவண்,
பேரரசர்களுக்குப் பணியாளரும் இழிபிறப்பான
பரங்கிகளுக்குப் பரம எதிரியுமான
*மருதுபாண்டியன்*

சிவகங்கைச் சேர்வைக்காரரது இந்தச் சிறப்பான வேண்டுகோள், திருச்சிராப்பள்ளி கோட்டையில் ஜுன் மாதத் துவக்கத்தில் நவாப்பின் மாளிகையை அடுத்துள்ள பெரிய நுழைவாயிலிலும் ஸ்ரீரங்கத்தில் பாளையக்காரரது மாளிகைச் சுவற்றிலும் ஒட்டப்பட்டு இருந்தன. திருச்சியில், ஒட்டப்பட்டிருந்த[42] வேண்டுகோள்களில் காணப்பட்ட வாசகங்களைவிட, கூடுதலாகக் கீழ்க்கண்ட வாசகமும் ஸ்ரீரங்கத்தில் காணப்பட்டது.

''ஸ்ரீரங்கத்தில் உள்ள பெரியோர்களையும், ஆச்சாரியர்களையும் இந்த மருதுபாண்டியனாகிய நான் அவர்களது காலில் விழுந்து வணங்குகிறேன். தென்னகத்தில் உள்ள தன்னரசு மன்னர்கள் - கோட்டைக் கொத்தளங்களையும் அமைத்து கொடி கட்டி வாழ்ந்தவர்களும், அவர்களது குடிமக்களும், இழிபிறப்பாளர்களான பரங்கிகளால், எளிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். அதனை எதிர்த்துப் போராடும் எனக்கு உங்களது மேலான ஆசீர்வாதங்களை வழங்கி அருளுங்கள்''.

தமிழக அரசியல் வரலாற்றில், அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக, போராளிகள் அணியில் இருந்து வெளியிடப்பட்ட, முதல் பொது வேண்டுகோளாகும். இது, வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் அன்றைய காலகட்டத்து சமுதாய அமைப்பு,

42 **Revenue Sundries, vol.** 26 (16-6-1801) **p.** 1457.

சமய நம்பிக்கை ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு, அரசியல் நோக்குடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வேண்டு கோளில் அன்னிய எதிர்ப்பு - வெறுப்பு கொப்பளிக்கிறது. வெள் ளைப்பரங்கிகள் பற்றிய வெறுப்பை விஷம்போல ஆவேசத்துடன் உணர்த்துகிறது. சாதாரண மக்களையும் சான்றோர்களையும் போற்றிப் பணிந்து புலப்படுத்துகிற மருதுபாண்டியரது இந்தப் பணிவான கோரிக்கையின் பாங்கை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இத்தகைய பொது அறிவிப்புக்களை போராளிகள் அப்பொழுது இராமநாதபுரம், சிவகங்கைச் சீமைகளைத் தவிர அவைகளை அடுத்துள்ள தொண்டைமான் சீமையிலும் திருச்சி, தஞ்சைப்பகுதிகளிலும் ஆங்காங்கு வெளியிட்டிருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

காரணம் மருதுபாண்டியர்கள் தொடங்கிய விடுதலைப் போராட்டம், மறவர் சீமையில் மட்டும் அல்லாமல், திருச்சிராப் பள்ளிக்கும், திருநெல்வேலிக்கும் இடைப்பட்ட தமிழகம் எங்குந் தழுவிப்பரவ வேண்டும் என்பதே சிவகங்கைச் சேர்வைக்காரர் களது நோக்கமாக இருக்க வேண்டும். அமெரிக்க நாட்டு விடு தலைப் போராட்டத்தின் பொழுது அந்த நாட்டுப் போராளிகள், கையாண்ட இந்த விளம்பர வேண்டுகோள் முறையை ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நமது தமிழகத்திலும் அப்பொழு தைய அந்நிய எதிர்ப்பு போராட்டத்தின் பொழுது மருது சேர் வைக்காரர்கள் கையாண்டு இருப்பது வியப்பை அளிப்பதாக இருக்கிறது.

கும்பெனியாரின் கெடுபிடிகள் இந்த ''விடுதலை இயக்க'' அறிவிப்புகளின் மீது பாய்ந்து பிய்த்து அழித்து விட்டனர். என் றாலும் சென்னையில் உள்ள கும்பெனியாரின் கவர்னருக்கு, தகவலுக்காக திருச்சியில் இருந்து அனுப்பப்பட்ட நகல் அறி விப்பு அரசு ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டு, விடுதலைப் போரைப்பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு ஆர்வம் விளைவிக்கும் சிறந்த வரலாற்றுச் சுவடியாக விளங்கி வருகிறது. நாட்டுப் பற்றை நெருடி விடும் சாதனமாக என்றென்றும் இந்த அறிவிப்பு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

# 6

## கும்பெனியாருக்கு கடைசிக்கடிதம்

சிவகங்கைச் சேர்வைக்காரர்களது சீற்றமான மன உறுதியைப் போல கும்பெனியாரும், அவர்களை அழிப்பதில் முனைந்து நின்றனர். கூடுதலாக எவ்வளவு வீரர்களைத் தங்கள் அணியில் சேர்க்க வேண்டும் என்பதற்கான ஆயத்தத் திட்டங்களை இராமநாதபுரம் கலெக்டர் தயாரித்து வந்தார். அத்துடன் சிவகங்கைச் சேர்வைக்காரர்களது இறுதிப் போர்க்களமாக விளங்கப்போகும் காளையார் கோவில் கோட்டையை அரண்மனைசிறுவயலில் இருந்து அணுகுவதற்கு ஏற்றவகையில் அரண்மனை சிறுவயலில் இருந்து காளையார்கோவில் கோட்டைத் திக்கில் ஒன்பது மைல் தொலைவில் காட்டை வெட்டி, அழித்து பாதை உண்டாக்குவதற்கு எவ்வளவு பேர்கள் தேவைப்படும். எவ்வளவு பணம் செலவாகும் என்பதற்கான மதிப்பீடுகளையும் தயாரித்து சென்னைக்கு ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தார்.[1]

சிவகங்கைக் கிளர்ச்சிக்காரர்களும் சிவகங்கைச் சீமையின் வடமேற்கு எல்லையில் நத்தம் பகுதியில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிவந்தார்கள். காரணம், அங்கு கும்பெனியாரது பணியில் இருந்த தாசில்தார் ஒருவர் மறைந்து வாழ்ந்து, பரங்கியருக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்ட தேவதானப்பட்டி கோபால நாயக்கரையும் அவரது ஆட்களையும் தீவிரமாக வேட்டையாடிப் பிடித்தார். அதனால் அங்குள்ள மக்கள் கொதிப்படைந்தனர். சிவகங்கைக் கிளர்ச்சிக்காரர்கள் அவர்களது துணை கொண்டு அந்தக் கும்பெனியாரது கைக்கூலி தாசில்தாரைக் கொலை புரியச் செய்ததுடன் அங்கு இருந்து பயந்து ஓடிய பாளையக்காரரை வரவழைத்து அவரையும் கிளர்ச்சியில் இணைத்து நத்தம் பகுதி முழுவதையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.[2]

---

1. Madurai District Records, vol. 1133, (14-12-1801) p. 288.
2 Ibid, vol, 1134, (8-6-1801), p.p. 133-5.

மருது சகோதரரர்களது இந்தக் கிளர்ச்சியினால் நவாப்பின் முக வர்களும் பரங்கிகளும் பயந்து மிரண்டனர்.

இந்தக் குழப்பமான சூழ்நிலையில், சிவகங்கை சேர்வைக் காரர் சென்னையில் கும்பெனியாரது கவர்னராக இருந்த கிளைவ் விற்கு நீண்ட கடிதம் ஒன்றை வரைந்தார். அந்தக் கடிதத்தில்[3],

''... .... ... இதுவரை கும்பெனியாருக்குச் செலுத்த வேண் டிய கிஸ்திப்பணத்தைத் தவறாமல் செலுத்தி வந்து இருக்கி றேன். கும்பெனியாரது கட்டளைகளையும் பின்பற்றி வந்து இருக்கிறேன். மக்லாயிட்டுடனும், அவருக்கு அடுத்து வந்த கும்பெனி அலுவலர்களிடமும் எனது தொடர்புகள் சுமுகமாக இருந்து வந்தன. ஆனால் லூஷிங்டன் பணியை ஏற்றுக் கொண் டதில் இருந்து அவரது நடவடிக்கைகளால் என்னைக் கொடு மைப்படுத்தி வந்துள்ளார். அதன் காரணமாக இப்பொழுது தங் களை அணுகி இருக்கிறேன்.

''கடந்த ஆண்டு லூஷிங்டன், இரண்டு அரிக்காரர்களை* என்னிடம் அனுப்பி வைத்து, காதில் குட்டி நாயக்கரைப் பல வந்தமாக நான் சிறைப்படுத்தி வைத்து இருப்பதாகவும் அவரை உடனே விடுதலை செய்து விடுமாறும் கோரிக்கை அனுப்பிவைத் தார். நான், அந்த ஆசாமியின் முகத்தைக்கூட பார்த்தது கிடை யாது என்றும், அவர் இந்தச்சீமையில் எந்த இடத்திலும் இல்லை யென்றும் தெரிவித்தேன். எனது பதிலில் அவர்களுக்கு மனநி றைவு ஏற்படவில்லையென்றால் இந்தச்சீமையில் அவரை எந்த இடத்திற்கும் சென்றும் தேடிபிடித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தேன். மீண்டும் புதிய அரிக்காரர்களை அனுப்பி வைத்து, அவர்களும் எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்துவிட்டு அவரிடம் சென்று தகவல் சொன்னதற்கு அவரே வந்து தேடிக் கண்டுபிடிப் பதாகச் சொன்னாராம்.

''இந்த ஆண்டில் மட்டும் பத்து அரிக்காரர்கள் இங்கு அனுப்பப்பட்டு உள்ளனர். அவர்களில் ரங்கராயர் என்பவர் ஒருவர். அவர் ஒரு தனிப்பிறவி. அவர் தமது விசாரணையில்

3. Revenue Consultations, vol. 110, (24-7-1801), p. 1861-69.

* அரிக்காரர்-ஒற்றர்கள், பெரும்பாலும் பிராமணர்கள் இந்தப்பணியில் நியமிக்கப் பட்டு இருந்தனர்.

கண்ட தகவல்களுடன் பொய்யைக் கலந்து புனைந்து உரைப் பதில் வல்லவர். ... ... .... சுருக்கமாகச் சொன்னால் அவர் எனது விஷயங்களில் தலையிட்டு பலவகைகளிலும் எனக்கு இடைஞ் சலை ஏற்படுத்தி வந்தார். இவை அனைத்தையும் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் மிகவும் பொறுமையாக சகித்துக் கொண் டேன். நான் ஒளித்து வைத்து இருப்பதாகப் புனைந்து உரைக் கப்பட்ட ஆசாமியைப்பற்றி எல்லாவிதமான விசாரணைகளையும் மேற்கொண்டார்.

''கும்பெனியார் தங்களது ஆதிக்கத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் அங்கங்கே உள்ள வளமையான மரபுகளை நேர்மை யான முறையில் கடைப்பிடிப்பது தான் முறையானதாகும். இவை களுக்கு முரணாக இராமநாதபுரம் கலெக்டர் அபிராமத்தில் உள்ள சிலரது போதனைகளின்படி, எனது சீமை எல்லைக்குள் உள்ள நீர்ப்பாசன வரத்துக்கால்களை நீக்கிவிட்டார். அவரது நடத்தை யைப் பற்றி அந்த மக்கள் புகழ்ச்சியாகப் பேச வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக.

''முன்னாள் கவர்னர் ஹோபர்ட், எனது மகனுக்கு சென்னை யில் பேட்டியளித்து பெருமைப்படுத்தினார். அந்த அனுகூலமான வரவேற்புக்கும் புகழ்ச்சிக்கும் பிறகு கலெக்டரைச் சந்தித்து அவரது ஆலோசனைகளையும் பெறுதல் நல்லது எனக் கருதப்பட்டது.

''கலெக்டர் தம்மைச் சந்திக்குமாறு எனக்கு கட்டளை இட்டார், சிவகங்கை அரசுக்குரிய வம்சாவளி அட்டவணையை, எனக்கு உடல் நலமில்லாததால் அரசரது பங்காளி மூலம் அனுப்பி வைத்தேன். எனது எஜமானரது இளைய சகோதரரைத் தகுந்த அலுவலர்களுடன் அனுப்பி வைப்பதாக எழுதி இருந்தேன். அதற் குள் கலெக்டர் எனது பதிலைக்கோரி அனுப்பிய கடிதத்தைத் தங்கள் பார்வைக்கு அனுப்பி இருக்கிறேன்.

''பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர், தமது சுயபுத்தியுடன் கும்பெனியாருக்கு எதிராக மற்றவர்களது ராஜவிசுவாசத்தைக் குலைப்பதற்கு, பல கிராமங்களில் கொள்ளையை மேற்கொண் டுள்ளார். அதற்கு எனது பெயரையும் பயன்படுத்தி உள்ளார். இது சம்பந்தமாக கலெக்டர் தங்களுக்கு எத்தகைய முறையீடுகள் அனுப்பி இருந்தாலும் சரி, அவைகளில் கும்பெனியாரது நலனுக்கு

எதிராக எவ்விதப் பங்கும் எனக்கு இல்லையென்பதை வலியுறுத்தி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த மனிதனும் தனது அழி வைத்தானே தேடிக்கொள்ள மாட்டான். இது சம்பந்தமாக முழு விசாரணையொன்றைத் தாங்கள் மேற்கொண்டால், கும்பெனி யாருக்கு முழுவதும் கட்டுப்பட்டவனாக, கும்பெனியாரது நியாயத் தீர்ப்பில் நம்பிக்கை கொண்டவனாக, சாட்சியம் வழங்கச் சித்த மாக இருக்கிறேன்.

''இதுவரை இங்குப் பணியாற்றிய கலெக்டர்கள் இங்குள்ள நிலைமைகளைப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ப அவர்கள் நடந்து கொண்டனர். அப்பொழுதைக்கப் பொழுது வசூலிக்க வேண்டிய தொகைகளை வசூலிப்பதும், குடிமக்களைப் பாதுகாப் பதும் அவர்களது பணியாக இருந்தது. அவர்களது நடவடிக்கை களினால் குடிமக்களுடைய வளமையான வாழ்க்கை நிலைகள் பாதிக்கப்படவில்லை. அவர்களும் கும்பெனியாரது முன்னேற்றத் தில் அக்கரையுடையவர்களாக இருந்தனர். ஆனால் கலெக்டர் லூஷிங்டனது நிர்வாகம் துவங்கியதிலிருந்து நிலைமை மாறி விட்டது. எங்கு பார்த்தாலும் தொடர்ந்து அமைதியின்மை; முறை யான நீதி வழங்கலும் இல்லை. இந்த நாட்டு மரபுகளைப் பேணு வதற்கும் அவர் தவறிவிட்டார். பலவிதமான அக்கிரமங்களைக் கையாண்டு, குடிகளுக்கு குத்தகை வழங்குவதில் பல கொடுமை யான முறைகளைப் பின்பற்றினார்.

''இத்தகைய நிலைமைகளை இந்த முறையீடு போன்று அல்லாமல், விருப்பு, வெறுப்பு அற்ற ஒருவரது விசாரணை மூலம் தான் தங்களது கவனத்திற்கு கொண்டுவர முடியும். குடிகளும் அவர்களது பங்கினை, வளமையான முறையில் அடைந்தால்தான், அவர்களுக்கு நிலையான மகிழ்ச்சி ஏற்படமுடியும். கும்பெனி யாரது நலன்களிலும் நாட்டங்கொள்ள இயலும், லூஷிங்டன் இவைகளைப் புரிந்து கொள்ளாமல் இவைகளுக்கு மாற்றமான செயல்களில் ஈடுபட்டு வருகிறார். தாங்களும் இந்த நாட்டின் மரபு களை வெறுத்து ஒதுக்கமாட்டீர்கள் என நம்புகிறேன்.

''முன்பெல்லாம், இந்தச்சீமை வக்கீல்கள் கவர்னரது சமூகத் தில் இருந்து வந்தனர். அதனால் எங்களது குறைபாடுகளை தங்களிடம் உடனுக்குடன் தெரிவிக்க முடிந்தது. தீர்வு காண

உதவியது. இந்த முறை இப்பொழுது இல்லாததால் எங்களது குறைபாடுகளை முறையீடு செய்வதில் மிகுதியான சிரமம் ஏற்பட்டுள்ளது. மேலும் கும்பெனியாருக்கு பாரபட்சமற்ற நீதி வழங்கும் பெருமை உண்டு. ஆனால் கும்பெனியாரது ஊழியர்களின் தவறான நடத்தையினால் அந்த நல்ல பெயருக்குக் களங்கம் ஏற்பட்டு இருக்கிறது. தங்களிடம் சமர்ப்பிக்கப்படும் இந்த முறையீடு பற்றி முழு விசாரணை நடத்த வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இவைகளை இங்குக் குறிப்பிடுகிறேன். இதன்மூலம் என்மீது பழி ஏற்படுமானால் எனக்கு தாங்கள் எத்தகைய தண்டனை வழங்கினாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனினும், எனது கடமையிலும் கும்பெனியார்பால் கொண்டுள்ள தோழமையிலும் நான் தவறிவிட்டதாக எனது செயல்பாடுகள், எனது நடத்தைப்பற்றி பழி ஏற்படுத்துவதற்கு உதவினால் எனது துரதிர்ஷ்டத்தைத்தான் நொந்து கொள்ள வேண்டியதாக இருக்கும்.

''எனது சீமை காடுகள் நிறைந்தது. நாடோடிகள், தெற்கிலிருந்து வடக்கிலும், மேற்கே கர்நாடகத்திற்கும், தஞ்சாவூர் சீமைக்கும், செல்வதற்கு சாலை வசதிகள் கிடையாது. அவர்கள் அனைவரையும் நோட்டமிட்டு வருவதும் இயலாத காரியம். அவர்களுக்கு எப்பொழுதும் நான் புகலிடம் அளிக்கவில்லை. வாய்ப்புகள் ஏற்படும் பொழுது நானே அவர்களைப் பிடித்துக் கொடுத்து இருக்கிறேன். இதனால் தங்களது பாராட்டுதலைப் பெற்று, நிரந்தரமான மகிழ்ச்சியை அடைவது என்பது எனது ஆசை. தாங்கள் அனுமதி அளித்தால் தங்களை நேரில் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.

''பாஞ்சைப்பாளையக்காரர், தமது தவறான நடத்தைமூலம் மற்றவர்களையும், ராஜவிசுவாசமற்ற நிலையில் ஈடுபடுத்துவதற்காக சில கடிதங்களை எழுதியுள்ளார். எனக்குத் தெரிந்தவரையில், சில பாளையக்காரர்கள், அந்தக் கடிதங்களுக்கு ஒப்புதல் அளித்து, அவருக்கு சில ஆட்களையும் வெடிமருந்துப் பொதிகளையும் கொடுப்பதாக வாக்களித்து உள்ளனர். ஆனால் இவை பாளையக்காரர்கள் மீது பொதுவாக சந்தேகங் கொள்வதற்குரிய கண்டுபிடிப்பு என்பதை எளிதில் கண்டு கொள்ளலாம். கலெக்டரது கடுமையான நடவடிக்கை எதுவாக இருந்தாலும், இன்னும்

பாளையக்காரர்கள் அவருக்கு கட்டுப்பட்டவராக இருந்து வருகின்றனர். இதனை உறுதிப்படுத்துவதற்கு உதாரணம் எதையும் இங்குக் குறிப்பிடவேண்டியதில்லை. ஆனால் தாங்கள் இது சம்பந்தமாக விசாரணை ஒன்றைத் துவக்கினால், அது தங்களுக்கு மனநிறைவை அளிக்கும் என்பது உறுதி''.

சிவகங்கைச்சேர்வைக்காரர்களது இந்தக் கடிதம் அன்றைய பரங்கியர் எதிர்ப்பு சூழ்நிலையில் எந்த நோக்கத்தை பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டது என்பதைப் புரிந்து கொள்வது சிரமமாக உள்ளது. தொடர்ந்து, பரங்கியரது நிழல் கூட தமது மண்ணில் படுவதற்கு அனுமதிக்க கூடாது என்ற வகையில் செயல்பட்டு வந்த சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் இத்தகைய இயல்பான நடையில் இந்தக் கடிதத்தினைக் கும்பெனியாருக்கு ஏன் எழுதினார் .... ... ... ...? ஒரு வேளை அவர்கள் மீது துவக்கியுள்ள போர் ஆயத்தங்களை அவர்கள் சரியாக புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவோ, அல்லது அவர்களது கவனத்தைத் திசை திருப்பி, கடிதப்போக்குவரத்திலும் விசாரணையிலும் சிறிது காலத்தை நீட்டிப்பு செய்யலாம் என்ற கருத்தில் அந்த கடிதம் எழுதப்பட்டு இருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

ஆனால் கும்பெனி கவர்னர் அந்தக் கடிதத்தை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.[4] ஏனெனில் சிவகங்கைச் சீமைக் கிளர்ச்சியினை அடக்கி அழித்து ஒடுக்குவதற்கான அனைத்து ஆயத்தங்களிலும் கும்பெனியார் முனைந்து நின்றனர். சென்னை கவர்னர் அப்பொழுது உள்ள கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பி வைத்த அறிக்கை இதனைத் தெளிவுபடுத்துகிறது.[5]

... ... ... ... ...இராமநாதபுரம் பாளையத்திற்குப் பக்கத்தில் உள்ள சிவகங்கை ஜமீந்தார் பகுதிக்கு புரட்சியின் போக்கு பரவி உள்ளது. அந்த ஜமீந்தாரின் அமைச்சர்கள் இந்த மனப்பான்மையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். கும்பெனியாரின் நிர்வாகத்திற்கு எதிராக திருநெல்வேலிச் சீமையில் புரட்சியைத்

4 Revenue Consultations vol. 110- (31-7-1801) p. 1470

5 Political Consultations, vol. 5 - (1801) 1643.-44

தூண்டி தங்களது அதிகாரத்திற்குட்பட்ட அனைத்தையும் செய்துவிட்டு பாஞ்சாலங்குறிச்சிப் போரில் தறிபட்டு ஓடிவந்த அகதிகளுக்கு அடைக்கலம் தந்து கும்பெனித்தளபதி அக்கினியூவின் தலைமையில் உள்ள அணிகளுடன் பகிரங்கமாகப் பொருதுவதற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

''மருது சேர்வைக்காரரது நிலைகளைச் சென்று அடைவதற்குள்ள இடையூறுகள் அனேகம், அவை நமது அணிகளின் முன்னேற்றத்தைப் பாதிக்கும். அந்தச் சீமையின் இயற்கையான அமைப்பு, காட்டு அரண்களில் உள்ள தளவாடங்களைப் பாதுகாப்பது, கர்னல் அக்கினியூவின் உத்திகளை நிலைகுலையச் செய்ய உறுதிபூண்டு ஆயுதம் தாங்கியுள்ள பதினைந்தாயிரம் புரட்சிக்காரர்கள் ஆகிய இணக்கமற்ற சூழ்நிலைகள் ... ... ''

கும்பெனியாரது நடவடிக்கைகள் பரவலாகத் தீவிரமடைந்தன. போராளிகளது தினவு எடுத்தத் தோள்களும் சும்மா இருக்கவில்லை. என்றாலும், அன்றைய அரசியல் சூழ்நிலையில் பரங்கியரைத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ எதிர்த்துப் போராடக்கூடிய வலிமை வாய்ந்த தலைமை தென்னகத்தில் எங்குமே இல்லை. விடுதலை வீரன் திப்பு சுல்த்தானது வீழ்ச்சிக்குப்பிறகு எழுந்த அரசியல் சூனியம் இதுவாகும். தமிழக அரசியல் கும்பெனியார் நேரடியாகத் தலையிடும் வரை, மிகப்பெரும் அரசியல் சக்தியாக விளங்கிய ஆர்க்காடு நவாப் என்ற அரசியல் பீடமும் இப்பொழுது இல்லாது போயிற்று.

# 7

## அழிந்து வந்த ஆர்க்காடு ஆட்சி

உயர்விற்கு உதவும் உத்தமர்களை எத்திவிடும் எத்தர்களாக விளங்கினர் வெள்ளைப்பரங்கிகள். வியாபாரத்திற்காகத் தமிழ்நாட்டிற்கு வந்து, சென்னைக் கடற்கரையில் கிட்டங்கியும் கோட்டையும் அமைத்து, ஆர்க்காட்டு நவாப்பின் தோழமையையும் தாராள மனப்பான்மையையும் சாதகமாக்கிக் கொண்டனர். நவாப்பின் எதிரிகளை அடக்குவதற்கு முன் வந்த அவர்கள், நாளடைவில் தங்களது நயவஞ்சகச் சூழ்ச்சிகளிலும், சதிகளிலும் நவாப் முகம்மது அலியைச் சிக்கவைத்து, நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக, அவரைத் தங்களுக்குப் பயன் அளிக்கும் பகடையாக அரசியல் களத்தில் பயன்படுத்தினர். தமது வலையில் சிக்கிய இரையை சிறுகச் சிறுகச் சிதைத்து உண்ணும் சிலந்திப் பூச்சியைப் போன்று, அவரை ஈடுசெய்யாத பெருங் கடனாளியாக்கி, அவரது உரிமைகளையும் உடமைகளையும் கொள்ளை கொண்டனர். ஆதாயத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, செலவு அனைத்தையும் நவாப் முகம்மது அலியின் தலையில் கட்டி, வசூலித்தனர். இந்தப் பகற் கொள்ளையைத் தடுக்க முடியாத நவாப் முகம்மது அலி, கடனாலும், எதிர்நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாத கவலையினாலும், இயலாத்தன்மையினாலும் நைந்து நலிந்து கி.பி. 1795ல் இறந்தார்.[1]

அடுத்து நவாப் பதவிக்கு வந்த நவாப் உம்தத்துல் உம்ராவைப் பயமுறுத்தி காலாவதியாக விருக்கும் 1792ம் வருட உடன்பாட்டைத் திருத்தி நீடித்துக் கொள்ள முயன்றனர். இதற்கு ஆயுதமாக இறந்துபோன நவாப் முகம்மதுஅலி மீது ஒரு பெரிய பழியையும், சுமத்தினர். அவர்களுடன் நண்பராக இருந்த நவாப் முகம்மது அலி, அவர்களது பொது எதிரியான மைசூர் மன்னர் திப்புசுல்தானிடம் ரகசிய கடித தொடர்பு கொண்டு

---

1 Rajayyan Dr. K: History of Madurai (1974) p. 324

இருந்தார் என்பது,[2] ஆதாரமற்ற இந்தப் புகார் பற்றி நடுவர் விசாரணை நடத்துமாறு நவாப் உம்தத்துல் உம்ரா கோரினார். ஆனால் பரங்கிகள் அதற்கு ஆயத்தமாக இல்லை. கும்பெனியாரது தலைமை இரண்டு நடுவர்களைக் கொண்ட குழு சென்னையிலும், ஸ்ரீரங்கப்பட்டினத்திலும் உள்ள முக்கியமான பரங்கிகளை விசாரிக்கச் செய்தது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி நவாப்பினதும் மைசூர் மன்னருடையதுமான கடித வாசகங்களில் இரசிய செய்திகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிந்து குழு அறிக்கை கொடுத்தது. ஆனால் கும்பெனி தலைமை இந்த நடுவர் அறிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நவாப்பின் ஆட்சேபனைகளுக்கு மாற்றமாக கி.பி 1792ம் ஆண்டு உடன்படிக்கைப்படி நெல்லை, மதுரை-மறவர்-திருச்சி-வடஆற்காடு, நெல்லூர், பழனி ஒங்கோல் சீமைகளை நவாப்பிடம் ஒப்படைக்காமல் அவர்களே தொடர்ந்து அங்கு தங்கள் நிர்வாகத்தை நடத்தி வந்தனர்.[3] நவாப்பினது ஒப்புதல் இல்லாமலேயே, மறவர் சீமையின் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்ட மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதிக்கு அவரது பெண்மகள் வாரிசு இருக்கும் பொழுதே கையூட்டுப் பெற்றுக் கொண்டு, அந்த மன்னரது தமக்கை மங்களேசுவரி நாச்சியாரை சேது மன்னரது வாரிசாக ஏற்றுக் கொண்டனர்.[4] நோயினால் நலிவுற்று இருந்த நவாப்பினது தந்தை பலவீனமான நிலையைப் புரிந்து கொண்டு கும்பெனியார் நவாப்பினது தந்தை வாலாஜா முகமது அலி காலத்தில் இருந்து குதிரைப்படை செலவு கணக்கில் 11, 62, 770 பக்கோடா பணம் பற்றாக இருப்பதாகவும் அதனை நேர் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் திப்பு சுல்தான்மீது தொடுக்கவிருக்கும் நான்காவது மைசூர் போரினால் நவாப்பும் ஆதாயம் பெறலாம் என வற்புறுத்தினர்.[5] பரங்கியரது இந்த பேராசைக் கோரிக்கை நவாப்பிற்கு அதிர்ச்சியை அளித்தது. ஏனெனில், இத்தகையதொரு கடன்பாக்கி பற்றி இதுவரை எந்தவித குறிப்பும் கிடையாது. கி.பி. 1749 முதல் கி, பி 1792 வரை ஆர்க்காடு நவாப்பிற்காக பரங்கி

---

2 Secret Consultations, vol. 12, (25-7-1801) p. 377-78.

3 Military Consultations vol 279- (10.2.1801) - p.p.730-32

4 Political Despatches to England, vol.2, p.p. 335-42.

5 Military Country Correspondence, vol. 49, (10 - 8 - 1798) p.p. 302

கள் ராணுவ உதவி புரிந்ததற்காக அப்பொழுதைக்கப் பொழுது உரிய வெகுமதியை ரொக்கப்பணமாகவோ அதற்கு ஈடான நடவடிக்கைகள் மூலமாகவோ பெற்றுள்ளனர். நவாப் வாலாஜா முகம்மது அலியும் கும்பெனியாரும் கடைசியாக கி. பி. 1792 ல் செய்து கொண்ட கர்நாடக உடன்படிக்கையில் இத்தகையதொரு கடன் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. மேலும் நவாப் கும்பெனி யாருக்குக் கொடுக்க வேண்டிய அனைத்துப் பாக்கிகள் பற்றியும் இந்த உடன்படிக்கையின் பாரா 4,5,6,7,9ல் தெளிவாக வரையறுக் கப்பெற்று இருந்தது.[6] இன்னும் சுருக்கமாகக் குறிப்பிட வேண் டுமானால், கி. பி. 1758-59ல் சென்னை கும்பெனியாரது கோட் டையைக் பிரஞ்சுக்காரர்களை விரட்டியடிப்பதற்கான கும்பெனி யாரது ராணுவச் செலவு முழுவதையும் நவாப் வாலாஜா முகம்மது அலி ஏற்றுக் கொண்டார். ஏனெனில் அந்தக் கோட்டை அவரது நண்பர்களது இருக்கையல்லவா? அதேபோல் கி .பி. 1761 ல் கும்பெனியார் பிரஞ்சுக்காரர்களின் பாண்டிச்சேரிக் கோட்டையைப் பிடிப்பதற்கான ராணுவச் செலவையும் நவாப்பே ஏற்றுக்கொண் டார். என்ன காரணம் தெரியுமா? பாண்டிச்சேரி அவரது எதிரி யின் கோட்டை.[7] அத்துடன் மைசூர் திப் புசுல்தானுடனான போர் கும்பெனியாரது சுயநலத்திற்காக மேற்கொள்ளப்பட்ட தனிப் பட்ட நடவடிக்கையாகும். அந்த அளவுக்குக் கும்பெனியாரைத் தமது நெருக்கமான நண்பர்களாகக் கொண்டிருந்த நவாப் முகம்மது அலிக்கு அந்தப் பரங்கிகள் செய்த கைம்மாறு இதுதான். இத்துடன் அவர்கள் தங்கள் துரோக நடவடிக்கையை நிறுத்திக் கொண்டு இருந்தால் கூட அவர்களைப் பழிக்காமல் இருந்தி ருக்கலாம். பேராசையும் அதிகார வெறியும் பித்தாக மாறி பேயாட்டம் ஆடிய அவர்களது சுய உருவம் அறிந்து தவித்த நவாப் உம்-தத்துல்-உம்ரா, தாங்க முடியாத கவலை, கடன் தொல்லை. குடிமக்களையும் நவாப்பின் ஊழியர்களையும் தங்க ளது ஆயுத பலத்தினால் பயமுறுத்தி, நவாப்பிற்கு வருமானம் எதுவும் கிடைக்காமல் செய்யும் கொடுமை. வேதனையும் விரக் தியும் சேர்ந்த நோயாளியாக 15-8-1801 ல் பரங்கியரது அவமா னத்திநின்றும் தப்பித்துக் கொள்ள கண்ணை மூடிவிட்டார்.[8]

---

6 Aitehisum, Collection of Treaties, vol.5

7 Secret Consultations, vol. 13. (31-7-1801), p.p.654-68.

8 Srinivasachari C. S : The Inwardness of British Annexation in India (1951) p. 71.

அவர் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் இவர் கும்பெனியாரது தலைமைக் கொள்ளைக்காரரான கிளைவுக்கு எழுதிய கடிதம்.

''.... ... ... பீதியடைந்த மான் அபாயத்தை அறிந்தவுடன் தனது வலுவையெல்லாம் சேர்த்து பாய்ந்து பறந்து யாருபுக முடியாத புதர் நிறைந்த காட்டிற்குள் மறைந்து விடுகிறது. ஆனல் எனக்கு அத்தகைய புகலிடம் எதுவும் இல்லை. எதிரிக்கு முன்னால், என்னைத் தற்காத்துக் கொள்ள முடியும் அல்லது அவனது தாக்குதலில் இருந்து தப்பித்து விடமுடியும். ஆனால், நீண்ட கால நட்பின் படைபலம் எனக்கு முன்னே நெருங்கி நிற்கிறது. என்மீது அழிவு அம்புகளைச் சொரிகிறது ... .... எனது நம்பிக்கைகள் நசிந்து விட்டன. மகிழ்ச்சிக்கான அறிகுறி கண்ணுக்கெட்டிய தூரத்தில் தென்படவில்லை. ரோஜா மலரின் இதழ்கள் அனைத்தும் உதிர்ந்து விழுந்துவிட்டன. எனது கையில் அந்த மலரின் முட்கள் மிகுந்த காம்பு மட்டும் உள்ளது. .... ...''[9]

பச்சைத் துரோகிகளான பரங்கிகளது பயங்கரமான சதித் திட்டத்தினால் பாந்தள் வாய்ப்பட்ட தவளை போலத் துடித்துக் கொண்டிருந்த நவாப்பின் நெஞ்சத்தில் இருந்து கசிந்த இரத்தக் கண்ணீரில் எழுதப்பட்டு இருந்தது இந்தக்கடிதம்.

ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி கர்நாடக அரசியல் அதிகாரங்களை முழுமையாகப் அவரிடமிருந்து பறிப்பதற்கு பரங்கிகள் முயன்றனர். நவாப்பின் மூத்த மகன் அலிஹுஸைன், தங்களுக்கு இணக்கமாக அல்லாமல் எதிரிடையாக இருக்கிறார் என்பதை அறிந்தவுடன் அவரை நவாப்பாக ஏற்றுக் கொள்ளாமல் அவரது ஒன்றிவிட்ட சகோதரர் ஆஜீம்-உத்-தௌலாவை எவ்வித அதிகாரமோ அரசோ இல்லாத ''பொம்மை நவாப்பாக'' அங்கீகரித்து 31-7-1801ல் அவரை கர்நாடக நவாப்பாக்கி நாடகமாடினர். அத்துடன் அந்த ஆரவாரம் அடங்குவதற்குள்ளாக யாரும் சந்தேகப் படாதநிலையில் உண்மையான நவாப்பான அலி ஹுஸனை விஷமிட்டுக் கொன்று போட்டனர்.[10] கும்பெனியார் எப்பொழுதும் கையாளும் கோரமான தந்திரம் அது.

---

9 Military Consultations vol 268 (10-5-1800) pp, 2996-3025
10 Secret Despatches to England vol. 2, (3-8-1801), pp 9290

பொம்மை நவாப் அஜிம் உத்தெளலாவுடன் கும்பெனியார் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி[11] நவாப் அவரது பொது ராணுவ அலுவலர்கள் அனைவரும் அவர்களது நிர்வாகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் உடனே கும்பெனியாருக்கு நிரந்தரமாக கையளித்து விடவேண்டும். அத்துடன் அந்த அலு வலர்கள் பொறுப்பில் உள்ள அனைத்து ஆவணங்கள், கணக்குகள் ஆகியவற்றையும் கும்பெனியாரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். கர்நாடகப் பகுதி முழுவதில் இருந்தும் வரக்கூடிய வருடத்தீர்வை யில் ஐந்தில் ஒரு பகுதியை மட்டும் பெறுவதற்கு நவாப் அருகதை உள்ளவர் ஆகிறார். அதாவது ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும் வருமானம் சுமார் முப்பத்து இரண்டு லட்சம் ஸ்டார் பக்கோடா பணம் வருவாயில், மாதம் 12,000/- ஸ்டார் பக்கோடா பணம் நவாப்பின் பராமரிப்பு செலவிற்கு ஒதுக்கப்படும். வடக்கே விஜய நகரத்தில் இருந்து தெற்கே களக்காடு வரை நீண்டு பரந்த கர்நாடகத்திற்கு அரசுரிமை கொண்டாடி வந்த ஆற்காட்டு நவாப் பிற்கு இப்பொழுது அரசுரிமையும் கிடையாது. நல்லவேளை வாழ் வதற்காவது உரிமை வழங்கியிருக்கிறார்களே. திருச்சிராப்பள்ளி யில் இருந்த மாளிகையை மட்டும் அவரது ''சொந்த சொத்தாக'' விட்டுக் கொடுத்தனர். ''தர்மத்திற்கும் நியாயத்திற்கும்'' பெயர் போன ஆங்கிலேயர், நவாப் உயிர் வாழ்வதற்கு மாதம் ஊதியம் கொடுத்து வருவதே பெரிய காரியம் அல்லவா? ஆயிரக்கணக்கான படைவீரர்களைக் கொண்ட ராணுவ அணிகளைப் பராமரித்து வந்த நவாப் இனிமேல் ஆங்கிலேயரது ஒப்புதலின் பேரில் தான் தனது சொந்த கௌரவத்திற்கு ஏற்ற எண்ணிக்கையில் பணியாட் களை அமர்த்திக் கொள்ள வேண்டும். மேலும், கும்பெனியாருக்குத் தகவல் இல்லாமல் உள்நாட்டிலோ வேறு நாட்டிலோ உள்ள அரசுடன் நவாப் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளக் கூடாது.

இவை அஜீம் உத்தெளலா,'' ஆற்காட்டு நவாப்பாக'' குறிக்கப்படுவதற்கு ஒப்புக் கொண்ட நிபந்தனைகள் அல்ல, கும் பெனியாரது அடிமையாக வாழ்வதற்கு, ஆசியலில் ஆட்சி முறையில் இருந்து துறவு கொள்வதற்கு அவர் அணிந்து கொண்ட புத்தாடைகள், அத்துடன் வியாபாரிகளாக இந்த நாட்டிற்கு

11 Secret Consultations vol, 13, (31-7-1801) pp. 786-801

வந்த பரங்கிகளது ஏகாதிபத்திய ஆட்சிமுறை, தமிழ் மண்ணில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் நடைபெறுவதற்கு காண்பிக்கப் பட்ட பச்சைக் கொடி, அந்த உடன்பாடு.

ஆர்க்காட்டு நவாப்பின் கடைசி வாரிசுதாரருக்கும், கும் பெனியாருக்கும் 31-7-1801 ல் ஏற்பட்ட உடன்பாடு தமிழக அரசியலில் கும்பெனியாரது தங்கு தடையற்ற அதிகார நிலையை வலுப்படுத்தியது. என்றாலும் அவர்களது ஏகாதிபத்திய உரி மையை - அதர்மமான முறையில் தமிழகத்தை ஆக்கிரமித்துள்ள அக்கிரமத்தைத் துணிந்து கேட்பதற்கு அப்பொழுது தமிழகத்தில் யாருமே இல்லாத நிலையில், சிறிதும் அஞ்சாமல், அவர்களது ஆதிபத்திய ஆசைகளுக்கு, ஆயுதப்பலத்திற்கு சவால்விடும் வகை யில், இராமநாதபுரம் - சிவகங்கை மண்ணில் மட்டும் தான் கிளர்ச்சிகள் சிறிதும் தயக்கமில்லாமல், தொடர்ந்து நடந்தன. 24-5-1799 ல் அன்னிய ஆதிக்கவாசிகளுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய மக்கள் கிளர்ந்து எழுந்த முதுகுளத்தூர் பகுதியில், மயிலப்பன் சேர்வைக்காரரது தலைமையிலான கிளர்ச்சிக்கு மீண் டும் போராட்டத்தை தளிர்த்தது. முத்து இருளப்ப சேர்வைக்காரரும் அவரது குழுவினரும் அங்குள்ள கும்பெனியாரது சொத்துக் களைக் கொள்ளையடிக்க முயன்றனர். பீதியடைந்த முதுகுளத் தூர் பேட்டைதார் கலெக்டருக்கு இராணுவ உதவி கோரி அபாய அறிவிப்பு செய்தார்.[12]

மயிலப்பன் சேர்வைக்காரர் முதுகுளத்தூர் வந்து சேர்ந்த வுடன் கிளர்ச்சிக்காரர்களது மகிழ்ச்சி எல்லையற்று பொங்கியது. அவரது முன்னிலையில் முதுகுளத்தூர் கச்சேரிக்குத் தீயிட்டனர். கும்பெனியாருக்கு இந்தத் தீயினால் பெருஞ்சேதம் ஏற்பட்டது.[13] கிளர்ச்சிக்காரர்களது ஒரு பிரிவினருடன் மயிலப்பன் சேர்வைக் காரர் ஆப்பனூருக்கு புறப்பட்டுச் சென்றார். மேலும் அதே நேரத்தில் மறவர் சீமையின் ஏனைய பகுதிகளான பரமக்குடி, பார்த்திபனூர், உளக்குடி, நயினார்கோவில் ஆகிய ஊர்களில் அறுவடைக்கு நின்று கொண்டிருந்த பயிர்களை கிளர்ச்சிக்காரர் கள் அழித்து, கும்பெனியாருக்கு அவைகளில் இருந்து கிடைக்க

12 Madurai District Records vol. 1182, (14-6-1801) p. 182.
13 Ibid, (4-7-1801) p. 227.

வேண்டிய "கிஸ்தி" கிடைக்காதவாறு செய்தனர்.[14] மயிலப்பன் சேர்வைக்காரரும் அவர் சென்ற ஊர்களில் உள்ள குடிமக்கள் அனைவரையும் கும்பெனியாரது அக்கிரமமான ஆக்கிரமிப்பையும் ஆயுதபலத்தையும் எதிர்த்துப் போராடி பிறந்த மண்ணின் மானத்தைக் காப்பதற்காகக் கிளர்ந்து எழும்படி தூண்டி வந்தார்.[15] பல்வேறு வகையான மக்களும் கிளர்ந்து எழுந்து போராடினால் பரங்கிகளை அழித்து ஒழித்துவிட முடியும், இவ்விதம் செய்யாதவரை அவர்களுக்குப் பணிந்து செல்லும் வகையில், அவர்கள் எதையும் செய்வார்கள் என்ற கருத்து மக்களிடம் பரவலாகப் பரவியது.[16]

---

14 Madurai District Records, vol. 1182 (3-7-1801) p. 223.

15 Ibid, (12-7-1801) p. 241.

16 Revenue Sundries, vol. 26, pp. 447–55.

# 8

## கிளர்ச்சிகளின் தொடர்ச்சி

இராமநாதபுரம் கோட்டையிலிருந்து மதுரையை அடைந்த கர்னல் அக்கினியூவின் உள்ளம் சிவகங்கைச் சீமைக்குள் புகுவதற்கு துடித்துக் கொண்டு இருந்தது. மலபார் பகுதியில் இருந்து பலமான ஆயுதப் படையணிகளின் உதவியை எதிர்பார்த்து காத்து இருந்தான். கோவை, திண்டுக்கல், வழியாகத் திருப்பத்தூருக்கு வரும் வழியில் மலபார் அணிக்கு திண்டுக்கல் சீமையில் பலத்த எதிர்ப்பு இருந்தது. பல இடங்களில் கிளர்ச்சிக்காரர்களுடன் மோதி பெருமளவு சேதாரங்களைப் ஏற்படுத்திவிட்டு அந்த அணி நத்தம் அடைந்தது. அங்கு தொண்டமானது துரோகக் கும்பல் கும்பெனியாரது அணிகளுடன் சேர்ந்து கொண்டது. பின்னர், அவர்கள் சிவகங்கைச் சீமை, பிரான்மலைக் கோட்டையைப் பிடித்துவிட்டு திருப்பத்தூர் சென்றுவிடலாம் என்ற எளிதான நினைப்பில் பிரான்மலையைத் தாக்கினர்.[1] ஆனால் ஏமாந்து போய் கிளர்ச்சிக்காரர்களிடம் சரியான உதை பெற்று நத்தத்திற்கே திரும்பினர். மற்றொரு முயற்சியை மேற்கொண்டு மணப்பச்சேரி வரை முன்னேறினர். ஆனால் சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் தலைமையிலான கிளர்ச்சிக்காரர்களால் மீண்டும் நத்தத்திற்கு துரத்தியடிக்கப்பட்டனர். இப்பொழுது கும்பெனி அணிகள் பிரான்மலையைக் கைப்பற்றும் திட்டத்தைக் கைவிட்டு சத்துரு சங்காரக்கோட்டை வழியாகத் திருப்பத்தூரை அடைவதற்கு காட்டுப்பாதையொன்றைத் தேர்வு செய்தனர். கிளர்ச்சிக்காரர்களது ஏவுகனை (ராக்கெட்) வெடிகளில் இருந்து கும்பெனிப்படை கர்னல் இன்னிங்ஸ் தப்பித்து திருப்பத்தூரை அடைந்தான்.[2]

---

1 Military Consultations 285. (18-6-1801) pp. 4559-61

2 Military Consultations 286 (4-8-1801) pp. 5348-49.

திருப்பத்தூர் கோட்டை

இந்தக் கோட்டை அமைப்பு பற்றி சரியான விவரங்கள் இல்லை. ஏழாவது நூற்றாண்டில் இந்த ஊரில் கோவில் கொண்டுள்ள திருத்தளிநாதரைத் தரிசித்து அப்பர், சம்பந்தர், பாடிய தேவாரங்கள் உள்ளன. அடுத்து இந்தக்கோயிலில் உள்ள எட்டாவது நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியன்மாறன் சடையனது வட்ட எழுத்து கல்வெட்டுக்களும் இந்த ஊரின் பழமையைப் பறைசாற்றுவனவாக உள்ளன. மற்றும் ராஜராஜசோழன், மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1216 - 38 மாறவர்மன் பராக்கிரமன் ஸ்ரீவல்லயன் வீரபாண்டிய குலசேகரனது திருப்பணிகளைக் குறிக்கும் தொண்ணூற்றுஎட்டு கல்வெட்டுக்களும் அங்கு உள்ளன. என்றாலும் பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் மதுரை சுல்தானது ஆட்சியை எதிர்த்துப் போராடிய சூரக்குடி விசயாலய தேவன் இந்தக்கோட்டையை அமைத்து இருக்க வேண்டும் என்று நம்பப்படுகின்றது. பின்னர் இந்தக்கோட்டை இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது முக்கியமான அரண்களில் ஒன்றாக அமைந்து இருந்தது இதனை திருச்சிராப்பள்ளி வழியாக தெற்கே செல்லும் மதுரைப்பெருவழியில் இந்தக்கோட்டை அமைந்து இருந்ததால், ராணுவ முக்கியத்துவம் மிகுந்து இருந்தது. அதனால் பிரான் மலைப் போரில் தோல்விகண்ட பரங்கிகள், திருப்பத்தூர் பகுதிக்குப் பின்னடைந்து, திருப்பத்தூர் கோட்டையைப் பிடிப்பதில் அக்கறை செலுத்தினர். கர்னல் அக்கினியூ, திருப்பத்தூருக்கு வடக்கே ஆறுகல் தொலைவில் பாளையம் இறங்கி தாக்குதலைத் தொடுத்தான்.

ஏற்கனவே கோட்டைச் சுவர்கள் பழுது பார்க்கப்படாமல் இருந்த காரணத்தினால் பரங்கிகளது பீரங்கி குண்டுகள் எளிதாக வடக்கு கிழக்குச் சுவர்களை வெடித்துப் பிளக்கச் செய்தன. கிளர்ச்சிக்காரர்கள் மிகுந்த வீரத்துடன் போராடினர், முதன்முறையாக "ராக்கெட்" வகை குண்டுகளையும், இந்தப்போரில் பயன்படுத்தினர். என்றாலும் பரங்கிகளது வெடிகுண்டு வீச்சு, மிகவும் உக்கிரமமாகவும் மிகுந்த அழிவை ஏற்படுத்தியதாகவும் இருந்தது. கிளர்ச்சிக்காரர்களால் இந்தத் தாக்குதலைச் சமாளிக்க இயலவில்லை. 25-7-1801ல் கும்பெனியார்கோட்டையைப் பிடித்

தனர்.[3] கர்னர் அக்கினியூவின் போர் உத்திகளும் விரைவாக வும் உறுதியாகவும் செயல்பட்ட அவனது ஆணியின் உழைப் பும், கிளர்ச்சிக்காரர்களுக்குப் பெருத்த நாசத்தை ஏற்படுத்தி விட்டது. சிவகங்கைச்சீமைப் போரில் ஒரு புதிய திருப்பத்தைப் பரங்கியரின் இந்நவெற்றி சுட்டியது அத்துடன் கர்னல் அக்கினியூ மாற்றாரது வலிமையைத் தெரிந்து செயல்படுவதற்கும் இந்தப் போர் வாய்ப்பாக இருந்தது.

அடுத்து, கர்னல் அக்கினியூவின் தலைமையிலான கும்பெனிப் படைகள் சிவகங்கை நோக்கிப் புறப்பட்டன. வழியில் அவர்களைத் தாக்கிய கிளர்ச்சிக்காரர்கள் அணியைப் புறமுதுகிடச் செய்து விட்டு சிவகங்கைக்கு ஏழுகல் தொலைவில் உள்ள ஒக்கூரைப் பிடித்தான். பரந்தவெளியில் பாசறையை அமைத்தான். கிளர்ச்சிக்காரர்களது உயிர்நிலை போல அப்பொழுது விளங்கிய அரண்மனை சிறு வயலையும் காளையார்கோவில் கோட்டையையும் தாக்குவதற் குரிய திட்டத்தை வரைவதில் அங்கு ஈடுபட்டான். மூன்று நாட் களில் சின்னமருது சேர்வைக்காரரது அரண்மனை சிறுவயலில் கும்பெனிப்படைகள் நின்றன கர்னல் அக்கினியூ, கர்னல் இன்ஸீக் கும், மேஜர் ஷெப்பர்டுக்கும், தாக்குதல் பற்றிய உத்திகளை விளக்கிக் கூறினான். அப்பொழுது அவர்கள் அரண்மனை சிறு வயல் கிராமத்திற்கு முன்னதாக பீரங்கி குண்டு போய் விழும் தொலைவில் நின்றனர்.

கும்பெனிப்படைகளை எதிர்பார்த்த கிளர்ச்சிக்காரர்கள் அரண்மனை சிறுவயல் கிராமத்திற்குவடக்கே இரண்டுகல்தொலை வில் உள்ள பனங்காடு, புதர்கள், கண்மாய்க்கரைகளில் வசதியாக நிலைகொண்டு இருந்தனர். சரமாரியாக துப்பாக்கிக் குண்டு களைச்சுட்டு எதிரிகளது முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றனர். ஆனால் முன்னோடி அணியை நடத்திச்சென்ற மேஜர் ஷெப்பர்டு துப்பாக்கி குண்டுகளைப்பற்றி கவலைப்படாமல் மிகுந்த துணிச் சலுடன் முன்னேறினான். கிளர்ச்சிக்காரர்கள், தங்கள் துப்பாக்கி யில் அடுத்த குண்டை வைத்து அழுத்தி சுடுவதற்கு கூட அவ காசம் தராமல், கண்மாய்க்கரை, பனங்காடு, முட்புதர், இவ்விதம் ஒன்றையடுத்து, ஒன்றாக மறைந்து சுட்ட கிளர்ச்சிக்காரர்கள்

---

3 Military Consultations vol. 286, (4-8-1801) pp. 5348-49

ஊரை நோக்கி பின்னடைந்தனர். மாலைவரை சுடுதல் நீடித்தது. லெப்டி. பூரூஸ்லி மிகவும் மோசமாகக் காயமடைந்தான். ஒரு பரங்கி வீரன் கொல்லப்பட்டான். எட்டுப்பேர்காயம் அடைந்த னர். கூலிக்கு மாரடித்த சுதேசி வீரர்களில் இருவர் கொல்லப் பட்டனர். இருபத்து நான்குபேர் காயமடைந்து கிடந்தனர். இவர்களுக்கு கட்டுக்கட்டி பக்குவம் செய்வதில் இரவுப்பொழுது போயிற்று. கிளர்ச்சிக்காரர் தரப்பு சேதம் தெரியவில்லை.

அடுத்த நாள் (30. 7. 1801), மீண்டும் கிளர்ச்சிக்காரர்களது எதிர்ப்பை எதிர்பார்த்து கும்பெனியார் அணி அரண்மனை சிறு வயல் கிராமத்தை அடைந்தபொழுது, கிராமத்தில் மயான அமைதி குடிகொண்டு இருந்தது. அத்தனை வீடுகளும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டு இருந்தன. சின்னமருது சேர்வைக் காரரது மாளிகையும் சிவத்த தம்பியின் இல்லமும் கம்பீரமாகக் காட்சியளித்தன. அங்கிருந்தோர் அனைவரும் தெற்கே அடர்ந்த காட்டிற்குள் நுழைந்துவிட்டனர்.[4]

பிரான்மலை

சிவகங்கைச் சீமையின் வடபகுதியில் அமைந்துள்ள திருப் பத்தூர் கோட்டையைப் பரங்கிகள் கைப்பற்றி தங்களது திருச்சி ராப்பள்ளி, நத்தம் மதுரைப்பெருவழியின் நிலையான அங்கமாக அமைத்துக் கொண்டனர். அத்துடன் அந்தக் கோட்டைக்கும் அப்பால் உள்ள காவல்நிலையான பிரான்மலையையும் பிடிப்ப தற்கான ஆயத்தங்களை மேற்கொண்டனர். காரணம் சிவகங்கைக் கிளர்ச்சிக்காரர்களுக்கு திண்டுக்கல், விருபாட்சி, வாராப்பூர் பாளையக்காரர்களது உதவி கிடைக்கவிடாமல் தடுப்பதற்கு பிரான்மலை அரண் உதவும் என்பது அவர்கள் முடிவு, குறிப்பாக வாராப்பூர் பாளையக்காரரான பொம்மைநாயக்கர் மருது சேர் வைக்காரர்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பராக இருந்து வந்த துடன் நத்தம், பிரான்மலைப் பகுதிகளில் கிளர்ச்சிக்காரர்கள் வெற்றிகரமாகத் தாக்குதல்களை நடத்த மிகவும் உறுதுணை யாக இருந்தார்.

---

4. Col. Welsh: Military Reminiscences. (1831) vol. I pp 89-92.

ஜூன் மாதம் 17ம் தேதி பிரான்மலை அருகே கும்பெனிப் படையை எதிர்ப்பதற்கு கிளர்ச்சிக்காரர்கள் முனைந்து இருந்தனர். பொம்மையநாயக்கரது ஆட்களும் கிளர்ச்சிக்காரர்களும் ஆக ஐந் நூறு பேர் ஆயதபாணிகளாக தயார் நிலையில் நின்றனர்.[5] கர்னல் ஸ்டூவர்டு தலைமையிலான அணி பிரான்மலைக்கு மேற்கே இருந்து முன்னேறி வந்தது. அவர்களது குதிரை அணி இரண்டு பிரிவு களாகப் பிரிந்து தொடர்ந்து வரும் தூசுப்படைக்கு உதவியாகச் சென்றன. மைசூர் போருக்குச் சென்று திரும்பிய கர்னல் இன்னி ஸீம் இந்தத் தாக்குதலில் கலந்து கொண்டான். கிளர்ச்சிக்காரர் களது ஆவேசத்தாக்குதலுக்கு முன்னர் ஒரு அடி கூட முன் செல்ல முடியாமல் தத்தளித்தனர். இறுதியில் நத்தத்திற்குப்பின் வாங்கி ஓடினர்.[6] மீண்டும் 4-7-1801ல் மற்றொரு தாக்குதலை பரங்கிகள் தொடுத்தனர். இந்த முறையும் மறவர்களது மரண அடியைத்தாங் கிக் கொள்ள இயலாமல் பரங்கிகள் உயிர்தப்பி ஓட்டம் பிடித்தனர். ஆனால் 18-9-1801ம் தேதி அன்று பரங்கிகள் மற்றொரு பெரிய தாக்குதலை பிரான்மலையில் மேற்கொண்டனர். இந்த முயற் சிக்கு புதுக்கோட்டைத் தொண்டமானது கூலிப்படைகள் கும்பெனி யாரது ஏழாவது ரெஜிமெண்ட்டின் முதலாவது அணியுடன் சேர்ந்து உதவினர்.[7] இந்தப் போரில் முடிவு கும்பெனியாருக்கு சாதகமாக அமைந்து விட்டது. கிளர்ச்சிக்காரர்கள் காரைக்குடி பகுதிக்குப் பின்வாங்கினர். அவர்கள் விட்டுச் சென்ற ஏராளமான ஆயுதங்கள் பரங்கியர் கையில் சிக்கின.

### கள்ளரும், கள்ளர் தலைவரும்

மறவர்களைப் போன்றே கள்ளர்களும் போரிடும் பரம்பரை யாக இருந்தனர். இந்த சமூகத்தினர் குறிப்பாக தெற்கு நாட்டுக் கள்ளர் (தஞ்சாவூர்) கீழ்நாட்டுக் கள்ளர் (மேலூர்) பிறமலை நாட்டுக் கள்ளர் (மதுரைக்கு மேற்கு) என வழங்கப்பட்டனர். இவர்கள் ஆங்காங்கு பல நாடுகளாகப் பிரிந்து அம்பலக்காரர் ஒருவர் தலை மையில் கட்டுப்பட்டு கூட்டு வாழ்க்கை நடத்தி வந்தனர்.[8] இவர்

---

5 Military Consultations vol. 285. A (18-6-1801) pp. 4980-81
6 Military Consultations vol. 288 A (19-9-1801) p. 6859
7 Military Consultations vol. 288 A (19-9-1801) p. 6859
8 Francis. W: Madurai Gazeteer vol. 1 (1914)

கள் நாட்டார் எனவும் வழங்கப்பட்டனர். இவர்களில் கீழ் நாட்டுக் கள்ளர்கள், எப்பொழுதும் எந்த அரசுக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்கவில்லை. முன்னூறு ஆண்டுகாலம் தொடர்ந்து மதுரை நாயக்கர் மன்னர் ஆட்சியில் கூட அவர்கள் கட்டுப்படாமல் மதுரை நாயக்க மன்னர்களுக்கு பல இடையூறுகளை ஏற்படுத்தி வந்தனர். ஆற்காடு நவாப்பின் பிரதியாக மதுரையில் நிர்வாகம் நடத்திய கம்மந்தூன்கான் சாகிபு தான் இந்த சமூகத்தினரை மிகவும் பயங்கரமாக அடக்கி ஒடுக்கி, அவர்களும், ஏனைய குடிமக்களைப் போன்று கண்ணியமான வாழ்க்கை நடத்துமாறு செய்தார். அவரது மறைவிற்குப் பிறகு மீண்டும் அந்த சமூகத்தினரின் செயல் முறைகள் மோசமாகி விட்டன. சிவகங்கைப் பிரதானிகளாக பணியேற்ற மருது சேர்வைக்காரர்கள் தங்களது அண்டை நாட்டவர்கள் என்ற முறையிலும், தாங்கள் சார்ந்துள்ள முக்குலத்தின் மற்றொரு பிரிவினர் என்ற முறையிலும் மேலூர் நாட்டுக் கள்ளர்களுடன் பொதுவாக தொடர்புகளைக் கொண்டிருந்தனர். அவர்களது தலைவர்களை சிவகங்கைக்கு வரவழைத்து பொன்னும், மணியும் வழங்கி சிறப்பித்தார். குறிப்பாக—காரிப்பட்டி, குனியமுத்தூர் கள்ளர் தலைவர்கள் சிவகங்கைக்கு அடிக்கடி வருகை தந்து மருதுசேர்வைக்காரர்களது பிரதான விருந்தினராக விளங்கினர்.[9]

இந்தச் சூழ்நிலையில், அவர்களைத் தங்கள் அணிக்கு இழுப்பதற்கான முயற்சிகளில் பரங்கிகள் முனைந்தனர், சீமான் வீட்டைக் கொள்ளையிடச் செல்லும் திருட்டுக் கூட்டம், முதலில் சீமான் வீட்டுவாசலின் உள்ள நாயின் வாயைக் கட்டிவிடுவது வழக்கம். அதைப் போன்றதுதான் கொள்ளைக் கூட்டவான பரங்கியரது நடவடிக்கைகளும் சிவகங்கைச் சேர்வைக்காரர்களது செல்வாக்கை மடக்கி, பலவழிகளிலும் அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கு பரங்கியர் முனைந்து செயல்பட்டனர். அவைகளில் ஒன்று, சிவகங்கைச் சீமையின் வடக்கிலும், வடமேற்கு எல்லையில் அமைந்து இருந்த கள்ளர்நாட்டுத் தலைவர்களை தங்களுக்கே உரிய ராஜதந்திர சூழ்ச்சிகளைக் கையாண்டு அவர்களது நட்பு நிலையில் மாற்றத்தை உருவாக்கினர். கும்பெனித்தளபதி காரோல் தலைமை இடத்திற்கு அனுப்பிய கடிதம் கள்ளர்நிலை

9 Madurai District Records vol. 1134, (29-5-1801).

பற்றிய தகவலைக் கொடுக்கிறது.[10] மேலூர்நாடு குழப்பமாக இருப்பதாகவும், கள்ளர் தலைவர்களைச் சந்திக்குமாறு கேட்டுக் கொண்டதில், கீழ்வளவு, அன்னூர் நாட்டுத்தலைவர்கள் அவரது அழைப்பைப் புறக்கணித்து விட்டனர். அவர்களது நடவடிக்கை களை நோட்டமிடுமாறு நிலக்கோட்டை தாசில்தாருக்கு ஆணை பிறப்பித்து இருப்பதாக அந்தக் கடிதத்தில் கண்டு இருந்தது. அடுத்து கர்னல் இன்னிங்ஸ் மேலூருக்குச் சென்றான். கள்ளர் தலைவர்களைச் சந்தித்தான். சாதுரியமாகவும், நயந்துபேசியும், அவரது பேச்சைக் கேட்காதவர்களை மிரட்டியும் கும்பெனியாரது நடவடிக்கைகளுககு உதவுமாறும் சிவகங்கை சேர்வைக்காரர்களது அணிக்கு எவ்வித ஆதரவும் வழங்கக்கூடாது எனவும் அவர்களது ''சத்தியத்தைப்'' பெற்று வந்தான். இந்தக் கள்ளர்களிலும் ''குள்ளன்'' ஒருவன் - அர்ஜுனப் பெருமாள் என்பவன் மிகுந்த விசுவாசத்துடன் சிவகங்கை சமீந்தாரை ஆதரிக்க முன் வந்தான்.[11]

பின்னர் கள்ளர்நாட்டில் கீழ்நாட்டிற்கும், தெற்குநாட் டிற்கும் இடைப்பட்ட கள்ளர் நாடான தொண்டமான் நாட் டின் தலைவரான புதுக்கோட்டைத் தொண்டமானையும் பரங் கிகள் அணுகினார்கள். சிவகங்கைக்கும் புதுக்கோட்டைக்கும் இடையில் நிலவிய உறவுகள் நேயமானதாக இல்லை. தொடர்ந்து பல ஆண்டுகளாக, ஏற்கனவே கி. பி. 1755 ல் தஞ்சை அரசரது படையெடுப்பின் பொழுது தொண்டமான் சிவகங்கை அரச ருக்கு எதிராக செயல்பட்டிருந்தார். ஆதலால் இந்தக் ''கள்ளரை'' கும்பெனியார் தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்வதில் சிரமம் எதுவும் இல்லை. தஞ்சாவூரில் கும்பெனியாரது பிரதிநிதியாக இந்த வில்லியம் பிளாக்பர்ன், புதுக்கோட்டைக்கு விரைந்து சென்றான். கள்ளர் தலைவரான விஜயரகுநாத தொண்ட மானைச் சந்தித்துப் பேசினான். தொண்டமானும் கும்பெனியா ரது பிரதிநிதியை அரசமரியாதைகளுடன் தர்பாரில் வரவேற்று உபசரித்தார். கும்பெனியாரது எதிரிகளைத் தமது சொந்த எதிரி களாக கருதுவதாக, அன்னியோன்னிய உணர்வுடன் பேசினார்.

---

10 Madurai District Records vol. 1220, p.p. 106

11 Ibid vol. 1182, (5-9-1801) p. 149.

தம்மாலான எல்லா உதவிகளையும் வழங்குவதற்கு எப்பொழுதும் தயராக இருப்பதாக வாக்குறுதியும் வழங்கினார்.[12]

பாஞ்சாலங்குறிச்சிப் போரில் கும்பெனியாரிடம் தோல்வியுற்று உயிர்தப்பி, தமது சீமைக்காட்டில் தஞ்சம் புகுந்த கட்டபொம்மு நாயக்கரைப் பிடித்துக் கொடுத்து, ஆங்கிலேயரிடம் கைக்கூலி பெற்றவர் புதுக்கோட்டைத் தொண்டமான். கைக்கூலி ரூபாய் பத்தாயிரமும், பட்டாடைகளும், அரபிக் குதிரையையும்,[13] அழகிய வாளையும், பரிசாக சென்னை கவர்னரிடமிருந்து அவர் பெற்று ஒராண்டுதான் ஆகி இருந்தது.'' கும்பெனியாருக்குத் தேவைப்படும் எந்த சந்தர்ப்பத்திலும் தம்மை அர்ப்பணித்து நல்ல பெயர் சம்பாதிக்க வேண்டும் என்பதே இறைவனது சன்னிதிதானத்தில் தமது பிரார்த்தனை''[14] என ஏற்கனவே கும்பெனியாருக்கு தெரிவித்து இருந்த ''தொண்டு உள்ளம் கொண்ட சீமான்'' அல்லவா இந்த தொண்டமான்? அதற்கான வாய்ப்பு இப்பொழுது வந்து இருப்பதை நழுவ விடுவாரா என்ன?

தமது திருமணவிழா சம்பந்தமான நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இருந்த அவர் பிளாக்பர்னது கோரிக்கையை நிறைவு செய்வதையே பெரிதாக எண்ணி அதில் கண்ணுங்கருத்துமாகக் இருந்தார். உடனடியாகத் தமது தளபதி முத்துக்குமாருபிள்ளை தலைமையில் மூவாயிரம் கள்ளர்களை நத்தத்தில் நிலைகொண்டிருந்த இன்னிஸிடம் அனுப்பிவைத்தார்.[15] திருமெய்யத்தில் உள்ள தமது கோட்டையை கும்பெனியர் தாராளமாக பயன்படுத்திக் கொள்வதற்கும் அனுமதித்தார். போர்த்தளவாடங்களைச் சேகரித்து வைத்துக் கொள்வதற்குள், சிவகங்கைச் சீமை கிளர்ச்சிக்காரர்களையும் அவர்களது சுற்றத்தாரையும் சிறையில் இட்டு

---

12 Military Consultations. vol .85 A, (24-6-1801) p 5006 5010-13.

13 Rajayyan Dr. K: History of Madurai (1974) p. 356.

14 Board of Revenue Consultations, vol. 235, (14-9-1799) p. 8067.

15 Military Consultations, vol. 285 (A) 22-6-1801 p.p. 5024-26,

சித்திரவதை செய்வதற்கும் இந்தக்கோட்டையை பின்னால் பரங்கிகள் பயன்படுத்தினர்.[16]

அதே சமயத்தில், திருநெல்வேலியில் இருந்த மேஜர் மக்காலேயை எட்டையாபுரம் பாளையக்காரரிடம் அனுப்பி கும்பெனியாருக்கு விசுவாசமாக நடந்து கொள்ளுமாறும் எந்தக் காரணத்தைக் கொண்டும் சிவகங்கைப் பிரதானிகளுடன் எவ்வித தொடர்புகளும் வைத்துக் கொள்ளக்கூடாது எனவும் எச்சரித்தனர்.[1] மொத்தத்தில், சிவகங்கைச் சீமையைச் சுற்றிலும் உள்ள பாளையக்காரர்களிடமிருந்து சிவகங்கைப் பிரதானிகள் உதவி பெறுவதைத் தடுக்கும் தங்களது முதல் கட்ட திட்டத்தை கும்பெனியார் இவ்விதம் நிறைவேற்றினர். ஆனால் சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் இல்லை. தங்களது கிளர்ச்சியையும் கைவிடவில்லை. மாறாக, மிகுந்த ஆர்வத்துடன் தங்களது பரங்கி எதிர்ப்புப் போரைத் தொடர்ந்து வந்தனர்.

ஏற்கனவே அவர்கள் மதுரைச் சீமையின் மேற்குப்பகுதியைப் பிடித்து வைத்து இருந்தனர். இன்னொரு பகுதியான பாவளியை இப்பொழுது கைப்பற்றினர். மேலும், திருமோகூர் கோட்டை ஏற்கனவே இவர்கள் கைகளில் இருந்ததால் கிளர்ச்சிக்காரர்கள் அடுத்து மதுரையைப் பிடிக்க முயன்றனர். ஊமைத்துரையின் தலைமையில் ஒரு அணி மதுரைக் கோட்டையைப் பிடிப்பதற்குச் சென்றது. ஆனால் மிகுந்த பாதுகாப்புடன் பரங்கியர் அங்கு இருந்ததால், கிளர்ச்சிக்காரர்கள் சிவகங்கைக்குத் திரும்பினர்.[18] இன்னொரு அணி - இரண்டாயிரம் பேர்களுடன், சின்ன மருது சேர்வைக்காரர் மகன் சிவத்த தம்பி தலைமையில், தொண்டி வழியாக வடக்கு நோக்கி சோழச்சீமைக்குள் சென்றது. பொன்பத்தி, அறந்தாங்கி, அதிரைக்குடி, பட்டுக்கோட்டை மாங்குடி ஆகிய ஊர்களைக் கடந்து நாகூர் சென்றது.[19] வழி நெடுகிலும்

16 Ibid (24-6-1801) pp. 5030-32.

17 Board of Revenue Consultations-vol. 235, (14-9-1799) p. 806.

18 Military Consultations vol. 285 (A) (7-7-1801), p. 5051-52.

19 Military Consultations vol. 296 (4-8-1801) p. 5380

கிளர்ச்சிக்காரர்களுக்கு மக்கள் பேராதரவு வழங்கினர்.[20] நாகூரை முற்றுகையிட்ட இந்த அணியை கும்பெனியாரின் பிரதிநிதி கேப்டன், பிளாக்பர்ன் கடுமையாகத் தாக்கினான். கிளர்ச்சிக் காரர்களது முன்னேற்றம் தடைப்பட்டது. முயற்சி தோல்வியுற்றது. இந்தத் தோல்விக்கு தஞ்சை அரசரும் புதுக்கோட்டைத் தொண்டமானும் தான் காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.[21]

கும்பெனி வீரர்களுக்குத் தேவைப்பட்ட வெடிமருந்து, உணவுப்பொருட்களை இந்த ''இரண்டு விசுவாசிகளும்'' வழங்கி உதவியதுடன், தங்களுடைய ஒற்றர்கள் மூலம் கிளர்ச்சிக்காரர்கள், அவர்களது ஆதரவாளர்கள் பற்றிய துப்புக்களைச் சேகரித்து அப்பொழுதைக்கப்பொழுது அனுப்பி வந்தனர்.[22] அறந்தாங்கி காட்டிற்குள் புகுந்து, இருந்த முன்னூறு கிளர்ச்சிக்காரர்களை விரட்டி அடிப்பதற்கு எழுநூறுவீரர்களைத் தொண்டமான் அனுப்பி வைத்தார். அவர்களது உதவியினால், பிளாக்பர்ன் கிளர்ச்சிக் காரர்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துத் தாக்கினான்.

கிளர்ச்சிக்காரர்களது மற்றுமொரு அணி கோட்டைப்பட்டினத்தில் இருந்தது.[23] அந்தப்பகுதி பாளையக்காரர் சிலரது உதவியுடன் அந்த அணி தஞ்சையை நோக்கிச் சென்றது. இந்த அணிக்கு பட்டூர் தலைமை தாங்கிச் சென்றார். இவர் ஏற்கனவே மயிலப்பனுடன் சேர்ந்து முதுகுளத்தூர் கமுதிப் போர்களில் பங்கு கொண்டவர். எதிர்ப்பட்ட சில பாளையக்காரர்களைத் தாக்கி, அவர்கள் பின்வாங்கி ஓடுமாறு செய்தார், இதனையறிந்த பிளாக்பர்ன், மேஜர் மேயர் தலைமையில் நான்கு அணிகளையும் ஆயிரம் கைக்கூலிகளையும் அனுப்பி வைத்தான். அறந்தாங்கி வழியாக அவர்கள் சிறுகம்பையூர் சென்றனர். அங்கிருந்து வாரூர் அருகே முகாமிட்டு இருந்த கிளர்ச்சிக்காரர்களுடன் மோதினர். கடுமையான சண்டை, ஐம்பது கிளர்ச்சிக்காரர்கள் தியாகிகள் ஆயினர்.

---

20 Military Consultations vol. 296 (11-8-1801) p. 5645.

21 Military Consultations vol. 285-A (1-7-1801) p. 5034

22 Ibid 12-8-1801 pp, 6900-6901

23 Ibid 1-7-1801 p. 5034

திடீரென அப்பொழுது மழை பெய்ததால் பரங்கிகள் தப்பினர்.[24] என்றாலும் தஞ்சை நோக்கிச் சென்ற பட்டூர் அணி துண்டிக்கப் பட்டதால் அவர்களது திட்டம் நிறைவேறவில்லை. ஆனால் அறந் தாங்கி காட்டில் அத்தியோடி என்ற இடத்தில் கிளர்ச்சிக்காரர் களிடம் அகப்பட்ட கும்பெனியாரது கூலிகள் படாத பாடுபட்டனர். சாப்பிடுவதற்கு ஒரு மணி அரிசி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. குதிரைகளுக்கு கூளமும் கூட கிடைக்காது தவித்தனர்.

கமுதிக்கோட்டை

21. 7. 1801 தேதி கமுதிக்கோட்டையை வெள்ளைமருது தலைமையிலான படைப்பிரிவு தாக்கியது. அப்பொழுது அந்தக் கோட்டையின் பாதுகாப்பு லெப்டினண்ட் கார்டு பொறுப்பில் இருந்து வந்தது. அவருக்கு உதவுவதற்கு இராமநாதபுரம் மறவர் அணியும் மூன்றாவது ரெஜிமெண்ட்டில் முதல் அணியும் அங்கு நிலைகொண்டு இருந்தன. ஒருவார முற்றுகைப்போரினால் பயன் ஏதும் ஏற்படாததால், வெள்ளைமருது அவசர அலுவலாக சிவகங்கை திரும்பினார். முற்றுகையைத் தொடருமாறு மீனங்குடி முத்துக்கருப்பத்தேவரைக் கோரி இருந்தார். மிகுந்த உற்சாகத் துடன் கிளர்ச்சிக்காரர்கள் அணி அங்கே தாக்குதலைத் தொடர்ந் தது. 13. 8. 1801ம் தேதியன்று வெள்ளைத் தளபதி கார்டு சமா தானம் கோரி வெள்ளைக்கொடியுடன் கோட்டைக் கொத்தளத்தில் நின்றுகொண்டு கிளர்ச்சிக்காரர்களது ஒப்புதல் கோரினான்.[25] அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத கிளர்ச்சிக்காரர்கள் அவரை சரணடையுமாறு நிர்ப்பந்தித்து வந்தனர். முற்றுகை தொடர்ந்தது. இதற்கிடையில் இந்த அணியினரில் சிலர், பழம னேரிக்குச் சென்று அங்கிருந்த கும்பெனிப்படையைத் துரத்தி அடித்தனர். அடுத்து திருச்சுழியையும் கைப்பற்றினர்.[26]

இந்தகைய தோல்விகளினால் பதட்டம் அடைந்த கும்பெ னியார், இராமநாதபுரம் கோட்டையில் இருந்து அவசர உதவி யாக அறுநூறு சுதேசி சிப்பாய்களையும் நாகலாபுரத்தில் இருந்து ஐந்நூறு எட்டப்பனது ஆட்களையும், மூன்று பவுண்டு பீரங்கிகள்

---

24 Ibid 27-8-1801 pp. 6934-35

25 Military Consultations vol. 285. A. pp. 6850-51

26 Ibid. 286. 4.8.1801. pp. 5352-56

இரண்டையும் மேஜர் மக்காலே தலைமையில் கமுதிக்கு அனுப்பி வைத்தனர். இப்பொழுது போர் மிகவும் உக்கிரமாக நடந்தது. மக்காலேயின் பிசாசுத் தாக்குதலுக்கு முன்னர் கிளர்ச்சிக்காரர்கள் எதிர்ப்பு எடுபடவில்லை. பள்ளிமடத்தில் இருந்த கிளர்ச்சிக்காரர் களும் கமுதி கோட்டைப் போரில் கலந்து கொள்ள ஓடோடி வந்தனர். ஆனால் அதற்குள் போரின் போக்கு மாறிவிட்டது. பரங்கிகளது கை ஓங்கிவிட்டது.

27-8-1801 ம் தேதி முற்பகல் கமுதி கோட்டை போர் நின்றது. கிளர்ச்சிக்காரர்களில் உயிர் தப்பியவர்கள் மிகவும் குறைவு காலமெலாம் வீரவணக்கம் செலுத்திப் போற்றும் வரலாற்றை அங்கு கிளர்ச்சிக்காரர்கள் படைத்தனர். கமுதி கோட்டைக்கு வடக்கே வெகு தொலைவு வரை பிணக்குவியல்கள் காணப்பட்டன. பிறந்த மண்ணின் மானங்காக்கப் போராடிய மறவர்களது மகத்தான தியாகத்தை நினைவு படுத்தும் வகைகளில் அந்தக் குவியல்கள் ஆங்காங்கு காணப்பட்டன. கிளர்ச்சிக்காரர் அணியைச் சேர்ந்த ஏழு ''சேர்வைக்காரர்கள்'' அந்தப் போரில் மடிந்தனர். இது ஒரு ஈடு செய்ய இயலாத இழப்பாகும். அத்துடன், அபிராமம் அருகில் நடந்த போரில் மட்டும் நானூறு போராளிகள் பலியானார்கள்.[27]

இந்தப்போரில் பரங்கிகளது பீரங்கித் தாக்குதலைப் போன்று எட்டப்பனது எடுபிடிகள் தாக்குதலும் மிருகத்தனமாக இருந்தது.. அத்துடன் மீனங்குடி முத்துக்கருப்பத்தேவரைப் பின்பற்றி கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி வந்த சித்திரங்குடி, ஆப்பனூர் நாட்டார்கள் போர் கடுமையாக நடக்கும் பொழுது போராளிகளைக் காலை வாரிவிட்டதுதான் கொடுமையிலும் கொடுமையாக இருந்தது.[28] பரங்கிகள் அணியில் இராமநாதபுரம் மறவர்கள் இருப்பதைப் பார்த்தவுடன் அவர்கள் மனம் மாறிவிட்டனர் போலும்!

கர்னல் மில்லரும் அவனது கூலிப்பட்டாளமும் கிளர்ச்சிக்காரர்களை சிக்கல் வரை பின் தொடர்ந்து விரட்டி பேரிழப்புக்களை உண்டாக்கினர். ஆனால் கிளர்ச்சிக்காரர்கள் தளர்ச்சியடையவில்லை. அவர்கள் இராமநாதபுரம் கோட்டையைத் தாக்கி மீட்பதற்குத் திட்டமிட்டனர். அப்பொழுது கேப்டன் மக்ளாயின்

27 Military Consultations vol. 286-pp 6854-56

28 Military Consultations vol. 288(A) (27-8-1801) p. 6855

பொறுப்பில் கோட்டையின் பாதுகாப்பு திருத்தி அமைக்கப்பட்டு இருந்தது. தாக்குதலை ஊமைத்துரையும் பெரிய மருதுவின் மக்களும் மூவாயிரம் பேருடன் தொடருவதற்குத் தீர்மானிக்கப் பட்டது. காளையார்கோவில் கோட்டையிலிருந்து கிளர்ச்சிக் காரர்கள் அணியும் இராமநாதபுரம் சீமை எல்லையை அடைந்த பொழுது கூடுதலான பாதுகாப்பு உத்திகள் இராமநாதபுரத்தில் ஏற்பட்டுஇருப்பதாகவும், கிளர்ச்சிக்காரர்கள் அணி தாக்குதலுக்குப் போதுமானது அல்ல என்றும் ஒற்றர்கள் செய்தி தெரிவித்ததால் கிளர்ச்சிக்காரர்கள் காளையார் கோவிலுக்குத் திரும்பினர்.[29]

இராமநாதபுரம் கோட்டையில் இருந்த கும்பெனியார் அணி கள், இராமநாதபுரத்திலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்தன. அதே நேரத்தில் அறந்தாங்கிப் பகுதியிலிருந்த கிளர்ச்சிக்காரர் களை கேப்டன் பிளாக்பர்ன் இராமநாதபுரம் சீமைக்குள் தெற்கு திசை எல்லைக்குள் நெருக்கித் தள்ளினான், சார்ப்பாய் என்ற ஊரில் பரங்கிகள் அட்டகாசம் செய்தனர். அறந்தாங்கி பகுதியில் கிளர்ச்சிக்காரர்கள் கை ஓங்குவதற்கு அங்குள்ள மக்கள் மிகவும் உதவி வந்தார்கள். பிளாக்பர்னது பயமுறுத்தலையும் மீறி இவர்கள் கிளர்ச்சிக்காரர்களுக்குத் தேவையான உணவுப்பொருட் களை வழங்கி வந்தனர்.[30] இதனால் கோபங்கொண்ட பிளாக்பர்ன் அந்தக் குடியிருப்பைப் சூரையாடிக் கொளுத்துமாறு தென்கொண் டான் என்ற துரோகிக்கு உத்திரவிட்டான். அப்பொழுது தென் கொண்டான் தலைமையில் எழுநூறு கைக்கூலிகள் இருந்தனர். பின்னர் இந்த அணியும் இராமநாதபுரம் கலெக்டர் திரட்டிய பதினாயிரம் பேர்கள் கொண்ட பெரும் படையுடன் சேர்ந்து கொண்டு இராமநாதபுரத்திற்கு வடக்கே உள்ள ''நாடுகளில்'' உள்ள இரண்டாயிரத்து ஐநூறு கிளர்ச்சிக்காரர்களை அழிப்பதில் முனைந்தனர்.[31] இந்தக் கூலிப்படையின் முயற்சி முற்றுப்பெறா விட்டாலும் ஆங்காங்கு உள்ள கிளர்ச்சிக்காரர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் வேட்டையாடினர். சிவகங்கைக்கு வடக்குப் பகுதியில் தொண்டமான் சீமை எல்லையில் காடுகளில் இவ்விதம்

---

29 Ibid vol. 288 (A), (21-9-1801), p. 6962

30 Ibid vol. 288 (A) (15-9-1801), pp. 6844-45

31 Military Consultations vol 288(A) 11-9-1801 pp. 6954-56

வேட்டையாடிப் பிடித்த நூறு குடும்பத்தினர் பற்றிய விவரத்தை தொண்டமான் கலெக்டருக்கு அனுப்பிவைத்தான்.[32] அவர்கள் அனைவரும் திருமயம் கோட்டையில் சிறைவைக்கப்பட்டு சித்திர வதை செய்யப்பட்டனர்.

ராஜசிங்கமங்கலம், அறுநூற்றி மங்கலம், திருவாடனை, ஓரியூர் ஆகிய இடங்களுக்குக் கூலிப்படை அனுப்பப்பட்டு கிளர்ச் சிக்காரர்கள் மீது நெருக்குதலை ஏற்படுத்தினர்.[33] ராஜசிங்க மங்கலம் நாட்டில் இத்தகைய நடவடிக்கைகளினால் வன்முறை தலைவிரித்து ஆடியது. கிளர்ச்சிக்காரர்கள் பலர் கைது செய்யப் பட்டனர். கிளர்ச்சியின் வேகம் குலைக்கப்பட்டது.[34] கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டு மக்களை ஊக்குவித்து வந்த வீர இளைஞன் குமாரத்தேவனும் அவனுடைய மூன்று தோழர்களும் பிடிக்கப்பட்டு இரும்புச் சங்கிலியில் பிணைத்து வைக்கப்பட்டனர். தூக்க இய லாத அந்தச் சங்கிலியின் பளுவினால் அந்த இளைஞர்களது உடல் துவண்டு வாடியது. காட்டு மிராண்டித்தனமான இந்த அடக்கு முறைகளுக்கு உடந்தையாக, உதவியாக வன்னியத்தேவன் என்ற துரோகி இருந்து வந்தான்.[35]

குமாரத்தேவனையும் அவனது தோழர்களையும் "நீதி" விசாரணை செய்து தண்டனை வழங்க ஒரு குழுவை கும்பெனியார் நியமனம் செய்தனர். கர்னல் மார்ட்டின்ஸ், தாமஸ்கிரீன், பாரிஸ் என்ற பரங்கிகள் தான் அந்தக் குழுவினர்.[36] குற்றம் சாட்டுபவர் களும், குற்றங்களுக்காக நியாய விசாரணை நடத்தி, தண்டனை வழங்குபவர்களும் கும்பெனியார் நியாயம் எங்கே இருக்கிறது? இந்தக் குமாரத்தேவன் ராஜசிங்கமங்கலம் பகுதியில் கும்பெனி யாரது ஆதிக்க வெறிக்கு எதிராகக் கிளர்ச்சிக்களை நடத்திய மாவீரன் என்ற விவரம் மட்டும் தெரிகிறது. அவனது நாட்டுப் பற்றுமிக்க நடவடிக்கைகளை விவரமாகத் தெரிந்து கொள்ள உத வும் ஆவணம் எதுவும் கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரி

---

32 Ibid p. 6959

33 Ibid p. 6967

34 Madurai District Records, vol 219 (20-9-1801) (24-9-1801)

35 Ibid vol. 1134, (20-9-1801)

36 Revenue Sundries. vol. 26. (20-9-1801)

யது. அவனுக்கு கடுமையான தண்டனை வழங்குவதற்கு என்று ஒரு குழுவினைக் கும்பெனியார் அமைத்ததிலிருந்து அந்த மாவீர னது போராட்டத்தினால் பரங்கிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இந்த ''நீதி விசாரணைக்குழு'' கிளர்ச்சிக்காரர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்து, கசையடி கள், நாடுகடத்தல் போன்ற மோசமான கொடும் செயல்களினால் ''நீதியை'' நிலை நாட்டியது. இராமநாதபுரம் உதவிக்கலெக்ட ரும், கர்னல் மில்லரும் இந்தத் தண்டனைகளை நிறைவேற்றி வந்தனர். இராஜ சிங்கமங்கலத்தைச் சேர்ந்த ஜகந்நாத ஐயன் என்ற கிளர்ச்சித்தலைவருக்கு ஓராயிரம் கசையடிகளை வழங்கி, அவரது அனைத்து சொத்துக்களையும் கும்பெனியார் உடமை யாக்கியதுடன் ஆறுதல் பெறவில்லை. அவரை வங்கக்கடலுக்கும் அப்பால் நாடு கடத்தி மனநிறைவு பெற்றது. கும்பெனி நிர் வாகம்.[37] பிறந்த பொன்னாட்டின் மீது பாசம் கொண்டு அதனு டைய விடுதலைக்கு உழைத்தது. - ஏகாதிபத்திய வெறியர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போரிட்டது-இவைதான் இந்த தியாகி புரிந்த ''அக்கிரமங்கள்''.

இராமநாதபுரத்திற்கும் தொண்டிக்கும் இடைப்பட்ட இராம நாதபுரம் சீமைப்பகுதியில், கும்பெனியாரது ஆசைக்கனவுகளுக்கு எதிராக அணி சேர்த்து, கிளர்ந்து எழுந்த நாட்டுப்பற்று மிக்க நல்லவர்களின் பட்டியலில் இந்தக் குமாரத்தேவனும், ஜகநாத ஐய்யனும் சிறப்பிடம் பெற்று இருந்தனர் என்பதை அவர்கள் பெற்ற ''பரிசுகளில், இருந்து தெரியவருகிறது. அவர்கள் நடந்து சென்றபாதையில் நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்ட ஆயி ரக்கணக்கானோர், ஏனைய தியாகிகளுடன் அணி திரண்டு ஆர்ப் பரித்து கும்பெனியாரை எதிர்த்துப் போராடிய பொழுது அடக்கு முறை கொடுமைகளுக்கு அஞ்சிய, நெஞ்சுரமும் நேர்மையும் இல் லாத கோழைகள் சிலரது துரோகமும் சுயநலமும், பாற்கடலில் கலந்த நஞ்சைப்போன்று விடுதலைப் போராட்டத்தை மிகவும் பாதித்தது. வெற்றிக்குப் பதிலாக வீழ்ச்சிக் கொடி காட்டியது. இந்தக் கயவர்களது கோழைத்தனத்தால் போராளிகளின் தாக்கு தலும் முன்னேற்றமும் தடைப்பட்டதுடன் அவர்களது போராட் டத்திற்குத் தேவையான ஆயுதங்களும், வெடிமருந்தும் வெளி யில் இருந்து பெறுவதும் இல்லாமல் போய்விட்டது.

---

37 Madurai District Records vol. 1219. (25-10-1801)

இலங்கையில்·இருந்த டச்சுக்காரர்கள் இந்த ஆயுதங்களைக் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி வந்தனர். தொண்டிக்கும் பம்பாய்க் கும் இடைப்பட்ட கடற்பகுதி வழியாக இச்சாதனங்கள் மறவர் சீமைக்குள் நுழைவதை தடுக்கக் கும்பெனியார் சூளர் என்ற பரங்கி தலைமையில் கண்காணிப்பு அணி ஒன்றை நியமித்து இருந்தனர். இவர்களுக்கு இந்தக் கோழைகள் இரகசியமாக துப்புகள் தெரிவித்து வந்ததால் கேப்டன் சூளரது அணி சுறு சுறுப்பாக இயங்கியது. தொண்டிப் பகுதியில், கிளர்ச்சிக்காரர் களின் ஆயுதப்படகுகளை அவன் கைப்பற்றி, அழிக்கவும் முடிந் தது.[38] சிவகங்கைச்சீமைப்போர் நீட்டிப்புக்கு தேவையான உயிர்ப் பொருளான வெடிமருந்துக்கு இப்பொழுது தட்டுப்பாடு ஏற்பட் டது. மறக்குடி மக்களது பழமையான ஆயுதங்களான வேல், வாள், வளரி, எறியீட்டி, குத்துவாள் ஆகியவைகளைக் கொண்டு துப்பாக்கியையும் பீரங்கியையும் துணைகொண்டு போராடும் கும் பெனியாரை எதிர்த்து எத்தனை நாட்களுக்குப் போராட முடியும்? சிவகங்கைக் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஏற்பட்ட மிகப்பெரும் இடர்ப் பாடு இது. என்றாலும், இலட்சியத்தில் இடைவிடாது இணைந்து இருந்த அவர்களது அக்கரையும் ஆவேசமும் இந்தக் குறை பாட்டினைப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. அவர்களது போர்த் திறன் வெடிமருந்து ஒன்றில் மட்டும் புதைந்து இருக்கவில்லையே! உலகையே வெற்றி கொள்ளலாம் என்ற நினைப்பு ஏற்பட்டு விட் டால், உடல் அவர்களுக்கு பெருஞ்சுமையென எண்ணுவார்கள். அதில் பொருந்தியுள்ள புனித உயிரை வழங்கிப் புகழையும் சம்பாதிக்கும் பெரு விருப்பு உள்ளவர்கள் அவர்கள்.[39]

---

38 **Military Consultations**, vol. 288 (A) (10-9-1801). pp. 6857-58 (24-9-1801) p.p. 6860.

39 ஜெயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடல் எண். 354

"உலகு கைப்படும் எனினும் அது ஒழிபவர்
உடல் எமக்கு ஒருசுமை என முனிபவர்
உயிரை விற்று உறுபுகழ் கொள உழல்பவர்
ஒருவர் ஒப்பவர் ... ... ... ... ... ..."

# 9

## காளையார் கோவில் நோக்கி

ஜூலை மாதம் 30, 1801ம் ஆண்டு காளையார் கோவிலை அடுத்து இருந்த அரண்மனை சிறுவயல் கிராமம் ஆங்கிலக் கும் பெனியார் கைவசமாகியது. மருது சேர்வைக்காரர்களது மாளிகை கள் அமைந்து இருந்த அழகிய ஊர். அங்கு வீதிகள் விசாலமாக வும் அழகாகவும் அமைக்கப்பட்டு இருந்ததாகவும், இன்னும் அழகை விட தூய்மை மிகுந்த இத்தகைய ஊரை இந்தியாவில் வேறு எங்குமே பார்க்கவில்லை என கர்னல் வெல்ஷ் தமது குறிப்பு களில் வரைந்துள்ளார்.[1] ஒப்புவமை இல்லாத இந்த ஊரை, கும் பெனியார் கைப்பற்றிய பிறகு அது சுடுகாடாக காட்சி அளித்தது. என்றாலும், காளையார் கோவில் கோட்டைக்கான போர் முயற்சி கள் முடுக்கப்பட்டன. அந்த ஊரின் வடபகுதியில் பாசறை அமைக்கப்பட்டு, காளையார் கோவிலுக்கு அரண்மனை சிறுவய லில் இருந்து காடுகள் வழியாக சாலை அமைக்கும் பணி மேற் கொள்ளப்பட்டது. பரங்கியரது பொறிஇயலார் அணியுடன் புதுக் கோட்டைத் தொண்டமான் அனுப்பிவைத்த காடுவெட்டி* கூலி யாட்களும் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களது பாதுகாப்பிற்காக இருநூறு பரங்கிகளும், மலேயா நாட்டு வீரர் அணியும், ஆறு பவுண்டர் பீரங்கிகளும் சென்றன. மறவர் சீமை விடுதலை வீரர் கள் அவர்களைத் தாக்குவதும் மறைந்து விடுவதுமாக இருந்தனர்.

மிக நெருக்கமாகவும், இணைப்பாகவும் வளர்ந்துள்ள காட்டு மரங்களை அழித்து பாதை ஏற்படுத்தும் பணி தொடர்ந்தது. ஒரே நேரத்தில் பல இடங்களில் இருந்தும் தொடர்ச்சியாக வெடிக்கும்

---

1 Col. Welsh : Military Reminiscencs vol. I p. 92.

* இந்த கூலியாட்களின் வழித் தோன்றல்கள் இன்னும் புதுக்கோட்டைப் பகுதி யில் இருப்பதுடன் தங்களது இயற்பெயருடன் "காடுவெட்டி" என்ற பகுதி யையும் பெருமையுடன் இணைத்து வழங்கி வருகின்றனர்.

மறவர்களது துப்பாக்கிச் சூடுகள் அந்தப்பணிக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுத்தி வந்தன. இந்தத் தாக்குதலைத் தடுத்து நிறுத்தி, காட்டை அழிக்கும் பணியை மேலும் தொடர்வது என்பது மிகவும் சிரமமான செயலாக இருந்தது. மேலும், அதிகமான எண்ணிக்கையில் உள்ள விடுதலை வீரர்கள் மிக நெருக்கமான மரப் புதர்களுக்கிடையில் மறைந்து இருப்பதைக் கண்டு பிடித்து தாக்குவதும் இயலாததாக இருந்தது. இந்த விவரங்கள் 15-8-1801 ஆம் தேதி கர்னல், அக்கினியூ எழுதிய கடிதத்தில் காணப்படுகின்றன.[2] என்றாலும், கூடுதலாக காடுவெட்டிகளை பணிக்கு அமர்த்தினர். அப்பொழுதும் முன்னேற்றம் இல்லை. காடு அடர்த்தியாக இருப்பதால், ஊடுருவிச் செல்வது மிகவும் சிரமமாக இருப்பதாகவும், தமது பணியில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு இல்லை என்பதை கும்பெனி தலைமைக்கு எழுதிய இன்னொரு அறிக்கையில் அவன் குறிப்பிட்டு இருந்தான்.[3]

இந்தப்பணியில் ஈடுபட்டு இருந்த கும்பெனித் தளபதி கர்னல் வெல்ஷின் குறிப்புக்களில் பரங்கிகளது முயற்சியும் அதற்கு விடுதலை வீரர்கள் ஏற்படுத்திய இடைஞ்சல் பற்றியும் கூடுதலான விவரங்கள் காணப்படுகின்றன. அந்தக் குறிப்புக்களில் இருந்து ;[4]

1801 ஆகஸ்டு முதல் நாள்

"மேஜர் ஷெப்பர்டு குதிரைப்படை அணியுடன் சென்று இருகல் தொலைவு தூரம் சென்று ஒரு சிற்றூரை அடைந்தார். அங்கே தங்கி இருந்த இருநூறு கிளர்ச்சிக்காரர்கள் மீது தாக்குதல் தொடுத்தார். அவர்களும் நமது அணியின் மீது பதில் தாக்குதல் தொடுத்து சுட்டுவிட்டு மறைந்து விட்டனர். மேஜர் மக்லாயிட் தலைமையில் காட்டை அழிக்கும் பணி தொடர்ந்தது. மாலை வரை முக்கால்மைல் தூரம் வரை பாதை ஏற்படுத்தித் திரும்பினர். அப்பொழுது தொடுக்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் மட்டும் கொல்லப்பட்டனர்.

---

2 Military Consultations, vol 288 (A). (15-8-1801) p. 6838.

3 Ibid, (21-8-1801) p. 6840

4 Col. Welsh: Military Reminiscances (1831)vol. I, pp.92-122.

ஆகஸ்டு – இரண்டாம் நாள்

''அதே அணி இன்று நூற்று ஐம்பது வீரர்களுடன் காட்டிற்குள் நுழைந்தவுடன், கிளர்ச்சிக்காரர்கள் அவர்களை துப்பாக்கியால் பயங்கரமாகச் சுட்டனர். மிகவும் பீதியடைந்தவர்களாக, மலாயா நாட்டு வீரர்கள், அணியின் தலைமையில் இருந்து நழுவி, அணியின் மத்தியில் உள்ள பரங்கிகளிடம் ஓடி வந்தனர். அவர்களினாலும் கிளர்ச்சிக்காரர்களது தாக்குதலைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இரண்டு மலேயா வீரர்கள் அப்பொழுது மடிந்தனர். அணியின் இன்னொரு பகுதியில் இருந்த பிரெஞ்சு நாட்டு அலுவலரான என்சைன் கௌபில் அப்பொழுது கிளர்ச்சிக்காரர்களால் தாக்கப்பட்டார். அவரது அணியினர் கிளர்ச்சிக்காரர்களை மிகுந்த தீரத்துடன் சமாளித்தும் கூட அவர்கள் கிளர்ச்சிக்காரர்களால், விரட்டி அடிக்கப்பட்டனர். என்சைன், இரு வேல்கள் தாக்கிய காயத்துடன், உடைகள் கிழிந்தவராக உயிர் தப்பி ஓடி வந்தார். அவருடன் இருந்த மலேயா தளபதி ஒருவரும் மற்ற இரு வீரர்களும் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து ஆச்சரியப்படத்தக்க வகையில் உயிர் தப்பினர். .... ... ... நாள் முழுவதும் அவர்களது தாக்குதலைச் சமாளிக்க வேண்டியதாக இருந்தது. எதிரிகளில் மூவர் கொல்லப்பட்டனர். உற்சாகத்துடன் முன்னேறிய சிலர் கொல்லப்பட்டனர். மலேயா வீரர்கள் மூவர் படுகாயமடைந்து பிற்பகல் மூன்று மணிக்கு பாசறை திரும்பினர். அறுநூறு கெஜதூரம் வரை அன்று காடு அழிக்கப்பட்டது.

ஆகஸ்டு - மூன்றாவது நாள்

''ஆறுபவுண்டர் பீரங்கிகள் நான்குடன் கர்னல் டால்ரிம்பிள் தலைமையில் அணி புறப்பட்டது. வழியில் கிளர்ச்சிக்காரர்கள் தடுப்புக்கள் ஏற்படுத்தி வைத்து, சிறிய பீரங்கி ஒன்றினை நிறுத்தி வைத்து இருந்தனர். நமது பீரங்கிகள் படபடத்தவுடன் எதிரிகள் தங்களது பீரங்கியுடன் காட்டிற்குள் மறைந்து விட்டனர். தடுப்புகள் அகற்றப்பட்டன. என்றாலும் அவர்கள் நாள் முழுவதும் நம்மை நோக்கி சுட்டவாறு இருந்தனர். நமது அணியில் இருவர் மட்டும் பலத்த காயமடைந்தனர். நானூற்று முப்பது கஜ தூரம் பாதையை வெட்டிய பிறகு, நான்குமணிக்கு நமது அணி திரும்பியது. இன்றைய மோதலில் நெருக்கமாக காட்டை ஊடுருவுதலுக்கு துப்பாக்கியைவிட பீரங்கியை பயன்படுத்துவது சிறப்பாகத்

தெரிந்தது. என்றாலும், எதிரிகள் நமது அணியைத் தொடர்ந்து வந்து சில கால்நடைகளையும் குடிகளையும் வெட்டி வீழ்த்தினர்.

''எதிரிகள் அணியில் மிகவும் நம்பிக்கையான பணியில் ஈடுபட்டு இருந்தவர் உடையாத் தேவரது மாமனாரும் ஒருவர். இன்று மாலையில், அவர் நமது அணிக்கு தப்பித்து வந்தார். நமது பாசறையின் பக்கத்தில் பணியில் ஈடுபட்டிருந்த காரணத்தினால் நமது தரப்பிற்கு அவர் ஓடி வருவது இலகுவாக அமைந்தது. தமது தலைவர்களது திட்டங்களையும் நடவடிக்கைகளையும் நன்கு அறிந்து இருந்த அவர், கர்னல் அக்கினியூனிடம் சீமையின் நிலைமை பற்றியும் நடக்க விருக்கும் போர்கள் பற்றியும் மிகவும் பயனுள்ள தகவல்களைத் தெரிவித்தார். கர்னல் இன்னிங்ஸ் தலைமையில் சென்ற அணி பயன் ஏதும் இல்லாமல் பாசறை திரும்பியது.

ஆகஸ்டு - நான்காவது நாள்

''இயல்பான அணியுடன் சென்ற கர்னல் அக்கினியூ வெட்டப்பட்ட குழி ஒன்றுக்குள் இருந்து கொண்டு எதிரிகள் மீது பயங்கரமான தாக்குதலைத் தொடுத்தார். அந்த அணியில் இருந்த பதினெட்டுப்பேர்கள், அந்த இடத்திலேயே பலியாயினர். அப்பொழுது அங்கே வெள்ளை மருதுவைத்தவிர மற்றுமுள்ள அனைத்து தலைவர்களும் இருந்தனர். எதிர்பாராத இந்த கடுமையான சூட்டினால் விடுதலை வீரர்கள் பல பகுதிகளிலும் சிதறி ஓடினர். மாலை ஐந்து மணிக்கு இந்த அணி பாசறைக்குத் திரும்பியது. ஐநூற்று என்பது கஜம் தொலைவு வரை பாதை அமைக்கப்பட்டது. இன்றைய தாக்குதலில் நமது தரப்பில் நான்கு வெள்ளையரும் ஒன்பது சுதேசிகளும் கொல்லப்பட்டனர். காயமுற்றனர். மேஜர் கிரகாம், ஏராளமான தேவையான பொருட்களுடன் வந்து சேர்ந்தார்.

ஆகஸ்டு மாதம் – ஐந்தாம் நாள்

''இன்று மேஜர் ஷெப்பர்டின் தலைமையில் சென்ற அணிக்கு அசாதாரண எதிர்ப்பு எதுவும் இல்லை, நானூற்று ஐம்பது கஜ தொலைவு பாதையை அமைத்துத் திரும்பினர். இனிமேல் அமைக்கப்பட வேண்டிய பாதையில் மிகவும் அடர்த்தியான காடு அமைந்து இருந்தது. இன்றைய தாக்குதலில் ஒரே ஒருவர் மட்டும் காயமடைந்தார்.

ஆகஸ்டு - ஆறாவது நாள்

''இன்று மேஜர் கிரகாம் தலைமையில் சென்ற அணி, பாதையின் இறுதியில் பெரிய தடுப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருப்பதைக் கண்டது. எதிரிகள் அங்கு மூன்று பகுதியாக அணி வகுத்து இருந்தனர். அவர்களிடம் நான்கு பீரங்கிகளும் இருந்தன. எதிரிகள் தங்கள் நிலைகளில் மிகுந்த உறுதியுடன் நின்று போராடினர். நமது அணிக்கு மிகுந்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியதுடன் பல வீரர்களையும் காயப்படுத்தினர். அவர்களது உக்கிரமான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் நமது அணியினர் தப்பித்து ஓடினர். அவர்களது தரப்பில் மிகுந்த சேதம் ஏற்பட்டு இருக்க வேண்டும். காட்டில் பல இடங்களில் அவர்கள் சிந்திய இரத்தம் தோய்ந்து கிடந்தது. நமது அணிகளுக்கு மிகவும் அதிகமான சேதம். மாலை நேரத்திற்குள் இருநூற்று முப்பத்து ஏழு கஜம் வரை பாதை வெட்டப்பட்டது.

ஆகஸ்டு - ஏழாவது நாள்

''நேற்றைய போரின் பொழுது வைத்து இருந்த தற்காப்பு நிலையை இருத்தி வைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மீண்டும் அந்த நிலை கைப்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. எதிரிகள் அவர்களது பீரங்கிகளையும், அவர்கள் தரப்பில் இருந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் எடுத்துச் சென்று விட்டனர். லெப்டினன்ட் கீல் தலைமையிலும், மேஜர் பெர்ஷன் தலைமையிலும் இரண்டு அணிகள் எதிர் எதிர் திசையில் அனுப்பப்பட்டன. மேலும் எதிர்ப்பு தென்படவில்லை. முன்னூற்று ஐம்பது கஜ தொலைவிற்கு காடு வெட்டி அழிக்கப்பட்டு பாதை ஏற்படுத்தப்பட்டது.

ஆகஸ்டு - எட்டாவது நாள்

''கர்னல் தால்ரிம்பிள் தலைமையில் பாதுகாப்பு அணி அனுப்பப்பட்டது. மீண்டும் அந்தப்பாதை முன்னால் தடுக்கப்பட்டு இருந்தது. லெப்டினண்ட் பிளச்சர் தலைமையிலான அணி எதிரிகளைத்துரத்தி அடித்தது. நம்மை நோக்கி அவர்கள் சரமாரியாக குண்டு மழை பொழிந்தனர். அவர்களுடன் ஒப்பிடுகையில் நமக்கு சேதம் மிகவும் குறைவு. இந்த இடத்தில் இருந்து பார்த்தால் காளையார்கோவில் கோபுரம் நன்கு தெரிந்தது. ஐநூறு கஜம் தொலைவு வரை காடு வெட்டப்பட்டு பாதை அமைத்துத் திரும்பப்பட்டது.

ஆகஸ்டு - ஒன்பதாவது நாள்

''இன்று மேஜர் ஷெப்பர்டு தலைமையில் அணி புறப்பட்டது. தனது போர் உத்திகளை மாற்றியவராக வேலை செய்ய வேண்டிய பகுதியில். ஒரே சமயத்தில் தமது பீரங்கிகளும் துப்பாக்கிகளும் வெடிக்குமாறு செய்தார். இதனால் ஆள் சேதம் இல்லாமல் அந்தப்பகுதியைக் கைப்பற்ற முடிந்தது. நமது முனைப்பான முன் னேற்றத்திற்குத் தடங்கலாக இருந்த அதே கண்மாய்க்கரை யைக் கைப்பற்றி. ஒரு இராணுவ நிலையாக மாற்றப்பட்டது. மூன்று பீரங்கிகளும் முன்னூறு வீரர்களும் அங்கு நிறுத்தப்பட் டனர் இந்தப்பணி முடிந்த நிலையில் கர்னல் இன்னிங்ஸ் தலை மையில் இன்னொரு அணி அங்கு வந்து சேர்ந்தது. தெற்கே முப் பது கஜ தூரத்தில் காளையார் கோவிலை நோக்கியவாறு அந்த நிலை இருந்தது. வெட்டிச் சாய்க்க முடியாத மிகப் பெரிய புளிய மரம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. ஒருபுறம் காளையார் கோவிலும், மறுபுறம் அரண்மனை சிறுவயலும் அங்கிருந்து துலக் கமாகத் தெரிந்தன.

ஆகஸ்டு – பத்தாவது நாள்

''கர்னல் இன்னிஸ் தலைமையில் பாதுகாப்பு அணி புறப் பட்டுச் சென்றது. எதிர்ப்பு எதுவும் இல்லாததால் ஐநூறு கெஜ தூரம் வரை காடு வெட்டப்பட்டது. அறந்தாங்கியைக் கைப்பற்ற அனுப்பப்பட்ட கேப்டன் பிளாக்பர்ன் வசதிக்குறைவு காரணமாக இங்கு திரும்பி வருவதாக தகவல் வந்தது. மேஜர் பெர்ஸனும் நூறு பரங்கி சிப்பாய்களும் இருநூறு சுதேசி சிப்பாய்களும் அங்கு பணியில் இருந்தனர்.

ஆகஸ்டு – பதினொன்றாம் நாள்

''மேஜர் பெர்ஸன் தலைமையிலான அணி மிகவும் குறை வான எதிர்ப்பைச் சமாளித்துக் கொண்டு நானூற்று ஐம்பது கஜம் தொலைவு காட்டை வெட்டி பாதை அமைத்தது. பாதையின் முடி வில் இருந்து காளையார்கோவில் கோபுரம் சுமார் ஒன்றரை மைல் தொலைவில் இருப்பது தெரிந்தது.

ஆகஸ்டு – பன்னிரண்டாம் நாள்

''லெப்டி. கர்னல் தால்ரிம்பிள் தலைமையில் சென்ற பாது காப்பு அணிக்கு பலமான எதிர்ப்பு இல்லை. எதிரிகளிடமிருந்து தொடர்ச்சியாக துப்பாக்கிகள் வெடித்ததாலும், நமது அணியின

ருக்கு காயம் எதுவும் இல்லை. அத்துடன் தென்கிழக்கில் இருந்து வந்த பெருமழையும் இடியும் சூறாவளிக் காற்றும் அவர்களது தாக்குதலைத் தடுத்து நிறுத்தின. நானூற்று ஐம்பது கஜ தொலைவு காடு வெட்டப்பட்டு ,நமது அணியினர் திரும்பினர்.

ஆகஸ்டு - பதின்மூன்றாம் நாள்

''மேஜர் ஷெப்பர்டு தலைமையில் சென்ற எட்டையாபுரம் வீரர்கள் அணி, வடமேற்காக பதினொரு மைல்கள் சென்ற பொழுது எதிரிகள் அவர்களைத் தாக்கினர். அவர்களில் சிலரைப் பிடித்துச் செல்லவும் முயற்சித்தனர். அன்மையில் உள்ள கண் மாய்க்கரை, முட்புதர்கள் மறைவில் இருந்து கொண்டு நம்மை நோக்கி சுட்டுக் கொண்டு இருந்தனர். குதிரை அணிகளின் பாதுகாப்பில் பரங்கி வீரர்கள் உதவியினால் மேஜர் அவர்களை விரட்டி அடித்தார். அங்கு குதிரைப்படையணி இயங்க இயலா மல் போய்விட்டது. எதிரிகள் நம்மை மட்டும் குறிவைத்து தாக் கினர். அவர்கள் அதிகமான எண்ணிக்கையில் இருந்தாலும், நமதுவீரர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஒவ்வொரு தாக்குதலையும் முறியடித்து சமாளித்தனர். நம்மிடமிருந்த சிறப்பான வகையிலான வெடிமருந்தும் இதற்குக் காரணமாகும். எதிரிகளில் குறைந்த அளவு இருநூறு பேர்களாவது கொல்லப்பட்டு அல்லது காயமுற்று இருக்க வேண்டும். வெடித்துக் கொண்டிருந்த நமது பீரங்கிகள் அருகில் வந்து சிறிதும் அச்சமில்லாமல் அவர்கள் போரிட்டனர். ...... மேஜர் மக்லாயிட் தலைமையிலான அணி இருநூற்று ஐம்பது கஜ தொலைவு வரை காட்டை வெட்டி பாதை ஏற்படுத்தியது. அங்கே காடு மிகவும் அடர்த்தியாகவும் மரங்கள் மிகவும் வைரம் பாய்ந்தவையாகவும் இருந்தன.

ஆகஸ்டு - பதினான்காவது நாள்

''கர்னல் இன்னிங்ஸ் தலைமையில் சென்ற அணி, இன்று முந்நூற்றி ஐம்பது கஜ தொலைவு வரை காட்டை அழித்து பாதை அமைத்தது. இப்பொழுது காளையார் கோவில் கோபுரம் ஒரு மைல் தொலைவில் தெரிந்தது. இரவு நேரத்தில் எதிரிகளது துப்பாக்கிச்சூடு இருந்தது. ஆனால் நமது தரப்பினருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

ஆகஸ்டு - பதினைந்தாவது நாள்

''பாதையின் முடிவிற்கு இன்று மேஜர் ஷெப்பர்டு தலைமை யில் நமது அணியினர் போய்ச் சேர்ந்தவுடன் எதிரிகளது மூன்று

பீரங்கிகள் நம்மை நோக்கிச் சுட்டன. அவைகள் இருந்த இடம் தெரியவில்லை. அதே நேரத்தில் அவர்களது துப்பாக்கி வெடி, ஜிங்காலி, குண்டுகள் நம்மை இரு புறங்களிலும் பின்புறத்திலும் தரக்கின. அவைகள் குறி தவறி நமது தலைகளுக்கு மேல் சென்றன. சிறிது நேர இடைவெளிக்குப்பிறகு எதிரிகள் நம்மை தாக்குவதற்க்கு ஏற்ற இடத்தைத் தேர்வு செய்தனர், அதனால் காடு வெட்டும் பணியை மேற்கொள்ள முடியவில்லை. அந்தப் பணி தொடருவதற்கு பாதுகாப்பு அளிக்கப் போதுமான வீரர்களும் நமது அணியில் இல்லை. ஆதலால் நமது அணியினரது உயிரைக் காப்பதற்கு ஏதுவாக, நமது அணியினர் நமது நிலைக்குத் திரும்பிவிட மேஜர் முடிவு செய்தார். நமக்கு வலது புறமாக இருநூறு கஜ தொலைவில் இருந்து அவர்களது பீரங்கிகள் நம்மை நோக்கி குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன. ஆதலால், உடனே திரும்ப இயலாமல் அவர்களது சுடுதல் ஓய்ந்த பிறகு பிற்பகலில் நமது நிலைக்குத் திரும்பினோம்.

**ஆகஸ்டு - பதினாறாவது நாள்**

மேஜர் மக்லாயிடு தலைமையில் இரண்டு அணிகளாக பீரங்கி, இல்லாமல், மிகுந்த சிரமத்துடன் முதல் நாள் போர் நடைபெற்ற கண்மாய்க் கரைக்குப் போய்ச் சேர்ந்தோம். அந்த இடம் இயற்கையாகவும் செயற்கையாகவும் நன்கு பலப்படுத்தப் பட்டு இருந்தது. நீண்ட போருக்குப்பிறகு, நமது அணியைச் சேர்ந்த மிகக் குறைவான வீரர்கள் மட்டும் அங்கு முன்னேறிச் செல்ல முடிந்தது. அதுவும் எதிரிகளது மிகக் கடுமையான துப் பாக்கிச் சூட்டிற்கு இடையில், ஆனால் எதிரிகள் இருப்பிடத்தை கண்டு கொள்ள முடியவில்லை.

**ஆகஸ்டு - பதினேழாவது நாள்**

இன்று இரண்டு அணிகளாகப் புறப்பட்டோம். இரண் டாவது அணியைச்சேர்ந்த நூற்று அறுபது பரங்கிகளும் நானூறு சுதேசி சிப்பாய்களும் சேர்ந்து ஆயிரத்து இருநூறு கஜ தொலை வில் பாதையை வெட்டி அமைத்துவிட்டுத் திரும்பினர். மற்ற அணி சாலையில் இருந்து கொண்டு பீரங்கிக் குண்டுகளை வெடித்துக் கொண்டு இருந்தனர். நம்மிடம் இருந்த குடிநீர் முழுவதும் தீர்ந்து விட்டது என்று தெரிந்தவுடன் அணியை

பாசறைக்குத் திரும்புவதற்கு மேஜர் பெர்ஸன் முடிவு செய்தார். அப்பொழுது பெருமழையும் பெய்யத் துவங்கியது.

ஆகஸ்டு - பதினெட்டாவது நாள்

''கர்னல் இன்னிங்ஸ் தலைமையில் சென்ற அணி, நேற்றைய பாதையில் மேலும் ஐந்நூறு கஜ தொலைவுவரை காட்டை வெட்டி பாதை அமைத்தது. எதிர்பாராத வகையில், எதிரிகள் பலமாகத் தாக்கினர். பலர் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் காயமுற்றனர், கர்னல் இன்னிங்ஸ் உயிர் தப்பி ஓடிவந்தார்.

ஆகஸ்டு - பத்தொன்பதாவது நாள்

''எதிரிகளது பீரங்கிகளை இன்று எப்படியும் கைப்பற்றி விட வேண்டும் என்ற முடிவில், தேர்தெடுத்த வீரர்களைக் கொண்டு அணியினை கர்னல் இன்னிங்ஸ் அமைத்தார். பரங்கிகளும் சுதேசி களுமான எண்ணூறு போர் வீரர்களைக் கொண்ட அந்த அணி, இரண்டு ஆறு பவுடர் பீரங்கிகளுடன் புறப்பட்டது. கேப்டன் பாக்ஷல், லெப்டினன்ட் கோர்டன் ஆகியோர்களுடன் நேற்று சென்ற வழியில் சென்றோம். அந்த கண்மாய்க்கரையை ஒதுக்கி தென்கிழக்காக இருநூறு கஜம் விலகிச் சென்று இன்னொரு கரைக்கு அறுபது கஜம் முன்பாகப் போய்ச் சேர்ந்தோம். அப் பொழுது எதிரிகள் தாக்கத் தொடங்கினர். கேப்டன் வெங்டன் அங்கு ஒரு பீரங்கியை நிறுத்தி வைத்தார். மிகவும் வேகமாக முன்னேறி .காடு வெட்டும் பணியைத் தொடருமாறு உத்திரவிட் டார். அதிக நேரமும் உழைப்பும் தேவைப்படும் அந்தப்பணி யைத் துவக்கும் பொழுது எதிரிகளது துப்பாக்கி வேட்டுச் சத்தம் இடைவிடாது கேட்டது. அங்கிருந்து சற்று தொலைவில் அவர் கள் தாக்குதலுக்கு தங்கள் அணியினை ஆயத்தம் செய்கிறார்கள் என்பதற்கான அறிகுறி என உணர்ந்தோம். கால்மணி நேரம் அமைதி நிலவியது. முற்பகல் 10 - 30 மணிக்கு எங்களைச் சுற்றி நாலாபுறமும் பயங்கரமான துப்பாக்கிக் குண்டுகள் வெடித்தன. எதிரிகள் எங்களுக்கு மிக அண்மையில் இருப்பதாகத் தெரிந்தது, ஆனால் அவர்களைக் கண்டு கொள்ள இயலவில்லை. அவர்கள் எங்களை நெருங்கி வருவதாகத் தோன்றியதால், நாங்கள் அனை வரும் நான்கு வரிசைகளாக அணிவகுத்து நின்றோம். ஒவ்வொரு அணியிலும் ஒரு பீரங்கி இருந்தது. எங்களை நோக்கி பத்துக்கஜ

தொலைவில் அவர்கள் வந்தவுடன் நாங்கள் அப்படியே அமர்ந்து கொண்டு அவர்களைச் சுடத் தொடங்கினோம். இவ்விதம் செய்ததி னால் எங்களது அணியில் உள்ளவர்கள் பலரது உயிரைக் காப்பாற்ற முடிந்தது. அத்துடன் எதிரிகளுக்கும் ஏராளமான சேதத்தை ஏற் படுத்த முடிந்தது. ஒரே கூச்சலும் முனகலும் கேட்டன. என்றா லும் அவர்களது சுடுதல் ஓயவில்லை. இருபது நிமிடங்கள் கழித்து அமைதி ஏற்பட்டது. நாங்கள் முன்னேறி இன்னொரு உயரமான விசாலமான கண்மாய்க்கரையைப் பிடித்தோம். அங்கிருந்து மேலும் முன்னேறிச் செல்வது பற்றி தமது கூட்டாளிகளுடன் கேப்டன் வெங்டன் ஆலோசனை செய்தார். கைப்பற்றப்படவேண்டிய எதிரி களது பீரங்கிகள் எங்கு இருக்கின்றன என்பது தெரியவில்லை. அந்தப் பாதையை எதிரிகள் கைப்பற்றிக் கொள்ள சிறிது அவகாசம் கொடுத்து பின்னர் மீண்டும் அங்கு திரும்புவது என முடிவு செய்யப் பட்டது. முற்பகல் முழுவதும் நூற்று ஐம்பது கஜ தொலைவிற்குக் காடு வெட்டப்பட்டது. சற்று நேரத்தில் எங்களது எதிர்பார்த்த லுக்கு மாற்றமாக எதிரிகளது பீரங்கிகள் எங்களுக்கு முன்னால் அறுநூறு கஜ தொலைவில் இருப்பது தெரியவந்தது. ஆனால் பிற்பகல் எங்களது நிலைக்கு திரும்பினோம். எப்படியும் பீரங்கி களைக் கைப்பற்றவேண்டும் எனத் திட்டமிட்டு இருந்த கர்னல் இன்னிங்ஸுக்கு எங்களது வருகை பிடிக்கவில்லை. பதினைந்தா யிரத்திலிருந்து பதினாறாயிரம் வீரர்கள் கொண்ட எதிரிகள் அணி யில் பெருத்த சேதம் ஏற்பட்டு இருக்க வேண்டும். நமது அணியில் ஒருவர் கொல்லப்பட்டு நால்வர் படுகாயமடைந்தனர். பாதையில் காத்திருந்த கர்னல் தால்ரிம்பிள் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பி வந்தார். அடுத்து பெருமழையும் பெய்தது.

ஆகஸ்டு - இருபதாவது நாள்

காலையில் இருந்து அஸ்தமனம் வரை மேஜர் ஷெப்பர்டும் அவரது தலைமையின் கீழ் நூறு பரங்கிகளும் ஐநூறு சுதேசி வீரர் களும் தங்களது ராணுவ நிலையில் நின்று மிகுந்த விழிப்புடன் பாதுகாத்து வந்தனர். எதிரிகளது துப்பாக்கி சுடுதல் சிறிது நேரம் நீடித்தது.

ஆகஸ்டு - இருபத்து ஒன்றாவது நாள்

இன்று முழுவதும் எதிரிகள் எங்களைச் சுட்டவாறு இருந் தனர். ஆனால் இழப்பு அதிகமாக இல்லை. மேஜர் ஷெப்பர்டும்

அவரது அணியினரும் ஏற்கனவே வெட்டப்பட்டிருந்த பாதைக்கு எதிரில் வலது புறத்தில் முப்பது அடி அகலமும் இருநூறு அடி நீளமுங்கொண்ட பாதையை வெட்டி அமைத்தனர். மாலையில் பலத்த மழை பெய்தது.

ஆகஸ்டு - இருபத்து இரண்டாவது நாள்

''இன்னும் எதிரிகள் எங்களைத் தொடர்ந்து வந்து சுட்டனர் இழப்பு அதிகம் இல்லை. மேஜர் பெர்ஷனது அணி சிறிது தூரம் பாதை அமைத்தது. மாலையில் மீண்டும் பலத்த மழை.

ஆகஸ்டு - இருபத்து மூன்றாவது நாள்

பாசறையில் ஏற்பட்டுள்ள ஆயுதப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும் தேவையான பொருட்களைப் பெற்று வருவதற்கும் கர்னல் இன்னிங்ஸ் குதிரைப்படை அணியுடன் திருமெய்யம் சென்றார். அவர்களுடன் ஏராளமான தபால்களும் அனுப்பி வைக்கப்பட்டன. கடந்த இருபத்து ஐந்து நாட்களாக, எதிரிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டு செய்திப் போக்குவரத்தைத் துண்டித்து விட்டதால், இந்தத் தேக்கநிலை ஏற்பட்டது. மேலும் உடல் நலிவுற்ற கர்னல் தால்ரிம்பிள், மேஜர் கிராண்ட், டாக்டர் ஒயிட், லெப்டினண்ட் காம்ப்பெல் ஆகியோர் அனுமதி பெற்று பாசறையில் இருந்து சென்றனர். என்.எம்.சுமித், தலைமையில் பாதுகாப்பு அணி நமது நிலையைச் சுற்றிய நிலப்பகுதியைச் செம்மை செய்தனர். காட்டிற்குச் செல்லும் பாதையின் முகப்பில் இன்னொரு ராணுவ நிலையையும் அமைத்தனர். முன்னேறிச் செல்லும் அணியினருடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்காக முற்பகல் 10.30 மணிக்கு மூன்று பீரங்கிகளைக் கொண்டு எதிரிகள் எங்களைச் சுட்டனர். நமது அணியினர் சென்று பீரங்கிகளைக் கைப்பற்றுவதற்குள் அவர்கள் சுடுதலை நிறுத்தி மறைந்துவிட்டனர்.

ஆகஸ்டு – இருபத்து நான்காவது நாள்

மேஜர் ஷெப்பர்டு அணி நிலப்பரப்பை செம்மை செய்யும் பணியை முடித்து மாலையில் திரும்பியது. பாதையின் இருபுறத்திலும் இருந்தும் எதிரிகள் தாக்குதல். நமது அணியில் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஆகஸ்டு -இருபத்து ஐந்தாவது நாள்

"மேஜர் பெர்ஷின் தலைமையிலான அணியை மாலையில் எதிரிகள் தாக்கினர். அவர்கள், இப்பொழுது நமக்கு நேராக எதிரே வந்து குண்டுமாரி பொழிந்தனர். வேலை செய்ய இய லாத நிலையில் பாசறை திரும்பிய அணி சுட்டபொழுது ஒருவர் மாண்டார். அவரது சடலத்தை எதிரிகள் எடுத்துச் சென்று விட்டனர்.

ஆகஸ்டு - இருபத்து ஏழாவது நாள்

"மேஜர் ஷெப்பர்டின் அணி, கர்னல் இன்னிங்ஸ் அணியின் பாதுகாப்பிற்குச் சென்றது. பதினான்கு மைல் தொலைவில் உள்ள திருப்பத்தூருக்கு அந்த அணியுடன் நானும் சென்றேன். இரவு முழுவதும் ஆயுதங்களைக் கையில் பிடித்தவாறு உறங்கினோம்.

ஆகஸ்டு - இருபத்து எட்டாவது நாள்

"திருமெய்யம் திக்கில் இருந்து கேட்ட வெடிச்சத்தம் கர்னல் இன்னிங்ஸ் அணியினர் வந்து கொண்டிருப்பதை உணர்த்தியது. நாங்களும் அவர்களுடன் இணைந்து கொள்ளச் சென்றோம். ஆனால் உடனே திரும்பிச் சென்று திருப்பத்தூர் கோட்டையை, எதிரிகள் வந்து வளைத்துக் கொள்வதற்குள், கைப்பற்றி வைத்துக் கொள்ளுமாறு எங்களுக்கு உத்திரவு. கட்டளைப்படி நாங்களும் அந்தப் பழைய கோட்டைக்குச் சென்று உள்ளும் வெளியிலும் ஆயத்த நிலையில் இருந்தோம். மாலையில் பலத்த மழை பெய்தது. என்றாலும் நாங்கள் மிகுந்த விழிப்புடன் காத்து இருந்தோம்.

ஆகஸ்டு – இருபத்து ஒன்பதாவது நாள்

"பொழுது புலர்ந்ததும் நமது அணி புறப்பட்டது வழியில் சில மோதல்கள்; எதிரிகளது தாக்குதல் இருந்தன. திருப்பத்தூரில் இருந்து ஏழுகல் தொலைவில் உள்ள பட்டமங்கலம் ஊர்போய்ச் சேர்ந்தோம். பக்கத்தில் உள்ள கண்மாய்க்கரை வழியாகச் சென்று அந்த ஊரைச் சுற்றி வளைத்துக் கொண்டோம். எதிரிகளது தாக்குதல் தொடர்ந்தது. நமது "சப்ளை" அணியைத் தடுப்பதற்காக அவர்கள் மேற்கொண்ட கடைசி நிலை இது.

ஆகஸ்டு - முப்பதாவது நாள்

''காலையில் நமது முன்னேற்றத்தைத் தடுக்க எதிரிகள் சாலைக்கு வந்துவிட்டனர். கட்டுப்பாடு இல்லாத அந்தக்காட்டு மிராண்டிகள்! அவர்களால் எதைச் செய்ய இயலுமோ அதைச் செய்தனர். கண்மாய்க்கரையில் கூடி நின்று எங்களது போக்கினைத் தடுத்தனர். ஒரு அணியினரை அடித்து துரத்தியவுடன் இன்னொரு அணியினர் வருவர். அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட தாக்குதலுக்குக் குறைவாகவே அவர்களது வேகம் இருந்தது. இப்பொழுது எங்களுக்கு நமது முந்தைய எதிரிகளான கட்டபொம்மு நாயக்கரும் அவரது ஊமைத்தம்பியைப் பற்றிய நினைவு தான் வந்தது.

அவர்களது எண்ணிக்கையும் அந்தப் பகுதியைப்பற்றிய அவர்களது துல்லியமான அனுபவமும் நம்மைவிட அவர்களுக்கு மிகவும் அனுகூலமானவையாகும். புதிய தளவாடங்களைக் கொண்டு நமது அணிக்கு மருது சேர்வைக்காரர்களுக்குப் பதிலாக நியமனம் செய்யப்படவிருக்கும் புதிய தலைவரான உடையாத் தேவரையும் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு இருந்தது. ஸ்காட்லாந்து நாட்டு அணி முன்னோடி அணியாகச் சென்றது. பிரதான பொறுப்பு அவர்களுக்குத்தான். அடுத்து பின்னால் நமது பிரிவு சென்றது. விடிகாலையில் இருந்து, சிறுவயல் போய்ச் சேர்ந்த பிற்பகல் பன்னிரண்டரை மணி வரை, அவர்கள் தொடர்ந்து போரிட்டுக் கொண்டு சென்றனர். நமது அணியினர் எதிரியைக் கண்ணுற்ற பொழுது அவர்கள் எண்ணிக்கையில் கூடுதலாக இருந்தாலும் அவர்களைத் தாக்குவதும் அவர்கள் ஓடிவிடுவதும் இயல்பாக இருந்தது. தங்களது பீரங்கிகளை, நாம் கைப்பற்ற இயலாதவாறு மிகுந்த அக்கரையுடன், பாதுகாத்துக் கொண்டனர். மோதல்கள் தவிர மற்ற சமயங்களில் அவர்களது சுடுதல் கடுமையாக இல்லை. அவர்களால் கொல்லப்பட்டும் காயமுற்றவர்களும் நாற்பது அல்லது ஐம்பது பேர்களுக்கு மேல் இராது. அவர்களது ஆயுதம் பீயூட்டர் கம்பியினால் செய்யப்பட்டு இருந்ததால், அதிகமான காயம் ஏற்படுத்தவில்லை.

மாலையில், இந்தச் சீமையின் புதிய அரசரான உடையாத் தேவர், மரியாதை நிமித்தமாக கர்னல் அக்கினியூவைச் சந்தித்

தார். அப்பொழுது அவருடன், அவரது தமையனாரும் ஒரு வயதான பார்ப்பனரும் வந்தனர். இந்த மனிதர் சின்னமருது சேர்வைக்காரரது பழி வாங்கும் நடவடிக்கைகளுக்குத் தப்பி அறந்தாங்கியில் இருந்த ஒய்யாத்தேவருடன் சேர்ந்து கொண்டவர், சிவகங்கையில் இருந்து தப்பி வந்தபிறகு தனது குடும்பத்தினரை மிகவும் அவமானப்படுத்தி விட்டதாக இவர் சின்னமருது சேர்வைக்காரரைப்பற்றி கும்பெனியாரிடம் புகார் செய்தார்.[5] வளமையான பாராட்டுக்களைப் பரிமாறிக் கொண்டவுடன், அவர் தமது கூடாரத்திற்குத் திரும்பினார். பார்ப்பதற்கு அவர் அழகாக இருந்தார். ஆனால் பிரிட்டிஷ் அரசு அவரை எதிர்பாராத வகையில் உயர்த்தியுள்ள அந்தஸ்துக்கு, அவர் பழக்கப்பட்டவராகத் தெரியவில்லை. அத்துடன் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள ஆதரவிற்கு நன்றியுடையவராகவும் காணப்பட்டார். அவரது அந்தஸ்தை உயர்த்தியதற்கு மற்றவர்கள் எத்தகைய காரணங்களைக் கற்பித்தாலும் சரி, ஆனால் அவரது விசுவாசத்திற்கு நாம் மதிப்பளித்தோம். வறுமையிலும் நலிவிலும் இருந்த அவரை, ஒரு அரசின் இளவரசர் நிலைக்கு உயர்த்தி, அவரது பாராட்டுதலுக்கு உரியவராகி விட்டோம் என்பது உறுதி.

''சிறுவயலில் இருந்து காளையார்கோவிலை புதியபாதை அமைத்து அடைவது என்ற தமது முடிவில் மேலும், முனைந்து செல்லாமல் அங்குள்ள பாசறையில் இருந்து நீங்குவது என முடிவு செய்யப்பட்டது. இதனால் நமது அணியினர் அனைவருமே மகிழ்ச்சி அடைந்தனர். நமது தோழர்கள் பலரை பலிகொண்டு கல்லறையாக மாறிய இடமல்லவா அந்தப்பாசறை. அங்கு நமது மானத்திற்கு இழிவு ஏற்பட்டதை எண்ணி, நமது ஒரு மாத கடுமையான உழைப்பு வீணானதைப் பற்றி, அவர்கள் கவலை கொள்ளவில்லை. வேறு இடங்களில் உள்ள வசதிகளை எண்ணிப் பார்க்கும் பொழுது, நமது இந்த முகாம் நோயாளிகளது கூடாரமாக வல்லவா மாறி இருந்தது! பலர் வயிற்றுக்கடுப்பினாலும், வயிற்றுப்போக்கினாலும் வருந்தி வந்தனர். பல அலுவலர்களும் வீரர்களும் இந்தக் கொடுமைகளினால் இறந்து விட்டனர். இவைகளில் இருந்து தப்பித்து, நல்ல உடல் வலிவுடன் இருந்த சிலர், மன நோயினால் கஷ்டப்பட்டு வந்தனர். கொஞ்சங்கூட செடிகொடி இல்லாத கட்டாந்தரை இந்தப்பாசறை. எப்பொழுதும் தமது கண்களில் தூரத்தில் படுவது மனிதர் புகமுடியாத நெருக்கமான காடு. அதற்குள் இருந்து கொண்டுதான் கோழைகள் நம்மைக் கொடு

5 Military Consultations, vol. 295 (A) (28-6-1801)p. 5034

மைப்படுத்தி வந்தனர். இத்தகையதொரு இயற்கைச் சூழ்நிலையில் அவர்களை ஒவ்வொரு மணி நேரத்திலும் தாக்கிக் கொண்டு இருந்தாலும், அவர்கள் நம்மை முழுவதுமாக சூழ்ந்து கொண்டு வந்தனர். ஒரு கடிதத்தைக் கூட வெளியில் அனுப்பவோ, அல்லது பெறுவதோ இயலாததாக இருந்தது. தொடர்ந்து ஒரு மாதமாக பாளையங்கோட்டையுடன் தொடர்பே இல்லை. அவர்களது விழிப்பான நடவடிக்கைகளில் இருந்து தப்புவதற்கு பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்றுகூட பயனளிக்கவில்லை. எனக்கு பழக்கமான பாளையக்காரர் ஒருவர் — இந்தப்பகுதியின் மூலை முடுக்குகளையெல்லாம் அறிந்து இருந்தவர்-ஒவ்வொரு மனிதரையும் புரிந்து இருந்தவர்-நமக்கு உதவுவதற்கு முன்வந்தார். ஐந்து பணத்தையும் ஒரு கடிதத்தையும் பெற்றுக்கொண்டு காட்டிற்குள் சென்ற அவரை எதிரிகள் பிடித்து கொன்று போட்டனர் ... ...''

இவ்விதமாக சிறுவயல் பாசறையில் இருந்த கர்னல் வெல்ஷ் தமது கைப்பட வரைந்துள்ள நாட்குறிப்புகள் பரங்கிகளை எதிர்த்து போரிட்ட போராளிகளது தாக்குதல்களைப் பற்றி ஓரளவு தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு சிறந்த சாதனமாக உள்ளது. அரண்மனை சிறுவயலுக்கும் காளையார் கோவிலுக்கும் இடைப்பட்ட எட்டுக்கல் தொலைவு காட்டைக் கடப்பதற்கான பாதையை அமைக்க நூற்றுக்கணக்கான பரங்கியரும் ஆயிரக்கணக்கான காடு வெட்டிகளும் முப்பத்திரண்டு நாட்கள் முனைந்தும் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சிவகங்கை சீமைப் போராளிகளைச் சமாளித்ததே ஒரு பெரிய சாதனையாகும். ஆனால் இந்தச் சாதனையையும் விஞ்சும் வகையில் விடுதலை வேட்கையும், ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும் இதய நாதமாகக் கொண்ட போராளிகள் பயிற்சியும் வெடி மருந்து வசதியும் கொண்ட பரங்கிகளை பயமின்றிச் சாடியது ஆகும். மரணத்தைப்பற்றி சிறிதும் சிந்தியாமல் அந்த மண்ணிற்குரிய மகத்தான மறப்பண்புகளுடன், பயங்கரமாக வெடிக்கும் துப்பாக்கி, பீரங்கி குண்டுகளுக்கிடையில் போரிட்டு மடிந்த போர் மறவர்களின் புனித இடம் அந்த காட்டுப் பாதையைத் தவிர தமிழகத்தில், ஏன் பாரதத்தில் வேறு எங்கும் கிடையாது! சிவகங்கைச் சீமை மண்ணை அன்னிய ஆக்கிரமிப்பில் இருந்து காப்பாற்ற ஒவ்வொரு அடி நிலத்திற்கும் அவர்கள் கொட்டிய குருதியையும் உடலில் தாங்கிய குண்டுகளையும், இறுதியில் தங்களையே தடுப்புச் சுவர் ஆக்கி ஆங்காங்கு விழுந்து இறந்த தியாகத்தையும் வேறு எந்த வரலாற்றிலும் காண முடியாது!

எத்துணையோ போர்களை வெற்றி கொள்ளத் திட்டம் தீட்டி பரங்கியருக்கு வெற்றியைத் தவறாது கிட்டச் செய்த மிகச்சிறந்த கும்பெனித் தளபதியான அக்கினியூவின் எதிர்பார்ப்புகள் முதலும் இறுதியுமாக தோல்வியுற்றது இந்த அரண்மனை சிறுவயல் காட்டுப் போரில்தான். போரைத் துவக்கிய அவன் முப்பத்து இரண்டு நாட்களுக்குப் பிறகு வேறு வழி இல்லாமல், தலையைக் கவிழ்ந்து கொண்ட தனது போர் வீரர்களது அணியை ஒக்கூர் பாசறைக்குப் பின்னடையுமாறு கட்டளை இட்டான்.[6] அவனது இராணுவப் பணியில் இதைவிட இழிவான நடவடிக்கையை அவன் மேற்கொண்டது கிடையாது.

6 Military Consulations vol. 288, (20-10-1801) pp. 6837-39 and
Revenue Consulations vol. (1801) p. 1401-08.

# 10

## இறுதிப் போருக்கு

சிவகங்கைச் சீமையின் சீர்மிகு ஊர்களில் சிறந்தது காளை யார் கோவில். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு பல பேரரசர்களை அமைத்து ஆட்சி செய்து வந்தான் வேங்கை மார்பன் என்ற வீரன். பாண்டியன் மீது பெரும்படை நடத்தி வந்த சோழன் பெருநற்கிழியை நெடுஞ்செழியன் வெற்றி வாகை சூடிய காரணத்தினால், ''தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்'' என அவன் போற்றப்பட்டான்.[1] இவனைப் போன்று அக நானூறு தொகுப்பித்த பாண்டியன் உக்கிரப்பெரு வழுதி'' கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என போற்றப்பட்டான்.[2] இந்த இரண்டு செய்திகளில் இருந்து சங்க காலத்தில் இந்த ஊருக்கு ''தலையாலங்கானம்'' ''கானப்பேர்'' என்ற பெயர்கள் இருந்தமை தெரியவருகின்றன. ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் இங்குள்ள இறைவனை வழிபட்ட திருஞான சம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும், தங்களது தேவாரங்களில் இந்த ஊரை கானப்பேர் என்றே குறித்துள்ளனர். பாண்டி நாட்டுப் பழம்பதி பதினான்கில் ஒன்றாக வரிசையிட்டுள்ள பழம் பாடல் ஒன்று ''கானப்பேர்'' என்பதனை ''காளை'' எனப்பாடு கிறது.[3]

மேலும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பாண்டிய மன்னனது வாரிசுப்போரில் தலையிட்டு பல போர்களில் குலசேகர பாண்டியனைத் தோல்வியுறச் செய்த இலங்கை நாட்டு ஜகத்விஜயதண்டநாயகனது ஆக்கிரமிப்பில் இந்த ஊர் சில

---

1 சதாசிவ பண்டாரத்தார்: பாண்டியர் வரலாறு (1950) பக், 23-24
2 சிங்காரவேலு முதலியார்: அபிதான சிந்தாமணி (1932), பக் 432
3 ராகவ ஐயங்கார்: மு. பெருந்தொகை (1935) பாடல் எண் 86.

காலம் இருந்ததை வரலாறு குறித்துள்ளது.[4] அடுத்து பதினான்காம் நூற்றாண்டில் எழுந்த மற்றொரு வாரிசுப் போரில் சுந்தரபாண்டியனுக்கு உதவ வந்த தில்லி தளபதி மாலிக் காபூரின் கொள்ளைக்குப் பயந்து, திருவரங்கத்து ஸ்ரீரங்கநாதரது திருமேனியுடன் புறப்பட்டு வந்த பிள்ளை லோகாச்சார்யருக்கு அங்கு புகலிடம் தந்ததாக மற்றுமொரு வரலாற்றுச் செய்தி உள்ளது.[5] இந்த நிகழ்ச்சிக்கு முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர், தென்னகம் வந்த அரபு நாட்டுப்பயணி திமிஸ்கி, இந்த ஊரை ''காய்ன்'' என்றும். தென்னகத்தின் சிறந்த ஊர்களில் ஒன்று என்றும் தமது பயணக் குறிப்புகளில் வரைந்துள்ளார்.[6]

கி. பி. 1451 ல், மதுரை அரசு கட்டிலுக்குரிய பாண்டிய இளவல் யார் என்பதை முடிவு செய்ய முயன்ற மதுரை ஆளுநர்களான விஜயநகர பேரரசின் பிரதிநிதிகள், காளையார்கோவிலில் இருந்த அரண்மனை நடனமாது அபிராமி என்பவரது மகன் பற்றியும் பரிசீலித்ததாகத் தெரிய வருகின்றது.[7] பின்னர் பதினாறு பதினேழாவது நூற்றாண்டில், இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது சிறந்த அரண்களில் ஒன்றாகத் திகழ்ந்ததுடன், இங்குள்ள திருக்கோவிலும் அந்த மன்னர்களது திருப்பணியினால் வளர்ச்சி பெற்றது.[8] கி. பி. 1730 ல் இராமநாதபுரம் சீமை பிரிக்கப்பட்டபொழுது இந்த ஊர் சிவகங்கைச் சீமைக்குள் வந்தது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியுடன் விளங்கிய இந்த ஊருக்கு, இயற்கையான காடு அரணாக பல நூற்றாண்டுக் காலமாக இருந்து வந்தது. ஆதலால் இந்த ஊரை சிவகங்கைச் சீமையின் உயிர்நிலை என்று கொள்ளுதல் பொருத்தமானது.

---

4 Krishnasamy Ayyangar. S: South India and her Mohamedan Invaders. (1924)

5 Harirao. V: Koil Olugu (1961) p. 129

6 Hussain Nainar Dr: Arab Geographers knowledge of South India (1942) p. 64.

7 Nelson: Manual of Madurai Country (1868) part III

8 பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் பக்: 36 - பணவிடுதூது (1930)

ஆதலால் இந்த ஊரின் கோட்டையைப் பரங்கியரது ஆக்கிரமிப்பில் இருந்து காத்து நிற்பதைப் போராளிகள் தங்களது தலையாய கடமை என்றும் அதனைக் கைப்பற்றி சிவகங்கைச் சேர்வைக்காரர்களது செல்வாக்கையும் மூலபலத்தை அழிப்பதை அவர்களது இலட்சியமாகப் பரங்கிகளும் கருதினர். இந்தச் சூழ்நிலையில் மிகப் பெரிய போருக்கு காளையார்கோவில் கோட்டையின் களம் தயாராகி வந்தது.

இந்தப் போரின் முதல் தாக்குதல் காளையர் கோவில் கோட்டையின் மேற்குத் திக்கில் இருந்து துவக்கப்படலாம் என மருது சேர்வைக்காரர்கள் நம்பினர். எதிர்பார்த்தனர்.[9] அதற்குரிய ஆயத்தங்களை வெடிமருந்துப்பொதிகள், தானியங்கள் சேமிப்பு மற்றும் அவர்களது குடும்பங்கள் ஆகியவைகளை காளையார்கோவிலுக்குக் கிழக்கிலும் வடகிழக்கிலும் கொண்டு போய் ஆங்காங்கு பத்திரப்படுத்தி வைத்தனர். கிளர்ச்சிக்காரர் அணிகளும் ஆங்காங்கு நிலைகொண்டு இருந்தன. இந்தப்பகுதி அவர்களுக்குப் பத்திரமான நம்பிக்கையான இடமாக அமைந்து இருந்தது. வெளிநாட்டாரது உதவிகளைக் கடல்வழியாகப் பெறுவதற்கும், அந்தப் போரில் அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் இராமநாதபுரம் சீமையிலிருந்து உதவிகள் பெறுவதற்கும் ஏற்றதாக இருந்தது. ஆனால் எதிரி தரப்பு பலம், வசதிகள், பற்றி புதுக்கோட்டைத் தொண்டமானுடன் இரகசிய ஆலோசனையில் ஈடுபட்ட கும்பெனியாருக்கு போராளிகளின் இந்தக் கடல்வழித் தொடர்புகளைத் துண்டித்து விடுவது அவர்களது போருக்கு மிகவும் இன்றியமையாத முன்ஏற்பாடு என்பதையும் இந்த நிலையில் அவர்களை மேற்குத் திக்கில் இருந்து நெருக்குதல் செய்தால் அவர்களது குடும்பத்தினர் ஆபத்திற்கு உள்ளாக்கப்படுவர் என்றும், போரை பதினைந்து நாட்களில் முடித்து விடலாம் என்றும் தொண்டமான் கர்னல் அக்னியூவிற்கு யோசனை வழங்கினார்.[10] இந்த இருவித இடுக்கித் தாக்குதல் அவர்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தும் அல்லது அவர்கள் பயந்து போர் செய்வதை விடுத்து தப்பி ஓடச் செய்யலாம் என்பது அவரது கணிப்பு.

---

9 Military Consultations. vol 288,(A)(29-8-1801) pp. 6041-42

10 Ibid.

இந்த யோசனையை ஏற்றுக் கொண்ட பரங்கிகள், காளையார் கோவில் கோட்டையைத் தாக்க மூன்று திசைகளில் இருந்து தங்களது அணிகளை ஈடுபடுத்தினர். கிழக்கில் கர்னல் பிளாக்பர்ன் தலைமையிலும், மேற்கில் இருந்து அக்னியூ, இன்னிங்ஸ் கூட்டுத் தலைமையிலும் தெற்கில் இருந்து மக்காலே தலைமையிலும் அணிகள் முன்னேறி வந்தனர். கிளர்ச்சிக்காரர் களும் தற்காப்புப் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் இராமநாதபுரம் சீமையில் கிளர்ச்சியில் ஈடுபட்ட நாட்டுப்பற்று மிக்க நல்லவர்களை அவர்கள் காட்டு மிராண்டித்தனமாக அடக்கி யொடுக்கினர். அன்றைய கால கட்டத்தில் எந்த நாட்டிலும், எந்த ஆக்கிரமிப்பாளரும் மேற் கொள்ளாத மிக மோசமான நடவடிக்கைகளை பரங்கிகள் மேற் கொண்டனர். தங்களுக்கு எதிரான நடவடிக்கையில் முனைந்த வர்களை இரு வழிகளில் சமாளித்தனர். முதலாவது சம்பந்தப் பட்ட கிளர்ச்சிக்காரரது உள்ளூர் உறவினர்களை சிறையில் அடைத்துக்கொடுமைப்படுத்துவது மற்றது கிளர்ச்சிக்காரர்களைச் சித்திரவதை செய்வது, கசையடிகள், தூக்குத்தண்டனை, அல்லது கடலுக்கு அப்பால் கிளர்ச்சிக்காரரை நாடு கடத்துதல், அவர்களது சொத்துக்களைப் பறித்து கும்பெனி உடைமையாக்கிக் கொள்ளுதல்.

இந்தக் கோரமான கொடுமைகளைக் கண்டு பயந்து, கும்பெனியாருக்கு விசுவாசிகளாக மாறிய கெடுபிடிகளை ஊக்கு விக்கும் வகையில் அவர்களுக்கு ''கவுல்'' காணிகள் வழங்கி ஆதரித்து அவர்களது கோழைத்தனத்தை மறைக்க பாதுகாப்புப் பட்டயங்கள் வழங்கினர். இவைகளை யெல்லாம் அறிந்த சிவகங்கைச்சீமை மக்கள் இயல்பான மனிதாபிமான உணர்வுகளில் மனம் நொந்தனர். அவர்களது இந்தக் குழப்பமான மன நிலையை கும்பெனியாரது இன்னொரு நடவடிக்கையும் பாதித்தது.

சிவகங்கைச்சீமை ஆட்சியில் ராணிவேலுநாச்சியார் இருந்த பொழுதும், அவரது மறைவிற்குப் பின்னரும், சிவகங்கை சீமை மக்க ளிடம் மிகுந்த செல்வாக்கு பெற்ற பிரதானியும், தளகர்த்தராகவும் இருந்தவர்கள் மருது சகோதரர்கள். குறிப்பாகச் சொன்னால், சிவகங்கை அரசியலில், ஏறத்தாழ கி.பி. 1781 முதல் இருபது வரு டங்களாக உண்மையான ஆட்சியாளராக இருந்தவர்கள் அவர்கள். ராணி வேலுநாச்சியாரிடம் பெரிய மருது சேர்வைக்காரர் கொண்

டிருந்த நெருங்கிய உறவு காரணமாக அதிகாரத்தைத் தாங்களா கவே அரசியாரது ஒப்புதல் இல்லாமல், அந்தச் சீமையின் அரசுப் பரம்பரையின் வழித்தோன்றல் போல ''ராஜமான்யராக''[11]அந்தச் சீமை அரசை இயக்கி வந்தவர்கள் அந்தப் பிரதானிகள். அவர்கள் தங்களுக்கு இணக்கமாக, விசுவாசிகளாக, இருந்தவரையில், கும் பெனியாரது கண்களுக்கு இந்தப்பிரதானிகள் சிவகங்கை சீமையின் சரியான அரசியல் வாரிசாகத் தோன்றினர். ராணி வேலுநாச்சி யாருக்குப் பிறகு வேங்கன் பெரிய உடையாத் தேவர், என்பவர் எட்டு ஆண்டுகளுக்கு மேலாக சிவகங்கைச் சீமையின் அரசபரம் பரையின் சின்னமாக — சிவகங்கை மன்னராக இருந்ததைக்கூட அவர்கள் மறந்து இருந்தனர். தங்களது அரசியல் கொள்கைக்கு ஆதரவாக, ஏன் முழுவதும் இணக்கமாக, இருந்த சிவகங்கைச் சீமை பிரதானிகளான மருது சேர்வைக்காரர்களிடம் மட்டும் அரசியல் தொடர்பு கொண்டு இருந்தனர். ''மதுரை நாயக்கர்'' ''தஞ்சை மராத்தியர்'' ''மைசூர் சுல்தான்'' ''சேதுபதி மன்னர்'' என அந்தந்த அரசர்களை அவர்தம் இனவழியாக குறிப்பிடுவது போல கும்பெனியார், ''சிவகங்கை அரசர்'' என அந்த ஆட்சி யாளரை அழைப்பதை விடுத்தும், அவர்தம் ஆவணங்கள், கடிதங் களில் மருது சகோதரர்களை ''சிவகங்கைச்சீமை சேர்வைக்காரர்'' என அன்புடனும் மரியாதையுடனும் குறிப்பிட்டு வந்தனர்.[12]

இப்பொழுது, அதே பிரதானிகள், கும்பெனியாரது ஏகாதி பத்திய கொள்கைக்கு எதிராக, மக்கள் விரோதச் செயல்களுக்கு முரணாக, ஏனைய தென்னிந்திய கிளர்ச்சிக்காரர்களுடன் கூட்டு சேர்ந்தும், அத்தகையவர்களுக்குத் தங்கள் சீமையில் புகலிடம் அளித்தும், அவர்களைத் தங்களுடன் இணைத்தும், ஏகாதிபத்திய வெறியை முற்றாக அழிக்க ஆயுத பலத்துடன் எதிர்க்க முனைந்த பொழுது, கும்பெனியாருக்கு ''ஞானோதயம்'' ஏற்பட்டது. அவர்களை எதிர்க்க பகையரண் அமைக்கும் போர் மறவர்க ளான பிரதானிகள் சிவகங்கைச் சீமையின் அரசியலுக்கு சம்பந்த மற்றவர்கள் என்ற உண்மை! ஏற்கனவே தஞ்சாவூர் மராத்திய அரசைத் தங்களது ஆதிக்கத்திற்குள் கொண்டுவர ஆசைப்பட்ட

11 தொண்டிநகர் கைக்கோளர் குளத்து கல்வெட்டு வாசகம், மடப்புரம் காவேரி ஐயனார் கோயில் ஓலைச்சாசனம்

12 Military Consultations vol. 185 (B) (3-6-1794) p. 219

பொழுதும், கும்பெனியாருக்கு இத்தகைய ஞானோதயம் தான் ஏற்பட்டது. அந்தச்சீமையின் அரசராக அமீர்சிங்கை அந்தச்சீமை அரசியல் வாரிசு அல்ல என முடிவு செய்து, இரண்டாவது சரபோசியை அக்டோபர் 1798 ல் மன்னராக்கினர்.[13] இதில் உள்ள வேடிக்கையான அம்சம் என்னவென்றால், அதே அமீர் சிங்தான் உண்மையான வாரிசு என கும்பெனியாரது தலைமை, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவு செய்தது.[14]

அந்தப் பாடத்தைத்தான் அவர்கள் இப்பொழுது சிவகங் கைச் சீமையிலும் படித்தனர். இந்தச்சீமை மக்களுக்கு ஏற்படாத கவலை வேற்று நாட்டாரான வெள்ளைப் பரங்கிகளுக்கு ஏற்பட் டது. இங்கிலாந்து நாட்டில் இருந்து வியாபாரத்திற்காக இங்கு வந்து, மிகுதியாகக் கிடைக்கும் கைத்தறித்துணி, மிளகு, ஏலக் காய், கிராம்பு ஆகியவைகளை வாங்கிச் சென்று வியாபாரம் செய்ய வந்த அந்த கூட்டத்தாருக்கு ஏற்பட்டது. சிவகங்கைச் சீமை மக்களது அல்ல பரங்கிகளது - கவலையைப் போக்க சிவ கங்கை அரசுக் கட்டிலுக்கு பரம்பரைத் தகுதி வாய்ந்த ஒருவரைத் தேடிக் கொண்டு இருந்தனர். தங்களது ஆதிக்கப் பேராசைக்கு அடிபணிந்து இணங்கிச் செல்லும் தலையாட்டி பொம்மையைத் தேடினர். கண்டுபிடித்தும் விட்டனர். அவர், சிவகங்கைச்சீமை யைத் தோற்றுவித்த நாலுகோட்டை பெரிய உடையாத் தேவரது மகனான சசிவர்ணப் பெரிய உடையாத் தேவருக்கு ஒருவகையில் பேரன் முறையிலான படைமாத்தூர் ஒய்யாத்தேவர் என்ற கௌரி வல்லபத்தேவர் என்பவராகும்.[15] சிவகங்கை அரசுக்கு படை மாத்தூர் ஒய்யாத்தேவரைத் தவிர, அந்த அரசபரம்பரையின ருக்கு நெருங்கிய உறவினர்களாக கட்டனூர் திருக்கத்தேவர், அரளிக்கோட்டை நல்லணத்தேவர், சேவற்கோட்டை பெரிய உடையாத்தேவர், செம்பனூர் ராசத்தேவர், ஒளிக்குடி முத்துக் கருப்பத்தேவர், சக்கந்தி முத்துக்குமாரத்தேவர் ஆகியோர்களும் இருந்தனர்.[16] அவர்களின் வழியினரைப்பற்றி எல்லாம் கும்பெனி

---

13 **Political Despatches to England vol. 4 p. 200-208.** (15-1-1798)

14 **Militaty Country Correspondence vol 41**, (25-2-1791), pp. 204-219

15 **Rajayyan Dr. K: History of Madura (1974) p. 371.**

16 மறவர்சாதிவிளக்கம் சுவடிஎண் 370 (*கீழைநாட்டுச் சுவடி நூலகம் சென்னை)*

யார் விசாரித்து முடிவு எடுக்கவில்லை. ஆனால் அவர்களது பேராசைக்குப் பணிந்து நடந்து கொள்ளக் கூடியவர், படைமாத்தூர் கௌரிவல்லப ஒய்யாத்தேவர். ஒருவர்தான் என்பது அவர்கள் கண்ட முடிவு.

ஆதலால், அவரை சிவகங்கைச் சீமையின் சரியான, உண்மையான வாரிசு என்பதை சீமை மக்களிடத்தில் பகிரங்கப்படுத்த முயன்றனர்.[17] சாதாரண மக்களின் சிந்தனையில் குழப்பத்தை ஏற்படுத்தி, கும்பெனியாரை அழிக்க கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு நிற்கும் சிவகங்கை சேர்வைக்காரர்களது அணியில் பிளவையும், பலவீனத்தையும் உண்டாக்க வேண்டும் என்பது அவர்கள் திட்டம். சிவகங்கைச் சீமையின் ''ஜமீந்தார்'' கௌரி வல்லப ஒய்யாத்தேவர்தான் என்ற விளம்பர பட்டோலையைப் படிப்பதற்காக அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்றில் கன்னையன் என்ற கைக்கூலியை அமர்த்தி முதலில் சோழபுரம் கிராமத்தில் படித்து விளம்பரம் செய்யுமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. அவனும் அந்த பட்டோலையை மிகவும் பயபக்தியுடன் தெருமுனைகளில் நின்று உரக்கப்படித்தான். அந்த விளம்பரத்தைப் படிப்பதற்கு முன்னும் பின்னும் முரசு முழக்கப்பட்டது. தொடர்ந்து சோழபுரத்தை அடுத்துள்ள நாலுகோட்டை, ஒக்கூர், பாகனேரி, பட்டமங்கலம் ஆகிய ஊர்களிலும் அந்த விளம்பரம் படிக்கப்பட்டது.[18] இந்த ஊர்கள் ஒய்யாத்தேவருக்கு இணக்கமான அல்லது கும்பெனிப்படையணிகள் நிலைகொண்டுள்ள பகுதிகளை ஒட்டி அமைந்து இருந்தவைகளாகும்.

சிவகங்கையில் இருந்து புதுக்கோட்டை செல்லும் பெருவழியில் ஆறாவது கல்லில் அமைந்திருக்கும் சிற்றூர் சோழபுரமாகும். இந்தப் பெயரில் தெற்கே பாண்டியநாட்டில் மதுரை - நெல்லைப் பெருவழியில் ராஜபாளையத்தையடுத்தும், சோழநாட்டில் தஞ்சாவூரையடுத்தும், தொண்டை நாட்டில் சென்னையடுத்தும் இதே பெயரில் ஊர்கள் அமைந்து உள்ளன. இவை அனைத்தும் பத்து பதினோராவது நூற்றாண்டில் சோழர்கள் தென்னகத்தை கையகப்படுத்திக் கொண்டதைக் குறிக்கும் முகமாக பெயரிடப்பட்ட ஊர்

17 Revenue Consultations, vol. 116, (24-7-1801), p. 1361-69
18 Revenue Sundries, vol. 26, (13-9-1801), pp. 33-34

களாகும். சோழர்களை வெற்றி கொண்டு அழித்த பாண்டியமன்னரின் விருதாவளியான சோழகுலாந்தகன் (சோழர் குலத்திற்கு யமன்) என்ற பொருளில் அடிப்படையில் அமைக்கப்பட்ட சோழ குலாந்தகபுரம் என்ற பெயரின் சுருக்கம் எனக் கொள்வோரும் உண்டு. அந்த ஊரில் பெரும்பாலும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள நகரத்தார் வசித்து வந்தனர். அடக்கத்திற்கும், பணிவிற்கும் பெயர் பெற்ற குடிமக்கள் கும்பெனியாரின் இத்தகைய ஆர்ப்பாட்டமான நடவடிக்கைகளில் அக்கரை எதுவும் இல்லாது இருந்தனர்.

சோழபுரம் சிவன் கோயிலில் முன்னர் அலங்காரப்பந்தல் ஒன்று அமைக்கப்பட்டு இருந்தது. பரங்கியரும் அவர்களது விசுவாசிகளான கைக்கூலிகளும் அங்கு குழுமி நின்றனர் சிறப்பான அர்ச்சனைகளை முடித்துவிட்டு படைமாத்தூர் கௌரிவல்லப ஒய்யாத்தேவரும் அவரது உறவினர் சிலரும், அந்த அலங்காரப் பந்தலுக்குள் நுழைந்தனர். அங்கு அமர்ந்திருந்த கர்னல் அக்கினியூவும், கர்னல் இன்னிங்ஸும் எழுந்து வந்து வரவேற்று அவர்களை அங்கிருந்த அலங்கார நாற்காலிகளில் நடுநாயகமாக அமரச் செய்தனர். ராணுவ வாத்தியங்களது முழக்கம் நின்றவுடன், கர்னல் அக்கினியூ, ஒய்யாத்தேவரிடம், சென்னையில் இருந்து கும்பெனி கவர்னர் கிளைவ், அனுப்பி இருந்த ''மில்க்கியத் இஸ்திமிரார்'' சன்னதை கையளித்து, சிறந்த பட்டாடை ஒன்றையும் அழகான வாள் ஒன்றையும் கும்பெனியாரின் பரிசுகளாக வழங்கி, வாழ்த்துத் தெரிவித்துவிட்டு தனது இருக்கையில் அமர்ந்தான். குழுமி இருந்தவர்கள், 'சிவகங்கை ஜமீந்தார் வாழ்க" என ஆரவாரம் செய்தனர். படைமாத்தூர் தேவர்மகன் இப்பொழுது மகிழ்ச்சிப்பெருக்கில் மூழ்கிப்போனார். அவரது கண்களில் துளிர்த்துநின்ற ஆனந்தக் கண்ணீர், கடந்த காலத்தின் சில கசப்பான நிகழ்ச்சிகளைப் பிரதிபலித்தன. சிவகங்கைச் சீமையின் அரசியல் வாரிசான அவரை, ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர், பிரதானிகளான மருது சேர்வைக்காரர்கள் புறக்கணித்து அவமதித்து வந்ததுடன் அல்லாமல் காளையார்கோவில் கோட்டையில் சிறைப் படுத்தி வைத்திருந்தது.[19]

---

19 Military Consultations vol. 285 (A) (28-6-1801) - p. 5039

அவரது மணப்பெண்ணாக நிச்சயித்து இருந்த சிவகங்கை ராணி வேலு நாச்சியாரது மகள் வெள்ளச்சியை அரசு உறவின ரல்லாத சக்கந்தி வேங்கன் பெரிய உடையாத் தேவருக்குத் திருமணம் செய்து வைத்து அவரை சிவகங்கை அரசின் புதிய வாரிசாக ஏற்படுத்தியது,

காளையார் கோவிலில் இருந்து உயிர்தப்பியோடி இராம நாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னரிடம் புகலிடம் பெற்று இருந்ததை அறிந்து கும்பெனியார் மூலமாக, இராமநாதபுரம் சீமையை விட்டு வெளியேறுமாறு செய்தது,

அங்கிருந்து அறந்தாங்கியில் குடியேறிய பொழுது, அவரிடம் கொண்டிருந்த அன்பின் மிகுதியால் சிவகங்கையில் இருந்து அறந்தாங்கிக்கு ஓடி வந்த அந்தணர் ஒருவரது பெண் மக்கள் இருவரையும் இழிவுபடுத்தி கொடுமை செய்தது.[20]

அறந்தாங்கி காட்டிலும், உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி அவதிப்பட்டு தலைமறைவு வாழ்க்கை நடத்தியது,

ஆகிய இந்தக்கொடிய காட்சிகள் சில வினாடிகளில், அவரது நினைவில் நிழலாடியதை அவரது கண்களில் இருந்து வழிந்து விழுந்த நீர்த்துளிகள் மறைத்தன. மருது சேர்வைக்காரர்களைப் பழிவாங்கி விட்டது போன்ற பெருமிதம் அவரது கண்களில் பளிச்சிட்டது. அளவிட முடியாத மகிழ்ச்சிப் பெருக்கினால் அவர் மெய்சிலிர்த்துப் போனார். நினைத்துப் பாராத வகையில் அவருக்கு அரச பதவி கிடைத்ததினால் அவரது சிந்தனையிலும் கூட தடுமாற்றம் ஏற்பட்டது. இத்தகைய ஆடம்பர வாழ்வை, அரசயோகத்தை வழங்கிய பரங்கிகளது பெருந்தன்மை விசுவ ரூபமாக அவருக்குப்பட்டது. நன்றி மறப்பது நன்று அல்லவே! தமது இருக்கையில் இருந்து எழுந்த ஒய்யாத்தேவர், அக்கினி யூவின் முன் சாஷ்டாங்கமாக விழுந்தார். வெள்ளையனின் கால்களை முத்தமிட்டு எழுந்தார். அவரைப் போன்றே அவரது சகோதரரும் கர்னல் இன்னிங்ஸ் கால்களில் விழுந்து அஞ்சலி செலுத்தி எழுந்தார்.[21] இந்த நாட்டில் ஆண்டானுக்கு அடிமை செலுத்தும் வணக்கமுறை அதுதானே !

---

20 Military Consultations vol. 285, (28-6-1801) p. 5038-43

21 Col. Welsh: Military Reminiscences. (1881) vol. II.

ஆனால் முடிமன்னர் களாஞ்சி ஏந்தும் சமயத்தில் தான் சேதுபதி மன்னர் முடி சற்று தாழும் எனப் பாடிய புலவரது[22] பொய்யாமொழிக்கு இலக்கணமாக வாழ்ந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னரது மகளை மணந்து, மருகராகும் பெருமைபெற்ற நாலுகோட்டை பாளையக்காரரது வழித் தோன்றலான ஒய்யாத் தேவர், இத்தகைய இழிவான முறையில் பரங்கியின் பாதங்களுக்கு தலையினால் அருச்சனை செய்ததை யாரும் எதிர்ப்பார்த்து இருக்க மாட்டார்கள். என்றாலும் இந்த இழிந்த விபரீதமான, ஆனால் உண்மையான, நிகழ்ச்சியை நேரில் கண்ணுறும் வாய்ப்பு பெற்ற பரங்கித்தளபதி வெல்ஷ் தமது நாட்குறிப்புகளில் தெளி வாக வரைந்து வைத்துள்ளார். சுயநலத்திற்காக சொந்த பதவி களுக்கு எதையும் துணிந்து செய்யும் ஈனப்பிறவிகளில் இத்தகைய மானமற்ற செய்கையினால் மறவர் சீமை மக்கள், தன்மானத்தைத் துறந்து தொன்மையான மறப்பண்புகளை மறந்து, அவமானத் தால் கூனிக்குறுகி கொத்தடிமைகளாக, என்றும் பரங்கியரிடம் மண்டியிட்டு வாழவேண்டும் என்பதை நினைவூட்டுவதற்காகவே அந்த உண்மை நிகழ்ச்சியை அந்த தளபதி குறித்து வைத்து இருக்க வேண்டும்.

சிவகங்கை ஜமீந்தாரது நடவடிக்கை, தொடர்ந்து கும் பெனியாரது கட்டளைகளை தலைமேல் கொண்டு நிறைவேற்றும் ''தனிப்பண்பு'' கொண்டதாக இருந்ததை படைமாத்தூர் கௌரி வல்லப ஒய்யாத்தேவர், தமது கண்கண்ட தெய்வமாகிய கும்பெனி யாருக்கு எழுதிய கடிதம் ஒன்று, உறுதிப்படுத்துகிறது. அந்தக் கடிதத்தில், ''.... ... கும்பெனியார் சம்பந்தப்பட்ட கடிதப் போக்குவரத்தில் சிறப்பான அக்கரை செலுத்தி, ஒரு வினாடி கூட தாமதம் இல்லாமல், தங்களது ஆணைகளை நிறைவேற்றி வைப் பேன். தங்களுடைய பிள்ளை என்ற முறையில், தாங்கள் என்மீது பரிவும் பாசமும் கொண்டவர்களாக நடந்து கொள்ளும்படியும், தங்களது ஆணைகளை அப்பொழுதைக்கப்பொழுது, எனக்கு அருள் கூர்ந்து தெரிவிக்கும்படியும் பணிவுடன் கேட்டுக் கொள் கிறேன்''. என அவர் எழுதியிருந்தார்.[23]

---

22 மீர் ஜவ்வாது புலவர்:பெருந்தொகை (1932) பாடல் எண் 952

23 Madurai District Records vol. No 1178 - (30-12-1801) p. 100.

படைமாத்தூர் ஒய்யாத்தேவர், ஆங்கிலக் கும்பெனியரது பிள்ளை! ஆம், ஏற்கனவே வங்காளத்திற்கு மீர்காஸிம், கள்ளர் சீமைக்கு புதுக்கோட்டை தொண்டமான், நெல்லைச் சீமைக்கு எட்டப்பன், இப்பொழுது மறவர் சீமைக்கு ஒய்யாத்தேவர், பொருத்தமான பிறவிகள்! அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு தொண்டு ஊழியம் செய்வதையே இலட்சியமாக, பிறவிப்பெரும் கடமையாக கொண்ட தொங்கு சதைகள், பிறந்த பொன்னாட்டின் பெருமையை மறந்து, சிறுமைத்தனமாகிய சுயநலத்தையே ஜீவியமாகக் கொண்டிருந்த இந்தசமுதாய விரோதிகளை ஊக்குவித்து, வளர்த்து, உருவாக்கும் உத்தியை கும்பெனியார் மட்டும்தான் தெரிந்து வைத்து இருந்தனர். இது அவர்களுக்கு கைவந்த கலையாகும்.

# 11

## இரகசியத் திட்டம்

பொது மக்களது நினைவாற்றல் மிகவும் பலவீனமானது என்ற அரசியல் அறிஞர் ஒருவரது கணிப்பு சிவகங்கைச்சீமை மக்களைப் பொறுத்த வரையில் அன்று நூற்றுக்கு நூறு உண்மையாக இருந்தது. கி.பி. 1772ல் நடைபெற்ற காளையார்கோவில் போரில் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாத பெரிய உடையாத் தேவர், வெள்ளையரது குண்டுபட்டு வீரமரணம் அடைந்தார். அதனால், சிவகங்கைச் சீமையை ஆக்கிரமித்த ஆர்க்காட்டு நவாப்பும், கும்பெனியாரும், மக்களது உடமைகளைச் சூறையிட்டு சொக்கப்பானை கொளுத்திக் கொண்டாடிய நேரம். தலைமை இல்லாது தடுமாறிய மக்களது வேதனை, விடியாத இரவாக நீண்டுகொண்டு இருந்தது. விரக்தி கொண்ட மக்கள் பொறுமை இழந்து, தங்களது மண்ணை மாசுபடுத்தும் அன்னிய அதிகார வர்க்கத்தை விரட்டியடிக்க எட்டு ஆண்டுகாலம் போராடிப்பார்த்தனர். பலன் இல்லை, இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில் தாயகத்தை மீட்பதற்கு ஓடோடி வந்தனர் மருது சகோதரர்கள். அவர்களுடன் திண்டுக்கல் கோட்டையில் இருந்து மைசூர் மன்னர் ஐதர்அலி கான் வழங்கிய ஐயாயிரம் குதிரை வீரர்களுடன்[1]. கும்பெனியாரும் நவாப்பும் கூட்டாக பங்கு போட்டுக் கொண்டு இருந்த சிவகங்கை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

திருப்பூவணம், சிவகங்கை, ஒக்கூர், திருப்பத்தூர் ஆகிய ராணுவ நிலைகளில் இருந்து நவாப்பின் படைகள் துரத்தியடிக்கப்பட்டன. கும்பெனியாரது கூலிப்படைகளும் ஓட்டம் பிடித்தன. மீண்டும் சிவகங்கைச்சீமை மானம் மிகுந்த மறவர் சீமையாகியது. குழப்பங்களும் அரசியல் கெடுபிடிகளும் இல்லாது மக்கள் வாழத்

---

1 **Correspondence on the Permanent Settlement of the Southern Pollams p. 28**

தக்க அரசியல் அமைப்பை சிவகங்கை சேர்வைக்காரர்கள் ஏற்படுத்தினர். முத்துவடுகநாத பெரிய உடையாத் தேவரது விதவை ராணி, வேலுநாச்சியார், சிவகங்கை அரசின் தலைவியாக இருந்தாலும், உண்மையான ஆட்சி மருது சேர்வைக்காரர் கைகளில் இருந்ததால் மக்கள் ஆறுதல் பெறத்தக்க பல அரிய செயல்களை அவர்கள் நிறைவேற்றி வைத்தனர். அதனால் சாதாரண மக்கள் ராணியைவிட பிரதானிகளான மருது சேர்வைக்காரர்களைத் தான் மிகுதியாகத் தெரிந்து பாராட்டிப் புகழும் வாய்ப்பு இருந்தது.

மதுரைக்கோபுரம் தெரியக்கட்டியவர்கள் எனப்புகழத்தக்க வகையில் காளையார் கோவிலின் தெற்கு கோபுரத்தை விண்ண கரமாக எழுப்பினர். அதனையடுத்த ஆனைமடு தெப்பக்குளத்தை அழகாகவும் ஆழமாகவும் அமைத்து முடித்தனர். தேனாற்று மாதவர் எனக்கல்வெட்டுக்கள் குறிப்பிடுகிற குன்றக்குடி குமரனது திருக்கோயிலையும் மருதாபுரி குளத்தையும் சீர்திருத்தி அமைத்தனர். ''தென் காட்டுத் திருப்பத்தூர் திருத்தளியான்'' எனத் தேவாரம் சிறப்பிக்கின்ற திருப்பத்தூர் ஆலயத்தையும் திரு மதிலையும் திறம்பட அமைத்தனர். ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சூரக்குடி விசயாலய தேவனால் அமைக்கப்பட்டு மதுரை சுல்தான்களால் சிதைக்கப்பட்ட அந்த ஊர் கோட்டையை அழகுற அமைத்தனர். அன்னசாலை, சத்திரம், இன்னும் கண்மாய்கள், வரத்துக்கால்கள், குளங்கள், கலுங்குகள், எனக் குடிமக்கள் தேவைகள் நிறைவுற அறப்பணிகள் பல அவர்கள் ஆற்றினர். மற்றும் அவர்களுக்கு காலத்தால் மக்கள் செய்த நன்றியினை நெஞ்சில் நிறுத்தி நன்றிக்கடனாக பல தானங்களையும் அவர்கள் வழங்கினர். பசிக்கு பழஞ்சோறு வழங்கிய மூதாட்டிக்கு ''பழஞ்சோற்று ஏந்தல்'', கூழ் வார்த்த குடிமகனுக்கு ''கூழுர்'', பணியாரம் அளித்துப் பசியாற்றிய பெண்ணுக்கு ''பணியார ... ... நல்லூர்'' ஆபத்தின் பொழுது அடைக்கலம் அளித்துக் காப்பாற்றிய சேசு சபைத் தொண்டரது தேவாலயத்திற்கு மாறணி என்ற சிற்றூர். மதுரைச் சொக்கர் ஆலயத்து திருவிளக்குச் செலவிற்கு "ஆவியூர்"; குன்றக்குடி குமரர் அருள்பெற செம்பொன்மாரி கிராமம்; மயூரகிரிக் கோவை பாடி வந்த புலவருக்கு மருதங்குடி கிராமம் இவையனைத்தும் மருது சேர்வைக்காரர்கள் முள்ளால் வரைந்து, சொல்லால் வழங்கிய தானங்கள்.

இவ்விதம், சிவகங்கைச் சீமையின் ஒப்பற்ற ராஜ மான்யராக அரசியலை நடத்திய மருது சேர்வைக்காரர்களின் மாண்புகளை

மக்கள் சில நிமிடங்களில் மறந்துவிட்டனர். பேராண்மையும், எளிய பண்புகளும் பெற்று இருந்த அந்தப்பிரதானிகளின் புகழுரு வியாபித்து நின்று அவர்களின் சிந்தனையில் பொய்மையான ஆடம்பரமும் விளம்பரமும் துணையாக விளங்கிய பழமையின் பிர நிதி பற்றிய கவர்ச்சி படர்ந்தது. கும்பெனியாரது சூழ்ச்சியைப் புரிந்து கொள்ளாமல், சிவகங்கைச் சீமை அரச பரம்பரையினர் பற்றி அக்கரை கொண்டனர். சிவகங்கைச் சீமையின் அரசராக ராணி வேலு நாச்சியாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்னாரது மகளை மணந்து. சிவகங்கைச் சீமையின் அரசரான சக்கந்தி வேங்கன் பெரிய உடையாத்தேவர் உயிருடன் இருக்கும்பொழுது, சோழபுரத்தில், ''சிவகங்கை ஜமீந்தாராக'' படைமாத்தூர் ஒய்யாத் தேவரை கும்பெனியார் விளம்பரப்படுத்த வேண்டிய காரணம் என்ன என்பதை அவர்கள் ஆழமாகச் சிந்திக்கத் தவறினர். சிவ கங்கை மண்ணின் குடிகள் என்ற முறையில் புதிய ஜமீந்தாருக்கு தங்களது ராஜ விசுவாசத்தைத் தெரிவித்துக் கொள்ள அவர்கள் துடித்தனர்.

புதிய அணியின் பேராளர்களாக மாறினர். எத்தகைய சிறந்த இலட்சியத்திற்காகப் போர்க்கோலம் பூண்டு பரங்கியரை எதிர்க்கப் புறப்பட்டு இருக்கிறோம் என்ற பின்னணியைக் கூட அவர்கள் மறந்து விட்டனர். அவர்கள் புரிந்து கொண்ட அரசியல் அவ்வளவுதான். ஆனால் அக்கினியூவின் திட்டம் அருமையாகச் செயல்பட்டது; நிறைவுபெற்றது. அந்நிய ஏகாதிபத்தியத்தை ஆவேசமாக எதிர்த்த மருதுசேர்வைக்காரர்களால் மிகப் பொறுப் பான பணியில் அமர்த்தப்பட்டிருந்த கோட்டைச் சேர்வைக்காரர் போன்ற நம்பிக்கைக்கு உரிய முக்கிய புள்ளிகள் கூட எதிர் அணியை நோக்கி விரைந்தனர்.[2] கிளர்ச்சிக்காரர்கள் அணி பல வீனமடைந்தது என இங்கு குறிப்பிட வேண்டியதில்லை. தென் னிந்திய வரலாற்றில், எந்தப்போரின் பொழுதும் தாக்குதல் தொடுக்கும் நேரத்தில் காலை வாரிவிடும் கயவர்கள் நிறைந்த அணி, இலட்சியத்திற்காக எப்படித் போராட முடியும்! இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் மருது சேர்வைக்காரர்கள் சிறிதும் சங்கடப்படாமல் தெளிவான முடிவிற்கு வந்ததுதான் மிகவும் வியக் கத்தக்க செயலாகும். அவர்கள் முன்னர் இரண்டு வழிகள் துலக்க

2 Military Consultations vol. 288(A) (16-0-1801) - p. 6883.

மாகத் தென்பட்டன. முதலாவது, மருது சேர்வைக்காரர்களும் பலவிதமான இடையூறுகளுக்கு மிடையிலும் அவர்களைச் சார்ந்துள்ள நாட்டுப்பற்றுள்ள நல்லவர்களும், இரண்டாவது புதிய ஜமீன்தாருக்கும் பரங்கிகளுக்கும் விசுவாசிகளாக, மனம் மாறியவர்களாக, சரணடைதல், அல்லது தங்களது இலட்சியத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக முடிவைப்பற்றி சஞ்சலப்படாமல் தொடர்ந்து, இறுதிவரை போராடுவது, இந்த இரண்டாவது வழிதான் மருதுசேர்வைக்காரர்களுக்கு இணக்கமானதாக இருந்தது. இதே வழியைத்தான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தன்னேரிலாத தியாகி மைசூர் திப்புச்சுல்தான் தேர்ந்தெடுத்து இருந்தது அவர்களது நினைவில் பசுமையாக இருந்தது. தமது பேரரசைச் சுற்றிப் பொறாமையுடன் காத்திருந்த தேசத்துரோகிகளான மராத்திய மன்னரையும். ஹைதராபாத் நிஜாமையும், திருவாங்கூர் அரசரையும் அவர்களது பேராதரவாளராக ஓடிவந்த கும்பெனியாரையும் தன்னந்தனியே எதிர்த்து நின்று இறுதி மூச்சுவரை போராடி, விழுப்புண்ணுடன் களத்தில் வீழ்ந்து மடிந்த, அந்த மாவீரனது மகத்தான வரலாற்றை அவர்கள் மறந்துவிடவில்லை.

அரண்மனைச் சிறுவயல் காட்டில் பிடிபட்ட போராளி ஒருவன் துரோகியாக மாறினான். குழைந்து, இழைந்து, பேசிய அக்கினியூவின் ஆசைவார்த்தைகளில் மயங்கி மனம்மாறிய அந்தக்கழிசடை, காளையார்கோவில் கோட்டைக்குச் செல்லும் இரகசியப்பாதையைக்காட்டிக் கொடுத்ததுடன், காளையார்கோவில் கோட்டைப் பாதுகாப்பு நிலைகள் பற்றிய அரிய தகவல்களையும் தெரிவித்து விட்டான்.[3] முப்பத்து இரண்டு நாட்களாக அங்குலம் அங்குலமாக போரிட்டு முன்னேற முயன்றும் போராளிகளது எதிர்ப்பினால் பின்னடைந்து பரிதவித்த கும்பெனியாருக்கு, இதைவிடச் சிறந்த உதவியை வேறு யார் செய்ய முடியும்? அப்புறம் என்ன - காளையார்கோவில் போரின் முடிவு தெரிந்த ரகசியமாயிற்று! அன்றைக்குச் சரியாக முப்பத்து ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் ஓராண்டுக்கு மேல் நீடித்த மதுரைகோட்டை முற்றுகையில் மாவீரன் கம்மந்தான் கான்சாகிபுவின் போர் ஆற்றலுக்கு முன்னால், செல்லாக் காசாகிவிட்ட கும்பெனி படைபலமும் ஆர்க்காட்டு நவாப்பின் ராஜதந்திரமும் மீண்டும் உயிர்

---

3 Military Consultations vol. 288 (A) (2-10-1801) p. 6866-67

பெறுவதற்கு அங்கு இப்படி ஒரு இழிந்த பிறவியை கும்பெனியார் தேர்ந்தெடுத்தனர். கான்சாகிபுவின் அந்தரங்க அலுவலராக இருந்த திவான் சீனிவாசராவ் என்ற அந்தப்பாவி பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு, இறைவழிபாட்டில் ஈடுபட்டு இருந்த கான்சாகிபை, கயிற்றால் பிணைத்து அந்தப்புர மகளிர் முட்டாக்கு போட்ட பல்லக்கில் ஏற்றிச் சென்று கும்பெனியாரிடம் ஒப்படைத்தான். அதே துரோகியினால் மதுரைக்கோட்டை விழுந்தது. மானத்திற்காகப் போராடிய கான்சாகிப் அழிக்கப்பட்டார்.[4] சங்க காலத்துச் சேரமன்னன் கணைக்கால் இரும்பொறை கழுமலம் போரில் தோற்று சோழனிடம் கைதியாக இருந்தபொழுது, சோழனது வீரர்கள் அலட்சியமாக அளித்த தண்ணீரைக்கூட குடிக்க மறுத்த கணைக்கால் இரும்பொறை போன்று கும்பெனியார் வழங்கிய உணவைக்கூட ஏற்றுக் கொள்ள மறுத்து இரண்டு நாட்கள் பட்டினியாக இருந்த கான்சாகிபுவை 16-10-1764 ல் தூக்கில் தொங்கவிட்ட பிறகுதான் கும்பெனியாருக்கு மதுரைக் கோட்டைக்குள் நுழைய தெம்பு ஏற்பட்டது. பெரும்பாலும் தாயகம் காக்கப் போராடிய மக்கள் தலைவர்களை நேரில் போராடி வெற்றிகொள்ள இயலாத பரங்கிகள் ''பொற்காசுகளைக்'' கொடுத்துத்தான் வெற்றியை விலைக்கு ''வாங்கி இருக்கிறார்கள்'' என்பது வரலாறு.

அப்பொழுது கர்னல் அக்கினியூ தமது தலைமை இடமான சென்னைக்கு அனுப்பிய கடிதத்தில், '' ... ... ... கடந்த சில நாட்களாக, கிளர்ச்சித் தலைவர்களைப் பின்பற்றி வரும் பலர், அவர்களது அணியில் இருந்து பிரிந்து வந்து விட்டனர். அங்கு நல்ல பதவிகளில் இருந்து நன்கு அனுபவம் பெற்றுள்ள சிலர், என்னிடம் வந்துள்ளனர். அவர்களில் ஒருவன் விசாரணையின் பொழுது எனது வினாக்களுக்குப் பொருத்தமான பதில் கொடுத்து இருக்கிறான். அதன் அடிப்படையில், காளையார் கோவில் போரில், திடீரென்று தாக்குவதற்கு திட்டம், அத்துடன் ஏற்கனவே அரண்மனை சிறுவயலில் இருந்து காட்டை அழித்து ஏற்படுத்தி வந்த பாதையை ஒட்டி ஆள் நடமாட்டமில்லாத ரகசிய வழியில், எங்களுக்கு வழி காட்டிச் செல்வதற்கும், அவன் உடன்பட்டு இருக்கிறான். ஆதலால் கிளர்ச்சிக்காரர்கள் சந்தேகம் கொள்ளாத

---

4 Hills S. C: Yousuff Khan, The Rebel commandant (1914).

வகையில் எதிரிகள், பலமாக அமைத்துள்ள தற்காப்பு நிலைகளுக்கு முன்னேறிச் செல்வது என முடிவு செய்து இருக்கிறேன்''. எனக் குறிப்பிட்டு இருந்தார்.[5]

காளையார் கோவிலுக்கான போர் உத்திகளை மாற்றிக் கொண்டு வழியில் உள்ள போராளிகளை ஏமாற்றி, அவர்களுடன் போராடாமல் திடீரென காளையார் கோட்டையில் போய் நிற்பது என்பது அக்கினியூ வகுத்த திட்டம். அதற்குத் துணை புரிந்தன அந்த துரோகி வழங்கிய துப்புகள். அவர்களது புதிய திட்டப்படி, போராளிகளுக்கு எவ்வித சந்தேகமும் ஏற்படாத வகையில், சோழ புரம் பாசறையில் இருந்து கர்னல் இன்னிங்ஸ் தலைமையில் இருந்த அணி காளையார் கோவில் வழியில் உள்ள கீரனூரை அடைதல் வேண்டும். மேஜர் அக்கினியூ தலைமையில் இன்னொரு அணி ஒக்கூரில் இருந்து புறப்பட்டு வாணியங்குடி முத்தூர் போய்ச் சேரும். இந்த இரு அணிகளும் தென்கிழக்கு திசைநோக்கி தாக்கு தல் நடத்தி வரும் பொழுது, போராளிகளது கவனம் முழுவதும் அந்த அணி மீது மையங்கொண்டு இருக்கும். அப்பொழுது கர்னல் ஸ்பிரேயின் இரகசிய அணி, கர்னல் ஷெப்பர்டின் உதவியுடன் வடக்கே அரண்மனை சிறுவயலில் இருந்து புறப்பட்டு, ஏற் கனவே, துரோகி காலித் காண்பித்துள்ள இரகசியப் பாதை வழி யாக எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் காளையார் கோவில் கோட் டையை நெருங்குதல் வேண்டும்.

அரண்மனை சிறுவயல் காட்டுப்பகுதியில் இருந்து காளையார் கோவில் நோக்கி முன்னேற கர்னல் ஸ்பிரேக்கு அக்கினியூ வழங்கிய இந்த அறிவுரையில் இருந்து இந்தப் போர் பற்றி அவனது தெளி வான ஆற்றலும் அக்கரையும் வியக்கத்தக்கதாக இருந்தது.

''... ... ...இந்த சிறிய அணியினது இயக்கம், காளையார் கோவிலில் நிலை கொண்டுள்ள எதிரியை பிரமிக்கச் செய்து அந்த நிலையைக் கைப்பற்றுவதுதான். எதிரி தாக்குதலுக்குத் தயாராக இருக்கிறான். முன்னேறிச் செல்லும் காட்டுப்பாதையை முகாமில் இருந்து வெட்டூர் வரையும், பின்னர் வெட்டூரில் இருந்து காளையார் கோவில் வரையும் நன்கு பாதுகாப்புக்குள்ளதாக

---

5 Military Consultations, vol. 288 (A)(2-10-1801)p.p. 6865-66

ஆக்கி கொள்ள வேண்டும். பாதையைக் காண்பிக்க நம்பிக்கை யான வழிகாட்டி ஒருவன் உண்டு. 77வது ரெஜிமெண்டின் 11வது அணியும், 6வது ரெஜிமெண்டின் சுதேசி வீரர்களுடன் ஐம்பது பயனீர்களும் வருவார்கள். காடு அழிக்கப்பட்டுள்ள பகுதிவரை யான பாதை கேப்டன் பேஷ்ஷாவுக்குத் தெரியும். இந்தத் திட்டத் திற்கு தூக்கு கூலிகளையும் பொதி மாடுகளையும் பயன்படுத்தக் கூடாது. வெடிமருந்தை லஸ்கார் கூலிகள் மூலம் சுமந்து செல்ல வும், நமது படை முகாமில் இருந்து காடுகள் அப்புறப்படுத்தப் பட்ட பகுதி வரை நிலம் சரிந்து தாழ்வாக உள்ளது. மழை காரண மாக ஈரமாகவும் இருக்கலாம். பத்தாவது மைலில் மற்றொருபாதை உள்ளது. வழியில் கிளர்ச்சிக்காரர்களை சந்திக்க நேரிட்டால் அவர்கள் மீது துப்பாக்கி கொண்டு சுடாமல் சமாளிக்கவும். சிறு வயல் பகுதியில் பாதையை இரண்டரை மைல் வரை கவனித்து முன்னேற வேண்டும். விரைவாகவும் முன்னேற வேண்டும். நமது அணியைப் பார்த்து, தங்களது கூட்டாளிகளுக்கு எதிரிகள் எச்ச ரிக்கை செய்வதற்கு முன்னர், அவர்களைத் தாக்கி சமாளிக்க வேண்டும். மிகுந்த முயற்சியுடன் முனைதல் வேண்டும். எதிரிகள் சுட்டால் நின்று விடவும், வெட்டூர் ரோட்டின் இடதுபுறம் முக் கால் மைல் தொலைவில் சுள்ளி ஊரணி இருக்கிறது. அங்கு அணி களை நிறுத்தி ஆயத்தம் செய்து கொண்டு உடனே தாக்குதலில் ஈடுபடவும். கோயிலைக் கைப்பற்றவும். அதன் நுழைவாசலை வெடி வைத்துத் தகர்த்தோ,கோடாரியினால் வெட்டி உடைத்தோ, அல்லது தீயிட்டுக் கொளுத்தியோ முன்னேற வேண்டும். அதற்கு எதிர்ப்பு இருந்தால், குழப்பத்தையும் கூச்சலையும் அதிகப்படுத் தவும்.

''முகாமில் இருந்து இரவு 10.00 மணிக்கு புறப்படவும். கிழக்கே உள்ள சாலைக்கு காலை இரண்டு மணிக்குள் வந்து விடவும். பெரும்பாலும் நிலா வெளிச்சம் மூன்று மணி முதல் இருக்கும். விடியலுக்கு முன்னர் இலக்கை அடைந்து விட வேண்டும்.

''இந்த முயற்சி இயலாததாகிவிட்டால், ரோடு வழியாக நான்கு கல் தொலைவில் உள்ள முத்துப்பட்டிக்கு வந்துவிடவும். நான் பெரும்பாலும் இரவு 10.00 மணிக்கு முத்தூர் வந்து விடு வேன். வந்து சேர்ந்ததை, அங்கிருந்து ஒரு நிமிட இடை வெளியில் அடுத்தடுத்து வெடிக்கும் மூன்று பீரங்கி குண்டு முழக்

கத்தில் இருந்தும், தொடர்ந்து ஐந்து நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து வெடிக்கும் கூடுதலான மூன்று குண்டுகள் முழக்கத்தில் இருந்தும் புரிந்து கொள்ளவும்.[6]

இந்த திட்டம், அப்படியே நிறைவேற்றப்பட்டது. ஒக்கூர், சோழபுரம், முத்தூர், கொல்லங்குடி ஆகிய வழியில் உள்ள பாதுகாப்பு நிலைகளில் இருந்து பரங்கியர் அணிகளைத் தாக்கிய கிளர்ச்சிக்காரர்கள் அனைவரும் முறியடிக்கப்பட்டனர்.[7] ஆனால் வழியெங்கும் மிகவும் வெறித்தனமாக தாக்குதலையும் துப்பாக்கிச் சூட்டையும் போராளிகளிடமிருந்து சந்தித்ததாகவும், ஆங்காங்கு பாதைகளில் தடுப்புகள் அமைக்கப்பட்டு இருந்ததாகவும் அவைகளைக் கடந்து முன்னேறுவது மிகவும் சிரமமாக இருந்ததாக கர்னல் இன்னிங்ஸின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[8] ஒரு கண்மாய்க்கரையில் நடந்த மோதலில் மட்டும், வீரத்துடன் பேராடிய போராளிகள் நூறு பேர்கள் தியாகிகள் ஆனார்கள். அவர்களை வெற்றி கொண்ட அந்தப்பரங்கி அணி இரவு 10.00 மணிக்கு முத்தூர் வழியாக கீரனூரை அடைந்தது. பிறகு கொல்லங்குடிக்கு முன்னேறியது.

அங்கு ஊரைச்சுற்றி முள்ளினால் தடுப்புகள் அமைத்து இருந்தனர். பரங்கிகள் இரண்டு அணிகளாகப் பிரிந்து ஊரைச் சூழ்ந்தார்கள். எல்லாத் திக்குகளில் இருந்தும் போராளிகளது பயங்கரமான துப்பாக்கிச் சூடு தொடர்ந்தது. அவர்கள் சுட்டுக் கொண்டே இருந்தனர். அவர்கள் ஏற்படுத்தி இருந்த முள்வேலிகள் அவர்களுக்கு மிகுந்த பாதுகாப்பைக் கொடுத்ததுடன் மிகுதியான சேதம் ஏற்படாமலும் அவர்களுக்கு உதவியது.[9] என்றாலும், பரங்கிகள் சும்மா இருந்து விடவில்லை. நடுநிசி என்று கூட நினைக்காமல் கொள்ளிவாய்ப் பேய் பிசாசுகளைப்போல, போராளிகளை வளைத்து கொடூரமாகத் தாக்கினர். கிளர்ச்சிக்காரர்கள்

---

6 Secret Consultations, vol. 26 (1801 AD). pp. 379-81

7 Militaty Consultations, vol. 288 (A) (1-10-1801) p p 6864-66.

8 Ibid p p. 6868

9 Ibid 6864-64

அவர்களை இனங்கண்டு தாக்க முடியாமல் தவித்தனர். இந்தக் காரணத்தினால் அவர்களுக்கு தோல்விதான் ஏற்பட்டது. கும்பெனி யார் தரப்பில் இங்க்லிஸ் என்ற ராணுவ மருத்துவர் படுகாய மடைந்தார்.[10]

கொல்லங்குடிக்கு வடக்கே உள்ள முத்தூரை இன்னொரு அணி இரவு எட்டு மணிக்கு அடைந்தது. அங்குள்ள ஏந்தல் கண்மாயில் வெள்ளம் போய்க் கொண்டு இருந்தது, இருட்டையும் வெள்ளத்தையும் இரு தரப்பினரும் பொருட்படுத்த வில்லை. சின்ன மருது சேர்வைக்காரரும் அங்கு நடந்த போரில் கலந்து கொண் டார். என்றாலும் ஒரே குழப்பம் நிலவியது. கிளர்ச்சிக்காரர்களது தாக்குதல் பலனுள்ளதாக இல்லை. அவர்கள் சிதறி ஆங்காங்கு இருட்டில் நின்று தாக்கியதால் அவர்களது இலக்குகள் சரியாக இல்லை. தாக்குதலில் வேகமும் இல்லை. அப்பொழுது சின்ன மருது சேர்வைக்காரருக்கு கிடைத்த தகவல் கூடுதலான குழப் பத்தை ஏற்படுத்தியது. அரண்மனை சிறுவயல் திக்கில் இருந்து பரங்கிப்படையணி ஒன்று காளையார் கோவில் நோக்கி நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என்பது தான் அந்த தகவல். எந்த அணி மீது கவனம் செலுத்துவது என்பது அப்பொழுது சின்னமருது சேர்வைக்காரது சிந்தனையாக இருந்தது. நொடி நேரத்தில் ஒரு முடிவிற்கு வந்தார். பரங்கியருடனான அந்த தாக்குதலை நிறுத்தி விட்டு, முழுவதும் ஆயத்த நிலையில் உள்ள காளையார் கோவில் எதிரியைச் சந்திப்பது என்ற முடிவுடன் இருட்டை ஊடுருவிக் கொண்டு காளையார் கோவில் கோட்டை நோக்கி குதிரையில் பாய்ந்து மறைந்தார்.[11]

---

10 Ibid p. 6869.

11 Military Consultations vol. 288 (A) (1-10-1801) p. 6869.

# 12

## கும்பெனியாரது கொடுமைகள்

ஆயிரத்து எண்ணூற்று ஒன்றாவது ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாள் உதயம்.

வைகறை இருளில் நீராடிய காளையார்கோவில் கோட்டைப் பகுதி இன்னும் செம்மையாகப் புலப்படவில்லை. மறவர் சீமை வழக்கில் சொல்ல வேண்டும் என்றால் ''நிலம் தெளிய'' இன்னும் ஒரு நாழிகை நேரம் இருக்கும். கதிரவனின் காலைக் கதிர், கோட்டையைச் சூழ்ந்து நின்ற மரங்களையும் நெருக்கமான செடி கொடிகளையும் தொட்டுத் தொடரவில்லை. என்றாலும், கோட்டையின் கிழக்கு, மேற்கு, தெற்கு பகுதிகளை நோக்கி பரங்கியரும் அவரது கூலிப்படைகளும் அணிவகுத்து வருவது, அவர்களது நடமாட்ட ஆரவாரத்தில் இருந்து தெரிந்தது. தெற்குப் பகுதி அணிக்கு மக்காலே, மேற்குப் பகுதியில் இன்னிங்ஸ், அக்கினியூ, கிழக்குப்பகுதியில் பிளாக்பர்ன் தலைமையில் அந்த அணிகள், சிறிதுநேரத்தில் வடக்கே இருந்து துரோகி வழிகாட்டிய இரகசிய காட்டுப்பாதை வழியாக ஷெப்பர்டும், ஸ்பிரேயும் தங்கள் அணியுடன் வந்து சேர்ந்தனர்.

புதுக்கோட்டைத் தொண்டமானும், அக்கினியூவும், ஒய்யாத் தேவரும் தயாரித்த கூட்டுத் திட்டம், கிளர்ச்சிக்காரர்கள் வியப்படையும் வகையில் கோட்டையை நான்கு புறமும் சூழ்ந்து மடக்குவதுடன், அவர்கள் கிழக்கு வடக்குப்பகுதி காடுகளில் ஒளித்து வைத்துள்ள இரகசிய ஆயுதச் சேமிப்புகளில் இருந்து மேலுதவி கிடைக்காமல் தடுப்பது என்பதுதான்.

சுமார் ஒருமைல் சுற்றளவு உள்ள காளையார்கோவில் மதில்களைச்சுற்றி வளைத்து அணி வகுத்து நின்றனர். பரங்கியரும் அவர்களது எடுபிடிகளும், கிழக்கே அமைந்து இருந்த கோட்டை வாசலிலும். கோட்டையின் பத்து கொத்தளங்களிலும் போருக்கு

ஆயத்தமாக நின்ற போர்மறவர்கள் பரங்கிகளைப் பார்த்தவுடன் வெஞ்சினம் கொண்டு ஆர்ப்பரித்தனர். போர் முழக்கங்களை எழுப் பினர். சரமாரியாக அவர்கள் விட்டெறிந்த ஈட்டிகளையும் வெடித்த துப்பாக்கி குண்டுகளையும் புறக்கணித்துவிட்டு, கோட்டையைத் தாக்குவதற்கான கட்டளைக்கு கும்பெனிப்படைகள் காத்து நின்றன. அவர்களது அணிவகுப்பில் முதன்மையாக குதிரையில் அமர்ந்து இருந்த தளபதி, அக்கினியூசிவப்புக்கொடியை அசைத்து சைகை செய்தவுடன் பீரங்கி அணியின் பேய்வாய்கள் அக்கினியை உமிழ்ந்தன. குதிரைப்படைகள் தாவிச் சென்று தாக்கின. அவர் களைத் தொடர்ந்து தூசுப்படைகள், கார்கால மேகங்களில் இடி மின்னலைப் போன்று பீரங்கிகள் கக்கிய அக்கினி மழையில் காளையார்கோவில் கோட்டை நனைந்து கொண்டு இருந்தது. அதுவரை அத்தகைய கடுமையான தாக்குதலை சந்திக்காத கோட்டையின் மதில்கள் சிறிது சிறிதாக சிதைந்து கொண்டி ருந்தன.

கோட்டை கொத்தளங்களில் இருந்த கிளர்ச்சிக்காரர்களும் ஆக்கிரோசத்துடன் பதிலுக்கு துப்பாக்கிகளினால் சுட்டனர். பீரங்கிகளை சுட்டு வெடித்தனர். வளரித் தண்டுகளை குறி பார்த்து வீசினர். கவண்களில் கற்களை வைத்து எறிந்தனர். குத்து ஈட்டிகளைத் தொடர்ச்சியாக எறிந்தனர். சூரியனது வெப்பத்தை விட பலமடங்கு சூட்டுடன் கொதித்துக் கொண்டிருந்த கொதி கலன்களில் இருந்து ஈயத்தண்ணீரை வாரி இறைத்து பரங்கிப் படையினரை நாசமடையச் செய்தனர். ஆனால் இவையனைத் தும் அவர்களது முன்னேற்றத்தினை கணிசமான நேரத்திற்கு தடுத்து நிறுத்தின. என்றாலும், பரங்கிகள் தங்களது தாக்குத லைக் கைவிடவில்லை. அவர்களில் பலர், தங்களது முதுகில் இணைத்துப் பிணைத்து இருந்த நூலேணிகளைக் கொண்டு கோட்டை மதிலில் உடும்புப் போல ஊர்ந்து ஏற முயன்றனர். அவர்களது முயற்சிக்குப் பாதுகாப்பாக துப்பாக்கிகள் படபடத் தன. மதில் மேல் இருந்து மறவர்கள் கீழ்நோக்கி எதிரிகளைச் சுட்டு வீழ்த்தினர், கருமருந்து கொட்டான்களிலும் சட்டிகளிலும் தீயிட்டு அவர்கள் மீது விட்டெறிந்தனர். பதினெட்டு அடி உயர முள்ள கோட்டை மதில் பரங்கியரின் பீரங்கி தாக்குதலால் திண றியது. சிவகங்கைச் சீமைப் போராளிகளும் அந்த அசுரத்தாக் குதலினால் தளர்ந்தனர்.

கோட்டை வாசலை நெருங்கி அங்குள்ள காவல் அரணை அழித்து, கோட்டைக்குள் புகுவதற்கு முயன்ற பரங்கியர் அணி களுடன், சிவகங்கை போராளிகள் நேருக்கு நேர் பொருதினர். அவர்கள் பற்றி இருந்த நெடுவேலும், கொடுவாளும், வளரிகளும் அந்த மண்ணுக்கே உரிய வீரத்துடன் விளையாடின. எதிரிகளின் தலைகளை வரிந்து கொய்தும் அவர்களது கொடிய இதயங்களைக் குத்தி பிளந்தும் மகிழ்ந்தனர். புற்றீசலைப் போன்று அணி அணி யாக, அலை அலையாகப் பொருத வரும் பரங்கிகள்-உருவும் நெருப்புக் கோளங்களை உமிழ்கின்ற பீரங்கிகளின் உறுதியான தாக்குதல் - இவைகளுக்கிடையே நின்று போராடும் இரும்பு நெஞ் சங்கள் இறுதியில் மறவர்களது விலை மதிக்க முடியாத வீரம் அங்கு விலைபோகவில்லை. போராளிகள் அனைவரும் புகழைப் புகலிடமாகப் பெற்றுள்ள வீர மரணத்தை தழுவினர். ''நின்று புகழொழிய நில்லா உயிரோம்பி இன்று நாம் வைகல் இழிவா கும்'' என அவர்கள் எண்ணி இருத்தல் வேண்டும். உலையா உள்ளமொரு உயிர்க்கடன் இருத்தோராகத் தங்கள் விழுப்புண் பட்ட உடல்களை மண்ணில் சாய்த்துப் புகழால் உயர்ந்தனர். தந்தையும் தாயும் குலவி மகிழ்ந்த மண், அவர் முந்தையர் ஆயி ரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்த மண் அல்லவா அந்த மண். அந்தப் புனித மண்ணின் மாண்பைக் காக்கப் போராடி வீழ்ந்த அவர்களது ஏமாற்றத்திற்கு இணையான எடுத்துக் காட்டு எங்கும் காண இயலாத ஒன்று. புறநானூற்றுப் போர்க்களங்களை நினை வூட்டும் அவர்களது போர்ப்பரணி மெதுவாக ஓய்ந்தது. அம்பு பட்டு அடியோடு சாய்ந்த யானைகள் தோற்றத்திலும் ஏற்றத்தி லும் சிறந்த வகைக் குதிரைகளும் மாய்ந்தன. அவைகளில் ஏறி வந்து போரிட்ட மறவர்களும் மடிந்தனர். அத்துடன் அனைத்து வீரர்களும் மாண்டனர். போர் முரசைத் தொடர்ந்து முழக்குவதற்குக் கூட ஆள் இல்லை ………… பெரும் புலவர் பாணர் வடித்துள்ள புறப்பாடலின்[1] மறு காட்சியாக அமைந்தி ருந்தது. காளையார் கோட்டை போர்க்களம், கிளர்ச்சிக்காரர் களது இலட்சிய அரணாக, ஏகாதிபத்தியவாதிகளின் இலக்காக விளங்கிய, அந்தக் கோட்டை கண்ட இறுதிப்போர் அது. இந்த உலகத்திலேயே மிகவும் உயர்ந்ததாகவும். அருமையானதாகவும் கருதப்படும் ஆருயிரை பிறந்த மண்ணின் பெருமையைக் காப்ப

---

1 பாணர் - புறப்பாட்டு எண். 63

தற்கு காணிக்கையாகக் கொடுத்த போர் மறவர்களது பிணக் கூறுகளைக் கடந்து பரங்கியர் கோட்டைக்குள் நுழைந்தனர்.

மானத்தின்பேராக, வீரத்தின் பேராக விளங்கிய கானப்பேர் தாழ்ந்தது. வீழ்ந்தது. நீலநிறப் பிண்ணணியில் குறுக்கும் நெருக்கு மாக சிவப்பு வெள்ளைக் கோடுகளைக் கொண்ட வெள்ளையரது வெற்றிக் கொடி, அந்தக் கோட்டை வாசலின் முகப்பில் தொங்க விடப்பட்டது. மற்றுமொரு கொடி, மருது சேர்வைக்காரர்கள் மிகுந்த பக்திப்பெருக்குடன் நிர்மாணித்த காளை நாதர் கோவிலின் உயர்ந்த கோபுர மாடத்தில் இருந்து பறக்கவிடப்பட்டது. அந்நி யரது ஆதிக்க வெறிக்கு முட்டுக்கட்டையாக விளங்கிய அந்தக் கோட்டை, அப்பொழுது மிகப் பெரிய இடுநாடாக விளங்கியது. கோயிலைச் சுற்றியுள்ள விசாலமான வெளியில், சிவகங்கைச்சீமை யின் சிறப்பையும் பெருமையும் சிந்தித்து செயல்பட்ட வீரர்களில் சடலங்கள் குவியல், குவியலாகக் கிடந்தன. பரங்கியரைப்பிடித்துக் கொன்று தங்களது விடுதலை உணர்வை தணித்துக் கொள்ளத் துடிதுடித்த நூற்றுக்கணக்கான போராளிகளது கால்களும் கரங் களும் துண்டிக்கப்பட்டு சிதறிக்கிடந்தன. எங்கு பார்த்தாலும் பின்னம்பட்ட விக்கிரங்களைப் போன்று வீரர்கனது சடலங்கள்; வேதனைக் குரல்கள் கோவிலின் தென்புரத்தில் மருதுசேர்வைக் காரர்கள் ஆழமாக அமைத்த ஆனைமடு குளத்தின் தெள்ளிய நீர் மறவர்கள் சிந்திய செங்குருதி கலந்து செந்நீராகக் காட்சியளித் தது. இத்தகைய சஞ்சலமான சூழ்நிலைக்கு நடுவில், இன்னும் மறைந்து விடாது எஞ்சி இருக்கும் மான உணர்வினுக்கு மவுன சாட்சியாக கோயிலின் முகப்பு கோபுரங்கள் கம்பீரமாக நின்று காட்சியளித்தன.

கோட்டையின் மேற்குப்பகுதியில் எஞ்சி இருந்த வீரர்களும் அவர்களது தலைவர்களான மருது சேர்வைக்காரர்களும் சுரங்க வழியைத் தொடர்ந்து சென்று கோட்டைக்கு தெற்கே வெளியே போய் வடக்கே திரும்பி மேப்பலபனங்குடி காட்டுப்பகுதிக்குள் நுழைந்து விட்டனர். கோட்டை முழுவதும் அவர்களைத் தேடிக் களைத்துப்போன கும்பெனி சிப்பாய்கள், அயர்வு தீருவதற்காக பல நூறு சாராயக்குப்பிகளை குடித்துக் கும்மாளமிட்டனர்.[2] இந்

---

2 **Military Consultations, vol. 288 A. (4-10-1801) pp.6868-70**

தப் போரின் பிரதிபலிப்புகள் - பக்கத்து நாடுகளில், ஒருவேளை மோசமான - கும்பெனியாருக்கு விரோதமான-விளைவுகளை ஏற் படுத்தலாம் என்ற அச்சத்தினால் அவைகளைச் சமாளிப்பதற்கு கர்னல் மில்லர் பரமக்குடிக்கும் கர்னல் ஷெப்பர்டு மங்கலத்திற்கும் கர்னல் இன்னிங்ஸ் பள்ளி மடத்திற்கும், தற்காப்பு அணிகளுடன் விரைவாக அனுப்பப்பட்டனர்.

மேலும் காளையார் கோவில் கோட்டைக்கு உள்ளும், வெளி யிலும் கிளர்ச்சிக்காரர்கள் சேர்த்து வைத்து இருந்த ஆயுத இருப்புக் களைத் தேடிப்பிடித்து அழித்தனர். கோட்டை முகப்பில் பதி னான்கு ஆயிரம் துப்பாக்கி தோட்டாக்களும், என்பது பீரங்கி வண்டிகளும், இருபத்து மூன்று பீரங்கிகளும் (இரும்பு வெங்கலக் கலவையில் உருவாக்கப்பட்டவை) அறுநூறு பவுண்டு நாட்டு வெடி குண்டுகளும், ஐநூறு பவுண்டு கருமருந்தும், இன்னும் பல விதமான சிறுசிறு போர்க்கருவிகளும் கைப்பற்றப்பட்டதாக அக்கினியூவின் அறிக்கையில் இருந்து தெரிகிறது.[3] இன்னொரு அறிக்கையில் போருக்குப் பின்னர் ஏற்பட்டு உள்ள நிலைமை யினையும் கும்பெனி கவர்னருக்கு அக்கினியூ தெரிவித்தான். அதில் சிவகங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குடிமக் கள் கும்பெனியாரின் அதிகாரத்தை ஏற்று கட்டுப்பட்டுள்ளனர் என்றும் அதுவரை சிவகங்கை சேர்வைக்காரர்களை ஆதரித்து வந்த பெரும்பாலான மக்கள் பகுதியினர் அவர்களது தலைமையி லான நம்பிக்கையை இழந்து சிதறி ஓடிவிட்டனர் என்றும் தெரி வித்து இருந்தான். அத்துடன் தமது துருப்புக்கள் பின் தொடரு வதைத் தவிர்ப்பதற்காக பத்திரமான மறைவிடங்களில் பதுங்கி இருப்பதுதான் அவர்களது தற்பொழுதைய திட்டம் என்பதையும் குறிப்பிட்டு இருந்தான்.

இராமநாதபுரம் பகுதிக்கு தப்பிச் சென்ற மயிலப்பன் சேர்வைக்காரரையும், இராமநாதபுரம் சீமை மன்னராக அறிவிக் கப்பட்ட மீனங்குடி முத்துக்கருப்பத்தேவரையும் பிடிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.[4] அவர்கள் இருவரை யும், உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டு வருவதற்

---

3 Ibid (5-10-1801) p. 6889.

4 Military Consultations vol. 288 (6-10-1801), p. 6883-84

கான சன்மானங்களும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தன.[5] மறவர் சீமைக்கிளர்ச்சிகளில் எஞ்சியிருந்த மாபெரும் தலைவர்கள் இவர்கள் இருவரும் தான்.

காளையார்கோவில் கோட்டைப் போரில் கிளர்ச்சிக்காரர் களை படுதோல்வியடையச் செய்ததுடன் அக்கினியூ திருப்தி அடையவில்லை. கிளர்ச்சித்தலைவர்களைப் பிடிப்பதிலும், கிளர்ச் சிக்கு ஆதரவு அளித்தவர்களை ஒடுக்குவதிலும் நடவடிக்கை மேற்கொண்டான். உடனே, உரளிக்கோட்டை வழியாக சருக ணிக்கு விரைந்து செல்லுமாறும் அந்தப்பகுதிக்கான பாதை முட் செடிகள் சூழ்ந்து இருப்பதால் அதனை சுற்றுப்பாதையில் சென்று அடைய வேண்டும் என்றும் அந்தப்பகுதியில் உள்ள கிளர்ச்சிக் காரர்களையும் அவர்களது சொத்துக்களையும் தயக்கமின்றி அழித்து ஒழிக்குமாறும் தளபதி இன்னிங்ஸீக்கு உத்தரவிட்டான். காட்டுச்சண்டையில் நன்கு பழக்கப்படட மலாய் நாட்டுத் துருப் புகளும் இன்னிங்ஸுடன் அங்கு சென்றன. ஏற்கனவே சருகணிப் பகுதியில் இராமநாதபுரத்தில் இருந்த கேப்டன் பிளாக், அங்கு முகாம் செய்து கிராம மணியக்காரர்களையும் மற்றவர்களையும் துருவித்துருவி விசாரித்துக் கொண்டு இருந்தான், அந்தப்பகுதி யில் உள்ள கிளர்ச்சிக்காரர்கள் யார், எத்தனைபேர், அவர்களது நிலைமை ஆகிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காக.[6]

மேஜர், ஷா என்ற இன்னொரு தளபதி தெற்குப்பகுதி யில் மங்கலத்திற்கு அருகாமையில் கிளர்ச்சிக்காரர்களைத் தேடிப் பிடிப்பதில் முனைந்து இருந்தான். இந்த, வெள்ளைத்தளபதிகள் மூவரும் அவர்களது அணிகளும், அந்தந்தப் பகுதியில் உள்ள கிளர்ச்சிக்காரர்கள் அவர்களது ஆயுதங்கள், சொத்துக்கள் ஆகிய வைகளை அழித்து அமைதியை நிலைநாட்ட வேண்டும்; அந்தப் பகுதிகளில் தொடர்ந்து முனைப்பாக இயங்கி வந்த நன்னி சேர்வைக்காரர் என்ற கிளர்ச்சித் தலைவரை உயிருடன் பிடிக்க வேண்டும்; இந்த இருவிதமான பணிகளை முடித்துக் கொண்டு இந்த அணிகள் வடக்கு நோக்கிச்சென்று சங்கரப்பதி, கண்டிர மாணிக்கம் காடுகளையும் திருப்பத்தூர் - பிரான்மலைப்பகுதிகளை

5 Revenue Sundries vol. 26, (17-10-1801)

6 Secret Consultations, vol. 26, (2-10-1801) pp. 313-14.

யும் கிளர்ச்சிக்காரர்களது கட்டுப்பாட்டினின்று நீக்க வேண்டும் என்பது அக்கினியூவின் ஆக்ஞை.

அத்துடன், மேஜர் ஷெப்பர்டை காளையார் கோவில் காடு முடிவடையும் மங்கலம் பகுதிக்கும், லெப்டி, மில்லர் இராமநாத புரத்திற்கும், கேப்டன் லாவக்கோர்டும், லெப்டி. லாம்பர்டும் பிரான்மலைக்கும், கேப்டன் சுமித் திருப்பத்தூருக்கு வடக்கே உள்ள காட்டிற்கும், மேஜர் மக்காலே பார்த்திபனூர் முடுக்கங் குளம் பகுதிக்கும் விரைவாக அனுப்பப்பட்டனர்.[7] ஏனெனில் கும்பெனியாருக்குக் கிடைத்த துப்புக்களின்படி மீனங்குடி முத்துக் கருப்பத்தேவர் நயினார்கோவில் பகுதியிலும், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை குழுவினர் திருப்பத்தூர் காட்டிலும், மருதுசேர்வைக் காரர்கள் வெட்டூர் பெருங்குடி பகுதியிலும் சிவத்த தம்பி, குப்பம் ஊரணிப் பகுதியிலும் அப்பொழுது நடமாடுவதாக தகவல்கள் கிடைத்த மறு வினாடியே கும்பெனி அணிகளும் கூலிப்பட்டாளங் களும் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு விரைந்து சென்றன. மருது சேர்வைக்காரர்கள் சருகணியில் இருப்பதாகக் கிடைத்த தகவ லின்படி கேப்டன் காட்பிரே சருகணிக்கு விரைந்து சென்றான்; தனது அணியுடன், அந்தக்கிராமம் அமைதியாக இருந்தது. ஆனால் அங்குதானே சின்ன மருது சேர்வைக்காரர் இருந்தார். வீடு வீடாக சோதனை செய்தனர். அப்பொழுது சின்னமருது அங்குள்ள மாதா கோயிலுக்குள் புகுந்து தஞ்சம் தேடினார். கோயிலை அடுத்த வீட்டில் கோவில் பாதிரியார் ஒரு பெரிய பெட்டியின்மீது அமர்ந்தவாறு "பைபிள்" படித்துக் கொண்டு இருந்தார். பதட்டத்துடன் ஓடிவந்த சின்னமருது சேர்வைக் காரரை அவர் இனங்கண்டு கொண்டார். ஏனெனில் சில ஆண்டு களுக்கு முன்னர்தான் அந்த தேவாலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் "பாஸ்கல்" திருவிழாவின் பொழுது புனித மேரி மாதா ஆரோகணித்துச் செல்ல அலங்காரத்தேர் ஒன்றினை அன்பளிப்பாக சின்னமருது வழங்கி இருந்தார்.

அப்பொழுது அவரது நிலைமையை பாதிரியார் புரிந்து கொண்டார். ஒரு கணம் யோசித்தார். அவர் "உங்களை ஏற்றுக் கொள்ளுகிறவன், என்னையும் ஏற்றுக் கொள்கிறான்.[8] என்ற

---

7 Revenue Sundries. vol. 26 (11-10-1801)(7-10-1801) pp. 333-45

8 புதிய ஏற்பாடு மத்தேயு சுவிஷேசம் 10:40

வேதவாக்கினை நினைத்தார். உடனே அவர் அமர்ந்து இருந்த பெட்டிக்குள் ஒளிந்து கொள்ளுமாறு சைகை செய்தார். மருது சேர்வைக்காரரும் அவ்விதமே ஒளிந்து கொண்டார். தொடர்ந்து வந்த கும்பெனித்தளபதி அந்தப்பக்கம் ஓடி வந்த மருது சேர்வைக் காரரைப் பற்றிப் பாதிரியாரிடம் விசாரித்தார். தம்முடைய அமைதி யான படிப்பைக் குலைத்தற்கு ஆத்திரப்பட்டவர் போல பாதிரி யார் ''நன்கு உற்றுப் பார்த்துக் கொள்'' என்று சினந்து பதில ளித்த பாதிரியாரது வெறுப்பை உணர்ந்தவனாக வெள்ளைத் தளபதி அங்கிருந்து அகன்று விட்டான். சின்னமருது அப்பொழுது தப்புவிக்கப்பட்டார். தமது இக்கட்டான நிலையில் அடைக்கலம் அளித்த பாதிரியாருக்கு நன்றியைத் தெரிவித்ததுடன் அமை யாமல், அந்த மாதா கோயிலின் பராமரிப்பிற்காக கிராமம் ஒன்றை அறக்கொடையாக வழங்கியும் செப்பு பட்டயம் ஒன்றினையும் எழுதிக் கொடுத்துச் சென்றார் சின்னமருது.[9]

கும்பெனித்தளபதி, அடுத்து சருகணி கிராமத்தில் சிவகங்கை சேர்வைக்காரரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு இருந்த சவரி முத்துப்பிள்ளை என்ற முதியவரையும் அவரது ஆண்மக்களையும் கண்டுபிடித்து கைது செய்து அழைத்துச் சென்றான். இந்த முதியவரை எப்படியும் பிடித்து தண்டிக்க வேண்டும் என்றும் அவர்பால் எவ்வித அனுதாபமும் கொள்ளக்கூடாது என்பதும் அக்கினியூவின் கண்டிப்பான உ;ந்திரவு.[10] இந்தக்குடும்பத்தினரை உரளிக்கோட்டை அருகில் தூக்கிலிடப்பட்டு இருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

வெள்ளைத்தளபதி அக்கினியூ எழுதியபடி அப்பொழுது, சற்று அமைதியாக இருந்து எஞ்சியுள்ள போராளிகளது எண் ணிக்கை, ஆயுத இருப்பு ஆகியவைகளைத் தெரிந்து கொண்ட பிறகு, மேலும் பரங்கிகள் எதிர்ப்புப்போரைத் தொடருவது என்பது அப்பொழுதைக்கு சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் மேற்கொண் டிருந்த முடிவு. ஆனால் அவர்கள் நினைத்தபடி சிறிது நேரம் கூட காட்டில் அமைதியாக இருந்து சிந்திப்பதற்கு பரங்கிகள் அவகாசம் கொடுக்கவில்லை. போதாக்குறைக்கு படபடவென

---

9 மாறணி செப்பேடு (எருகணி தேவாலயத்தில் உள்ளது)

10 Revenue Sundries vol. 26 (11-10-1801) pp. 357-58

கொட்டும் ஐப்பசி மாத அடைமழை. அவர்களை உயிருடன் பிடித்து விடுவதற்காக, அவர்கள் சென்ற பாதைகளின் வழியே, பரங்கிகளும் சென்றனர், வழக்கம்போல சுயநலமிகளான துரோகிகள் அவர்களுக்கு வழிகாட்டி முன் சென்றனர். காடுகளை ஊடுருவி "தேடுதல்" பணியை நடத்தினர். இரத்தவெறி கொண்ட அக்கினியூ இந்தத் திட்டத்தை விரைவாக முடிப்பதற்காக விளம்பரம் ஒன்றை காளையார் கோவிலிலும் சுற்றுப்புறங்களிலும் பொதுமக்களிடம் பரப்பினான், கைக்கூலி பெறும் ஆசையில் கண்ணைப் பொத்திக் கொண்டு மக்கள் தலைவர்களைக் காட்டிக் கொடுக்கும் கழிசடைகளுக்குக் கண்ணி வைத்து காத்து இருந்தான்.

வெள்ளைமருது, சின்னமருது, சிவத்தையா ஆகிய தலைவர்களைப்பிடித்துக் கொடுப்பவருக்கு தலைக்கு ஆயிரத்து ஐநூறு சூளிச்சக்கரம், என்றும் ஏனைய முன்னணி வீரர்களான சிவஞானம், துரைச்சாமி, முத்துச்சாமி, கறுத்நத்தம்பி-உடையணன், மோலிக் குட்டித்தம்பி, வேங்கன் பெரிய உடையாத்தேவர், ஊமை குமாரசாமி ஆகியவர்களைப் பிடித்து வருபவர்களுக்கு தலைக்கு ஆயிரம் சூளிச்சக்கரம் பணம் வழங்கப்படும் என அந்த விளம்பரத்தில் கண்டிருந்தது.[11] கும்பெனியாரது ராணுவபலத்திலும் வெற்றியிலும் நம்பிக்கை கொண்டு இருந்த கைக்கூலிகளுக்கு இந்த அறிவிப்பு நல்லதொரு ஊக்குவிப்பாக அமைந்து இருந்தது. ஓடுபவர்களைக் கண்டால் துரத்துகிறவர்களுக்கு எளிதுதானே!

வாழ்வில் மட்டுமல்லாமல், தாழ்விலும் பங்குகொண்டு பின் தொடர்ந்த தோழர்கள், உறவினர்கள் ஆகியோருடன் மருது சகோதரர்கள் காட்டில் தங்கி இருந்த மறைவிடத்தை மோப்பம் பிடித்துத் திரிந்தன அந்தமனித ஓநாய்கள், தோல்வியால் தளர்ந்து துயரத்தில் துவண்ட அவர்களை, ஒருவர் பின் ஒருவராகக் கைப்பற்றினர். ஆங்காங்கு, அவர்களைத் தூக்கில் தொங்கவிட்டு மகிழ்ச்சியடைந்ததை அக்கினியூவின் பல அறிக்கைகளில் காணப்படுகின்றன. இறுதியில் மருது சேர்வைக்காரர்களது மறைவிடத்தையும் அக்கினியூவின் அடிமைகள் கண்டுபிடித்தனர். காட்டின் ஒரு இடத்தில் படிந்து இருந்த ஒட்டகை, குதிரைகளது கால்குளம்

---

11 Revenue Sundries, vol. 26, (17-10-18-1). Proclamations

புச் சுவடுகளை கவனித்து, அவைகளைத் தொடர்ந்து சென்றனர். கிளர்ச்சிக்காரர்களது பாசறை கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு நடந்த கைகலப்பில் வெள்ளைமருது சேர்வைக்காரரது இரு மக்களையும் இன்னும் சிலரையும் மேஜர். ஷெப்பர்டின் அணி மடக்கிப் பிடித்தது. அந்த இடத்திற்கு அருகிலேயே தங்கி இருந்த மருது சேர்வைக்காரர்கள் கைகலப்பின் பொழுது நழுவிச் சென்றனர்.[12] தங்களது பெற்றோர்களைத் தப்புவிக்கும் நோக்கத்தில் வேண்டுமென்றே அகப்பட்டுக் கொண்ட இளம் வீரர்களான வெள்ளைமருது மக்கள் கறுத்த தம்பியும் மோலிக்குட்டித்தம்பியும் அன்றே அங்கேயே தூக்கில் இடப்பட்டனர்.[13]

அடுத்து இரண்டு நாட்களில் சிவகங்கை மன்னர் வேங்கன் பெரிய உடையாத்தேவரையும், குதிரைகள் பல்லக்குகள், சில வற்றையும் அந்தக்காட்டில் கைப்பற்றினர்.[14] அக்கினியூ அவரை விசாரித்தான். அவருக்கும் மருது சேர்வைக்காரர்களுக்கு உள்ள அரசியல் தொடர்புகளை அறிந்து கொள்வதற்காக, மருது சேர்வைக்காரர்களது அரசியலில் தமக்கென எவ்வித அதிகாரமும் இல்லாமல் பெயரளவில் தான், சிவகங்கைச் சீமை மன்னராக இருந்து வந்ததாக அவர் தெரிவித்தார். தற்சமயம் தாமே சரணடைய முன் வந்தபொழுது, பிடிக்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார். மருது சேர்வைக்காரரது அமைச்சர் போல விளங்கிய கோட்டை சேர்வைக்காரனும் சின்னணண் சேர்வைக்காரனும் ஏற்கனவே கும்பெனியாரிடம் சரணடைந்து இருந்தனர். கும்பெனியாருக்கு எதிரான நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபடவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்து தங்களது உயிர்களுக்கு அவர்கள் உத்திரவாதம் பெற்றனர்.[15]

மருது சேர்வைக்காரர்களைத் தேடும் பணி தொடர்ந்தது. கர்னல் வில்லியம் பிளாக்பர்ன், தமது கூலிப்பட்டாளத்துடன் காளையார்கோவிலுக்கு வடகிழக்கே இருந்த காட்டுப்பகுதியை

12 Military Consultations, vol. 288 (A) (6-10-1801) p. 6877-80

13 Renvenue Sundries, vol. 26 (6-10-1801) p. 76.

14 Military Consultations, vol. 288 (A) (6-10-1801) p, 6881.

15 Ibid pp. 6882-85.

அலசினான். காடுகளுக்கு நடுவே அமைந்துள்ள கருணை என்ற கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தான். சங்கரப்பதி, செங்கோட்டை காடுகளைப் பிரிக்கும் மையப்பகுதியில் உள்ளது அந்த ஊர். அங்கிருந்து ஒரு கல் தொலைவிற்கு மேற்குத் திக்கில் நெருக்கமாக நீண்டு சென்றது அந்தக்காடு. அந்தப்பகுதியில் - அரண்மனை சிறுவயலுக்கும் காருகுடிக்கும் இடைப்பட்ட பகுதியில், பல இடங்களில் கிளர்ச்சிக்காரர்கள் பதுக்கி வைத்து இருந்த கருமருந்து மற்றும் ஆயுத இருப்புகளைக் கைப்பற்றினர். இன்னும் அந்தப் பகுதியில் ஊடுருவி வருகின்ற கும்பெனியாரைப்பற்றி நோட்டமிட்டு அவர்களது நடமாட்டத்தை அறிந்து தெரிவிப்பதற்காக சிவகங்கை சேர்வைக்காரர் நியமித்து இருந்த மணவாள நாயக்கர் என்ற ஒற்றரையும் அவரது மகன் உள்ளிட்ட எட்டுப் பேரையும் 5-10-1801யன்று கைது செய்து காவலில் இட்டனர். இதனால் மருது சேர்வைக்காரர்களுக்கும் சங்கரப்பதி காட்டின் வடகிழக்குப் பகுதிக்கும் இருந்து தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.[16]

அடுத்த இரு நாட்களில், அந்தக் காட்டுப்பகுதியில் தங்கி இருந்த வெள்ளைமருது சேர்வைக்காரரது பெண்டுகள் பிள்ளைகள் சிலரையும் கூலிப்பட்டாளம் வளைத்துப் பிடித்தது. சங்கரப்பதி, செங்கோட்டை, சிறுகுடிப்பகுதிகளைச் சுற்றிப் பார்த்து வந்த தளபதி பிளாக்பர்ன், வடக்கே கீரனூர் சென்று கர்னல் அக்கினியூவைச் சந்தித்து மேல் நடவடிக்கை பற்றி ஆலோசனை நடத்தினான்.[17] திருப்பத்தூர் பகுதியில் பாஞ்சாலங்குறிச்சி ஆட்கள் விருப்பாட்சி பாளையக்காரர் தலைமையில் நடமாடுவதை நோட்டமிட்டனர். அப்பொழுது சின்னமருதுவின் மகன் சிவத்த தம்பியும் அவரது மகன் முத்துச்சாமியையும், காடல்குடி பாளையக்காரர் கீர்த்தி வீரகுஞ்சு நாயக்கரையும் அவர்களது பெண்டு பிள்ளைகளையும் பிடித்தனர். இந்த முன்னணித் தலைவர்கள் மூவரையும் கண்டிராமாணிக்கம் என்ற சிற்றூரில் பொது இடத்தில் தூக்கில் தொங்கவிட்டனர்.[18] அவர்களைப் பிடிப்பதற்காகக் கும்பெனியாரது கைக்கூலியைப் பெற்ற துரோகிகள் மகிழ்ச்சியினால் கும்மாளம் போட்டனர்.

---

16 Military Consultations vol. 288, (A) (7-10-1801) p. 6971-72
17 Ibid p. 6892-95.
18 Ibid p. 6895.

நாட்டுக்குழைத்த நல்லவர்களது தியாகப்பட்டியல் தொடர்ந்தது. கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவரான சிவகங்கை திருக்கண்ணத் தேவரையும் அவரது கூட்டாளிகளையும் மிகவும் சிரமப்பட்டு பிடித்துக் கொன்றனர்.[19] பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான சாமி நாயக்கரும், ஊமை குமாரசாமி நாயக்கரும் இன்னும் அவர்களது அறுபத்து ஐந்து தோழர்களும் திண்டுக்கல் சீமையிலிருந்து பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பும் வழியில் வத்தலக்குண்டில் பரங்கியர் கைகளில் அகப்பட்டனர்.[20] பரங்கிகள் தடயனிலும் அவர்களை பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வெளியில் வைத்து 16-11-1801 யன்று சிரச்சேதம் செய்து கொன்றனர். இராமநாதபுரம் சீமைப் பட்டத்திற்கு உரிமை கொண்டாடிய மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரது தம்பி கனகசபாபதி தேவரை அவரது போராட்டக்களமான அபிராமத்தில் தூக்கில் ஏற்றினர்.[21] அடுத்தடுத்து, இத்தகைய முக்கியத்தலைவர்களைப் பிடித்துக் கொன்றவுடன், பரங்கிகளது மகிழ்ச்சி பன்மடங்காகியது. ஏனைய கிளர்ச்சிக்காரர்களையும் அவர்கள் ஒப்பற்ற தலைவரான மருது சேர்வைக்காரர்களையும் விரைவில் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு அதிகரித்தது. துரோகிகள் பலவாறு துப்புகள் சேகரித்தனர். கைக்கூலிகள் புதிய ஜமீன்தாரது ஆதரவையும் பரங்கிகளது பரிசுத் தொகையும் பெறுவதற்காக, தங்கள் முயற்சியில் இரவு பகலாக அலைந்தனர். அவர்களுடைய முயற்சி வெற்றியும் பெற்றது.

சிவகங்கைச் சீமையை ஒட்டி இருந்த மேலூர் நத்தம் நாடு கும்பெனியாரின் கொலைவெறி தலைவிரித்து ஆடியது. மதுரையில் இருந்த கேப்டன் பெரும் ராணுவ தளவாடங்களுடன் திண்டுக்கல்லுக்கு செல்லுமாறு உத்திரவிடப்பட்டது.[22] காரணம், திருப்பத்தூர் பகுதியில் இருந்த பாஞ்சாலங்குறிச்சி, விருபாட்சி பாளையக்காரர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களுமாக ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் துவரங்குறிச்சி, வலம்பட்டி வழியாக

---

19 Madurai District Records vol. 1219.

20 Military Consultations, vol. 288. (27-10-1801), p. 7108.

21 Ibid. 289, (16-11-1801) p. 7741.

22 Revenue Sundries, vol. 26,(12-10-1801) p. 361.

நத்தத்தை ஊடுருவிச் சென்றனர்.[23] இதனையடுத்து கிளர்ச்சிக் காரர்களும் கும்பெனிப்படைகளும் நத்தம் குன்றுப் பகுதியில் கைகலந்ததில் கிளர்ச்சிக்காரர் தரப்பில் ஏராளமான இழப்பு ஏற் பட்டது. எஞ்சியவர்கள் காமாச்சிநாயக்கன் பாளையம் வழியாகப் பின் வாங்கினர்.[24] கும்பெனிப்படைகள் நத்தம், சேடபட்டி, கீழவளவு, சும்மணப்பட்டி, தட்டப்பட்டி ஆகிய ஊர்களில் போராட் டம் நடத்தினர். கள்ளர் தலைவர்கள் நால்வரையும் கீழவளவு சும்மணப்பட்டி அம்பலக்காரர்களது நெருங்கிய உறவினர்கள் சில ரையும் கைது செய்து மதுரைக்கோட்டையில் சிறையிலிட தளபதி காரோனிடம் அனுப்பி வைத்தனர்.[25] குடிமக்களை இழிவு படுத் தினர். அவர்களது சொத்துக்களை நாசம் செய்தனர். கிளர்ச்சிக் காரர்களைப் பற்றிய விபரங்களைப் பெறுவதற்காகப் போராட்டம் நடத்தினர். கிராம மக்கள் அனைவரையும் பாகுபாடு இன்றி படாதபாடு படுத்தினர்.

ஒருவகையாக நத்தம் தாசில்தாரைக் கொலை செய்து கும்பெனியாருக்குப் பல வழிகளிலும் இடைஞ்சல் செய்த நத்தம் கோபால மணியக்காரரையும், வெங்கிடாசலத்தையும் பிடித்து நத்தத்தில் தூக்கில் போட்டனர்.[26] சேடபட்டி அம்பலக்கார ருக்கும் அவரது வீரப்புதல்வருக்கும் 1 - 11 - 1801ம் தேதி அதே ''பரிசு'' கொடுக்கப்பட்டது. அவைகளை வழங்கியவன் கேப்டன் காட்பிரே. இன்னொரு வெள்ளைத் தளபதியான வெர்னான், கள்ளர் தலைவர் சேதுபதியை சும்மணப்பட்டியில் தூக்கிலிட்டான். அந்த வீரத்தலைவரது சடலத்தை நல்அடக்கம் செய்வதற்கு கூட அனுமதி அளிக்கவில்லை.[28] எதிரிகளுக்குத் தங்கள் எத்தகைய அரக்கமனம் படைத்தவர்கள் என்பதை நினைவு படுத்த அவன் எண்ணினான். காற்றிலே மெதுவாக ஆடி அலைந்து கொண்டி ருந்த அந்தச் சடலம் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கும் ஒருநாள்

---

23 Ibid (9-10-1801) p. 351-53.

24 Public Sundries vol. 136 (B) (19-10-1801) pp. 98-99.

25 Revenue Sundries vol. 26, (17-10-1801) p. 94-95.

26 Ibid, (2-11-1801) p. 946

27 Public Sundries, vol. 136 (B) (2-11-1801) p 119.

28 Revenue Sundries, vol. 26. (6 - 11 - 1801) p. 961.

அந்த நிலை வருமென்பதை நினைவூட்டிக் கொண்டு இருந்தது. அதே அரக்கன், கிளர்ச்சிகளில் ஒத்துழைப்பு நல்கியதற்காக ஆண்டன் என்ற குடிமகனை கீழவளவில், கிராம மக்கள் முன்னிலையில் நிறுத்தி வைத்து ஆயிரம் கசையடிகள் கொடுத்தான். அப்பொழுது ஆண்டன் இறந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் அவனுக்கு மேலிடம் வழங்கிய உத்திரவு[29] ஆண்டன் மீது அனுதாபம் காரணமாக அல்ல இந்த உத்திரவு. அந்த வீரமறவன் சாவதற்குள்ளாக அவர்களது ஆணையை நிறைவேற்றிவிட வேண்டும் என்ற அரக்கத்தனமான எண்ணம்.

அக்டோபர் 19ம் தேதி 1801. சோழபுரத்திற்கும் ஒக்கூருக்கும் இடைப்பட்ட காட்டில் பெரியமருது தனியாக தங்கி இருப்பதை கும்பெனி கைக்கூலிகள் கண்டுபிடித்தனர். உடனே, அங்கே சென்ற பரங்கி அணி, நிராயுதபாணியாக இருந்த அவரை எதிர்பாராத விதமாகத் தாக்கிக்கைது செய்தது.[30] அதே பகுதியில் மற்றோர் இடத்தில் தங்கி இருந்த சின்னமருது சேர்வைக்காரரையும் கண்டுபிடித்தனர். அவரிடம் ஆயுதம் எதுவும் இல்லாத பொழுதும் அவரை நெருங்குவதற்கு அஞ்சினர். ஆதலால் தொலைவில் இருந்து துப்பாக்கியால் சுட்டனர். அந்தச் சிறிய அணியினருடன் மோதினாலும் அவரால் தொடர்ந்து சண்டை இட முடியவில்லை. காரணம் அவரது தொடையில் குண்டு பாய்ந்து வேதனையால் துடித்தார். அந்தச்சமயத்தில் கும்பெனிக் கூலிகள் அவரைச் சங்கிலியால் பிணைத்து சோழபுரம் பாசறைக்கு இழுத்துச் சென்றனர். அங்கு இரண்டு தலைவர்களையும் பலத்த பாதுகாப்பில் நான்கு நாட்கள் வைத்து இருந்தனர். அவர்களது பெண்டுகளையும் கைப்பற்றி, புதிய ஜமீன்தாரது பொறுப்பில் வைத்தனர்.[31]

அதே நேரத்தில், மருது சேர்வைக்காரர்களது கிளர்ச்சியில் முக்கிய பணியாற்றிய வாராப்பூர் பாளையக்காரர் பொம்மையா நாயக்கரையும் பிடித்து அடைத்தனர். அவரது பாளையம், சிவகங்கைச் சீமையின் வடகிழக்கே, பிரான்மலையை ஒட்டி மதுரை,

29 Ibid. p. 962

30 Military Consultations vol. 289 (21-10-1801,)pp. 7671-75.

31 Ibid (27-10-1801) p. 7680.

திண்டுக்கல் சீமைகளைத் தொட்டவாறு அமைந்து இருந்தது. இந்தப் பாளையம் முன்னர் இராமநாதபுரம் ரகுநாத சேதுபதி மன்னர் காலத்தில் மறவர் சீமையில் சேர்க்கப்பட்டு சேதுபதி யின் பாளையமாக இருந்தது. சிவகங்கைச்சீமை பிரிந்த பிறகு, யாருக்கும் கட்டுப்படாத பாளையமாக இருந்தது.

ஆனால் சின்னமருது சேர்வைக்காரரது நெருங்கிய நண் பராக விளங்கிய அவர், எல்லா வழிகளிலும், சிவகங்கைசீமைக் கிளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார். மருது சேர்வைக்காரர் களது மற்றொரு நண்பரான மீனங்குடி முத்துக்கருப்பத்தேவரை யும் சாயல்குடி காட்டில் கர்னல் மில்லரது அடியாட்கள் கைது செய்தனர்.[32] இராமநாதபுரம் சேதுபதி மன்னரை கி. பி, 1795 ல் பதவி நீக்கி சிறையில் அடைத்த பிறகு, இராமநாதபுரம் சீமைக்கு இவர் உரிமை கொண்டாடி, பரங்கிகளுக்கு எதிராக பாண்டிக் குடியில், ''இராமநாதபுர அரசு'' நடத்திய அவரை இராமநா தபுரம் சீமைக்கிளர்ச்சிகளில் தலைமை தாங்கிய அந்தத் தளபதி யைப் பலமான இரும்புச் சங்கிலியால் இணைத்துப் பிணைத்து இராமநாதபுரம் கோட்டையில் சிறைவைத்தனர். அவருடன் அவரது மனைவியார் (2), அவரது தம்பி கனகசபாபதியின் விதவை (1) அவரது தாயார் (1), அத்தை (1), குழந்தைகள் (4), தங்கையும் ஆக குடும்பத்தினர் (5), மற்றும் பணியாட்கள் (10), ஆக மொத்தம் இருபத்தாறுபேர் அவருடன் சிறை வைக்கப் பட்டனர்.[33]

மற்றும், சின்னமருது சேர்வைக்காரரது கடைசி மகனான பதினைந்தே வயதே நிரம்பப்பெற்ற துரைச்சாமியை மேலூரை அடுத்த கிராமத்தில் கைதுசெய்து தூத்துக்குடி ராணுவ முகாமிற்கு அனுப்பி வைத்தனர்.[34] இத்துடன் மறவர் சீமையின் கிளர்ச்சி களைத் தங்கள் வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதி, இரவு பகல் என்றும் பாராது துன்பம் துயரம் ஆகியவைகளைப் புறக்கணித்து

---

32 Madurai Disrict Records vol. 1133 (29-10-1801) p. 284,

33 Ibid. 1146 (24-10-1801) p. 23,

34 Military Consultations, vol, 289 (27-10-1801) p. 7080.

போராட்ட உணர்வுடன் திகழ்ந்த முன்னணி வீரர்கள் அனைவரும் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டனர். அல்லது ஆங்காங்கு தூக்கு மரங்களில் தொங்கவிடப்பட்டனர். இப்பொழுது மறவர் சீமையில் பகல் கொள்ளை நடத்த பரங்கிகளுக்கு எவ்வித தடை இடை இல்லை. மறவர் சீமை, திண்டுக்கல் சீமைகளிலும், சோழ சீமையின் தென்பகுதிகளிலும் காட்டுத் தீ போல வளர்ந்து பரவிய மக்களது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சி, வரலாற்றில் மூன்றாவது முறையாக. ஏன் முற்றாகவே தோல்வி அடைந்தது. வேதனையையும் பேரழிவையும் எய்திய மக்கள், இருளடைந்த எதிர்காலத்தை எதிர்நோக்கி ஏக்கத்துடன் இருந்தனர். அவர்களது தளர்ந்த கண்களில் நம்பிக்கை ஒளி தட்டுப்படவில்லை.

# 13

## புயல் ஓய்கிறது

மறவர் சீமையின் மகோன்னத வரலாற்றின் இறுதிப்பகுதி. வீரமும் மானமும் உயிரினும் உயர்ந்ததாக மதிக்கப்பட்ட நாட்கள் மறைந்துவிட்டன. சங்ககாலம் தொட்டு மங்கலத் தமிழ் முழக்கிய மறவர், மாற்றானின் சூழ்ச்சியால் சீரழிவை நோக்கிச் சரிந்தனர். ஆர்க்காடு நவாபினால் அடிமையாக்கப்பட்ட சிவகங்கைச் சீமை மக்களை விடுவித்து மீண்டும் மன்னராட்சியை நிலைநிறுத்தப் போராடிய மருது சகோதரர்களின் தன்னேரிலாத் தலைமையை வரலாறு மறக்கவில்லை, மறுக்கவில்லை. ஆனால் அவர்களால் விடுதலைபெற்ற சிவகங்கைச்சீமை மக்கள்தான் மறந்து விட்டனர். மதம், சாதி, இனம் என்ற மயக்கத்தை ஏற்படுத்திய மாற்றாரின் சதியில் அவர்கள் சிக்கிக் கொண்டனர்.

பாண்டியப் பேரரசர்கள், சேதுபதி மன்னர்கள் ஆகியோர் வழி நின்று, சிவகங்கைப் பிரதானிகள் பொது மக்களது நிறுவனங் களை சாதி, சமய பாகுபாடு இல்லாமல் போற்றிப் பரந்ததைச் சிந்தித்துப் பார்க்கக்கூட இந்த வாதிகளுக்குப் பொறுமை இல்லை. பொது வாழ்க்கையில் குடிமக்களிடையே கள்ளர், மறவர், அகம் படியர் என்ற வேற்றுமை உணர்வுகளை அவர்கள் ஆட்சி ஊக்கு விக்கவில்லை. அதற்குமாறாக, மறத்தமிழினமான இந்த மூன்று கொடிவழிகளையும், உணர்வுப்பூர்வமாக ஒற்றுமைப்படுத்தும் உருப் படியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வரலாறு காணாத வகையில் மருதுசகோதரர்களும் அவர்கள் வழியினரும் சிவகங்கைச் சீமையின் பல ஊர்களில் உள்ள ஏனைய இரு பிரிவினருடன் மணஉறவுகளைக் கொண்டு இணைந்து மகிழ்ந்தனர். காரணம் சமுதாயமும் நாடும் முன்னேற வேண்டுமானால் வாழ்க்கையின் நேரடியான உண்மைகளை உணர்தல் வேண்டும். அத்துடன் அவை உண்மையாக மட்டும் இல்லாமல் நடைமுறையில் கடைப் பிடிக்கப்படல் வேண்டும். அப்பொழுது தான் அந்தவழியில் வளர முடியும் என்ற நியதிகளை அவர்கள் நம்பினர்.

காளையார் கோவில் முந்தைய போரில் பரங்கியர் சிவ கங்கை மன்னர் முத்து ரெகுநாத பெரிய உடையாத் தேவரைக் கொன்றனர். இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி முடியாட்சியைப் பறித்து இருபத்து மூன்று ஆண்டுகள் வெங் கொடுமைச் சிறையில் வாழ்நாளையெல்லாம் வீணாகக் கழிக்கும் படி செய்து அவரைச் சாகடித்தனர்.

சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர், சேதுபதி மன்னரை சிறையில் இருந்து மீட்பதற்காக கி.பி. 1799-1800-1801 ஆகிய ஆண்டுகளில், மறவர் சீமையைக் குலுக்கிய மக்கள் கிளர்ச்சிகளை முடுக்கிவிட்டுப் பல போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி, தோல்வியுற்று, கும்பெனியரது கண்களில் படாமல் தலைமறைவு வாழ்க்கையில் தலைகுனிந்து வாழும்படி செய்தனர்.

நாட்டு விடுதலை யொன்றையே நினைவும் கனவுமாகக் கொண்டிருந்த சிங்கன் செட்டி, பொட்டூர், முத்துக்கருப்ப பிள்ளை, திருக்கண்ணத்தேவர், கனக சபாபதித் தேவர், ஜகன்னாத அய்யன், குமாரதேவன் போன்ற மறவர்சீமை மாணிக்கங்களை, சித்திர வதை செய்து, கொதிக்கும் நீரில் கோழிக்குஞ்சுகளை அமுக்கிக் கொல்வது போல, பரங்கிகள், மரணக்குழிக்குள் தள்ளிவிட்டு மூடி னர்.

அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எதற்காக நிகழ்ந்தன? ஏன் நிகழ்த்தப் பட்டன? பரங்கிகளின் இந்த பாதகச் செயல்களின் பின்னணி என்ன?

தருமம் தழைக்க, தங்களது மண்ணில் அதருமர்களான ஏகாதிபத்திய நாய்கள் அட்டகாசம் செய்யக் கூடாது; மக்களது நலன்களைப் பாதுகாக்கும் மன்னர்களது தன்னரசுகள் தழைத்து ஓங்கவேண்டும்; மக்களது வயிற்றுப் பசி தணிக்கப்படுவது போல, அவர்களது அறிவுப்பணியினால் பரிமளிக்கின்ற சிந்தனைகள் சமய, சமுதாய மரபுகளை வளர்க்கப் பயன் படவேண்டும் என்பது தான் அன்றைய குடிமக்கள் கொண்டு இருந்த எண்ணங்கள். ஆனால், இத்தகைய இயல்பான எண்ணங்களுக்கு இடையூறுகள் எழுந்தன. அவைகளை அன்னிய சக்திகள் உருவாக்கி ஊக்குவித் தன. அவைகளின் பின்னே ஏகாதிபத்திய வெறியும் அடிமை உணர் வும் அடங்கி விழுந்தன. அப்பொழுது குடிமக்கள் ஆவேசங்கொண்டு கிளர்ந்து எழுந்தனர். புதிய ஆட்சி என்ற முகமூடிக்குள் பதுங்கிக்

கொண்டு இருந்த கும்பெனியரின் ஏகாதிபத்திய கனவை கலைத்தனர். கோழைகள் வாழ்வதில்லை; வீரர்கள் வாழ்கின்றனர், முடிவின் தன்மையைப் பற்றிச் சிந்திக்காமல் செயல்பட்டனர். வலு இழந்த நிலையில் தியாகிகள் ஆயினர். அந்தத் தியாகிகளை சாதி, சமய வேறுபாட்டு வேலிகள் சூழ்ந்து இருக்கவில்லை. மாறாக, அவர்களின் உருக்குபோல இறுக்கமாக அணைக்கும் ஒற்றுமை, உயிர்மூச்சாக இயங்கியது. நாட்டுப்பற்று, அவர்களது நெடிய கண்ணோட்டமாகக் காட்சி அளித்தது. காலம் காலமாக, உயர்ந்து நின்ற மறவர் சீமையின் மாண்பை, விழுப்புண் கொண்ட வீரத்தை வீறு கொண்டு, காத்து வளர்க்க வேண்டும் என்ற கவலையும் அக்கரையும் அவர்களிடம் மிகுந்து இருந்தன.

இவைகளுக்குக் குந்தகம் விளைவித்து வந்த அன்னிய ஆதிக்கத்துடன் அலைகடல் போல ஆயுதப் போராட்டங்களில் மோதினர். பதவி மட்டும் போதும் என்ற மனநிறைவில், கொள்ளையராக வெள்ளையரின் கால்நிழலில், காலமெல்லாம் காத்து நிற்கத் தயார் என ஓடிவந்த படைமாத்தூர் ஒய்யாத்தேவரைப் போன்று இந்த வீரர்களும், தியாகிகளும் விரும்பி இருந்தால், இந்தப் பரந்த பாரத நாட்டில் வெள்ளையரின் ஆதிக்கம் எப்பொழுதோ எளிதாக முழுதுமாக ஏற்பட்டு இருக்கும். விலை மதிக்க முடியாத காலமும், ஈடு செய்ய முடியாத மக்களது உயிரும் உடமைகளும் வீணாகி இருக்காது. ஆனால் மக்களது நலனையே எண்ணிவந்த அந்தத் தலைவர்களின் சிந்தனை அந்தத் திக்கிலே செயல்படவில்லை அவ்விதம் அவர்கள் செய்திருந்தால் வரலாறு அவர்களைக் கோழைகள், குறுமதி கொண்ட கொடியவர் என்றல்லவா குறித்து வைத்து இருக்கும். அத்தகைய இழிவு ஏற்படாத வண்ணம், வாழ வேண்டும், மக்கள்புகழ ஆளவேண்டும் என்ற அவாவினால் சிவகங்கைச் சேர்வைக்காரர்கள், அன்றைய தென்னகத்து புரட்சித் தலைவர்களுடன் தோள் சேர்த்து நின்றனர். அன்னிய ஆதிக்கத்தை நாட்டை விட்டு அகற்ற வேண்டும் என்ற அவர்களது குறிக்கோளின் வெற்றிக்காக அனைத்து உதவிகளையும் வழங்கி வந்தனர்.

அந்தப் புதிய பாதையில், நண்பர்களாக நடித்த நயவஞ்சகப் பரங்கியரின் ஆதிக்க வெறியை, போராடிக் களைய வேண்டும் என்ற மன உறுதிக்கு மகாராஷ்டிர மாநிலத்து தூந்தியாவின் துணையும், இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னரது

தியாகமும், ஒளிவிளக்காக உதவின. அதனால் மக்களது ஒன்று பட்ட ஆதரவுடன், மகத்தான மாபாரதப் போரைத் தொடுத்தனர். அதுவரை விசுவாசமாக நடந்து கொண்ட பணியாளர்கள், போரா டிய வீரர்கள், நலிவுதீர உதவிய நண்பர்கள், உறவினர்கள்-ஆகிய பல திறத்தவர்களின் பெரும்பகுதியினர் செஞ்சோற்றுக் கடனை யாவது கழிக்க வேண்டும் என்ற நெஞ்சுறுதி இல்லாமல் கட்சி மாறி ஓட்டம் பிடித்தனர்; காட்டிக் கொடுத்தனர். காலைவாரி விட்டனர். விடுதலைப் போரின் வேகத்தை திசை திருப்பினர். மறவர்சீமையின் மானங்காத்த தியாகிகளது புனிதப் பதாகையில் மாசு சேர்த்தனர். முடிவு யாரும் எளிதில் ஊகித்து அறியும் ஒன்று தான்.

மாற்றானுக்கு எதிராக மகாமேரு போல திரண்டு நின்ற கிளர்ச்சிக்காரர் அணி சிற்றெறும்புக் கூட்டமாக சிறுத்துக் குறு கியது. அதனால், பல நாட்கள் தொடரும் என எதிர்பார்க்கப்பட்ட காளையார்கோவில் கோட்டைப்போர் ஒரே நாளில் முடிந்தது. மங்கலம், சங்கரப்பதி, செங்கோட்டை, சிறுவயல், காடுகளில் எத்தனை நாட்களுக்கு அலைந்து வாழ முடியும். காளையார் கோவில் கோட்டை வீழ்ந்த இருபது நாட்களுக்குள் கிளர்ச்சிக் காரர்களது அணி முழுமையாகப் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டது. பிறந்த மண்ணைக் காக்கப் போராடிய அவர்களுக்கு பரங்கியர் அளித்த பரிசு-மரண தண்டனை. கொள்ளைக்காரர்களையும் கொடியவர்களையும் கொல்வது போல போராளிகள் அனைவரை யும் ஆங்காங்கு தூக்கில் தொங்கவிட்டுக் கொன்றனர். ஆனால் அந்த தண்டனை வழங்கியதில் பரங்கியர் யாருக்கும் பாரபட்ச மாக நடந்து கொள்ளவில்லை!

குளத்தூர் பாளையக்காரர் கீர்த்த வீர குஞ்சுநாயக்கருக்கும் மரணதண்டனை. மீனங்குடி கனக சபாபதி தேவருக்கும் மரண தண்டனை. ஏன்? மருது சேர்வைக்காரர்களுக்கும் மரண தண்டனை சீறி வரும் சினவேங்கையின் வாலைப்பிடித்துத் தூக்கி, தரையில் அடித்துக்கொல்லும் துணிவும் ஆற்றலுமிக்க வெள்ளைமருது சேர்வைக்காரருக்கும் மரணதண்டனை.

உள்ளங்கை அளவு கனமான ஆர்க்காட்டு நவாப் வெள்ளிப் பணத்தை தனது விரல் இடுக்கில் வைத்து நொடித்து ஒடித்து

விடும்[1] பேராண்மை படைத்த சின்னமருது, சேர்வைக்காரருக்கும் மரணதண்டனை.

மருது சேர்வைக்காரர்கள் என்றாலே வெள்ளைப்பரங்கிகள் மனம் ஒடுங்கி, திகில் அடைந்து, வெகுண்டு ஓடியது ஒருகாலம். அப்பொழுது பரங்கிகள் மக்களுக்கு எதிராகத் தனித்து நின்றனர். ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. அணியிலும் இந்த மண்ணில் தோன்றிய துரோகிகளும் அவர்களது தொங்கு சதைகளான மக்களது ஒரு பகுதியும், அவர்களுடன் சேர்ந்து நின்றனர். மாபாரதப் போரில் அநீதியின் உருவான துரியோதனது அணியில் தானே துரோணரும், பீஷ்மரும், கர்ணனும் இருந்தனர். நியாயம் அவர்கள் கண்ணைக் குருடாக்கிவிட்டு இருந்ததல்லவா!

சிவகங்கை அரண்மனைச் சேவகத்தில் சிறிய சில்லரைப் பணிகளில் தங்களது வாழ்க்கையைத் துவக்கிய மருதுசகோதரர்கள், சிவகங்கை மன்னரது அந்தரங்கப் பணியாளர் பதவிக்கு உயர்ந்தனர். ஆர்க்காடு நவாப்பின் படைகளை சிவகங்கை மண்ணில் இருந்து விரட்டியடித்த வீரப்பணிக்காக அவர்கள் பிரதானிகள் என்ற பெரும் பணிக்கு நியமிக்கப்பட்டனர், சிவகங்கை அரசுத் தலைவர். அப்பொழுது பெண்ணாக விதவையாக இருந்த காரணத்தினால், ஆட்சிப்பொறுப்பையும் அதிகாரத்தையும் சற்று அதிகமாகவே பகிர்ந்துகொண்டனர். அதனால் அண்டை நாடான இராமநாதபுரம் சீமையின் சேதுபதி மன்னரது வெறுப்பிற்கும் விரோதத்திற்கும் ஆளாகி, வீண்தொல்லைகள் வளருவதற்கு வழி கோலினர். அவர்களது தந்தை மொக்கைப்பழனி சேர்வைக்காரரை இராமநாதபுரம் அரசுப்பணியில் அமர்த்திக் காத்து வந்தவர் இராமநாதபுரம் மன்னர் என்பது மட்டுமல்லாமல், இராமநாதபுரம் சிவகங்கைச் சீமைகளில் உள்ள கள்ளர், மறவர், அகம்படியர் என்ற முக்குலத்து மக்களின் முதல் குடிமகன் முத்துராமலிங்க சேதுபதி மன்னர் என்ற பெரும் உண்மையைப் புறக்கணித்து, அவரைத் தங்களது ஜென்மப் பகைவராக ஆக்கிக் கொண்டனர். ஆதலால் மறவர் சீமை மக்களது ஆதரவையும் அனுதாபத்தையும் அவர்களால் முழுமையாகப் பெறமுடியவில்லை. இந்த மிகப்பெருந் தவறுகளுக்கு ஈடாக, இராமநாதபுரம் மன்னருக்கு எதிராக மாற்

1 Col Welsh: Military Reminiscenes vol II (1848).

றானாகிய கும்பெனியாரின் பாசத்தையும் பிணைப்பையும் பெரி தாக மதித்து வந்தனர். இந்தநிலை சிவகங்கைச்சீமை அரசிய லுக்கு முற்றிலும் வேறுபட்டதும் மக்கள் நலனுக்கு முரண்பட்டது மாகும் என்பதை அவர்கள் உணரத் தவறி விட்டனர். இதனை அவர்களுக்கு உணர்த்தும் திறன் படைத்த பெரியவர்களும் அப் பொழுது அவரது பணியில் இல்லை.

அவர்களுக்கு முன்னால், சிவகங்கைச்சீமை பிரதானியாக தாண்வடராய பிள்ளை, சிவகங்கை, இராமநாதபுரத்தின் சீதனச் சொத்துஎன்ற தொன்மை உறவுடன், இராமநாதபுரம் பிரதானிகள் தாமோதரன்பிள்ளை, பிச்சைப்பிள்ளை, ஆகியோரின் கருத்துக் களை அனுசரித்து அரசியல் பணிகளை அன்னியோன்னிய பிடிப் புகளுடன் ஆற்றிவந்தார். அதே வழித்தடத்தில் மருது சகோதரர் களும் தங்கள் பிரதானி பணியினைத் தொடர்ந்து இருந்தால், மறவர் சீமையிலும் அவர்களுக்கு மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டு இருக்கும். இன அடிப்படையிலும், மறக்குடி மக்களது ஒன்று பட்ட வலிமையை - ஒற்றுமையை - உருவாக்கி வரலாறு படைத்து இருக்க முடியும். அத்தகையதொரு மகத்தான மக்கள் சக்தி முன்னர் எந்த ஆதிக்கவாதியும் ஆதாயம் பெற முடியாது. ஆக்கிர மிப்பாளர் யாரும் எப்பொழுதும் இந்தச்சீமைகளுக்குள் ஊடுருவி இருக்க முடியாது.

வரலாற்று வரிகளைச் சற்று பின்னோக்கிப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். பாண்டியப் பேரரசு வீழ்ச்சிக்குப் பிறகு மதுரைப் பேரரசர்களாக இருந்த சொக்கநாத நாயக்கரும், திருமலை நாயக்கரும், ராணி மங்கம்மாளும் மறவர் சீமை மீது பல படையெடுப்புகளை நடத்தியும் பேரிழப்புகளைத் தான் பெற்றனர். மகத்தான படைவலிமை பெற்று இருந்த மறவர்சீமை மண்ணில் ஒரு அடி நிலத்தைக்கூட தங்கள் காலடிக்குள் கொண்டுவர முடியவில்லை. ஆனால் அதற்குமாறாக நாயக்க அரசிற்கு ஏற் படவிருந்த அவமானம், பேரழிவு ஆகியவைகளில் இருந்து இராமநாதபுரம் திருமலை ரகுநாத சேதுபதியும், ரகுநாத கிழவன் சேதுபதியும் மதுரை நாயக்க மன்னர்களைக் காப்பாற்றி பேரும், புகழும் பெற்றனர். தமிழகத்தின் தலைநகரான மதுரையின் வாழ்வுகுலைந்து மாநகர் மாற்றானின் சொத்தாக மாறிவிட்டால், மறவர் சீமையின் மாண்பும் மறைந்துவிடும் என சேதுபதிகளது சிந்தனையில் பட்டது. மறவர் சீமைக்கு திருமலைநாயக்கரும்

ராணி மங்கம்மாளும் இழைத்த தீமைகளை மறந்து, மன்னித்து, மதுரையை மீட்டனர். மீண்டும் மற்றுமொரு மைசூர்படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்து கி.பி.1752ல் மதுரையைக்காத்து எங்கோ முடங்கிக் கிடந்த மதுரை நாயக்க மன்னரின் வாரிசான விஜய குமார பங்காரு திருமலையை மதுரை மன்னராக முடிசூட்டி மகிழ்ந்தனர்.

அடுத்து, மதுரைச்சீமையில் குறுகிய கால அதிபதிகளாக இருந்த சந்தாசாகிபும், கம்மந்தான் கான்சாகிபும், முராரி ராவும் இராமநாதபுரம், சிவகங்கை மன்னர்களை மதித்து நடக்கும் அரசியலைத் தெரிந்து இருந்தனர். கருநாடாகப் பகுதி முழுவதற்கும் நவாப்பாக இருந்த வாலாஜா முகம்மது அலிகான் இந்த இரண்டு சீமைகளின் மீது இருபத்து ஒரு ஆண்டு கழித்தே ஆக்கிரமிப்பைத் துவக்கினார். இந்த ஆதார நிலையினை, அனுபவமும் நுணுக்கமான அரசியல் நோக்கும் இல்லாத மருது சேர்வைக்காரர்கள் புரிந்து கொள்ளத் தவறியதால் கடந்த பத்து ஆண்டுகளாக, இந்த இரு சீமைகளுக்கும் இடர்ப்பாடும் தாழ்வும் தொடர்ந்து வந்தன.

மறவர் சீமை நிலை இப்படியென்றால், இதைவிட மோசமான அரசியல் சூழ்நிலை தமிழகமெங்கும் அப்பொழுது வியாபித்து இருந்தது. பரங்கியரின் வெடி மருந்து ஆற்றல், மன்னர் பரம்பரையினரையும் அவர்களது ஆட்சி வரம்பிற்குட்பட்டு அவர்களது பாதுகாப்பு வளையமாக விளங்கிய பாளையக்காரர்களையும் அழித்து ஒழித்ததால், பரங்கியருக்கு எதிரான அரசு அமைப்பு எதுவும் இல்லாத நிலை. அரசியல் ரீதியாக கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக தமிழகத்தில் அரசியல் ஆதிபத்தியம் கோரி வந்தவரும், பரங்கியரின் பேராசைக்கு – ஆதிக்க வளர்ச்சிக்கு ஆணிவேராக அமைந்து இருந்தவருமான ஆர்க்காட்டு நவாப்பும் அரசியல் சன்னியாசம் பெற்றுவிட்டார். இத்தகைய நிராதரவான சூழ்நிலையில் அவர்களை எதிர்த்து நின்ற சிவகங்கை சேர்வைக்காரர்களையும் அவரது தலைமையிலான கிளர்ச்சிக்காரர்களையும் பரங்கிகள் ஒரே இலக்காகக் கொண்டு, தங்களது அரசியல் சாகசங்கள், ஆற்றல் அனைத்தையும் ஈடுபடுத்தி அழித்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

வாரணம் பொருதும் மார்பும், வரை நிகர்த்த தோளும், வாய்க்கப்பெற்று இலங்கேசுவரனைப் போல, வீரத்திருவாக, மறப் பண்புகளுக்கு விளக்கமாக, மான உணர்வுகளுக்கு இலக்கணமாக,

விளங்கிய மருது சேர்வைக்காரர்களுக்கு மரணச் சீட்டுயெழுத அக்கினியூ முடிவு செய்தான். ஆம்! எத்தனை நாட்களுக்குத்தான் இரும்புச் சங்கிலியில் பிணைத்து இரவு பகலாக எச்சரிக்கையுடன் அவர்களை ஒக்கூர் ராணுவ முகாமில் பாதுகாத்து வைத்திருப் பது? அதுவரை பிடிபட்ட கிளர்ச்சிக்காரர்கள் அனைவரையும் அவர்கள் போராட்டம் நடத்திய அல்லது பிடிக்கப்பட்ட ஊர், பொது இடம், அல்லது கோட்டை வாசலில் தூக்கிலிட்டு வேடிக்கை பார்ப்பதும் அத்துடன் குடிமக்களை அந்தக்கொடூரக் காட்சியைக் கண்டு குலை நடுக்கம் கொள்ளச்செய்வதும் அக்கினி யூவின் பொழுது போக்காக இருந்தது. ஆனால் சிவகங்கை சேர்வைக்காரர்களை அவர்கள் வாழ்ந்த அரண்மனை சிறுவய லிலோ, ஆட்சி செய்த சிவகங்கையிலோ அல்லது அவர்கள் இறுதியாகப்போரிட்ட காளையார்கோவில் கோட்டையிலோ அல் லது சிறைபடுத்தப்பட்டுள்ள ஒக்கூர் பாசறையிலோ வைத்து தூக்கி விடாமல், திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிட முடிவு செய்தான் அக்கியூ. இந்தக் கோட்டையைத் தேர்வு செய்வதற் காக சிறப்பான காரணம் எதுவும் அவர்களது ஆவணங்களில் இருந்து புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் சிவகங்கைச் சீமையின் செல்வாக்கு மிகுந்த இந்தத் தலைவர்களைத் தூக்கில் இடுவதை அவர்களது ஆதரவாளர்களும் உற்றார் உறவினர்களும் காணப்பெறும் வாய்ப்பு அந்த இடங்களில் ஏற்பட்டால் சினமும் சீற்றமும் கொண்டு, நனவெல்லாம் உணர்வாகி நரம்பெல்லாம் இரும்பாகி எழுச்சி கொண்டால்.'' அந்த இழிவினை இடறுவேன் என்னுடல் மேல் உருள்கின்ற பகைக்குன்றை நான் ஒருவனே உதிர்ப்பேன்''- எனப்புறப்பட்டு விட்டால்-இத்தகைய அச்சமும் குழப்பமும் அக்கினியூவிற்கு இருந்து இருக்க வேண்டும். இந்த ஒரே காரணத்தினால்தான், போரினால் பாழ்பட்டு, பொதுமக் கள் குடியிருப்பும், நடமாட்டமும் இல்லாத சிவகங்கைச்சீமை யின் வடகோடியில் உள்ள திருப்பத்தூர் கோட்டையின் மேற்கு அலங்கத்தை மருது சேர்வைக்காரர்களை மரணத்தலமாக அவன் தேர்வு செய்து இருக்கவேண்டும்!

இதில் வேடிக்கையான பகுதி என்னவென்றால், சென்னை யில் உள்ள கும்பெனி கவர்னர், சிவகங்கைச்சீமை கிளர்ச்சிக்கா ரர்களை அடக்குவதற்குப் பணிக்கப்பட்ட கர்னல் அக்கினியூவிற்கு கிளர்சிக்காரர்களைப் பற்றிய அறிவுரை அடங்கிய கடிதம் ஒன்றை

அனுப்பி இருந்தார்.[2] அதில் ''... ... இதுவரை பிடிக்கப்பட்டுள்ள முக்கியமான கிளர்ச்சிக்காரர்களான வெள்ளைமருது, சின்ன மருது, ஊமைத்துரை ஆகியவர்களையும், இன்னும் பிடிக்கப்பட வேண்டியவர்களையும், உடனே விசாரணைக்கு கொண்டு வந்து அவர்களுக்கு கிளர்ச்சியில் உள்ள பங்கு, பெற்ற உதவிகள், ஆகிய வைகளை இனங்கண்டபிறகு, தக்க தண்டனை வழங்க வேண் டும் ... ... ... எனத்தெளிவாகக் கவர்னர் குறிப்பிட்டு இருந்தார்.

கெட்டிபொம்மு நாயக்கரை, 16-10-1799 ல் கயத்தாறில் தூக்கிலிடுவதற்கு முன்னர் கூட இத்தகைய விசாரணை நாடகம் நடத்தப்பட்டது.[3] ஆனால் சில சிவகங்கைச் சேர்வைக்காரர்களை யும் அவர்களைச் சார்ந்து நின்ற போராளிகளையும் பொறுத்த வரையில் அந்த கண் துடைப்பு நாடகம் நடத்துவது கூட காலத்தை வீணாக்குவதாகும் என கர்னல் அக்கினியூ முடிவு செய்து இருக்க வேண்டும். மேலும், போராளிகளைத் தண்டிப்பதற்குரிய சர்வவல்லமை படைத்த நீதிதேவன் அவன் ஒருவன்தான் என அவன் நம்பி இருக்க வேண்டும். அத்துடன் மருதுசேர்வைக்காரர் கும்பெனியாரின் பலத்த பாதுகாவலுக்குட்பட்ட கைதிகளாக இருந் தாலும் அவர்கள் இந்தப் பூவுலகில் பெருமூச்சு விட்டுக்கொண்டு இருக்கின்ற ஒவ்வொரு வினாடியும் பரங்கியருக்கு ஆபத்து என் பதை அக்கினியூ உணர்ந்து இருக்க வேண்டும். அதற்காக நியாயங் கள் சூழ்நிலைகளை முற்றுமாக அவன் புரிந்தும் இருக்கவேண்டும் இல்லையெனில் தலைமை இடத்து உத்திரவையும் புறக்கணித்துத் தன்னிச்சையாகச் செயல்பட்டிருக்க வேண்டியது இல்லையல்லவா? கும்பெனியாரது நலன்களுக்கு ஏற்றதான தனது எந்த முடிவை யும் செயலையும் கும்பெனி மேலிடம் ஒருபொழுதும் எதிர்க்காது என்ற இறுமாப்பும் அவனுக்கு இருந்திருக்கவேண்டும்! கும்பெனி யாரின் பேராற்றலையும் நிருவாக அரசியல் அமைப்பையும், கடந்த ஓராண்டுக்காலமாக மறவர் சீமையின் பல பகுதிகளில் பொருதி நடுநடுங்கச் செய்த மருது சேர்வைக்காரர்களைத் தூக் கில் தொங்கவிட்டு, அவர்களது உயிரற்ற உடல்கள் ஆடி, அசை வதைப் பார்க்க வேண்டும் என்ற அற்பத்தனமான மிருக ஆசையும் அவனுக்கு இருந்து இருக்கவேண்டும்.

---

2 Revenue Sundries vol 26, (28-10-1901) p. 472.

3 குரு - குகதாஸ பிள்ளை - திருநெல்வேலி சீமை சரித்திரம் (1932)

ஆதலால் திருப்பத்தூர் கோட்டையின் மேற்குப்பகுதியில் தூக்கு மரங்கள் நாட்டப்பட்டு கொலைக்களம் அமைக்கப்பட்டது. ''திசைவிளங்கும் திருப்பத்தூர்'' என தேவாரம் மூலம் தமிழ் உலகம் மட்டும் அறிந்து இருந்த அந்த ஊரை, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்ப்படையாக விளங்கிய மருது சேர்வைக்காரர்களது இறுதிக்களமாக, இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் அறிமுகப்படுத்தும் அரிய பணியை அக்கினியூ செய்தான்.

ஆயிரத்து எண்ணூற்று ஒன்றாவது ஆண்டு, அக்டோபர் மாதம் இருபத்து நான்காவது நாள் ஆங்கில நாட்காட்டியில் அதுவும் ஒரு சாதாரண நாள். இதனைப் போன்ற எத்தனையோ நாட்கள், புலரும் பொழுதுடன் புலர்ந்து மறைந்து விட்டன. ஆனால் நம்மைப் பொறுத்த வரையில் அன்றையப் பொழுது அப்படிப்பட்டதல்ல. வளையாத வரலாற்றில் என்றென்றும் வாழ்ந்து கொண்டு இருக்கும் நாளாக அந்தநாள் வந்தது. தொன்மையை நினைவுபடுத்தி தொல்லைகளைக் களைய முனைபவர்களுக்குத் துணையாகத் துணிவையும் தியாக உணர்வையும் வழங்கும் திருநாளாக வந்தது. அன்று, கர்னல் அக்கினியூ கும்பெனியாரின் தலைவரான சென்னைக்கோட்டையில் உள்ள கவர்னருக்கு ஓலை ஒன்றை அவசரமாக அனுப்பி வைத்தான்.[4] '... ... ... ...இன்று காலையில் திருப்பத்தூர் கோட்டை இடிபாடுகளுக்கு இடையில், வெள்ளைமருதுவும் அவரது சகோதரர் சின்னமருதுவும் தங்கள் புரட்சி நடவடிக்கைக்காக மரண தண்டனை பெற்றனர். அவர்களது மக்கள் சிவஞானத்தை கமுதிக் கோட்டையிலும், உடையணனை திருச்சுழிக் கோட்டையிலும் தூக்கிலிடுமாறு செய்தேன். ஏனெனில், அந்தக் கோட்டைகளுக்கு அவர்கள் புரட்சித்தலைவர்களாக நியமிக்கப்பட்டு இருந்தனர் ... ... ...'' மேலும் இன்னொரு அறிக்கையில் ''... ... ... மருது சேர்வைக்காரர்களால் (தஞ்சைத் தரணிக்கு) தலைவராக நியமிக்கப்பட்டு இருந்த நிலக்கிழார் சோனமுத்து, தஞ்சை சீமைப்பகுதியைக் கைப்பற்றி கொள்ளையிட்டவன். தஞ்சையிலும் சிவகங்கைச்சீமையிலும் இருந்த இவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவனை அறந்தாங்கி கச்சேரிமுன்பாக நிறுத்தி ஐநூறு கசையடி தண்டனை பெறுமாறும், அடுத்து இரண்டு ஆண்டுகள் இரும்புச் சங்கிலியால் பிணைத்து

---

4 Military Consultations, vol. 289 (24-10-1801) p. 7676-78.

சிறையில் அடைத்து வைக்குமாறும் உத்தரவிட்டு இருக்கிறேன். மற்றும் தஞ்சைச் சீமையில் கிளர்ச்சிகளை முடுக்கிவிட்டு கொள்ளைகள் நடத்தி, கிராமங்களைத் தீயிட்டு அழித்து சூறையாடிய சாக்கோட்டை வீரப்பன் மரணதண்டனை பெறுவதற்கு ஏற்றவன். ஆனால் 2-10-1801ம் தேதிய பொது விளம்பரத்தில் அறிவித்தவாறு, பதினைந்து நாட்களுக்குள் சரணடைந்து விட்டதால், அவனை சாக்கோட்டையிலும், அறந்தாங்கி கச்சேரி முன்பும் நிறுத்தி வைத்து ஐநூறு கசையடி கொடுக்குமாறு உத்தரவிட்டு இருக்கிறேன். அவனது சொத்துக்களையும் பறிமுதல் செய்தும், சிவகங்கை ஜமீன்தாரது உபயோகத்திற்கு உட்படுத்தி இருக்கிறேன் எனத் தெரிவித்து இருந்தான்.[5]

இவ்வளவு கொடுந்தண்டனைகளை விடுதலைப்போராளிகளுக்குப் பரிசாக வழங்கிய அக்கினியூ, இந்த அறிக்கைகளில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிட்டு இருந்தான். இராமநாதபுரம், சிவகங்கை, நெல்லைச்சீமையில் உள்ள அனைத்து மக்களையும் நிராயுதபாணிகளாகச் செய்வது எவ்வித-ஆயுதமும் அவர்களிடம் இல்லாமல் பார்த்துக் கொள்வது - அதாவது கிளர்ச்சிக்காரர்கள் முழுமையாக அடக்கப்பட்டு விட்டதால் காலதாமதம் செய்யாமல் குடிகளிடம் எஞ்சியுள்ள அனைத்து ஆயுதங்களையும் பறித்துவிடுதல் வேண்டும் என்றும் இதற்காக ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் இராணுவத்தைப் பயன்படுத்துவதும் தேவையான தொன்று எனவும் தெளிவாகக் குறிப்பிட்டு இருந்தான்.[6]

இந்தக்கடிதத்தை, கொலைகாரன் அக்கினியூ எழுதி முடித்த நேரத்தில் சிவகங்கைச்சீமை சிங்கங்களான வெள்ளைமருது, சின்னமருதுவின் உயிரற்ற உடல்கள் தூக்குமரங்களில் தன்னந்தனியாக தொங்கிக் கொண்டு இருந்தன. ஏகாதிபத்திய வெறி பிடித்த வெள்ளையர்களை சிவகங்கை மண்ணில் இருந்து, ஏன் தமிழ்நாட்டில் இருந்தே அழித்து ஒழிக்க வேண்டும் என்ற அறை கூவலை குடிமக்களிடமும் திருநெல்வேலி, மதுரை திண்டுக்கல் சீமை பாளையக்காரர்களிடமும் முழங்கி வந்த அவர்களது விடுதலை முழக்கம் கேட்கக் கூடாது என்பதற்காக, கொலைகாரர்கள்

---

5 Ibid. p. 7754-56

6 Military Consultations, vol. 289, (24-10-1801). p. 7676-77.

இட்ட இறுக்கமான சுருக்குக் கயிறு அவர்களது குரல்வளையை அழுத்தி நெருக்கிக் கொண்டு இருந்தது. இனியும் அவர்களது சிம்மக்குரல் கேட்காது. ஆனால், ஏற்கனவே அவர்கள் எழுப்பிய ஆவேசக்குரல் எங்கெல்லாமோ கேட்டுக் கொண்டு இருந்தது. வெள்ளைப் பரங்கிகளை எதிர்க்கும் போராட்டக் குளவையாகி ஒலித்தது.

திண்டுக்கல், பழனி, விருபாட்சி, சத்திரப்பட்டி, ஆகிய ஊர்களில் தொடர்ந்து கிளர்ச்சிகள் வெடித்தன. தங்களது ஆயுத வலிமை, குள்ள நரித்தந்திரம், துரோகம் ஆகியவைகளைத் துணைக் கொண்டு கும்பெனியார் நூற்றுக்கணக்கான வீரர்களைத் தியாகிகளாக்கினர். அவர்களுக்கு மருது சேர்வைக்காரர்கள் ஊட்டிய போதம் - ஏகாதிபத்திய எதிர்ப்பு, தன்மானம், தன்னரசு நிலை என்ற இலக்குகளை நோக்கி மக்கள் மேலும் மேலும் வீறு கொண்டனர். வெள்ளையரின் ஆயுதவலிமை வெல்ல முடியாதது அல்ல என்ற வீர உணர்வை ஊட்டிய சிவகங்கைச் சேர்வைக்காரர்களது போராட்டப் பாதையைப் பின்பற்றி, வெற்றி தோல்வியை நினையாமல் ஏகாதிபத்திய எதிர்ப்பை இலக்காக கொண்டு அந்த வீரர்கள் நடைபோட்டனர்.

தெற்கே தமிழகத்தில் இவ்விதம் தொடங்கிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்தான் காலம் செல்லச் செல்ல இந்திய விடுதலைப் போராக வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், இந்திய துணைக் கண்டத்தின் பெரும்பகுதிகளில் பரவியது. அவை தொடங்கப் பெற்ற காலமும் இடமும் கருவும் வேறு படலாம். அவை அனைத்தின் பின்னணி ஒன்றே ஒன்றுதான். ஆதவன் அஸ்தமிக்காத வெள்ளை ஏகாதிபத்தியப் பேரரசு நிழல் இந்தப் புனித மண்ணில் படரக்கூடாது என்பது. அதற்கான துவந்த யுத்தத்தில், வெள்ளை அசுரர்களை அழிக்க ஆயுதந் தாங்கி போரிட்டுக் களபலியான முதன்மைத் தளபதிகள் சிவகங்கைச் சேர்வைக்காரர்கள், அந்த முன்னோடி மறவர்களை முண்டியடித்துக் கொண்டு தியாகிகள் ஆன வீரர்கள் பட்டியல் ஏட்டில் அடங்காதது. "எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும், மக்கள் இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும், தினையளவு நலமேலும் கிட்டுமானால், செத்தொழியும் நாள் திரு நாளாகும்'' என்ற சிந்தனை வயப்பட்டவர்கள் அவர்கள் அனைவரும்.

# 14

## துரோகமும் தியாகமும்

சிவகங்கைச் சீமை என்ற சொல், மருது சேர்வைக்காரர் களது கடைசி மூச்சில் கலந்து மறைந்து விட்டது. அந்தப்பகுதி, சிவகங்கை ஜமீன் என்றும் படைமாத்தூர் ஒய்யாத்தேவர் சிவ கங்கைச் சீமையின் மன்னர் என்பதற்குப் பதிலாக சிவகங்கை ஜமீன்தார் என்றும் பரங்கிகளது ஆவணங்களில் குறிக்கப் பெற்றது. மருதுசேர்வைக்காரர்கள் தூக்கிலிடப்பட்டது பற்றி சிவகங்கை ஜமீன்தார் கூட மகிழ்ச்சியடைந்ததாகச் செய்தி இல்லை. ஆனால், அந்தச் செய்தியினால் அளவு கடந்த மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைந்தவர் பரங்கியரது இந்தப் பராக்கிரமச் செயலுக்கு பல்லவி பாடி, கட்டியங்கூறிய கயவன் ஒருவன் இருந்தான். சிவகங்கைச் சீமையிலோ அல்ல பெரிய மறவர் சீமையான இராமநாதபுரம் சீமையிலோ அல்ல கள்ளர் சீமையில் காலமெல்லாம் கும்பெனி யாரது காலடியில் வாலை ஆட்டி வளைந்து வரும் ரெகுநாத தொண்டமான் பகதூர். அவன் அடைந்த அளவில்லா மகிழ்ச்சியை கும்பெனி கவர்னரான ராபர்ட் கிளைவிற்குக் கடிதம் மூலம் எழு தித் தெரிவித்தான்.

''கும்பெனியாரது அதிர்ஷ்டவசமாக, காட்டுநாய் சின்ன மருதுவும் அவன் தமையனும், குடும்பத்தினரும், ஒருவகையாக கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர். மேன்மை தங்கிய கும்பெனி அலுவலர்களது தீரமும் செயல் திறனும்தான் இதற்குக் காரணம். தங்களது நம்பிக்கைத் துரோகத்திற்கான பரிசையும் அவர்கள் பெற் றனர். இறப்பை எய்தினர்.

''மகாபிரபுவே! நீண்டகாலமாக உன்னிப்பாகக் கவனித்து வந்து இருக்கிறேன். பிரஞ்சுக்காரர்களும், சந்தாசாகிபும், திப்பு வும், கும்பெனியாரது செல்வச்சிறப்பையும் வலிமையையும் சிந்திக் காமல், அவர்களது வீரமிக்க படையணிகளை எதிர்ப்பதற்கு முயன்

னர். ஆனால், அவர்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டு விட்டனர். அதே நேரத்தில் கும்பெனியாரது கூட்டாளிகளும், நண்பர்களும் பரிசு பெற்றனர். பாராட்டப்பட்டனர்.

''மருதுவைப்போன்ற மிகவும் மோசமான பிறவி வேறு எதனை எதிர்பார்த்து இருக்க முடியும்? என்னைப் பொறுத்த வரையில் காலமெல்லாம், மேன்மை பொருந்திய கும்பெனியா ரது துரைத்தனத்தைத் தொடர்ந்து சார்ந்து இருந்து வந்து இருக்கிறேன்.

''என்னுடைய நிலையையும் நடத்தையையும் எனது மேலான தாயார் கிளைவ் பெருமாட்டியார் முன்னிலையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தளபதி பிளாக்பர்ன் அவர் களது கட்டளைக்கு இணக்கமாக இப்பொழுது முடிவடைந்துள்ள போராட்டம் முழுவதிலும், நான் மிகவும் கூடுதலாக சிரத்தை எடுத்துக் கொண்டு இருந்தேன், என்பது யாவரும் அறிந்த தொன்று.

''ஆதலால் எல்லா வகையிலும் எனக்கு தயவு காட்டப் படவேண்டும் என்பது தான் எனது நம்பிக்கை. தங்களது தாராளம் நீண்டு பெருக வேண்டும் என்று சொல்லிக் கொண்டுள்ளதைத் தவிர வேறு என்ன இருக்கிறது.''[1]

மருதுசேர்வைக்காரர்களை அழித்து மகிழ்ந்த நிலையில் கும்பெனியார், எங்கே இந்த கொத்தடிமையின் சேவையை மறந்து விடுவார்களோ என்ற அச்சம் தொண்டைமானுக்கு! மேலும் அந்த நல்ல தருணத்தை நழுவவிடாமல் சொந்த ஆதாயங்களை யும் சாதித்துக் கொள்வது தானே ராஜதந்திரம்! அது மட்டுமல்ல, கும்பெனியாருக்கு உதவக்கூடிய இத்தகைய தருணம் மீண்டும் வாய்க்குமா என்பது சந்தேகம்.

ஏனெனில் சிவகங்கைச்சீமைக் கிளர்ச்சிகளில் நேரடியாக சம்பந்தப்பட்ட அனைத்துப் போராளிகளையும் ஆங்காங்கு தூக்கி லிட்டு விட்டனர். அல்லது கசையடிகள் கொடுத்து, கடலுக்கு அப்பால் கொண்டு சென்றனர். அவர்கள் எங்கே அழைத்துச்

1. Military Consultations vol 289, (25-10-1801) p. 7763-64.

செல்லப்பட்டார்கள் என்பதற்கான விவரங்கள் இல்லை. பெரும் பாலும், கரையும் ஆழமும் காண இயலாத நடுக்கடலில் அவர் களை ஆழ்த்தி கொன்று போட்டு இருக்க வேண்டும் என அஞ்சப் படுகிறது. இன்னும் இந்தப் போராட்டங்களில் நேரடியாக சம் பந்தப்படாது, கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவாளர்களாக இருந்த வர்கள் என சந்தேகப்படும் படியான எழுபத்து இரண்டு பேர் களைக் கைது செய்து விலங்கிட்டு தூத்துக்குடி முகாமிற்கு அனுப்பி வைத்தனர். அவர்களில், சிவகங்கைச் சீமையின் கடைசி மன்ன ரான சக்கந்தி வேங்கன் பெரிய உடையாத்தேவரும், சின்னமருது சேர்வைக்காரரது இளைய மகனான துரைச்சாமியும் முக்கியமான வர்கள். பரங்கியர் தாங்கள் கைப்பற்றி ஆட்சி செலுத்தும் தமிழ் நாட்டில், அவர்களுக்கு எதிராக வல்லமை மிக்க வெள்ளைக் கும் பெனியாரை எதிர்த்துப்போராடிய மக்களும் இருந்தனர், என்ற நினைப்பு, தமிழக மக்களுக்கு இனியும் ஏற்படக்கூடாது என்ற இறுமாப்பில் மறவர் சீமையின் எழுபத்து இரண்டு மக்கள் தலை வர்களையும் நாடு கடத்தி உத்திரவிட்டனர்.[2] வங்கக் கடலின் கீழ்க் கோடியில் தமிழகத்தில் இருந்து இரண்டாயிரம் மைல் தொலைவில் உள்ள பெங்கோலான் என்ற தீவில் பாதுகாப்புக் கைதிகளாக வைத்து இருக்க முடிவு செய்தனர்.

இந்தத்தீவின் உண்மையான பெயர் பூலோ பினாங் என்ப தாகும். மலாய் மொழியில் பாக்குத் தீவு என்ற பொருளில் வழங்கப் பட்டது. இந்தத்தீவில் தோன்றி வளைந்து சென்று கடலில் மறை யும் சிற்றாறு கூட பாக்குநதி (சுங்கை பினாங்) என்று வழங்கப் பட்டது. அந்த அளவிற்கு அந்தத்தீவில் அப்பொழுது பாக்கு மரங் கள் செழித்து வளர்ந்து இருந்தன. மனித இனத்தின் காலடிச் சுவடுகள் மிகுதியாக பதியாத அந்தக் கன்னிநிலத்தில், பாக்கு, லவங்கம், ஜாதிக்காய், மிளகு, அபின் ஆகிய தள்ளா விளையுள் தாழ்விலாச் செல்வமாக விளங்கின. அவைகளைக் கொள்வதற்கு ஒருபுறம் டச்சுக்கிழக்கு இந்தியக் கும்பெனியாரும் மறுபுறம் ஆங் கில கிழக்கிந்தியக் கும்பெனியாரும் கச்சை கட்டி நின்றனர். கி.பி. 1786ல் அந்தத் தீவை, கெடாநாட்டு சுல்தானிடமிருந்து வெள்ளைப் பரங்கிகள் ஆயிரம் ஸ்பானிய டாலர் தொகை ஆண்டுக் குத்தகைக் குப் பெற்றனர். உடனே அந்தத் தீவிற்கு "பிரின்ஸ் ஆல் வேல்ஸ்

---

2 Military Consultations, vol. 289 (24-10-1801) p. 7776.80.

தீவு'' என்ற புதிய பெயர் சூட்டினர். ஆனால் ஐந்தாண்டு காலத்திற்குள், கெடா சுல்தானுக்கு பெரிய நாமம் சாத்தி அந்தத்தீவைத் தங்கள் தனியுடைமை ஆக்கிக் கொண்டனர். இந்த தர்மகாரியத்தைச் சாதித்தவன் பிரான்சிஸ் டே என்ற பரங்கியாகும்.[3]

நமது நாட்டில் ஆட்சியாளராக, அந்தப் பரங்கிகளது நிலைமை உறுதிப்படுத்தப்பட்டு விட்டதால் தூரகிழக்கு நாடுகளான, சாவகம், புருனை, சீனம், ஜப்பான் ஆகியவைகளுடன் வியாபார தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு, இந்தத்தீவு பயனுள்ளதாக அமையும் என அவர்கள் அப்பொழுது கருதினர். ஆனால், நாட்டுப்பற்றும் நேர்மை உள்ளமுங் கொண்ட நல்லவர்களது நச்சுச் சிறையாகவும் அது மாறும் என யாரும் நினைக்கவில்லை. விரைவில் தங்களது ஆட்சியை வங்காளத்தில் துரோகத்திலும் துப்பாக்கி முனையிலும் தொடர்ந்ததை வன்மையாக எதிர்த்த தேச பக்தர்களை, சமுதாயக் குற்றவாளிகள் எனப்பெயர் சூட்டி, நாடு கடத்தி, தங்களது ஆட்சிக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாப்புக் கைதிகளாக வைப்பதற்கு இந்தத் தீவைப் பயன் படுத்தினர்[4].

பெற்ற நாட்டையும் பெண்டு பிள்ளைகளையும் பெற்றோருடன் சுற்றத்தையும் பிரிந்து வந்த அவர்களது கண்ணீர்க் கதையின் சிறுபகுதி அரசு ஆவணங்களில் இடம் பெற்றுள்ளன. அன்றைய நிலையில் தூத்துக்குடிக்கும் மலேயா நாட்டுக்கும் இடைப்பட்ட வங்கக்கடலைக் கடப்பதற்கு ஆறுவார காலம் கப்பல் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஆதலால் இந்த எழுபத்து இரண்டு கைதிகள், பாதுகாப்பு வீரர்கள் இருபது பேர் மற்றும் கப்பல் பணியாளர்கள் ஆகியோருக்குத் தேவையான குடிநீர் உணவுப்பொருட்கள், அட்மிரல் நெல்சன் என்ற கப்பலில் கொண்டு போய் சேர்க்கப்பட்டன.[5] இந்தக் கப்பல் ரூபாய் பதினைந்து ஆயிரம் வாடகைக்கு பம்பாயில் இருந்து வரவழைக்கப்பட்டது. பின்னர் அந்த எழுபத்திரண்டு விடுதலை வீரர்களையும் இருவர் இருவராக இணைத்து அவர்கள் கைகளில் விலங்குகளைப் பூட்டிக்

---

3 பக்கீர் முகம்மது - கெடா வரலாறு (பினாங். 1959) பக்கம் 25-26.

4 Northcotre Perkinson - Trade with Eastern Seas (1937) p.52

5 Military Consultations vol. 288 (A) (11-2-1802) p. 887-89

கப்பலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர்.[6] 11-12-1802 ம் தேதி கப்பல் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து பயணம் தொடங்கியது. கப்பலில் உணவு உண்ணும் போது மட்டும் விடுதலை வீரர்களது கை விலங்குகள் தளர்த்தப்பட்டன. மற்ற நேரங்கள் முழுவதும் கை விலங்குகள் அவர்களுக்கு மிகப்பெரும் இடர்ப்பாடாக இருந்தன. கரைகாணாத கடலுக்கு ஊடே பயணம் செய்யும்போது கூட அவர்கள் தப்பித்துத் தாயகம் திரும்பிவிடக் கூடாது என்ற பயம் கும்பெனியாருக்கு இருந்து வந்தது.

பயணம் தொடர்ந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஆழமான கடல், போராளிகளது கவலைகள் போன்று பரந்த வானம் முழுவதையும் கவிழ்ந்துள்ள மேகத்தின் பயமுறுத்தல். பேரலைகளது ஆவேசம், கப்பலின் பாய்களை அலைக்கழித்துச் செல்லும் காற்றின் சீற்றம் கப்பலைச் சுக்கு நூறாகச் சிதறடிக்க முற்படுவது போன்ற பெரு மழை. பகல் இரவு வந்து போயின. பயணம் தொடர்ந்தது. வழக்கமான ஆறுவார பயணத்திற்காக எடுத்துச் செல்லப்பட்ட அரிசி (5398 படி) பருப்பு (371 படி) நெய் (421 பலம்) உப்பு (210 பலம்) ரொட்டி (5 மூடை) புளி (3375 பலம்) கருப்புக்கட்டி (750 பலம்) கோழி (1,100) செம்மறியாடு (10) மற்றும் குடிநீர் அனைத்தும் காலியாகி விட்டன.[7] பசி, தாகம், பயணக் களைப்பு, விடுதலை வீரர்கள் புழுப்போல் துடித்தனர். என்று முடியும் இந்தப்பயணம் என்று விடியும் இந்த இன்னலின் தொடர்ச்சி, பயணத்தின் பொழுது, கைதிகளில் மூவர்-பாஞ்சாலங்குறிச்சி சின்னப்பிச்சைத்தேவர், ஆதனூர் சுப்பிரமணிய நாயக்கர், விருபாட்சி அப்பா நாயக்கர் ஆகிய மூவரும் கப்பல் தளத்தில் சுருண்டு விழுந்து மடிந்தனர்.[8] அவர்களது சாவு அந்தக்கப்பல் பயணத்தைவிட கொடுமையாக இருந்தது.

ஒரு வகையாக எழுபத்தைந்து நாட்கள் பயணத்துக்குப் பிறகு தொலைவில் பினாங்கு தீவின் மத்தியில் உள்ள குன்றும் அதனை மூடி மறைத்துள்ள தென்னை, பாக்கு மரங்களது பசுமையான காட்சியும், கப்பலில் உள்ளவர் கண்களுக்கு ஆறுதல் அளிட

6 Ibid vol. 304, (9-11-1802) p. 7867-68

7 Ibid vol. 288 (A) (11-2-1802) p. 887-89

8 Military Consultations, vol. 307, (19-1-1803), p. 1249.

யதுபோல் தோன்றின. கப்பல் பினாங் தீவிற்கு சற்று வடக்கே நங்கூரமிடப்பட்டது. கப்பலில் உள்ள கைதிகளைக் கரை இறக்கு வதற்கான அனுமதி கோரிய கப்பல் தளபதியின் கடிதத்தை தூதர்கள் தீவின் கவர்னருக்கு எடுத்துச்சென்றனர். அங்குள்ள கார்ன்வாலிஸ் கோட்டைக்குள் இத்துணை கைதிகளையும் பாது காப்பாக வைப்பதற்கு இடவசதி இல்லாததால் கோட்டைக்கு வெளியே ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திய பிறகு கைதி களைக் கரையிறக்கினர்.[9]

இதோ அவர்களது பட்டியல்:[10]

1. வேங்கன் பெரிய உடையாத்தேவர் – சிவகங்கை
2. முத்துவடுகு என்ற துரைசாமி, த/பெ. சின்னமருது
3. சின்ன லக்கையா என்ற பொம்மை நாயக்கர் - வாராப்பூர்
4. ஜெகநாதஐயன் - இராமநாதபுரம்
5. பாண்டியப்பதேவன் - கருமாத்தூர்
6. சடைமாயன், கருமாத்தூர்
7. கோசிசாமித்தேவர், கருமாத்தூர்
8. தளவாய் மாடசாமி நாயக்கர் - பாஞ்சாலங்குறிச்சி
9. குமாரத்தேவன், முள்ளூர்
10. பாண்டியன் - பதியான்புத்தூர்
11. முத்துவீர மணியக்காரர் - ஆணைக்கொல்லம்
12. சாமி – மணக்காடு
13. ராமசாமி
14. எட்டப்பத் தேவர் - நான்குனேரி
15. பாண்டிய நாயக்கர் - கோம்பை
16. மண்டைத் தேவர்
17. மலையேழ்மந்தன்
18. வீரபாண்டிய தேவர்

---

9 Ibid, vol. 304, (4-11-1802), p. 7869–70.

10 Ibid vol. 307, (19-1-1801), (B) p. 1250,
Ibid vol. 304, (1-10-1802) p. 7867–68.

19. கருப்பத் தேவர்
20. சுப்பிரமணியம்
21. மாடசாமி
22. பெருமாள்
23. உடையத்தேவர், த/பெ. சின்னபிச்சை தேவர்
24. தேவிநாயக்கர்
25. முத்துக்கருப்பத்தேவர்
26. மண்டந்தேவர் த/பெ. சங்கரநாராயண தேவர்
27. பேயன் த/பெ. பால உடையாத்தேவர்
28. அழகிய நம்பி
29. ஒய்யக்கொண்ட தேவர்
30. சிவனுத் தேவர்
31. காணி ஆழ்வார்
32. மூப்பு உடையான்
33. கொண்டவன்
34. வீரபத்திரன் - நான்குனேரி
35. சிலம்பன் ,,
36. பேயன் ,,
37. ராமசாமி ,,
38. இருளப்பன் ,,
39. மாடசாமி ,,
40. வீரபாண்டியன்
41. வெங்கட்டராயன் ,,
42. உடையார்
43. முத்துராக்கு ,,
44. முத்துராக்கு - ஆனைக்கொல்லம்
45. சொக்கதலைவர் - நான்குனேரி
46. இருளப்பதேவர் - ,,
47. மல்லையா நாயக்கர் - இளவம்பட்டி
48. சுப்பிரமணி நாயக்கர் - கண்டநாயக்கன்பட்டி

49. காமாச்சி நாயக்கர்
50. ராமசாமி
51. பிச்சாண்டி நாயக்கர்
52. தளவாய் - கழுமந்தன்
53. சின்னவேடன் - பீசாம்பள்ளி
54. வேதமூர்த்தி - காந்தேஷ்வனம்
55. தளவாய் பிள்ளை, திசைகாவல் மணியக்காரர், பாஞ்சாலங் குறிச்சி
56. சுப்பிரமணியன்
57. பெத்த நாயக்கர் - அரசடி
58. கிருஷ்ணப்ப நாயக்கர்
59. வேலன் - குளத்தூர்
60. மயிலேறி - அரசடி
61. வள்ளிமுத்து - கொங்கராயங்குறிச்சி
62. ராமன் – சிறுவயல்
63. பாலையா நாயக்கர் - சூரங்குடி
64. குமரன்
65. வெள்ளையக்கொண்டான் வெள்ளையன்
66. ராமன் விருபாட்சி
67. அழகு சொக்கு ”
68. ஷேக் உசைன் ”
69. கிருஷ்ணப் பிள்ளை

இவர்கள் அனைவரும் எண்பது நாட்கள் கையில் விலங் கிடப்பட்டவர்களாக கப்பலுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்ததால் கப்பலை விட்டு வெளியே காலடி வைத்து இறங்கி வருவதே அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அவர்களது உடல் நிலை மோசமாகவும், தெம்பு இல்லாதவர்களாகவும் காணப்பட் டனர். அதனால் அவர்களில் இருபது பேர் அடுத்தடுத்து-கி.பி.1802 மே திங்களில் நால்வரும், ஜூன் திங்களில் நால்வரும், ஜூலையில் இருவரும், ஆகஸ்டில் நால்வரும், செப்டம்பரில் அறுவரும்-இறந்து போனதில் வியப்பில்லை.

தூத்துக்குடித் துறைமுகம் வழியே அனுப்பப்பட்ட இந்த விடுதலை வீரர்களைத் தொடர்ந்து சென்னையிலிருந்தும், வேறு சில போராட்ட வீரர்களும் பினாங்கு தீவுக்கு பாதுகாப்புக் கைதிகளாகக் கொண்டு வரப்பட்டனர். அவர்களில் வடநாட்டில் வெள்ளையனுக்கெதிராக போராட்டம் நடத்தி தியாகியான ஹைடாவின் சுற்றத்தாரரான கிருஷ்ணா, சின்னையா என்பவர்களும் மராட்டிய மாநில ஆனந்தரங்கம், நெங்கா பண்டா, கரப்புவரிணி சுந்தரலிங்கம், சின்னவீட்டு சதாபரமன் ஆகியோரும் அவர்களில் முக்கியமானவர்கள். இந்தக்கைதிகள் தப்பித்துத் தாயகம் திரும்பி விடாமல் கண்காணிக்கப்படவேண்டும் எனக் கும்பெனித் தலைமை பினாங் ஆளுநர் ஜார்ஜ் லீத்துக்கு எச்சரிக்கை செய்து இருந்தது. இவர்கள் அனைவரது எஞ்சிய வாழ்க்கை முழுவதும் பினாங்கு தீவிலேயே கழிந்தது. அந்தத் தீவினைச் சூழ்ந்துள்ள ஆழ்கடலைப் போன்று, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட அந்த நல்லவர்களது இதயங்களிலும் கரை காண இயலாத கவலையும் வருத்தமும் விஞ்சி நின்றன.

''தொண்டுபட்டு வாழும் எந்தன்
தூய பெருநாட்டில்
கொண்டுவிட்டு அங்கு என்னை உடனே
கொன்றாலும் இன்புறுவோம்... ... ... ... ... ...''

... ... ... என்றுதான் அவர்கள் ஏங்கி ஏங்கி அழுது மடிந்திருக்க வேண்டும்.

என்றாலும், கும்பெனியார் தரப்பில் மனநிறைவு காணப் படவில்லை. இராமநாதபுரம் சிவகங்கைச்சீமை மக்களைப்பற்றிய அச்சமும் குழப்பமும் அவர்களிடம் இருந்து கொண்டே இருந்தன. அதனுடைய வெளிப்பாடுதான் அக்கினியூவின் கோரிக்கை. இந்த நாட்டின் புதிய ஆளவந்தார்களான அவர்களை, எந்தச் சூழ்நிலையிலும் - என்றென்றும் எதிர்த்து மக்கள் மீண்டும் ஆயுதம் தாங்கிப் போராட முடியாத பலவீனமான, கோழைகளை குடிமக்களாகக் கொண்டு சமுதாய அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டும். பயந்து பரங்கிகளுக்கு கட்டுப்பட்ட அந்த மக்களைத் தங்களது கூரான துப்பாக்கி முனையைக் காட்டி பயத்தால் குனிய வைத்து நிரந்தரமாக அடக்கி ஆள முடியும் என்பது அவர்களது கணிப்பு.

அக்கினியூவின் அந்த ஆலோசனையை கும்பெனித் தலைமை அப்படியே ஏற்றுக் கொண்டது. திருநெல்வேலி, மதுரை இராம நாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் சீமைகளில் உள்ள அமில்தார் கள், குடிகளிடம் எஞ்சி இருந்த ஆயுதங்களைப் பறித்துக் கைப் பற்றும் பணியில் ஈடுபட்டனர். சிவகங்கைச் சீமையில் இந்தப் பணிக்கு வைகுந்தம் பிள்ளை என்பவரை புதிய சிவகங்கை ஜமீன் தார் நியமனம் செய்து இருந்தார்.[11] பரங்கிகளது திட்டத்தின் வெற்றியைக் குறிப்பதுடன் அந்தச் சீமை மக்கள் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்திற்கு ஆயத்தமான நிலையில் இருந்தனர் என்பதையும் புலப்படுத்துகின்றனர். கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் பரங்கிகளது திட்டத்தின் வெற்றியைக் குறிப்ப துடன் அந்தச் சீமை மக்கள் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத் திற்கு ஆயத்தமான நிலையில் இருந்தனர் என்பதையும் புலப் படுத்துகின்றன.

**16-1-1802ம் தேதிய அறிக்கையில் கண்டுள்ளபடி[12]**

| ஆயுத வகை | நெல்லைச் சீமை | சிவகங்கைச் சீமை | இராமநாத புரம் சீமை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. மஸ்கட் | 1602 | 1050 | 457 | 3109 |
| 2. மஸ்ஸில்லோடிங் துப்பாக்கி | 686 | — | 570 | 1256 |
| 3. கைத்துப்பாக் கிகள் | 815 | — | 19 | 834 |
| 4. வால்பீஸ் | 152 | — | 40 | 192 |
| 5. ஜிஞ்சாலி (பீரங்கி) | 3 | — | 6 | 9 |
| 6. நீண்ட ஈட்டிகள் | 2300 | — | 1900 | 4200 |
| | 5558 | 1050 | 2992 | 9600 |

**21-2-1802ம் தேதிய அறிக்கைப்படி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மஸ்கட் | 2438 | 1639 | 1037 | 5114 |
| 2. பீரங்கிகள் | 16 | — | — | 16 |
| 3. மாட்ச்லாக் | 979 | 944 | 1584 | 3507 |
| 4. கைத்துப்பாக்கி | 126 | 19 | 67 | 212 |

---

11 Madurai District Records vol. 1178(A) (17-5-1802), p 354

12 Madurai District Records vol 1139, (16-1-1802) p. 27.

| | | | | |
|---|---|---|---|---|
| 8. மஸ்கட் (மாட்ச்லாக்குடன்) | 221 | 8 | 234 | 463 |
| 9. சருகார் | 235 | 78 | 147 | 460 |
| 10. ஜிஞ்சாலி | 16 | 14 | 13 | 43 |
| 11. ஈட்டிகள் | 3183 | 3275 | 4117 | 10375 |
| 12. ஈட்டி முனைகள் | 703 | 108 | 425 | 1236 |
| 13. ஈட்டித்தடி | 112 | — | — | 112 |
| 14. துப்பாக்கி சனியன் | 426 | 94 | 281 | 801 |
| 15. கைத்துப்பாக்கி (குழாய்கள்) | 27 | 1 | — | 28 |

**31–3–1802ம் தேதிய அறிக்கைப்படி[13] (4-11–1801 முதல் 31–3-1802 வரை)**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. துப்பாக்கியும், துப்பாக்கி குழாய் களும் | 4149 | 2096 | 1848 | 8094 |
| 2. மாட்ச்லாக் | 1281 | 1229 | 2517 | 5027 |
| 3. வேல், ஈட்டிகள் | 4730 | 3640 | 5409 | 13779 |
| 4. கைத்துப்பாக்கிகள் | 450 | 42 | 101 | 593 |
| 5. வாள் | 2090 | 652 | 856 | 3598 |
| 6. குத்துவாள் | 1304 | 441 | 630 | 2375 |
| 7. ஜிங்கால் | 17 | 17 | 11 | 45 |
| 8. ஸரோசர் | 268 | 90 | 227 | 585 |
| 9. துப்பாக்கிச்சனியன் | 645 | 91 | 180 | 916 |
| மொத்தம் | 14,934 | 8,298 | 11,780 | 35,012 |

இந்த ஆயுதங்களைப் பறித்ததற்கும், சில இடங்களில் கோட்டைகளை இடித்துத் தரைமட்டமாக்கியதற்கும் கும்பெனியார் செலவு செய்த விவரங்களும் கிடைத்துள்ளது.[14]

| | | |
|---|---|---|
| 1. நெல்லைச்சீமையில் (ஆர்க்காடு வெள்ளிப்பணம்) | | ரூ. 27, 342. 4. 40 |
| 2. சிவகங்கைச் சீமையில் | ,, ,, ,, | ரூ. 10, 426. 7. 41 |
| 3. இராமநாதபுரம் சீமையில் | ,, ,, ,, | ரூ. 32, 398. 10. 40 |
| | | ரூ. 70, 168. 2. 27 |

13 Madurai District Records vol. 1140. (31-3-1802). p. 199.
14 Ibid 1141 (31-3-1802). pp.25-58

கருமருந்து போட்டு இடித்துப்பயன்படுத்தும் துப்பாக்கிகளுக்கு ரூபாய் பத்தும், இரட்டைக்குழல் துப்பாக்கிக்கு ரூபாய் நான்கும், வெடிகளுக்கு ரூபாய் ஐந்தும், ''அன்பளிப்பாக'' வழங்கி ஆயுதங்களைப் பறித்தனர்.[15] இதற்காக ரூ. 1, 07, 182-6.0 ஒதுக்கீடு செய்தனர், என்றாலும் 31. 3. 1802 தேதி வரை இந்த வகையில் ரூ 70, 145. 10. 10ம் சிறுகோட்டைகளை இடிப்பதற்கு ரூ. 15, 948. 7. 12ம் செலவு செய்யப்பட்டதாக ஆவணங்கள் உள்ளன.[16] இவ்விதம் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள், மதுரை பாளையங்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய கோட்டைகளில் அமைக்கப்பட்டு, இருந்த இராணுவப் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கு அவைகள் முக்கிய அலுவலர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.[17] அழிக்கப்பட்ட கோட்டைகளின் முழுப்பட்டியல் கிடைக்கவில்லை. வடக்கே அரவக்குறிச்சி, தாராபுரம் கோட்டைகள் தரைமட்டமாக்கப்பட்டன.[18] மறவர் சீமையில், அனுமந்தக்குடி, ஆறுமுகக்கோட்டை, முஷ்டக்குறிச்சி, முதல்நாடு, பந்தல்குடி, பெருநாழி, பரளச்சி, திருச்சுழி ஆகிய இடங்களில் இருந்த மண்கோட்டைகளும் அழிக்கப்பட்டன. இராமநாதபுரம், பாம்பன், கமுதிக்கோட்டைகளை இடித்து விடுமாறு இராமநாதபுரம் ஜமீந்தாரிணிக்கு ஆணையிடப்பட்டது.[19] நெல்லைச் சீமையில் மட்டும் பிரம்மதேசம், கங்கைகொண்டான், சங்கரநாயனார் கோவில், ஆழ்வார் திருநகரி, களக்காடு பகுதிகளில் இருந்த இருபத்து எட்டு கோட்டைகள் அழிக்கப்பட்டதற்கும், குறிப்பாக பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை எந்தக்காரணத்தைக் கொண்டும், எப்பொழுதும் யாரும் அதனை மீண்டும் பரங்கியருக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது என்ற நோக்கத்திற்காகவும் அந்தக்கோட்டையின் பாளையக்காரர்களை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், அந்தக்கோட்டையை இடித்து, கோட்டை இருந்த பகுதியில் எள்ளை விதைத்து எருக்கலைச் செடியை நட்டதற்கும் விவரங்கள் உள்ளன.[20] இந்தக்கோட்

---

15 Ibid 1140 (31-3-1802), p. 196
16 Idid 1140 (31-3-1802). p. 199
17 Ibid 1142 (8-1-1803). p. 2
18 Madurai District Records vol. 1221 p 27-50
19 Madurai District Records vol. 1146 (1-9-1803) p. 34
20 Madurai District Records vol. 1140 (28-5-1802) p. 36 & p. 96.

டையை இடித்து அழிப்பதற்கு அறுநூறு ஆட்களை நியமித்து இருந்தனர். அரணை அடையாளம் தெரியாதவாறு அழித்துப் போட்டதுடன் அந்தப்பெயரை அலுவலக ஆவணங்களில் இருந் தும் அகற்றினர்.[21]

தமிழக மக்கள் தலை கவிழ்ந்து நடக்கக்கூடிய இத்தகைய இழிசெயல்களை முன் எச்சரிக்கை, பாதுகாப்பு என்ற பெயரில் அவர்கள் மேற்கொண்டாலும், அவர்களை உள்ளூர பயமும் பீதி யும் ஆட்டி அலைத்துக் கொண்டிருந்தது என்பதைச் சுட்டும் நிகழ்ச்சியொன்று திருநெல்வேலியில் நடந்தது.[22] நெல்லையப்ப ருக்கு ஆண்டாண்டாக நடக்கும் ஆனித்திருமஞ்சன விழா. கோயில் திருவிழா என்றால் மக்கள் கூட்டம் இல்லாமலா இருக்கும்? கலைக்டர் லூஷிங்டனுக்கு உச்சித்தலை முதல் உள்ளங்கால் வரை நடுக்கம் கண்டது. ஆயிரக்கணக்கில் கோயிலில் கூடுகின்ற மக்கள் வெள்ளையர் எதிர்ப்பு உணர்வுடன் நடந்து கொண்டால் ...? கும் பெனியாரது சொத்துக்களைக் கொள்ளையிட்டு கச்சேரியில் அடைக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகளைத் தப்புவிக்கும் முயற்சி யில் ஈடுபட்டால் ... அவனது சிந்தனை அவ்விதம் பீதியினால் நடுங்கியது. உடனே பாளையங்கோட்டையில் உள்ள மேஜர் ஷெப்பர்டுக்கு ஓலை அனுப்பினான். திருநெல்வேலியில் திருவிழா நடைபெறும் இரண்டு நாட்களிலும் கும்பெனிச் சிப்பாய்களை நகரின் பல இடங்களில் நிறுத்தி வைத்து பக்தர், பொதுமக்கள் நடமாட்டங்களைக் கண்ணும் கருத்துமாக கவனித்து வருமாறும், சுவாமியின் பவனிமுடிந்தவுடனேயே மக்களைக் கலைந்து செல்லு மாறு செய்யும்படியும், நடவடிக்கை எடுக்க. இப்படி எத்தனை திருவிழாக் கூட்டத்தைக் கண்டு பரங்கிகள் நடுங்கினார்களோ தெரியவில்லை.

இத்தகைய நடவடிக்கைகள், மதுரை, திண்டுக்கல். திருச்சி சீமைகளிலும் மேற்கொள்ளப்பட்டன. வத்தலக்குண்டு, நத்தம் பெரியகுளம், வேடசந்தூர், பழநி, தாராபுரம், கரூர், காங்கயம் தாசில்தார்கள் ஏராளமான ஆயுதங்களை குடிகளிடமிருந்து கைப் பற்றியதை அவர்களது அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மேலும் அவர்கள், போடி, கம்பம், அம்மையநாயக்கனூர், தேவதானப்

21 Madurai District Records vol. 1178 (A) 10-5-1802

22 Ibid (11-7-1802) p. 56.

பட்டி, கன்னிவாடி, பழநி, மருங்காபுரி, வீரமலை, பொள்ளாச்சி ஆயக்குடி, பல்லடம் பாளையக்காரர்கள் வைத்திருந்த, ஆயுதங் களையும் பறித்து மதுரைக் கோட்டைக்கு அனுப்பி வைத்தனர். இதனால் தேவானப்பட்டி, கங்குவார்பட்டி, போடி, பழநி ஆகிய ஊர்களில் புகுந்து அட்டகாசம் செய்யும் காட்டு யானைகளை அடித்து விரட்டக்கூட ஆயுதம் இல்லாமல் அங்குள்ள மக்கள் அவதிப்பட்ட செய்திகளும் உள்ளன.[23]

கும்பெனியாரது பயங்கொள்ளித் தனமான இந்த வெறிச் செயல்கள் கி. பி. 1804 வரை நீடித்தன.[24] அத்துடன் இப்பகுதி களில் உள்ள இருபத்தைந்து பாளையக்காரர்களிடம், ஆயுதம் தாங்கிப் போரிடக் கூடிய வீரர்கள் எத்தனை பேர் இருந்து வரு கின்றனர் (10-300) என்ற புள்ளி விவரங்களையும் சேகரித்தனர்.[25] மேலும் கிளர்ச்சிக்காரர்களது தாக்குதல் ஏற்பட்டால் அதனைச் சமாளிப்பதற்கு என்ன செய்யலாம் என யோசித்தனர். கோவில் களிலும் மடங்களிலும் பணியாற்றும் பிராம்மண சமூகத்தினரை யும் திரட்டி, அவர்களுக்கும் போர்ப்பயிற்சி கொடுக்கவேண்டும் எனக் கும்பெனியார் தளபதிக்கு மதுரைச்சீமைத் துணைக் கலெக்டர் காரோ உத்திரவிட்டான்,[16]

சிவகங்கைச் சீமை விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட்ட பொழுதிலும், பரங்கிகள் எந்த அளவிற்கு பயத்தினால் நடுங்கிக் கொண்டு இருந்தனர் என்பதை இந்த உத்திரவுகள் தெரிவிக் கிறது.[27] அவர்களது பீதியை உறுதிப்படுத்தும் வகையில், திண்டுக்கல் சீமை மக்களது ஆவேசம் குறையாமல் இருந்தது. பக்கத்து சீமையான சிவகங்கைச் சீமையும் அதனைப் போராட்டக் களத்தில் நிறுத்திய சிவகங்கை சேர்வைக்காரர்களைப் பரங்கியர் அழித்தபிறகும், அவர்களது எழுச்சி மிக்க உணர்வுகளால் உந்தப் பட்ட கிளர்ச்சிகள், ஓயவில்லை. என்றாலும் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. போராட்டத்தைத் திட்டமிட்டு நடத்தும் உறுதி

---

23 Madurai District Records vol. 128, pages 39, 42, 61, 66

24 Ibid 1147, 30-10-1804

25 Ibid 1146, (27-9-1803,) p. 59

26 Ibid 26-3-1805, 27-3.1805

27 Madurai District Records, vol. 1222, (9-5-1802)

யான தலைமை இல்லை. பரங்கியருக்கு ஈடான வெடிமருந்து ஆயுதங்களும் அவர்களிடம் இல்லை. அவர்களது போராட்டமும் கடலில் பெய்த மழையாகப் பயனற்றுப் போயிற்று.

கிளர்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டவர்களை சத்திரப்பட்டியிலும், பழனியிலும் தூக்கில்போட்டு கொன்றனர். விருபாட்சி பாளையக்காரர் லெட்சுமண நாயக்கர், தாசரிப்பட்டி, பொம்ம கவுண்டர், பெரியகோட்டை வெள்ளைக்கவுண்டர், பூசாரிப்பட்டி-சந்திரன் சேர்வைக்காரர், பழனி சேர்வைக்காரர் மைத்துனர் வெள்ளையன் சேர்வைக்காரர், சின்னவலையப்பட்டி கட்டையன் சேர்வைக்காரர், காமாட்சிப்பட்டி வயிரவன் சேர்வைக்காரர் ஆகியோர் அந்தத் தியாகிகள்.[28] இவர்களில் லட்சுமண நாயக்கரைத் தவிர்த்து, ஏனைய கிளர்ச்சிக்காரர்கள் அனைவரும் கி.பி. 1801ம் ஆண்டு கிளர்ச்சிக்காகக் கைதுசெய்யப்பட்டு நன்னடத்தை பொறுப்பில் விடுவிக்கப்பட்டனர். என்றாலும், கிளர்ச்சியின் முடிவு உயிர்க்கொல்லியாக இருக்கும்என்று நன்கு உணர்ந்தவர்களாக இருந்தும், ஏகாதிபத்திய எதிர்ப்பு வெறியினால் கும்பெனியாரை அடித்துத் துரத்த வேண்டும் என்ற துணிச்சலான முடிவில் இருந்தார்கள் அவர்கள்.

இந்தத் தண்டனைகளை தாமே நேரில் இருந்து நிறைவேற்றியதாக கலெக்டர் பாரிஷ் மேலிடத்திற்கு அறிக்கை செய்தான்.[28] இன்னும் லெட்சுமண நாயக்கர் மகன் ராம்ராஜ், சிந்தலப்பட்டி நல்லப்ப கவுண்டர், தமச்சான்பட்டி, தண்டு கதிருநாயக்கன், முண்டவண்டி நஞ்சையன் சேர்வைக்காரர் ஆகியவர்களை கும்பெனியார் ''கருணையுடன்'' ஜென்ம தண்டனை வழங்கி நாடு கடத்தினர். அதில் இந்தக் குற்றவாளிகள் அனைவரும் கிளர்ச்சிக்காரர் லெட்சுமண நாயக்கரது ''தீய செயல்களுக்கு''த் துணையாக இருந்திராவிட்டால், தாங்கள் பிறந்த மண்ணில் அவர்கள் அமைதியாக வாழ்ந்து இருக்க முடியும் என்று தமது பச்சாத்தாபத்தையும் தெரிவித்து இருந்தான் பாரிஷ். ஆனால் இத்தகைய கொடுமையாள கோரமான இழிவான சிந்தையினால், செயல்களினால், குமைந்து கொப்பளித்துக் கொண்டிருந்த மக்களின்

---

28 Ibid 1148 (26-3-1805) (27-3-1805)

28 Madurai District Records vol. 1148 (3-5-1805) p. 38

மனோபாவத்தை, வரலாற்றின் காலகதியை, இந்தப்புதிய அரசியல்வாதிகள் அணைபோட்டுத் தடுக்க இயலவில்லை. அளர்களது நயவஞ்சகத்தன்மை, அரசியல் அநாகரிகம், மனிதாபிமானமற்ற ஈன செய்கைகளினால் அடிமை உணர்வும், சிறுமைப்புத்தியும் கொண்டு இருந்த பாமரர்கள் கூட ஏற்றமிகு சிந்தனையும் எழுச்சியும் பெற்று இரும்பு அரணாக எழுந்து நின்றனர். அவர்களது தியாகம் இமய வரம்பையும் விஞ்சி நின்றது. அப்பொழுது தீயவர்களது துரோகம் அவர்களைத் தொட முடியவில்லை. அரக்கர்களது அடக்குமுறை தானே அடங்கிவிட்டது. புதிய வரலாறு படைத்தனர். அதுவரை, மன்னர்கள் மாற்றுநாட்டு மன்னரை எதிர்த்துப் போரிட்டு வந்ததுதான் வரலாறு. ஆனால் இப்பொழுது மக்கள், அன்னிய நாட்டு ஆதிக்கவாதிகளுக்கு எதிராகப் போராடினர்.

அவர்களது போராட்டமும் தியாகமும் இன்னும் முடிவடையாத ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் ஏற்றமிகு போர்க்கொடியாக விளங்கி வருகின்றன.

"மனித சமுதாயத்தின் நலனுக்கான இந்தப்போர் இன்னும் தொடருகிறது. அதிகார ஆணவத்திற்கும் அரிய பண்புகளுக்கும் இடையில் நடைபெறும் இந்தப்போரினது குருதிபடிந்த வரலாறு வளர்ந்து கொண்டே போகிறது"- ஏகாதிபத்திய வாதிகளின் விதவிதமான கொடுமைகளைத் தாங்கி வீறு கொண்டு எழுந்து வீரமரணத்தைத் தழுவிய சிவகங்கைச்சீமை செம்மல்களை நினைக்கும் நெஞ்சங்களுக்கு தங்களது காணிக்கையைச் செலுத்த கண்கள், எப்பொழுது கண்ணீரை நிறைத்து காத்துக் கொண்டிருக்கின்றன.

## *சிவகங்கை மன்னர் பிரதானிகளது வழியினர்*

### சிவகங்கை மன்னர் வேங்கன் பெரிய உடையாத்தேவர் வாரிசுகள்

**வேங்கன் பெரிய உடையாத் தேவர்**

- வெள்ளச்சி நாச்சியார் (வாரிசு இல்லை)
- ராக்கு நாச்சியார்
  - இருளாயி ஆத்தாள் (1) (ஸ்வீகாரம்)
  - லெட்சுமி ஆத்தாள் (2) (ஸ்வீகாரம்)
- கருப்பாயி நாச்சியார்
  - உங்காத்தாள்
- ராக்கு நாச்சியார்
  - வேலு நாச்சியார்

### பெரிய மருது சேர்வைக்காரர் குடும்பத்தினர்

**பெரிய மருது சேர்வைக்காரர்**

- ராக்காத்தாள் (அரசனேந்தல்)
- கருப்பாயி ஆத்தாள் (முத்தூர்)
  - (ராக்காத்தாள், கருப்பாயி ஆத்தாள் வழி) மருது ஆத்தாள்
    1. கறுத்ததம்பி
    2. மூளிக்குட்டி தம்பி
    3. உடையணன்
- பொன்னாத்தாள்
- ஆனந்தி
  - பெண் குழந்தை
- மீனாட்சி (கவண்டன் கோட்டை)
  1. தங்கம் அம்மாள்
  2. ஆதிவீரலட்சுமி அம்மாள்

## சிவகங்கைச் சீமைப்பிரதானி
## சின்னமருது சேர்வைக்காரர்
## குடும்பத்தினர்

சின்னமருதுசேர்வை

அ) முதல் மனைவி வீராயி ஆத்தாள்

(1) (முதல்மகன்) காமாலியார் சேர்வை என்ற சிவத்ததம்பி
|
ராக்கத்தாள் (மனைவி)
மக்கள்

1. பெரியமருது — மனைவி ராக்கு ஆத்தாள் (1) சிவத்தசாமி
(2) சிவபாக்கியம்
— மனைவி சின்னப்பிள்ளை ஆத்தாள்
— மக்கள் 1

2. சின்னமருது என்றமுத்துச்சாமி — மூக்கு பூரணி (மனைவி) (குழந்தை இல்லை)

3. அன்னத்தாய் * — வெள்ளைச்சாமி (மகன்)
சுவாமி ஐயா (மகன்)
ராக்குஆத்தாள் (மகள்)

4. மருதுஆத்தாள் * — சுவாமி ஐயா (மகன்)

5. கறுப்பாயி ஆத்தாள் * — குழந்தை — 5

6. ராக்குஆத்தாள்* — ராசிக்குட்டி (மகள்)
மங்களம் (மகள்)

7. சாது ஆத்தாள் * — குழந்தை — 1

(2) (இளையமகன்) சிவஞானம் சேர்வை
|
1. அன்னத்தாய் (மனைவி) — முத்துச்சாமி (மகன்)
(மருதுசேர்வைக்காரர்)

2. கோட்டை ஆத்தாள் (மனைவி) — குழந்தைகள் (2)

௩. மீனம்மாள் (மனைவி) — வீராயி ஆத்தாள் (மகள்)

(3) (இளைய மகன்) துரைச்சாமி

மக்கள்

1. மருதி ஆத்தாள் (மனைவி)—வீராயி ஆத்தாள் (மகள்)
2. வள்ளியம்மை ஆத்தாள்(மனைவி)—மகள் – 5
3. கறுப்பி ஆத்தாள் (மனைவி)—மருதுசேர்வையும் இன்னும் நான்கு மக்களும்

ஆ) இரண்டாவது மனைவி சசிவர்ணாயி என்ற மீனாட்சி
மக்கள்

1. மருது சேர்வை (மகன்) — மருதை ஆத்தாள் (மகள்)

இ) மூன்றாவது மனைவி வயிராயி ஆத்தாள்
மக்கள்

1. சாமாலை சேர்வை
2. தாண்டவராய சேர்வை
3. சொர்ண ஆத்தாள்* — மகன்-(1) மகள் (1)
4. பொட்டு ஆத்தாள்* — மகள்-(1)
5. குஞ்சரம் ஆத்தாள்* — மகள்-(1)
6. கண்ணாத்தாள்* — மகள்-(1)

ஈ) நான்காவது மனைவி மருதை ஆத்தாள்
மக்கள்

1. பெரிய தம்பி
2. சின்னத்தம்பி
3. பொன்னாத்தாள்

---

* இந்த மகளிரது கணவன்மார்கள் பெயர்களைத் தெரிந்து கொள்ளத் தக்க ஆவணங்கள் கிடைக்கவில்லை. அவர்கள் அனைவரும் காளையார் கோவில் கோட்டைப் போரின் பொழுது வீர மரணம் எய்தியதாக அறியப்படுகிறது.

# மருதுபாண்டியர் வழங்கிய பட்டயங்கள் கல்வெட்டுகள்

## தஞ்சாக்கூர் ஓலைச் சாசனம் (கி.பி, 1784)

### முதல் ஏடு

1. சாலியவாகன சகாத்தம் இதன்மேல் செல்லா நின்ற குறொதி ஆண்டு ஆவணி யக உ சுக்கிரவாரமும்

2. திரையோதசி(யும்) புனர்பூசநட்சேத்திரமும் சித்திநாம யோகமுங் (கிரச வாகரண) மும் கூடின சுபயோக சுபதினத்

3. தில் தஞ்சாக்கூர்சுவாமி காவேரி அய்யன் சன்னதி தானத் துக்கு அரசு நிலையிட்ட விசய ரெகுநாதபெரிய உடையாத்

4. தேவரவர்களுக்குப் புண்ணியமாக ஞய — மானிய பெரிய மருதுசேருவை கார(ர)வர்களும் தஞ்சாக்கூரிலிருக்கும் அம்பலம்

5. சோலைத்தேவன் — காவிரித்தேவன் தண்ணாத்தேவன் — வேலத்தேவன் கூளாணித்தேவன் — சுந்தத்தேவன் பே (ற)ன் — புள்ள

6. ச்சித்தேவன் குன்னியழகன் குமாந்தத்தேவன் குமாரத் தேவன் யிந்தப் பத்துக்கரை அம்பலக்காரரும் திசைக்காவல்

7. மாரநாட்டுச்சீமை திசைக்காவல் ஞய — மருதுசேறுவை காராவர்களும் பெரியமருது சேறுவைகாராவர்களும் தி

8. சைக்காவல் — காணியாட்சிக் கரைக்காரரும் கூடி எழுதின தர்மசாதனம் எழுதிக்குடுத்தபடி தர்மசாதன பட்டய

9. மாவது தஞ்சாக்கூர் சுவாமி காவேரி அய்யன் சன்னதி தானத்துக்கு நித்தியம் பூசை நெய்வேத்தியம் பண்ணி

10. விக்கிரதர்க்கு உம்பளம் அய்யம்பாகம் — தளை — உரு உ ட்டயூ சறுவமானிபமாக யேர்படுத்தி நில

## இரண்டாவது ஏடு

11. த்துக்குள்ளவரியும் சுவந்திரம் வகைகளையுந் தள்ளிவிச்சு நிலத்துக்குள்ள குளவெட்டுஞ் சேத்துக்காணிக்கையும்

12. குடுக்கச் சொல்லியும் கிறாமத்தில் குடியிருக்கிற அம்பலக் காரர் குடியான பேர் நிலமையாளியள் - அண்ணிக்குடி - பலபட்டடை

13. க்குடி சகலரும் வீட்டுக்குக் கட்டளை குடியொன்றுக்கு வருசத்தில் ஒரு பணமுங்குடுத்து நித்தியம் பூசையுந் திரு விளக்கும்

14. ஸ்ரீபாலினமாய் ஆள சந்திராதித்தவரை சந்திரப்பிரவேஷம் வரைக்கும் கல்லுங் காவேரி புல்லும் பூமி உள்ள மட்டும் பு

15. த்திர பவுத்திரா பாரம்பரையாய் நடப்பிச்சுக் கொள்வோ மாகவும் யிந்தப்படிக்கி பட்டயத்திலுள்ள அனைவோரும்

16. சம்மதியாக காவேரி அய்யன் சன்னதிதானத்துக்கு தர்ம சாதனப் பட்டயம் எழுதிக் குடுத்தோம் இந்த தர்மசாதன

17. ப்பட்டயத்துக்கு அனீதம் பண்ணினவன் மாதாவைக் கொன்ற தோஷத்திலும் கோவதை பிறாமணானைவதை பண்ணின

18. தோஷத்திலும் குழந்தையளை வதை பண்ணின தோஷத் திலும் போவோமாகவும் இந்தத் தர்மசாதன பட்டயம் எழுதினேன் னாட்டுக் கணக்கு கலியுகராயபிள்ளை

19. மகன் அய்யம்பெருமாள்பிள்ளை மணியம் சொக்குப்பிள்ளை கணக்கு வெங்கிடாசலம் மய்யன் அம்பலம் சோலைத் தேவன் காவேரித்தேவன் தண்ணாத்தேவன்

20. வேல்த்தேவன் கூளாணித்தேவன் சுந்தரத்தேவன் புள்ளிச் சித்தேவன் சுந்தரதேவன் புள்ளச்சித்தேவன் குன்னியழகன் மொந்ததேவன்

21. யிதர்க்கு அசல் நிறுபம் - அரண்மனை நிறுபம் யிந்தவேட் டிலேயிருந்து அதைப் பார்த்து எழுதிய நகல்

22. வண்ணார் முருகன் - நாவித(ன்) திருவேட்டை - தோட்டி வீரன் சக்கி (லி) யச் சோனை

வழங்கியவர் : தொல்லியல்துறை அலுவலர்
திரு. வேதாச்சலம், எம். ஏ., மதுரை

தொண்டி கைக்களான் குளத்தின் மேல்புறம் உள்ள மதகுக் கல்வெட்டு (கி. பி. 1795)

1. சிவமயம் கலியுகம் 4896 காலி வாகன சகாப்

2. தம் 1717 இதின் மேல் செல்லா நின்ற ராக்ஷத ஆண்டு அற்

3. ப்பசி மாதம் 27 சோமவாரமும் பஞ்சமியும் புநற்பூச நக்ஷத்ர

4. மும் கூடிய சுபதினத்தில் தொண்டிப்பட்டணம் கைக்களான்

5. குளம் கலுங்கு கட்டி முகிஞ்சுது ராச மானிய ரா (ன) மருது பாண்டி

6. யன் உபயம் அயூப் சகா மரைக்காயர் அதிகாரத்தில் கட்டி முகிஞ்சுது

7. அருணாசல ஆச்சாரி கட்டி முகிஞ்சுது உ

வழங்கியவர் ; தஞ்சை தமிழ்பல்கலைக்கழக
கல்வெட்டு ஆய்வாளர், பேராசிரியர்
திரு. செ. ராஜு, எம்.ஏ., அவர்கள்

## சிறுவயல் செப்பேடு (கி. பி. 1800)

பூர்வத்தில் சாலிவாஹறன சகாப்தம் 125க்கு மேல்நிலையான காணப்பேர் என்கிற காளையார்கோவில் ஸ்ரீதிறே தாயுகத்தில் பிரம்மதேவன் பூசை பண்ணுகையாகவும் துவார யுகத்தில் அகஸ்தியர் பண்ணுகையாகவும் கலியுகத் தில் பூற்வம் பார்ப்பதி தபசு செய்கையால் மடவாளாகமும் காயாத கொன்றையும்

சடவன்னியும் நகபுஷ்கருணீ தீர்த்தமும் சவுந்தர நாயகி யம்மனும் பூசிக்கிற ஸ்தலத்தில் கிளக்கு மேற்கு வடக்கு தெற்க்கு திசை நான்கும் பிறகாறத்துக்குள்ளே சாமிமேள் யெழுதிவிச்ச களங்க ளுக்கு பேருடைய சவித்த சமாத்த நித்திய கருமானிஷ்டன பூச்சிய பலாபலன்கொண்ட சோமாஸ்கந்தர் கிறுபையாலும் மகா செனங்கள்

யாபேர்களும் சுகசீவனாம்சத்துடன் வாள தர்ம நியாய ஆட்சி செய்து வரும் புலிப்பள்ளத்தில் புலியைக் கொன்ற சிறுவயல் ஜெமீன்தார் வெள்ளைமருது சேர்வைக்காரர் யிந்த செப்புப்பட்டயத்தை தன்மைத்துனரான கறுத்தையா சேர்வைக்காரர் குமாரர் வீரபாண்டி சேர்வைக்காரர்க்கு ஷயாரின் ஸ்ரீகாலீ

ஸ்வர பெருமானின் ராஜகோபுரம் கட்டும்போது சேவைக்கும் முத்தூர் அரண்மனையில் அம்மனை பிறதிஷ்டை செய்து காவல் காத்து நெவேத்தியம் முதலான திருப்பணி செய்து காவல்காத்து வருவதர்க்கும் மதுரை சில்லா திண்டிக்கல் வகையறா விருபாக்ஷி பாளையப்பட்டு மகா றாச றாச ஸ்ரீ சஜபூதி ஜமீன் கம்பளத்தாற்

நாய்க்கன் வசம் 1800 ஆண்டு பொன்னையம்மா வெள்ளை யம்மா பெரியதாயார் நாமாச்சியம்மாள் வேலக்கள ஆகியவற்களை கணம் பொருந்திய கும்பெனியாற் துரை கைதி செய்து கடாக்ஷம்

வரும்படி சொன்னதின்பேரில் கோட்டை குள தெய்வமாகிய
வெகுவம்மன் சன்னதியில் சாமி கும்பிட்டு டியாற்க்களை மீட்டு
வந்ததற்காக மகாறாசறாச ஸ்ரீ புலி வீழ்த்தி களி கொண்டான்
வெள்ளை மருது சேர்வைக்காரர் உத்தரவின்படி தளாய் நயினப்ப
ன் சேர்வைக்காரரால் இந்தப்படடயம் தோப்பாப்பணம் 1500
கட்டி குடுத்து அபிமானிச்சு தெரியப்படுத்துகிறது

(திரு. நடனன் என்ற நடராஜன் (சிவகங்கை) Health Inspector வசமுள்ள பட்டயத்தின் நகல்)

## *சருகணி சருவேசுரர் கோயில் செப்பேடு* (கி. பி. 1801)

(முதல் பக்கம்)

சுபஸ்ரீ மன் மகாமண்டலீசுபரன் அரி
யாயிர தளவிபாடன் பாசைக்கு தப்பு வார்க்க
ண்டன் மூவராய கண்டன் கண்டனாடு கொண்டு
கொண்டனாடு குடாதான் பாண்டிமண்டல
தாபனசாரியான் சோளமண்டல பிரதிஷ்டபனா
சாரியான் தொண்ட மண்டல சண்ட பிரசண்டன்
இளமும் கொங்கும் யாட்பாணமும் கெசவேட்டை
கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுரன் ரா
சமார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசகுலதிலகன்
இவுளி பாவடி மீதித் தேறுவார் கண்டன் மலை கலங்
கிளு மனங்கலங்காதகண்டன் அன்னதான சத்
திரசோமன் வடகரைப்புலி சாமித்துரோகிகள் தலைமீதி
த்திடும் இருதாளினான் பட்டமானங்காத்தான்
தேசி காவலன் தாலிக்கு வேலி தரியர்கள் சிங்
கம் இரவிகுல சேகரன் இளஞ்சிங்கம் தளசிங்
கம் ஒட்டியர் தளவி பாடணன் ஒட்டியர் மோகந்
தவிள்த்தான் துலுக்க தளவிபாடன் துலுக்கராட்டந்தவி
ள்த்தான் விகடதடமணிமகுட விக்கிரம பொற்கொடி
யை வெட்டிநிலை மீட்ட வீரசூர புசமேல் பராக்கிரம

வேட்டிலுந் தங்கம் வெதுப்பிலும் பச்சை னாயகமுடைய
அரசராவண ராமன் அந்தப்பிரகண்டன் மனு நீ
தி சோழன் மன்னரில் மன்னன் மன்னர்கள் தம்
பிரான் துஷ்டரில் துஷ்டன் துஷ்டர் நெஷ்டூரன் சிஷ்
டரில் சிஷ்டன் சிஷ்டர் பரிபாலன் சாமிகாரிய துர
ந்தரன் பொறுமைக்கு தர்மர் அறிவுக்கு அகத்தி
யன் சொல்லுக்கு அரிச்சந்திரன் குடைக்குக்கர்ணன்
பரிக்கு நகுவன் வாளுக்கு அபிமன் சாடிக்காரர்
மிண்டன் வலியசிசருவி வழியில்க் கால்நீட்டி இட ...
ரா கோடாலி எதுத்தார்கள் முண்டன் சேதுகாவல
ன் செங்காவிக் குடையான் தொண்டியந்துறை காவல
ன் துரைகள் சிரோமணி அனுமக் கொடியான் அடை
யலர்கள் சிங்கம் மகரக்கொடியான் மயமன்னியர்
தம்பிரான் செயதுங்கராயர் குருமுடி ராயர் மும்முடிரா
யர் விருப்பாச்சிராயர் அசுபதி கெசபதி நரபதி ரெகு
நாதச் சேதுபதி அரசு நிலையிட்ட முத்து விசையரெ
குநாதக் கெவுரி வல்லப பெரிய உடையாத்தேவரவர்
கள் பாவத்துக்குப்பிரம்பும் புண்ணியத்துக்குள்
ளுமாகப் பிறீதிவி ராட்சிய பரிபாலனம் பண்ணி
அருளாநின்ற சாலிவாகன சகாத்த சூர எளு
உயங. மேல் செல்லாநின்ற துர்மதி (உறு மார்களி
உயங் சருகனிச் சறுவேரர் கோவிலுக்கு மாற
ணி முழுவதும் சறுவ மாணியமாகவும் அந்தத் கிராம
த்தில் பிரக்கிற சகல வரி யிறை சறுவ மாணியமாகவும்
தானம் பண்ணி தாம்பூர பட்டயங் குடுத்திருப்பதி
னாலே மாறணி முழுதுக்கும் பரினான் கெல்கைய
வது போருடைப்புக்கு தெக்கு பெரு நெல்லூர
க் கோட்டை ஆத்துக்கு கிளக்கு செட்டியேந்தலு
வடக்கு னாமத்திக்கி மேற்கு இன்னான் கெல்
லைக்கு உள்பட்ட மாரணியில் நீதி நிட்சேபம் தரு
ஆபர்ணம் சித்த சாத்தியமென சொல்லப்பட்
டதும் கீழ் னோக்கிய கிணறும் மேல் நோக்கிய ம
ரமும்அவிதாளி ஆவரை கொளிஞ்சி திட்டு திடல்

புத்து புனல் இது முதலான உலக ஆஸ்த் ஆதாயமு
ம் அங்க சுங்கம் வெள்ளைக்குடை கீதாரம் கரை

மணியமங்களம் பட்டயவரி மடத்துவரிச்சுக்கல்வரி
... ... ... .. சருகணி கோவில் தீபதூப நெய்வேத்
தீயம் ஆராதனைக்கு நிற்சேப தானம் பண்
ணிக் குடுத்தபடியினா லே இந்தப்படிக்கு சந்தி
ராதித்த சந்திர பிரவேசுவரைக்கும் கல்லு

ங் காவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரை
க்கும் ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும்
இந்த தர்மத்தை மேன் மேலும் பரிபாலினம்
பண்ணின பேருக்கு ஆயிரங்கோடி கண்ணியா
தானமும் ஆயிரங்கோடி லெட்சபிராமண போ

சனம் பண்ணி லெட்சந் தேவாலயத்தில் கற்ப
கோடி திருவிளக்கு ஏத்தும் பலனு மடைவா
ராகவும் இந்த தர்மத்துக்கு யாதொருவன்
அம்சளிவு பண்ணினால் கங்கைக் கரையில்
காராம் பசுவை மாதாவை குருவை களுத்தறு

த்த தோசத்தில் போவாராகவும்.

## 1. மருது சேர்வைக்காரர் பெண்டு பிள்ளைகள்

நாட்டிற்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள் மட்டும் அல்லாமல் அவர்களது குடும்பத்தினர் அனைவருமே கும்பெனியாரால் கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர் என்பதுதான் வரலாறு. இதில் சிவகங்கை சேர்வைக்காரர்களது குடும்பத்தினர் விதிவிலக்கு பெற்றவர்கள் அல்ல. நல்லவேளை, இவர்களையும் கும்பெனித் தளபதி அக்கினியூ சிறையில் அடைத்து வைக்கவில்லை. ஏனெனில், சித்திரங்குடி தளபதி மயிலப்பன் சேர்வைக்காரரது மனைவியையும் சகோதரியையும் இராமநாதபுரம் கோட்டைக்குள் அடைத்து வைத்து இருந்தனர். அதேபோல அபிராமம் கிராமத்தில் தூக்கில் இடப்பட்ட மீனங்குடி (முத்துக்கருப்பத் தேவரது தம்பி) கனகசபாபதித் தேவரது மனைவியையும் குழந்தைகளையும் இராமநாதபுரம் கோட்டை சிறையில் தான் வைத்து இருந்தனர்.

பெரியமருது சேர்வைக்காரருக்கு ஐந்து பெண்டுகள் இருந்தனர். இவர்கள் மூலமாகப் பிறந்த மூன்று ஆண்மக்களும் காளையார் கோவில் போருக்குப் பின்னர் பிடிக்கப்பட்டு தூக்கில் இடப்பட்டு விட்டனர். ஆதலால் எஞ்சியவர்கள் அனைவரும் பெண்கள்தான். ஐந்து விதவைகளும் ஆறு பெண்மக்களும் இவர்களில் சிலருக்கு மட்டும் குடும்ப பராமரிப்பிற்காக 71 சக்கரம் 6 பணம் கும்பெனியார் கி.பி 1802ல் வழங்கி உதவி செய்து வந்தனர். ஆனால் அந்தத் தொகை கி.பி. 1804ல் நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை பின்னர் பதினேழு ஆண்டுகள் கழித்து பெரியமருதுவின் பெண் மக்களான தங்கம்மாள், ஆதிவீரலட்சுமி என்ற இருவர், கும்பெனியாருக்கு முறையீடு செய்து கொண்டதில் இருந்து தெரிய வருகிறது.[1] அப்பொழுது பெரியமருதுவின் குடும்பத்தில் முதல் இரண்டு மனைவிகளும், நான்கு பெண்மக்களும், இருபத்து ஐந்து பணியாட்களுடன் மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கை நடத்தி வந்தது ஊகிக்கப்படுகிறது. ஆனால் அவர்களது அல்லலைத் தீர்ப்பதற்கு ஆதரவான உத்திரவு பிறப்பிக்கப்பட்டதாக ஆவணங்கள் எதுவும் இல்லை.

சின்னமருது சேர்வைக்காரர்களது நிலை இன்னும் மோசம். ஏனெனில் அவரது ஆண்மக்களில் துரைச்சாமியைத்தவிர எஞ்சிய

---

1 Madurai District Records vol. 4669 (11.5, 1821) pp. 95-96

ஐவரும் கும்பெனியாரால் தூக்கில் இடப்பட்டனர். துரைச்சாமியும் நாடு கடத்தப்பட்டுவிட்டார். எஞ்சியுள்ள அவரது குடும்பத்தினரும் (விதவைகள் நால்வர், மருமக்கள், பேரக்குழந்தைகள், சகோதரி, சகோதரி மக்கள்) பணியாட்களுமாக முந்நூற்று இருபத்து ஐந்து பேர் இருந்தனர்.[2] இவர்களில் சிலருக்கு கி.பி. 1804 வரை குடும்ப பராமரிப்புத் தொகையான 128 சக்கரம் 4 பணம் வழங்கப்பட்டது.[3] இந்தத் தொகையைத் தமது ஜமீன் செலவில் தொடர்ந்து கொடுப்பதற்கு ஜமீன்தார் ஒய்யாத்தேவர் ஆட்சேபனை செய்ததால், சின்னமருது சேர்வைக்காரர் குடும்பம் பண உதவி பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது.[4] கும்பெனியாரும் அவர்கள் சிவகங்கை ஜமீன்தாரிடம் பெறும் பேஷ்குஷ் தொகையில் இருந்து இந்தப்பராமரிப்புத் தொகையைக் கொடுப்பதற்கு முன்வரவில்லை. ஆதலால் அந்தக் குடும்பத்தினர் எத்தகைய சிரமங்களை அனுபவித்து இருந்தனர் என்பதை அந்தக் குடும்பத்தினர் கும்பெனியாருக்குக் கொடுத்த பல மனுக்களில் இருந்து தெரிகிறது. லூஷிங்க்டன், பாரீஸ், பீட்டர், கென்லாக் என பரங்கிக் கலெக்டர்கள் ஒருவர்பின் ஒருவராகப் பணியேற்றவர்கள், அந்த மனுக்கள் மீது பரிந்துரையுடன் சென்னைக் கோட்டைக்கு, அந்த மனுக்களை அனுப்பிவைத்தனர். ஆனால் அவர்களது இன்னல்களுக்கு ஏனோ விடிவு ஏற்படவில்லை.

ஆனால் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்ட குமாரசாமியின் மகன் மருது சேர்வைக்காரரை மட்டும் இராமநாதபுரம் ஜமீன்தாரினி மங்களேசுவரி நாச்சியார் அவரது வாழ்நாள் வரை (கி.பி. 1812) பண உதவி செய்து காப்பாற்றி வந்தார் எனத் தெரியவருகிறது. பின்னர், அவரும் பரங்கியரின் பரிவிற்காக ஏங்கி, 12-5-1821ல் விண்ணப்பம் செய்து கொண்ட ஆவனம் ஒன்றுள்ளது.[5]

---

2 Madurai District Records vol. 1152 - (7-3-1807)

3 Ibid (12-5-1821) pp. 101-102

4 Ibid 1133 - (9-3-1807) p. 33.

5 Ibid 4669 - (12-5-1821) p. 99.

## 2. சிவகங்கை மன்னர் குடும்பம்

இவர்களது பரிதாப நிலையைப் போன்று சிவகங்கை மன்னராக இருந்த வேங்கன் பெரிய உடையாத்தேவரது குடும்ப நிலையும் இருந்தது. மன்னருக்கு நான்கு மனைவிகள். மூத்தவர் வெள்ளச்சி நாச்சியார் கி.பி. 1792ல் இறந்து போனார். காளையார் கோவில் கோட்டைப் போரில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர், மன்னரையும் காளையார் கோவில் காட்டில் பரங்கிகள் பிடித்து கைது செய்து தூத்துக்குடிக்கு அனுப்பினர். பிறகு அங்கிருந்து நாடு கடத்தி பினாங் தீவிற்கு அனுப்பிவைத்தனர். அவரது மூன்று மனைவிகளும் நான்கு பெண்மக்களும் ஆதரவின்றி அல்லல் பட்டனர். வேங்கன் பெரியஉடையாத் தேவரது தம்பி மகன் (சக்கந்தி பாளையக்காரர்) கொஞ்சகாலம் வரை, இந்த ஆதரவற்ற பெண்களுக்கு பணமும் நெல்லும் கொடுத்து வந்தார். சிவகங்கை ஜமீன்தார் பகை வரும் என்ற பயத்தாலோ என்னவோ அவரது நல்ல உள்ளமும் வேறுபட்டு, அளித்து வந்த உதவியை நிறுத்தி விட்டார்.

பினாங் தீவில், அஞ்ஞாதவாசம் செய்த வேங்கன் பெரிய உடையாத்தேவர், தமக்கு வழங்கப்பட்ட அலவன்ஸ் தொகையில் மிச்சமான தொகையைச் சேர்த்து வைத்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அங்கிருந்து வருபவர் வசம் தமது குடும்பத்திற்கு அனுப்பி வந்தார். அவர் அங்கேயே இறந்துவிட்டதால் அந்த வருவாயும் கிடைப்பதற்கு இல்லை. இந்த பெண் பாலர்களான இந்தக்குடும்பம் என்ன செய்யும்? இறந்த கணவருக்கு எள்ளும் தண்ணீரும் இறைக்க முடியாத வறுமைநிலை-கொடுமையிலும் கொடுமை! ஆதலால் தங்களது இறுதி முடிவை கும்பெனியாருக்கு எழுத்து மூலமாக எழுதி அனுப்பினர்.[1] ஒரு மன்னரது விதவைகளுக்கு ஏற்பட்ட வேதனைகளை நிரந்தரமாக அகற்ற அவர்கள் வேறு எந்த முடிவைத் தேர்வு செய்ய முடியும்? தீயினை வளர்த்து அதில் விழுந்து தங்களை மாய்த்துக் கொள்ள கும்பெனியாரது "மேலான அனுமதி"யைக் கோரி இருந்தனர். சிவகங்கைச் சீமை மன்னரது விதவைகள் அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரும் பயனற்றுப்போன நிலையில் அவர்கள் மேற்கொண்ட

---

1 Madurai District Records vol. 4681 (30-1-1883) pp. 32-33

முடிவு! இந்தக் கோரிக்கையைக் கண்டு பீதியடைந்த இராமநாத புரம் கலெக்டர் மாதம் ரூ. 100/-ஐ பராமரிப்புத் தொகையாக அவர்களுக்கு வழங்க மேலிடத்திற்கு உடனே பரிந்துரை அனுப்பினார்.* இந்த நடவடிக்கையின் முடிவு என்ன என்பதை அறியத் தக்க ஆதாரங்கள் இல்லை.

## 3 மயிலப்பன் சேர்வைக்காரர்

இராமநாதபுரம் சீமையில் உள்ள முதுகுளத்தூரை அடுத்துள்ள கிராமம் சித்திரங்குடி. ஆர்க்காட்டு நவாப்பும் கும்பெனியாரும் கூட்டாக மறவர் சீமையைக் கைப்பற்றி இளம் மன்னரான முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியைத் திருச்சிக் கோட்டையில் அடைத்து விட்டு, மறவர் சீமை மக்களிடம் நிலத்தீர்வை வசூலிக்க முயன்ற பொழுது கொதித்து எழுந்து, சர்க்கார் கூலிகளைத் துரத்தி துரத்தி அடித்தவர்கள் இந்த ஊர் குடிமக்கள். மேல்நாட்டுக் கள்ளர்களை விட கொடுமையானவர்கள் என அவர்களை கும்பெனியாரது ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.[1] மண்ணின் மைந்தர்தான் மயிலப்பன் சேர்வைக்காரர். இராமநாதபுரம் சேதுபதி மன்னரது விசுவாசமுள்ள ஊழியர், மானமும் வீரமும் விஞ்சிட களம் பல கண்டவர். அதனால் சேதுபதி மன்னரது அந்தரங்கப்பணியாளராகவும் விளங்கினார்.

அதனால்தான் ஆர்க்காட்டு நவாப்பின் பாதுகாப்புக் கைதியாக ஒன்பதாண்டுகள் திருச்சிக்கோட்டைச்சிறையில் இருந்து வெளிவந்து, மறவர் சீமையின் ஆட்சியில் அமர்ந்த முத்துராமலிங்க சேதுபதி மன்னர், ஆர்க்காட்டு நவாப்பின் ஆதிக்கத்தையொழிக்க இரசியமாக பிரஞ்சு சக்கரவர்த்தி பதினான்காவது லூயியின் இராணுவ உதவியைக் கோரினார். இந்த முக்கியப் பணியில் பாண்டிச்சேரியில் இருந்த பிரஞ்சு நாட்டு ஆளுநரிடம் ரகசியத் தூது சென்றவர் இந்த மயிலப்பன்தான்.

பின்னர் கி. பி. 1795ல் இராமநாதபுரம் சேதுபதி மன்னரை கும்பெனியாரின் வஞ்சனையால் வளைக்கப்பட்டு மீண்டும் திருச்சிக்

---

* Ibid. 8900 (7-2-1833)

1 Collector Lushington's letter dated (6-5-1799)

கோட்டையில் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டபொழுது, மயிலப்பன் சேர்வைக்காரர், கோட்டைக்குள் இருந்த மன்னரை விடுவித்து மீண்டும் இராமநாதபுரம் ஆட்சிப்பீடத்தில் அமர்த்து வதற்கு முயற்சித்தார்.[2] அந்த முயற்சி தோல்வியுற்றதால் இராம நாதபுரம் சீமையெங்கும் கி. பி. 1797 ல் மக்கள் கிளர்ச்சி ஒன்றைத் தோற்றுவித்து கும்பெனியாரது நிர்வாகத்தைப் பணியவைக்க முயன்றார். கும்பெனியாரது ஆயுதபலம் மக்களை மடக்கியது. ஆதலால், மீண்டும் முதுகுளத்தூர் வட்டார மக்களது ஏகாதி பத்திய எதிர்ப்பு வெறியை முடக்கிவிட்டு, கும்பெனியாரது ஆயுத பலத்தை ஆயுதக் கிளர்ச்சியினால் நிலைகுலையச் செய்தார். நாற்பத்து ஒரு நாட்கள் பரங்கியரைப் பலப் போர்முனைகளில் சந்தித்த இவர், சுயநலக்காரர்களது துரோகத்தால் தனது முயற் சியில் தோல்வியுற்று தஞ்சாவூர் சீமைக்குத் தலைமறைவாகப் போய்விட்டார்.

ஆறுமாதங்கள் ஆனபிறகு நிலைமையைத் தெரிந்துகொள்ள நெட்டூர் திரும்பியவர். அப்பொழுது ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி யில் நின்ற சிவகங்கைச் சேர்வைக்காரர்களது ஆதரவுடன் இராம நாதபுரம் சீமையில் வெள்ளையரை இறுதிப்போருக்கு மக்களைத் திரட்டி கும்பெனித்தளபதிகள் மார்ட்டினிங், மில்லர், ஷெப்பர்டு, அக்கினியூ ஆகியோரைத் திணரவைத்தார்; என்றாலும் காலம் பரங்கிகளுக்குச் சாதகமாக இருந்ததால் மறவர்சீமையின் விடு தலை வரலாறு மருது சேர்வைக்காரர்கள் தூக்கில் தொங்கிய துடன், முற்றுப்பெறாமல் முடிந்துவிட்டது.

மயிலப்பன் சேர்வைக்காரரது பேராற்றலுக்கு இடமில்லாது போயிற்று. அவருடன் போரிட்டு வீரமரண மெய்தியவர்கள் தவிர எஞ்சியவர்கள் அனைவரையும் கர்னல் அக்கினியூ பிடித்து ஆங் காங்கு தூக்கில் தொங்கவிட்டான். அவர்களுடன் தொடர்பு கொண்டு இருந்த கும்பெனியாரது எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு ஆதர வாக இருந்த எஞ்சிய எழுபத்து மூன்று பேர்களையும் விலங்கிட்டு நாடு கடத்தி, மூவாயிரம் மைல் தொலைவில் உள்ள பினாங் தீவில் சிறை வைத்தான். என்றாலும் அக்கினியூவின் இரத்த தாகம் அடங்கவில்லை. சிவகங்கைச் சேர்வைக்காரரின் போராட்ட அணி யைச் சேர்ந்த, கும்பெனியாரது கைக்கூலிகளுக்குக் கடுக்காய்

---

2 Rajayyan Dr. K: South Indian Rebellions (1975) p.72

கொடுத்து விட்டுத் திரிந்த கடைசி நபரான மயிலப்பனைப் பிடிக் கப் படாதபாடுபட்டான்.

இராமநாதபுரம், சிவகங்கைச் சீமைகள் தவிர திண்டுக்கல் சீமையிலும், மயிலப்பனை கண்டுபிடித்து கைது செய்ய ஏற்பாடுகள் செய்தான்-அக்கினியூ. கி.பி. 1802 ஜனவரி மாதம் பழனியில், தைப் பூசத் திருவிழாவிற்கு வந்த பண்டாரங்களையெல்லாம் தடுத்து நிறுத்தி சோதனையிட்ட செய்தியொன்றும் கும்பெனியார்களது ஆவணத்தில் உள்ளது.[3] தாராபுரம் தாசில்தார் இத்தகைய சோத னையின் பொழுது, அவரது வினாக்களுக்குத்தக்க பதில் இறுக்கத் தவறிய அய்யாவையன் என்ற முருகபக்தனை சந்தேகப்பட்டு பழனி தாசில்தாரிடம் அனுப்பிவைத்தாராம்; மயிலப்பனைப்பிடித்து விட்டதாக எண்ணிக் கொண்டு.

ஆனால் மயிலப்பனோ, கமுதி பாப்பான்குளம் வட்டங்க ளில் நம்பிக்கையற்ற நிலையில் அலைந்து திரிந்து கொண்டு இருப்பதை சிலர் கண்டு விட்டனர். மயிலப்பனைப் பிடித்துக் கொடுத்ததால் கும்பெனியார் ஓர் ஆயிரம் சக்கரம் (நாணயம்) கொடுப்பதாக அறிவித்து இருந்தது. அவர்களுக்குப் பேராசையை ஊட்டியது. தாங்கள் எத்தகைய ஈனச் செயலில் ஈடுபடுகிறோம் என்ற எண்ணமே அவர்களுக்கு எழவில்லை. மயிலப்பனது நட மாட்டத்தை அவர்கள் கவனித்து வந்தனர். அவர், இரவு நேரங் களில் மணல்குடி மூங்கில்காட்டை ஊடுருவிச் செல்லும் நேரத் தையும் கவனித்து வந்தனர். தவசித்தேவர், (மயிலப்பனது மாமன்) பெரிய வில்லித்தேவர், அய்யாக்கண்ணு சேர்வை, அரியாபதி தேவர் இன்னும் பதினொரு இழிபிறவிகள். ஒருநாள் இரவு எட்டு மணிக்கு மேல் சித்திரங்குடியில் உள்ள தனது வீட்டுக்குள் மயிலப் பன் நுழைந்தார். தமது மருமகனுக்குப் புகலிடம் கொடுப்பது போல பாவனை செய்தான். தனது மனைவியுடன் மயிலப்பன் பேசிக்கொண்டு இருந்த பொழுது வெளியே போய் துரோகி களுக்கு தகவல் கொடுத்து விட்டான், தவசிதேவன். ஒருவாறு நிலைமையை ஊகித்துக் கொண்ட மயிலப்பன், தனது மாமனிடம், தன்னிடம் இருந்த இருநூறு சக்கரம் பணத்தையும் அணிமணி களைக் கொடுத்துத் தப்பிச் செல்ல உதவுமாறு கேட்டுக் கொண் டார். ஆனால் அந்தத் துரோகி - தன்து மருமகனை (மயிலப்பன் சேர்வைக்காரர்) ஆயிரம் சக்கரம்பணத்திற்கு ஆசைப்பட்டுகாட்டிக்

3 Madurai District Records vol. 1221 (10-1-1802) p. 71.

கொடுத்தான்.[4] அவனும், அவனைச் சார்ந்த பதினான்கு கழிச டைகளும் மயிலப்பனை பாய்ந்து பிடித்து பிணைந்து சிக்கல் அமில்தாரிடம் ஒப்படைத்தனர். அன்று இரவு முழுவதும் பலத்த கண்காணிப்பில் வைக்கப்பட்டு[5] காலையில் இராமநாதபுரம் பேஷ்காரிடம் அனுப்பி வைக்கப்பட்டார்.

கும்பெனியாரது கொடிய எதிரி, கர்னல் அக்கினியூக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய மறவர் சீமையின் மாவீரன் மயிலப்பன் - அவரது முந்தைய பணியிடமான இராமநாதபுரம் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார். சில நாட்களுக்குப் பின்னர் பாளையங் கோட்டை ராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டார். கலைக்டர் லூஷிங்டன் அவர் மீது நீதி விசாரணை நாடகம்ஒன்றை நடத்தத் திட்டமிட்டான். அதற்காகக் கும்பெனித் தலைமை நடுவர் குழு ஒன்றை நியமித்தது. குதிரைப்படையின் இரண்டாவது அணி தளபதி மேஜர் பர்ரோஸ் குழுத் தலைவர். மூன்றாவது அணியின் தளபதி லெப்டினென்ட் நோவல்ஸ், முதலாவது காலாட்படை அணியின் தளபதி கேப்டன் ஒஹாரா டிராட்டரும், குழு உறுப்பினர் கள்.[6] மயிலப்பன் சேர்வைக்காரருக்கு மிகவும் கடுமையான தண் டனை வழங்கப்பட வேண்டும் என்பது கலெக்டர் லூஷிங்டனது அவா ஆகும்.[7] அதற்காக மறவர் சீமையின் பல பகுதிகளிலிருந் தும் பாமர மக்களை அச்சுறுத்தி, மயிலப்பன் சேர்வைக்காரருக்கு எதிராக வாக்குமூலம் அளிக்குமாறு செய்தான். இதோ அந்தக் கோழைகளின் பட்டியல்.[8]

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆறாயிரம் பிள்ளை | — | அபிராமம் (கும்பெனியாரது ஊழி யன்) |
| 2. | ஆர்த்த தேவர் | — | கமுதி |
| 3. | கஸ்தூரி செட்டி | — | கமுதி (சிறுவியாபாரி) |
| 4. | சுப்பன் செட்டி | — | கமுதி-(கும்பெனியாரது கச்சேரியில் ஷராப் பணி |

---

4 Madurai District Records vol. 1178 - (27-3-1802) pp. 204-205
5 Military Consultations vol. 299 - (29-6-1802) - p. 4465
6 Madurai District Records vol. 1139 - (14-4-1802)
7 Ibid vol. 1140 - (7-6-1802) pp. 20-22
8 Military Consultations vol. 299 - (29-6-1802) - pp. 4425, 80

| | | |
|---|---|---|
| 5. குமாரசாமி | — | கொடுமலூர் |
| 6. குமாரவேலு | — | மணலூர் |
| 7. முத்தையா பிள்ளை | — | முதுகுளத்தூர் (கும்பெனியாரது ஊழியர் - அம்பலகாரர்) |
| 8. பெரிய மீரான் | — | மேலப்பெருங்கரை |
| 9. மரக்காணன் | — | முதுகுளத்தூர் (அம்பலகாரர்) |
| 10. வெங்கடாசலக் கோன் | — | அபிராமம் (அம்பலகாரர்) |
| 11. குமரன் | — | முதுகுளத்தூர் (அம்பலகாரர்) |
| 12. உடையார் | — | சித்திரங்குடி (சேர்வைக்காரர்) (மயிலப்பனது மைத்துனர்) |
| 13. பழனியப்ப பிள்ளை | — | சித்திரங்குடி (மணியக்காரர்) |
| 14. ரெங்கசாமி நாயக்கர் | — | பேரையூர் - (விவசாயி) |
| 15. வேலு முக்கந்தன் | — | முதுகுளத்தூர் (விவசாயி) |
| 16. முத்துச்சாமி | — | கிடாரத்திருக்கை |
| 17. கறுப்பநாதன் | — | கடலாடி |
| 18. முத்து இருளாண்டி | — | கடலாடி (அம்பலக்காரர்) |
| 19. கன்னையன் | | |

இவர்கள் அனைவரும் கிளிப்பிள்ளைகளைப் போல மயிலப்பன் சேர்வைக்காரர், அவர்களிடம் பயமுறுத்தி பணம் பறித்ததையும், கும்பெனியாரது கிட்டங்கிகளில் உள்ள தானியத்தை கொள்ளை கொண்டதையும் சாட்சியம் சொன்னார்கள். ஆனால் கலெக்டர் லூசிங்டனும் மேஜர் ஷெப்பர்டும் இந்தச் சாட்சியங்களுக்கு அப்பாற்பட்ட வகையில், கி. பி. 1799 ஏப்ரலிலும் கி.பி. 1801 பிப்ரவரியிலும் மயிலப்பன் சேர்வைக்காரர் முதுகுளத்தூர், அபிராமம், கமுதி ஆகிய ஊர்களில் கும்பெனியாரது கச்சேரிகளைத் தாக்கியது, அவர்களது வீரர்களைக் காயப்படுத்தி ஆயுதங்களைப் பறித்துச் சென்றது, கும்பெனி நிர்வாகத்துக்கெதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டது ஆகிய குற்றச்சாட்டுகளை அவர்மேல் சுமத்தினர்,[9] இந்தக் குற்றச்சாட்டுகளை மறுதலித்த மயிலப்பன்

9 Madurai District Records vol. 1140 (7-6-1802)pp. 20-22
Military Consultations vol. 299 (14-6-1802) pp. 4425-26

சேர்வைக்காரர் தமது வாக்குமூலத்தில், தன்னுடைய தலைவரது கட்டளைகளுக்குப் பணிந்து செயல்படுவது ஒரு போர் வீரனது கடமையாதலால் தானும் அந்தச் சூழ்நிலையில் செயல்பட்டதாகவும், கடமையை நிறைவேற்றியதற்குத் தண்டனை என்றால் அது தனது விதி வசம் என்று ஏற்றுக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.[10]

விதி வலிது என்பதை பாளையங்கோட்டை ராணுவ நீதி மன்ற தீர்ப்புரை உறுதிப்படுத்தியது. மறவர் சீமை மண்ணிலிருந்து பரங்கியரை விரட்டியடிக்கப் பாடுபட்ட குற்றத்திற்காக மயிலப்பன் சேர்வைக்காரருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. என்றைக்கு மருது சேர்வைக்காரர்கள் திருப்பத்தூரில் தூக்கில் தொங்க விடப்பட்டார்களோ அன்றே மயிலப்பன் சேர்வைக்காரரது மரணச் சீட்டும் எழுதப்பட்டு விட்டது. அபிராமத்தில் அந்தத் தண்டனையை நிறைவேற்றுமாறு கும்பெனிப் படையின் தளபதிக்கு உத்திரவு வழங்க சென்னை கவர்னரை நீதிமன்றம் கோரியது. அந்த வேண்டுகோளை ஏற்று கவர்னரும் உத்திரவிட்டார்.[11] ஏற்கனவே மீனங்குடி கனகசபாபதி தேவரது உயிரை உறிஞ்சிய அதே தூக்குமரம், மறவர் சீமையின் மாவீரன் முத்துராமலிங்க சேதுபதியின் விசுவாசமிக்க தொண்டன் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் இணையற்ற தளபதி-மயிலப்பன் சேர்வைக்காரது மூச்சையும் பறித்து அவரது வாழ்வை முடிவுறச்செய்தது.

ஆனால் இராமநாதபுரம், சிவகங்கை சீமைகளில் உள்ளவர்கள் மயிலப்பன் மறைவை உண்மை என்று கொள்ளத் தயங்கினர். கி.பி. 1799 முதல் கி.பி.1801 வரையிலான கும்பெனியாரது ஆவணங்களும் மயிலப்பன் சேர்வைக்காரரை ஒரு சாதாரண குடிமகனாக எண்ணுதற்கு இடமில்லாது மந்திர தந்திரம் மிகுந்த மாயாஜால மனிதனாக நினைக்கும் வகையில்தான் வரைந்துள்ளன. நமது நாட்டு விடுதலை அவரது நினைவுக்கு என்றும் வீரவணக்கம் செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

---

10 Ibid vol. 299 (11-6-1802) pp. 4420-29

11 Military Consultations vol. 299 (5-7-1802) p. 4457

## 4. மாவீரன் துந்தியா

துந்தியா வாக் என்பவர் மராட்டிய மாநிலத்தை சேர்ந்தவர். மைசூர் மன்னர் திப்புசுல்தானது போர்ப்பணியில் குதிரைப் படைப் பிரிவின் தலைவராக இருந்தார். அவரது உள்ளத்தில் ராஜபக்தியும், தேசபக்தியும் கொழுந்துவிட்டு எரிந்தது. மைசூர் அரசுக்கு கும்பெனியார் இழைத்து வந்த கொடுமைகளால் குமுறினார். இறுதியாக பரங்கிகள் திடீரென ஸ்ரீரங்கபட்டிணத்தை நயவஞ்சகமாகத் தாக்கி, திப்பு சுல்தானைக் கொன்றதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஸ்ரீரங்கப்பட்டன வீழ்ச்சிக்குப் பிறகும். இழிவாக நடத்திய விதமும் துந்தியாவின் உள்ளத்தில் ஒருவிதமான பழி உணர்வை வளர்த்தது. திப்புச்சுல்தானது ஏனைய தளபதிகளுடன் துந்தியாவும் சிறிதுகாலம் போர்க்கைதியாக பரங்கிகளது பாதுகாப்பில் இருந்து வந்தார்.

ஆனால் விடுதலை பெற்றவுடன், தம்மை யொத்த நாட்டுப் பற்றுமிக்க நல்லவர்களைத் தமது அணியில் திரட்டினார். ஏற்கனவே திப்புசுல்தானது மைசூர்ப் படையணியைச் சேர்ந்த போர் வீரர்கள் பலரும் அவரது விடுதலை முன்னணியில் சேர்ந்தனர். அவர்களது ஆதரவுடன் மைசூர் அரசுக்கு சொந்தமானதும் கும்பெனிக் கைக்கூலிகளது ஆக்கிரமிப்பில் இருந்த பல போர் நிலைகளையும் கோட்டைகளையும் கைப்பற்றினார். பல இடங்களில் கும்பெனிப்படைகளுக்கும் மைசூர் விடுதலை அணிக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. ஆனால் இறுதி வெற்றி பரங்கிகள் பக்கம்தான் இருந்தது.[1]

இதற்கிடையில் துந்தியா மராட்டம்,வயநாடு கொங்குநாடு, திண்டுக்கல் சீமை, சிவகங்கைச்சீமை — ஆகிய பகுதிகளில் உள்ள நாட்டுத்தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். கொள்ளிடத்திற்குந் தெற்கே உள்ள அனைத்துப் பாளையப்பட்டுக்களும் (புதுக்கோட்டைத் தொண்டமானும், கோபி பாளையக்காரர் நீங்கலாக) அனைவரும் துந்தியாவின் பரங்கியர் எதிர்ப்புத் திட்டத்திற்குப் பக்க பலமாக இருந்தனர்.[2] குறிப்பாக, திண்டுக்கல்

---

1 Political Consultations vol. I (A) (10-6-1800) pp. 1-10.

2 Ibid (21-9-1800.) pp. 562-63

சீமையில் உள்ள விருப்பாட்சி பாளையக்காரர். மிகவும் தீவிர மாக துந்தியாவின் சார்பாகச் செயல்பட்டார். அனைத்துத் தலை வர்களும் திண்டுக்கல் கோட்டையில் ரகசியமாக கூடி கும்பெனி யாரது ஆதிக்கப் பேராசையை அடியோடு களைந்து எறிவதற் காக இயக்கமொன்றை நாடு தழுவிய இயக்கமாகத் தொடரு வதற்குத் திட்டங்களைத் தீட்ட துந்தியா துணைபுரிந்தார். இவர் களது முதல் தாக்குதல் 3.6.1800ல் கோயம்புத்தூரில் உள்ள கும்பெனி அணியை நாசமாக்குதல் என்பது, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற திப்புசுல்தானது முன்னாள் கோயம்புத்தூர் பிரதி நிதியான சுப்பாராவ் என்பவர் துடிப்பாக செயல்பட்டார். பக்கத் தில் உள்ள பாளையக்காரர்களை அணுகி அவர்களது ஆதரவைப் பெற்று, அன்று இரவு கும்பெனியாரையும் அவர்களது கைக்கூலி களாக ராஜ்புத், முஸ்லீம் அணிகளைத் தகர்க்க, எல்லா ஆயுத் தங்களும் செய்யப்பட்டு கிளர்ச்சிக்காரர்கள் கோயம்புத்தூருக்குப் பத்துக் கல் தொலைவில் உள்ள மலையடிவாரத்தில் திரண்டு இருந்தனர்.[3]

மிகவும் ரகசியமாக நடைபெற்ற இந்த ஏற்பாடு முழுவதும், சில துரோகிகளால் கோயம்புத்தூர் கும்பெனித் தளபதியான மெக் காளியஸ்தருக்குத் தெரிவிக்கப்பட்டு விட்டது. கிளர்ச்சிக்காரர்கள் கும்பெனியாரைத் தாக்குவதற்கு முன்னர் கும்பெனி அணிகள் கிளர்ச்சித் தலைவர்களைத் திடீரென கைது செய்தனர்.[4] திட்டம் தகர்க்கப்பட்டது. கும்பெனித் தலைமை உத்திரவின்படி நாற்பத்து இரண்டு கிளர்ச்சிக்காரர்கள் தூக்கில் தொங்கினர். அவர்களில் இருபத்து இரண்டு பேர் (கோவையில் 6, தாராபுரம் 8 பேர், சத்திய மங்கலம் 7 பேர், உருமாத்தூர்-1) தூக்கிலிடப்பட்டனர்.

அடுத்து, வடநாட்டில் துந்தியாநாகைப் பின்பற்றி, விட் டால் ஹெகாடா என்பவர் பரங்கியரைத் தொலைத்து அழிப்பதற்கு ஏற்ற அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டனர். இவரது இயற் பெயர் நரசிம்ம என்பது. இவரது இந்தப்பொது நோக்கிற்கு இவ ரது உறவினர்களுடன் மைசூர் மன்னர் திப்பு சுல்த்தானது மூத்த மைந்தர் புட்டா ஹைதரும் சுப்பாராவ் என்ற கன்டை பிராம்மண

---

3 Political Consultations vol. I.A. (10-6-1800)- pp. 17-20, 23

4 Ibid vol. 2 A (21-9-1800) - pp. 560-62

ரும், உற்ற துணையாக இருந்தனர்.[5] பல இடங்களில் கும்பெனி யாருடன் கிளர்ச்சிக்காரர்கள் மோதினர். கலெக்டர் மன்றோவின் திட்டப்படி, கும்பெனியார் விட்டல் தலைமையிலான கிளர்ச்சிக் காரர்களை பல இடங்களில் 9-8-1800க்கும் 18-8-1800க்கும் இடைப் பட்ட பத்து நாட்களில் பல மோதல்களில் முறியடித்தனர். கிளர்ச் சித்தலைவர்கள் பிடிக்கப்பட்டு 22-8-1800ம் தேதி தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனர்.[6] வீரன் விட்டலது குடும்பத்தினரை வெகு தொலைவில் உள்ள ஸ்ரீரெங்கப்பட்டணக் கோட்டையில் சிறை வைத்தனர். மீண்டும் அவர்களும் கும்பெனியாருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்துவிடாமல் இருப்பதற்கு கும்பெனியாரது ஆவணங் கள் விட்டலை ''பயங்கரமான, அரசுக்கு எதிரான கிளர்ச்சிக்கார ராக'' வர்ணித்துள்ளன.[7] வயநாட்டுக் கிளர்ச்சி முடிந்தவுடன் கும்பெனியாரது அனைத்து அணிகளும் பல பகுதிகளில் இருந்து துந்தியாவை இலக்காகக் கொண்டு முடுக்கிவிடப்பட்டன.

இவை அனைத்திற்கும் கூட்டுப்பொறுப்பாக ஆர்தர் வெல்லெஸ்ஸி நியமிக்கப்பட்டான். மைசூர் இறுதிப்போரை நடத்தி திப்புசுல்தானைத் தோற்கடித்த மாவீரனாக கும்பெனியாரால் போற்றப்பட்ட அந்த தளபதிக்கு சகல உதவிகளையும் வழங்கி உதவுமாறு கும்பெனியாரது தலைமை, ஹைதராபாத் நிஜாமை யும், மராட்டிய மன்னர்களையும் கேட்டுக் கொண்டது. கர்னல் பௌஷேர், மேஜர் பிளாக்கி, மேஜர் மக்காலிஸ்டர், கேப்டன் கில்பாட்ரிக் — ஆகிய இராணுவத்தலைவர்கள், கோயம்புத்தூர், மங்களூர் ஹைதராபாத், பம்பாய் ஆகிய பகுதிகளில் இருந்து தங்கள் அணிகளுடன் துந்தியாவை ''மனித இனத்தின் வைரியை'' (அவர்களது நோக்கில்) தாக்குவதற்குப் புறப்பட்டனர். மராட்டிய மாநிலத்தில், கிருஷ்ணா நதிக்கும் துங்கபத்திரா நதிக்கும் இடைப் பட்ட தோவாப் சமவெளியில் பல இடங்களில் — தம்மூல், ஹண்ணூர், ஹாஙகல், ஸீமாஷில் கிர்ஹட்டி, அங்கோரே, இமலாபாத் ஆகிய ஊர்களில் துந்தியாவின் கிளர்ச்சிக்காரர்கள் படைகளுக்கும் கும்பெனியாரது அணிகளுக்கும் இடையில் பல போர்கள் நிகழ்ந்தன. ஆனால் அப்பல்பரி என்ற ஊருக்கு அருகில்

---

5 Ibid vol. I.B. - (18-7-1800) - pp. 388-89

6 Ibid (25-8-1800) - pp. 487-88

7 Political Consultations vol. I (B) (2-8-1800) pp. 38

நடைபெற்ற உக்கிரமான போரில், துந்தியாவின் படைகளை கும்பெனியாரது பீரங்கிகள் துவம்சம் செய்தன. மாவீரன் துந்தியாவும் போர்க்களத்தில் வீரமரணம் எய்தினார்.* விடுதலைப் பள்ளுபாடிய வீரக்குயில் மறைந்தது. தவழ்ந்து சென்ற தென்றலில், தயங்கிச் சென்ற அந்தப்பள்ளு, என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

## 5 ஜமேதார் முகம்மது காலிது

அருஞ்சாதனைகளைக் செய்த அரிய வீரர்களை மட்டுமல்லாமல், ஆண்மையும் வீரமும் இல்லாத துரோகிகளையும் கூட வரலாறு நமக்கு இனங்காட்டி வந்துள்ளது. அந்த வகையில் சிவ கங்கைச் சீமையின் வீரவரலாறு, துரோகி முகம்மது காலிதுவை யும் நினைவூட்டுகிறது. பெரும் பொருளை அன்பளிப்பாகப் பெறுவதற்காக, பிறந்த மண்ணின் மகத்தான பாரம்பரியத்திற்கு மாசு சேர்த்த மனிதப்பதடி. இவனது சொந்த ஊர் தெரியவில்லை. ஆனால் தஞ்சை மராத்திய மன்னரது குதிரைப்படையணியில் பணியாற்றியவன் என்பது தெரியவருகிறது. கி.பி. 1782ல் மைசூர் மன்னர் திப்பு சுல்தான் தமிழகத்தில் நிலை கொண்டிருந்த வெள்ளைப்பரங்கிகள் மீது திடீரென மின்னல் தாக்குதல் நடத்திய பொழுது திப்புசுல்தானது இரும்புப் பிடியில் இருந்து தப்பி உயிர் பிழைக்க சென்னை ஓடினான். அங்கே சிறிது காலம் கும்பெனித் தளபதி காட்பிரே என்பவனது சேவகத்தில் அமர்ந்தான். அவனது பணியில் ஆட்குறைப்பு ஏற்பட்டு பதவி இறக்கம் ஏற்பட்ட பொழுது கி.பி. 1784ல் ஆர்க்காட்டு நவாப்பினது பணியில் சுபேதாராகச் சேர்ந்தான். சிவகங்கைச் சீமைக்கு அனுப்பப்பட்டான். கி.பி. 1791ல் கும்பெனியார் ஆர்க்காட்டு நவாப்பின் பேஷ்குஷ் தொகை வசூலுக்கு, நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டபொழுது, பணியில் மீண்டும் ஆட்குறைப்பு ஏற்பட்டதால், வேறு வழி இல்லாமல் திருப்பத்தூரில் தங்கி வாழ்ந்து வந்தான்.[1] கி.பி. 1801ம் ஆண்டின் பிற்பகுதியில் மக்கள் எழுச்சி பெற்று மருதுபாண்டியரது அணியில்

---

* **Ibid I B** (10-9-1800) **p.** 500
**Ibid II** (B) (26-10-1800) **p.** 901

1 **Revenue Sundries uol.** 26 (17-10-1801) **p.** 753-54

சேர்ந்து கும்பெனிப்படைகளுடன் மோதி வந்த பொழுது இவனும் போராளிகளுடன் சேர்ந்து அரண்மனை சிறுவயல் காட்டுப் போரில் கும்பெனியாரால் பிடிக்கப்பட்டான். தளபதி, அக்கினியூ முன்னர் நிறுத்தப்பட்டான். அக்கினியூவின் ஆசைவார்த்தைகளில் மயங்கி போராளிகள் பற்றி அவன் அறிந்து இருந்த அனைத்து விபரங் களையும் அக்கினியூவிடம் கக்கிவிட்டான். அத்துடன் காளையார் கோவில் கோட்டைக்கு அரண்மனை சிறுவயல் காட்டுவழியாக எளிதாகச் சென்று அடையக்கூடிய இரகசிய வழியையும் அவர் களுக்குக் காட்டிக் கொடுத்தான். அரண்மனை சிறுவயல் காட்டில் ஒவ்வொரு அடி மண்ணிற்கும், மரணப்போராட்டம் நடத்திக் கொண்டு இருந்த கும்பெனியாருக்கு துரோகி முகம்மது காலித் அறிவித்த விவரங்கள், அவர்களது வெற்றி வாய்ப்பை விரைவு படுத்தும் அற்புத மருந்தாக இருந்தது. தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளும் வகையில் துரோகிக்கு பொன்னும் பொரு ளும் வழங்கு அக்கினியூ பாராட்டினான்.[2]

காளையார் கோவில் போர் முடிந்தவுடனேயே, அக்கினியூ கும்பெனியாருக்கு எழுதி துரோகி காலிதுக்கு தகுந்த சன்மானம் வழங்க கும்பெனித்தலைமைக்குப் பரிந்துரை அனுப்பினான். கும் பெனியாரும் அவனுக்கு மாத ஒய்வு ஊதியமாக இருபது ஸ்டார் பக்கோடா வழங்கி உதவினர்.[3] அவன் திருச்சிராப்பள்ளி சென்று எஞ்சிய வாழ்க்கையை அங்கேயே கழித்தான்.

## *6. சிவகங்கை சரித்திரக் கும்மியும், அம்மானையும்*

மதுரைத் தமிழ்ச்சங்க சுவடித் தொகுப்புக்களில் இருந்து பெறப்பட்ட இந்த இரண்டு சிற்றிலக்கியங்களையும் சென்னை அரசின் கீழைச் சுவடி காப்பகத்தினர் 1952 ல் அச்சேற்றி வெளி யிட்டனர். இது வரை, தமிழில் வரையப்பட்டுள்ள வரலாறு சம்பந்தப்பட்ட நாடோடி இலக்கியங்களான "இராமப்பையன் அம்மானை" "ராஜா தேசிங்கு" காான்சாகிபு" ஆகியவை போன்று

---

2 Revenue Sundries vol. 26 (21-10-1801) p. 465

3 Revenue Sundries vol 26 (1-12-1802) p. 1011

அல்லாமல், இந்த இலக்கியங்களின் அமைப்பு மிகுந்த வேறு பாடுகளுடன் விளங்குகின்றன. நாடோடி இலக்கியங்களுக்காக உத்திகள், சந்தங்கள் இல்லாமல், செய்திகளைத் தெரிவிப்ப தற்காக மட்டுமே இவை புனையப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. செய்திகளும் காலம், களம் ஆகியவைகளைக் கடந்து வரலாற் றுக்கு முரணாகக் காணப்படுகின்றன.

ஆர்க்காட்டு நவாப் இராமநாதபுரம் மீது படை எடுத்து வருகிறார். முத்து இருளப்ப பிள்ளையினால் இந்தப் படையெ டுப்பை வெல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டவுடன், அரசி யார் ''முத்திரை மோதிரத்தை சாத்தி'', முத்து இருளப்பப் பிள்ளையைப் பிரதானியாக்குகிறார். இராமநாதபுரம் அரசியாரும் நவாப்பிற்கு எதிரான போர் நடவடிக்கைகளில் முனைகிறார். (சிவகங்கை கும்மி. பக்கம் 15) இந்தப் படையெடுப்பு நிகழ்ந்தது கி. பி. 1772. மே மாத இறுதி. அப்பொழுது பிரதானியாக இருந் தவர் பிச்சை பிள்ளை என்பவர் முத்துஇருளப்ப பிள்ளை பிரதானி யாகப் பணியாற்றுவது விஜயரகுநாத முத்து இராமலிங்க தேுச பதியின் ஆட்சியில் (கி. பி. 1784-91 ல்)

பிரதானி முத்து இருளப்ப பிள்ளை, ஆறுமுகம் கோட்டை யைத் தாக்க முனைந்த பொழுது நவாப் பயந்து, இராமநாத புரம் படையெடுப்பை நிறுத்தி சிவகங்கைச் சீமை மீது பாய்ந் தார் (சிவகங்கை கும்மி பக்கம் 17 சிவ. அம்மானை பக். 115) ஆனால் ஆர்க்காட்டு நவாப்பின் மைந்தன் உம்தத்துல் உம்ரா, கும்பெனித்தளபதி, ஜோசப் சுமித் ஆகியோரது கூட்டுத் தலை மையிலான படைகள் மூன்று நாட்களாக இராமநாதபுரம் கோட் டையைத் தாக்கி 2-6-1772 ல் கோட்டையைக் கைப்பற்றியதுடன் அரசியாரையும் இளவரசரையும் கைது செய்து திருச்சி சிறையில் இட்டனர் என்பது வரலாறு.

23.6.1772 அன்று காளையார் கோவில் கோட்டைப் போரில், சிவகங்கை மன்னர் வீரமரணம் அடைந்ததும், பிரதானி தாண் டவராய பிள்ளை, அரசி வேலு நாச்சியாரையும் அவரது பெண் குழந்தையையும் பத்திரமாக சிவகங்கைக்கு வடக்கே உள்ள மைசூர் அரசுக்குச் சொந்தமான விருபாட்சிக்கு அழைத்துச் சென்று அடைக்கலம் பெற்றார் என்பது வரலாறு. ஆனால் கொல் லங்குடியில் இருந்த வேலு நாச்சியாரைச் சிவிகையில் ஏற்றி, மருது சகோதரர்களே மேலூர் வரை சுமந்து சென்றதாகவும் பின்னர்

திண்டுக்கல் சென்று திப்புச்சுல்தானைச் சந்தித்து ஆதரவு பெற்ற னர் என்பது சிவகங்கை கும்மி செய்தி (பக்கம் 21. 23). திப்பு சுல்தானது உதவி பெற்று சிவகங்கைச் சீமையை மருதிருவர் மீட்டனர். (சிவகங்கை சீமை கும்மி. பக்கம் 115). காளையார் கோவில் கோட்டைப் போர் முடிவுற்ற பொழுது மைசூர் மன்ன ராக இருந்தவர் ஐதர்அலி, பகதூர். திண்டுக்கல் கோட்டையில் இருந்து மருது சகோதரர்களுக்கு ஆயுத உதவி வழங்கி, சிவகங் கையை கி. பி. 1781 ல் மீட்க உதவியவரும் அவரே. மேலும் திப்பு சுல்தான் மைசூர் மன்னராக கி. பி. 1782 இறுதியில் தான் முடி சூடிக் கொண்டார். இவ்விதம் செய்திகள் வரலாற்றுடன் இணைந்ததாக இல்லை.(இன்னும் ஒரு வேடிக்கை! மருது சகோ தரர்கள் முக்குளத்தில் மொக்கைப் பழனி சேர்வைக்காரர் என்பவ ருக்கு மக்களாகப் பிறந்தவர்கள். ஆனால் இவர்கள் சிவகங்கைப் பிரதானி தாண்டவராய பிள்ளையின் மக்கள் என்றும் பிரதானிக்கு வயது அதிகமாகிவிட்டதால் அவரது மக்களான மருது சகோதரர் அடைப்பம் பணியை ஏற்றனர் என்ற செய்தியை சிவகங்கை கும்மி (பக்கம் 10-11) சொல்கிறது.

மேலும், ஆர்க்காட்டு நவாப், கும்பெனியாருக்கு தமிழகத் தைத் தொன்னூற்று ஆறு ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொ டுத்து விட்டதால், மருது சகோதரர்கள், சென்னை சென்று கும் பெனி கவர்னரைச் சந்தித்து ''அவரது ஆதரவு பெற்ற கும்பெனி யாரது பிள்ளைகளாக'' கப்பம் ஏதும் இல்லாமல் சிவகங்கையை ஆளும் உரிமை பெற்றுத் திரும்பினார்கள். (சிவ, கும்மி பக்கம் 34) ஆனால் வரலாறு அப்படி அல்ல. சிவகங்கைச் சீமையை கி.பி. 1781ல் மீட்ட மருது சகோதரர்கள் ராணி வேலு நாச்சியாரது பிர தானிகளாக தன்னாட்சி செலுத்தி வந்தனர். என்றாலும் கி.பி. 1784ல் ஆர்க்காட்டு நவாப், கும்பெனித்தளபதி புல்லர்ட்டனை சிவகங்கைக்கு அனுப்பி கப்பத்தொகையை வசூலித்தார். கும் பெனியாருக்கு எதிரான போர்க்கொடி தூக்கிய காலம் வரை (கி.பி. 1800) முன்னர் நவாப்பிற்கும், பின்னர் அவரது குத்தகை தாரரான கும்பெனியாருக்கும் சிவகங்கை பிரதானிகள் கப்பம் செலுத்தி வந்தனர். மற்றும் மதகுப்பட்டி காட்டில் அலைந்து கொண்டிருந்த சின்னமருது, கும்பெனித் தளபதி அக்கினியூவைக் கண்டவுடன் தமது வளரித்தடியை வீச கையை ஓங்கியதாகவும், அப்பொழுது பச்சை வாதநோய் சின்னமருதுவைத் தாக்கியதால் போரிட முடியாமல் கும்பெனியார்களால் பிடிக்கப்பட்டார் என்பது

சிவகங்கை கும்மி (பக்கம் 87) ஆசிரியரது கண்டு பிடிப்பு. ஆனால் தன்னந்தனியாக இருந்த சின்னமருதுவை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தி கும்பெனியார் கைது செய்தனர் என்பது வரலாறு.

இவ்விதம் தமிழக வரலாற்றிற்குப் புறம்பான செய்திகளை இந்த இரு இலக்கியங்களும் அளிக்கின்றன. சிவகங்கை கும்மியை விட சிவகங்கை அம்மானை கூடுதலான செய்திகளைக் கொண்டுள் ளது. அத்துடன், மருது சேர்வைக்காரர்களது ஏகாதிபத்திய எதிர்ப்பு வேள்விக்கு ஆகுதியாகத் தங்களையே அளித்துத் தியாகி களான பல போர் மறவர்களையும் இந்த இலக்கியங்கள் இனங் காட்டத் தவறி விட்டன. அவர்கள் குறிப்பாக, சித்திரங்குடி மயிலப் பன், மீனங்குடி முத்துக்கறுப்பத்தேவர், ராஜசிங்கமங்கலம் குமாரத் தேவன், ஜகந்நாத ஐயன், சபாபதித்தேவர், காடல்குடி நாயக்கர், கள்ளர்தலைவர் சேதுபதி, மற்றும் நத்தம், திண்டுக்கல், விருபாட்சி பாளையக்காரர்கள், ஆகியோர் ஆவர்.

ஆனால் பிற்கால எழுத்தாளர்களும், நூலாசிரியர்களும், இவ் வளவு குறைபாடுடைய இந்த இலக்கியங்களில் காணப்படும் செய்திகளை உண்மையான, ஆதாரமான வரலாறாக தங்களது ஆக்கங்களில் அப்படியே பயன்படுத்தி இருப்பது மிகச் சிறந்த விடுதலை வீரர்களான மருது சேர்வைக்காரர்களது மகத்தான வரலாற்று வடிவத்தை மாசுபடுத்தி இருப்பதாகும். மிகச் சாதாரண சேர்வைக்காரர் குடும்பத்தில் பிறந்து, தங்களது உழைப்பாலும், அரிய ஆற்றலாலும், சிவகங்கைச் சீமையின், அரசியல் சமூகத் தகுதிகளை மாற்றி வரலாறு படைத்த அந்த வல்லவர்களை, தமிழ் நாட்டில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை வேரறுக்க விடுதலைப் போரைத் துவக்கிய அந்த விந்தை மனிதர்களை, சிவகங்கைச் சீமையின் மன்னர் பரம்பரையினரைப் போல, வெறும் புகழ்ச்சி யாக, மருது மன்னர், மருது அரசர், மருதேந்திரர் மருது துரை என வரைந்து இருப்பதும் விரும்பத்தகாததொன்று.

கி.பி. 1781 முதல் 1801 வரை இருபது ஆண்டுகள், இடை யில் ஒரு சில ஆண்டுகள் தவிர, மருது சகோதரர்கள் சிவகங்கைச் சீமையின் பிரதானிகளாகத்தான் பணியாற்றி வந்தனர். கி.பி. 1790 வரை சிவகங்கை ராணிவேலு நாச்சியாரது பிரதானியாகவும் பின் னர் சிவகங்கை மன்னர் வேங்கன் பெரிய உடையாத் தேவரது பிரதானியாகவும் செயல்பட்டனர். சிவகங்கைச் சீமை மக்களுக்

குத் தேவையானவற்றைச் செயல்படுத்துவதில், மிகுந்த சுயேச்சையுடன் அவர்கள் செயல்பட்டு வந்தபொழுதும், அவர்களது கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், சிவகங்கைச்சீமை மன்னராக அல்லாமல், ராஜமான்யர் என்றே குறிப்பிடுகின்றன. அதேபோல அவர்களுக்கும் கும்பெனித் துரைத்தனத்திற்கு இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களிலும், ''சிவகங்கை சேர்வைக்காரர் (பிரதானிகள்)'' என்ற சொற்கள் தான் குறிக்கப்பெற்றுள்ளன. சிவகங்கை மன்னர் என்றோ அல்லது பாளையக்காரர் என்ற சொற்றோடர்களோ அவைகளில் காணப்படவில்லை.

## 7. மருதுபாண்டியர் திருப்பணிகள்

சிவகங்கைச் சீமை மேற்கிலும், தெற்கிலும், சில பகுதிகளைத் தவிர, பெரும்பாலான பகுதி, காடும், மலையும் பாலையும் நிறைந்த வறண்ட பகுதியாகத்தான் இருந்து வந்தது. ஆதலால் அங்குள்ள மக்களுக்கு பெரிதும் விவசாயம் செய்வதற்கான வசதிகள் தான் அன்று தேவைப்பட்டன. காலத்தில் பெய்யும் மழை நீரையும் கரைபுரண்டு ஓடும் காட்டாற்று நீரையும் தேக்கி பயன்படுத்துவதற்கான முறையில் மருது சேர்வைக்காரர்கள் ஆங்காங்கு குளங்களையும் கண்மாய்களையும் வெட்டுவித்தனர். மட்டியூர், கண்டிராமாணிக்கம், தெற்குப்பட்டு ஆகிய ஊர்களில் உள்ள பெரும் கண்மாய்கள் அவர்களது வளர்ச்சிப் போக்கினைச் சுட்டும் திருப்பணிகளாக உள்ளன. தொண்டி கைக்கோளன் ஊரணியிலும், திருவேகம்பத்து கண்மாய் கலுங்குகளிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள், அவர்கள் வாய்க்கால் வகுத்த பாங்கினை பறைசாற்றுகின்றன.

மக்களது பணிக்கு அடுத்ததாக, அவர்கள் மகேசனுக்கு இயற்றிய தொண்டுகளும் ஏராளம். மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு தேர்வடித்துக் கொடுத்ததுடன் நிலக்கொடைகளையும் வழங்கியுள்ளனர். அவையும் பிறவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | மதுரை மீனாட்சி அம்மன் கோயில் நந்தா விளக்குகளுக்கு | — ஆவியூர், மாங்குளம், கடம்பங்குளம், சீகன் ஏந்தல், மங்கை ஏந்தல், பூவன் ஏந்தல். |

| | | | |
|---|---|---|---|
| 2. | காளையார் கோவில் தேர் | — | மழவராயன் ஏந்தல் |
| 3. | குன்றக்குடி குமரன் கோயில் | — | செம்பொன்மாரி |
| 4. | திருமோகூர் கார்மேகப் பெருமாள் கோயில் | — | மாங்குடி<br>மானாகுடி |
| 5. | சருகனி தேவமாதா ஆலயம் | — | சருகனி மாறணி |
| 6. | சிவகங்கை சுப்பிரமணியசாமி கோயில் | — | சுண்ணாம்பூர். |
| 7. | நரிக்குடி அன்ன சத்திரம் | — — | நரிக்குடி<br>ஆதித்தன் ஏந்தல்<br>மூக்குளம்<br>வீரக்குடி<br>நாலூர்<br>நண்டுகாய்ச்சி<br>கருமாயேந்தல்<br>அத்திக்குளம்<br>மாலூர்<br>ஆலங்குளம்<br>மேலப்பசலை<br>தம்மம். |
| 8. | சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் ஐயனார் கோவில் | | நிலாக்கண்டான்<br>பொழுதுகண்டான் |

மற்றும், ஏரியூர், ஐயனார் கோவில், திருக்கோட்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோவில், மாலூர் சுப்பிரமணிய சுவாமி கோயில், திருப்பாச்சேத்தி சுந்தரவல்லியம்மன் கோயில், திருச்சுழியில் பூமிநாதசுவாமி ஆலயம். வீரக்குடி முருகன் கோயில், மாறைநாடு பெருமாள் கோவில், நரிக்குடி விநாயகர் கோயில்—ஆகியனவும் மருதுபாண்டியரால் திருப்பணி செய்யப்பட்டவை. திருமோகூர்

பெருமாள் கோயில் முகப்பு மண்டபமும், திருப்பத்தூர் வயிரவநாதர் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபமும், குன்றக்குடி குமரன் மலைக்கோயில் மண்டபமும் அவர்களால் அமைக்கப்பட்டவை. இவை தவிர, ''முள்ளால் எழுதியும் சொல்லால் வழங்கியது'' மான அவர்களது அறக்கொடைகள் பற்றிய விபரங்கள் கால மாறுதலில் மறைந்து விட்டன. என்றாலும், அவர்களது அறக்கொடைகளி னால் இயங்கி வருகின்ற நிறுவனங்கள். அவர்களது ஆழமான இறையுணர்வையும், மக்களது தேவைகளை மதித்துப் பணி புரிந்த அவர்களது பொறுப்பு மனப்பான்மையையும் காலமெல்லாம் சுட்டி நிற்கும் சிறந்த வரலாற்றுச் சின்னங்களாக விளங்குகின்றன.

## 8. மருதுபாண்டியர் வழித்தோன்றல்

சிவகங்கைச் சீமை மண்ணை, தங்களது இரத்தத்தால் நனைத்து சிறப்புமிக்க செம்மண்ணாக மாற்றிய பெருமை மருது பாண்டியர்களையும் அவர்களது தலைமையில் நின்று போராடி, தியாகிகளாகிய பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராளி களையும் சாரும். அவர்கள் அனைவரையும் இனங்காட்டும் ஏடுகள் எதுவும் இல்லை. என்றாலும் கழுமரத்துக் கயிற்றில் தொங்கி, விழுப்புகழ் கொண்ட அந்த ''ஏகாதிபத்திய எதிரிகளில்'' ஒரு சிலரது விவரங்களை வரலாறு வரைந்துள்ளது. அவர்களது வழித் தோன்றல்களைத் தேடிப்பிடித்து, வாழ்த்துக் கூறிப் பெருமைப் படுத்துவதுடன், அவர்களுக்கு வாழ்க்கை வசதிகளையும் நிறைவு செய்ய வேண்டியது இந்தியக் குடியரசின் தலையாய கடமை யாகும்.

ஆனால் இருபதாவது நூற்றாண்டில் தேசிய வாழ்வில் தங்களை இணைத்து, இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டு இன்னல்பட்ட விடுதலை வீரர்களும் அவர்களது வழியினரும் மட்டும் தான் இந்திய அரசின் கண்களுக்குப் பட்டது. ஆதலால் அவர்களுக்கு ''சுதந்திர சம்மான'' மாக உதவித் தொகையை திங்கள் தோறும் வழங்கி வருகிறது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய மண்ணில் வேரோடிய ஆங்கில ஏகாதிபத்திய வெறியர்களின் பேராசையை முளையிலே கிள்ளி எறிந்து இந்த மண்ணின் மானத்தை, மாண்பைக் காப்பதற்காகப்

போராடி, உயிர்துறந்த உத்தமர்களது வழியினர் அனைவரும் ''உதிரப்பட்டி''க்கு அருகதை உள்ளவர்கள் என்பதை இந்திய அரசு இதுவரை உணரவில்லை.

அந்த நிலை, இன்னும் ஏற்படாத காரணத்தினால் தமிழ் நாடு அரசு தமிழ் மாநிலத்தில் வரலாறு படைத்த விடுதலை வீரர்கள், அவர்தம் வழியினரைச் சிறப்பிக்கும் வகையில் 1974 ல் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான கட்டபொம்மு நாயக்கரது (கி. பி. 1792-99) வழியினருக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. சிவகங்கைச்சீமை விடுதலைப்போரைத் தொடங்கி கி. பி. 1801ல் மடிந்த வீர மருது பாண்டியரது வழியினருக்கும் உதவும் வகையில் 1982ல் உதவித் தொகை வழங்கும் உத்திரவு ஒன்றைப் பிறப்பித்தது. அதன்படி சிவகங்கை, திருப்பத்தூர், இளையான்குடி, பரமக்குடி, மானா மதுரை, திருச்சுழி, அருப்புக்கோட்டை, மதுரை, மேலூர், ஆகிய வட்டங்களில் வாழ்ந்து வருகின்ற மருதுபாண்டியர் வழியினர் இருநூற்று இரண்டு பேர்கள் திங்கள் தோறும் தமிழ்நாடு அரசினரிடமிருந்து ஒவ்வொருவரும் ரூபாய் நூற்று ஐம்பது மட்டும் பெற்று வருகின்றனர்.

அரசு ஆணை எண் 1143 பொது (அரசியல்) துறை. 19-7-1982 யின் கீழ் உதவித் தொகை பெறும் மருதுபாண்டியர் வழியினர் பட்டியல், கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

## *மருது பாண்டியர் வழித்தோன்றல் பட்டியல்*

### பெரிய மருது கிளையினர்

1. திரு. வி. பூமிநாதன், சூடியூர் (பரமக்குடி வட்டம்)
2. ” கே. மீனாட்சிசுந்தரம், பாலரங்காபுரம், மதுரை-9
3. ” கே. பாலு, வடக்கு வெளிவீதி, மதுரை-1
4. ” கே. தங்கவேல் சேர்வை, வடக்குவெளிவீதி, மதுரை-1
5. ” எஸ். செல்லச்சாமி என்ற பிச்சை, கீழமாசிவீதி, மதுரை

6. திரு. கே. மலைச்சாமி, சேதுபதிதெரு, சிவகங்கை
7. " வி. சின்னச்சாமி, சூடியூர், (பரமக்குடி வட்டம்.
8. " எஸ். பாலகிருஷ்ணன், சூடியூர், "
9. " எஸ். கோபாலகிருஷ்ணன், சூடியூர் "
10. " எஸ். ஜெயராமன், சூடியூர் "
11. " எஸ். ஜெயவேலு, சூடியூர் "
12 திருமதி. சாத்தாயி, முக்குளம் (திருச்சுழியல் வட்டம்)
13. திரு. எம். சுப்ரமணியம், சூடியூர், (பரமக்குடி வட்டம்)
14. " எம். வெள்ளைச்சாமி, சூடியூர் ஷை வட்டம்
15. " எம். மகாலிங்கம், சூடியூர் "
16. " எம். சப்தகிரி, சூடியூர் "
17. " எம். நாகராஜன், சூடியூர் "
18. " எம். துரைப்பாண்டின், பம்மல் (செங்கல்பட்டு)
19. " எம். சண்முகவேல் பாண்டியன், பம்மல் ஷை வட்டம்
20. " எம். பெரியமருது பாண்டியன், பம்மல் "
21. " டி. சின்னமருது பாண்டியன், சூடியூர் பரமக்குடி "
22. " டி. சதுரகிரிநாதன், சூடியூர் "
23. " கே. பாஸ்கரன், வடக்குமாசிவீதி, மதுரை-1
24. திருமதி. வேலுநாச்சியார், வடக்குமாசிவீதி, மதுரை-1
25. திரு. எஸ். சதுரகிரிநாதன், சூடியூர், பரமக்குடி வட்டம்
26. " சி. இராமச்சந்திரன், சூடியூர், பரமக்குடி வட்டம்
27. " சி. வெள்ளைமருது, சூடியூர், ஷை வட்டம்
28. " இராமகிருஷ்ணன், " "
29. " எம். மதிவாணன், " "
30. " எம். தமிழரசன், "
31. " எம். ராஜன் சேதுபதி, " "
32. " கே. இராமச்சந்திரன், வேப்பங்குடி சிவகங்கைவட்டம்
33. " எம். மாப்பிள்ளைசாமி, " "
34. " ஆர். மலைச்சாமி, சின்னக்கண்ணனூர்
அருப்புக்கோட்டை வட்டம்

35. திரு. ஆர். ஆறுமுகம், சின்னக்கண்ணனூர்,
அருப்புக்கோட்டை வட்டம்

36. " விஜயன், வேப்பங்குடி, சிவகங்கை வட்டம்

37. திருமதி. லட்சுமி அம்மாள், என். நெடுங்குளம்
சிவகங்கை வட்டம்

38. திரு, எம். கருப்பையா,மானாமதுரை, மானாமதுரை வட்டம்

39. " எம். வேலு, "

40. " ஏ. துரை "

41. " ஏ. கோபால், "

42. " எஸ். பாண்டி "

43. " எஸ். மருது சேர்வை, "

44. " எஸ். சுப்பையா சேர்வை "

45. " எஸ். ஆறுமுகம், "

46. " சலுகை சேர்வை, "

47. " பி. மருதுசேர்வை, கீழகொம்புக்காரன் ஏந்தல்
மானாமதுரை வட்டம்

48. " பி. முத்துவிஜயன், "

49. " கே. சலுகை, பூக்குழி, இளையான்குடி வட்டம்

50. " கே. இராமு, செம்பனூர், சிவகங்கை வட்டம்

51. " எம். ஆனந்தம், வீரமாபாண்டியபுரம்,
பரமக்குடி வட்டம்

52. " எம், இராக்கு, ரயில்வேகுடியிருப்பு, காரைக்குடி

53. " அங்குச்சாமி சேர்வை, இருஞ்சிறை,
திருச்சுழியல் வட்டம்

54. " உ. ராக்கு, திருச்சுழியல் வட்டம்

55. " ஓ. சண்முகம், கீழ கொம்புக்காரன்ஏந்தல்,
மானாமதுரை வட்டம்

56. திருமதி. கி. முத்தாத்தாள், "

57. திரு. டி. இராமகிருஷ்ணன், "

58. " டி. ஜெயபாண்டி, பட்டமங்கலம்,
திருப்பத்தூர் வட்டம்

59. திருமதி. கே. விஜயலட்சுமி, பட்டமங்கலம்,
திருப்பத்தூர் வட்டம்

60. திரு. டி. விஜயபாண்டியன், கீழக்கொம்புக்காரன்ஏந்தல், மானாமதுரை வட்டம்

61. " என். பிச்சை, மானாமதுரை, "

62. " சோமநாதன், ஓசூர் பட்டணம் "

63. " ராமச்சந்திரன், கல்லூரணி, அருப்புக்கோட்டை வட்டம்

64. " சுப்ரமணியன், சிவகங்கை, சிவகங்கை வட்டம்

65. " பி. மாப்பிள்ளைசாமி, கீழ கொம்புக்காரனேந்தல், மானாமதுரை வட்டம்

66. " பி. துரைச்சாமி, சூடியூர், பரமக்குடி வட்டம்

67. திருமதி. பி. லட்சுமி, வடக்குசந்தலூர், இளையான்குடி வட்டம்

68. " பி. ஜானகி, கீழ கொம்புக்காரன்ஏந்தல், மானாமதுரை வட்டம்

69. " உ. ராக்காத்தாள், "

70. திரு. ராஜமாணிக்கம், சிவந்திரனேந்தல், சிவகங்கை வட்டம்

71. " சி. சின்னச்சாமி, கீழ கொம்புக்காரன்ஏந்தல், மானாமதுரை வட்டம்

72. திருமதி. கே. ராணி, செம்பனூர், சிவகங்கை வட்டம்

73. " கே. முத்துலட்சுமி, "

74. " கே. சீதாலெட்சுமி, "

75. " கே. தான்யலட்சுமி, "

76. " அனந்தாயி, நரிக்குடி, திருச்சுழியல் வட்டம்

77. திரு. வி. கருணாகரன், செம்பனூர் சிவகங்கை வட்டம்

78. " அனந்தநாராயணன், "

79. " அரிகரநாராயணன், "

80. திருமதி. பூமாதேவி, "

81. " கோசலை, பூக்குழி, இளையான்குடி வட்டம்

82. திரு. டி. விஜய பாண்டியன், சீனிக்காரன் ஏந்தல், திருச்சுழியல் வட்டம்

83. திரு. டி. செல்லம், சீனிக்காரன் ஏந்தல்
திருச்சுழியல் வட்டம்

84. „ கே. கறுப்புசாமி, „

85. „ டி. பாண்டியன், „

86. „ டி. காந்தி, „

87. „ டி. சின்னமருது, „

88. „ பி. தமிழரசன், தத்தனேரி, மதுரை.

89. „ பி. தங்கச்சாமி சேர்வை, சீனிக்காரன் ஏந்தல்,
திருச்சுழியல் வட்டம்.

90. „ பி. வள்ளல்சேர்வை, „

91. „ பி. வெங்கசாமி, „

92. „ எம். பாண்டியன், „

93. திருமதி. மருதாத்தாள். „

94. திருமதி. டி. தங்கநாச்சியார், „

95. திரு. எம். அமிர்தம், பனைக்குளம், இளையான்குடி
வட்டம்

96. „ பி. முத்துப்பாண்டியன், சீனிக்காரன் சந்து,
திருச்சுழியல் வட்டம்.

97. „ பி. ராமு, „

98. „ பி. சுப்ரமணியன், „

99. „ எம். ராமச்சந்திரன், „

100. „ எம். பெரியசாமி, „

101. „ ஏ. மருது, „

102. „ எம். கறுப்பசாமி, „

103. „ எம். குப்புசாமி, „

104. திருமதி. அனந்தாயி, கே. நெடுங்குளம், சிவகங்கை வட்டம்

105. திருமதி. மலைச்சாமி , பிச்சைப்பிள்ளையேந்தல்,
மானாமதுரை வட்டம்

105. „ பி. சுப்பிரமணியன், ரயில்வேநகர், சென்னை. 52

107. „ எம். விஜயன், முக்குளம், திருச்சுழியல் வட்டம்.

108. „ எம். வெள்ளைமருது, „

109. திரு. எம். பாலகிருஷ்ணன், முக்குளம், திருச்சுழியல்வட்டம்
110. " எம். பாலசுப்பிரமணியன், "
111. " எம். சிவசங்கரபாண்டியன், "
112. " சின்னமருது, நரிக்குடி, திருச்சுழியல் வட்டம்
113. " ஆர். போஸ், "
114. " ஆர். மாரியப்பன், "
115. " ஆர். வெள்ளைச்சாமி, "
116. " பி. சுப்பையா, முக்குளம், "
117. " ஏ. செல்லம், "
118. " எஸ். போஸ், நரிக்குடி, "
119. " ஜி. மூலைச்சாமி, "
120. " ஜி. சுப்பையா, "
121. " எஸ். ராக்கு, "
122. திருமதி. டி, செல்லம்மாள், அருப்புக்கோட்டை, அருப்புக் கோட்டைவட்டம்
123. " எஸ். பொன்னத்தாள், முக்குளம், திருச்சுழியல்வட்டம்
124. " எஸ். லட்சுமி, முக்குளம் "
125. திரு. ராக்குச்சாமி, "
126. " எஸ். நாராயணன், "
127. " எஸ். வெள்ளைத்தம்பி, "
128. " எஸ். சாமிக்கண்ணு, "
129. திருமதி. டி. பொன்னம்மாள், வரிசையூர், திருச்சுழியல் வட்டம்
130. திரு. டி. சாத்தையா, நரிக்குடி, "
131. " வி. சண்முகம் "
132. " வி. சாமிக்கண்ணு, "
133. " வி. துரைப்பாண்டியன், "
134. " வி. செல்லம், "
135. " டி. விஜயன், " "

136. திரு. எஸ். சின்னச்சாமி, முக்குளம், திருச்சுழியல்வட்டம்
137. " வி. ராக்குச்சாமி, "
138. " ஆர். பொன்னுச்சாமி, "
139. " எஸ். தங்கராஜ் "
140. " வி. பாக்கியம், செம்பலான்குடி, "
141. திருமதி. வி. ஆறுமுகத்தம்மாள், நரிக்குடி, "
142. திரு. வெள்ளைச்சாமி, நரிக்குடி, "
143. " வேலு, "
144. திரு. துரைச்சிங்கம், அருப்புக்கோட்டை அருப்புக்கோட்டைவட்டம்
145. திருமதி. எம். பிச்சைஅம்மாள், முக்குளம், திருச்சுழியல்வட்டம்.
146. " திரு. வி. பாலுச்சாமி, "
147. திருமதி. வி, காளியம்மாள், "
148. " அ. சுந்தரம்மாள், திருப்பத்தூர், திருப்பத்தூர்வட்டம்
149. திரு. எஸ். மணியாரன், சிங்கம்புணரி, "
150. " எஸ் மருதுபாண்டியன், "
151. " எஸ். வயிரவசுந்தரம், "
!52. " கே. தங்கச்சாமிசேர்வை, திருப்பத்தூர், "
153. " எஸ். நாராயணன், "
154. " எஸ். வயிரவசுந்தரம், கட்டுக்குடிபட்டி, "
155. " எஸ். வீரபத்திரன், கல்லல், காரைக்குடி வட்டம்
156. " வி. அண்ணாமலை, வடகரை, திருப்பத்தூர் வட்டம்
157. " வி. உலகுபாண்டியன், கொல்லுமேடு, சென்னை-62
158. " பி. சின்னமருது, வாணியன்குடி, சிவகங்கை வட்டம்
159. திருமதி. எ. அம்மாக்குட்டி வடகரை திருப்பத்நூர் வட்டம்
160. திரு. எ. சக்கரவர்த்தி, திருப்பத்தூர், "
161. " எம். சங்கிலி, "
162. " வி. ஆறுமுகம், நத்தம்கோயில்பட்டி, மேலூர் வட்டம்
163. " வி. வீரபாண்டி, "

164. திரு. வி. பாண்டி நத்தம் கோவில்பட்டி, மேலூர் வட்டம்

165. " வி. சாத்தையா, "

166. " பி. மருதுபாண்டியன், நரிக்குடி, திருச்சுழியல் வட்டம்

167. திருமதி. சுந்தரம்மாள், அருப்புக்கோட்டை, அருப்புக்கோட்டை வட்டம்

168. " வி. கிருஷ்ணன்சேர்வை, சீனிக்காரன்ஏந்தல், திருச்சுழியல் வட்டம்

169. " பி. மருதுபாண்டியன், பட்டங்கலம், திருப்பத்தூர் வட்டம்

170. " எம். சிவத்தசாமி, சீனிக்காரன் ஏந்தல், திருச்சுழியல் வட்டம்.

171. திருமதி. டி.வேலுநாச்சியார், வேலங்குடி, "

172. திரு. டி. சிவசாமி, "

173. " டி. விஜயசாமி, "

174. " டி. நடராஜன், பி. வேலங்குடி, திருச்சுழியல் வட்டம்

175. " டி. காந்தி " "

176. " டி. போஸ் " "

177. " டி. சுந்தரபாண்டியன் " "

178. " டி. காசி " "

179. " எஸ். முத்துவிஜயன் சீனிக்காரன் ஏந்தல் "

180. திருமதி. சக்திவேல் நாச்சியார், செங்கோட்டை, மானாமதுரை வட்டம்

சின்னமருது கிளையினர்

181. திரு. சி. பொன்னுச்சாமி, பெரம்பூர், சென்னை-11

182. " ஜி. வேலுச்சாமி, வேலங்குடி, திருச்சுழியல் வட்டம்

183. " டி. செல்லத்துரை, பனக்கரை, திருவாடானை வட்டம்

184. " எஸ். மலைச்சாமி, ஆழ்வார்புரம், மதுரை

185. " எஸ். பாலு, திருவேங்கடபுரம், மதுரை-2

186. " எஸ். ராமன்சேர்வை "

187. திரு. கே. முருகேசன் ஒத்தக்கடை, மேலூர் வட்டம்
188. „ கே. கேசவன், வீரபாஞ்சான், மதுரை வட்டம்
189. „ பி. சின்னச்சாமி, மலேசியா
190. „ பி. நாகசாமி „
191. „ பி, ஆறுமுகம், தம்பிப்பட்டி, திருப்பத்தூர் வட்டம்
192. திருமதி. எஸ். பொன்னுநாச்சியார், சீனியமங்கலம், திருவாடானை வட்டம்
193. „ எஸ். சிவசாமி, உறுதிக்கோட்டை „
194. „ எஸ். இராமச்சந்திரன் „ „
195. „ எஸ். கந்தசாமி „ „
196. திருமதி. எஸ். ராணிநாச்சியார் „ „
197. „ வி. காந்திநாச்சியார் „ „
198. திரு. எஸ், சீனிச்சாமி, „ „
199. திருமதி. எஸ். பவானிநாச்சியார் „ „
200. திரு. எஸ். பதிராஜா, திருப்பத்தூர், திருப்பத்தூர் வட்டம்
201. „ பி, சிங்காரம், உறுதிக்கோட்டை, திருவாடானை வட்டம்
202. „ என். தங்கச்சாமி, „ „

## *வரலாற்றில் வாழும் நிகழ்ச்சிகள்*

சிவகங்கைச்சீமை என்ற புதிய அமைப்பை நிறுவி அதன் ஆட்சியாளராக சசிவர்ண பெரிய உடையாத் தேவர் முடி சூட்டிக் கொண்டது — கி.பி. 1730

சிவகங்கை மன்னர் சசிவர்ணத்தேவர் மறைவும் அவர் மகன் முத்துவடுகநாத பெரிய உடையாத் தேவர் முடி சூட்டியது — கி.பி. 1750

இராமநாதபுரம் கோட்டையை ஆர்க்காட்டு நவாப் படைகள் வெற்றிகொண்டது — 2-6-1772

| | |
|---|---|
| காளையார் கோட்டைப் போரில் ஆர்க்காட்டு நவாப்பின் படையுடன் சண்டையிட்டு சிவகங்கை மன்னர் முத்துவடுகனாதர் வீரமரணம் | — 23-6-1772 |
| சிவகங்கைச் சீமையில் இருந்து ஆர்க்காட்டு நவாப் படைகளையும் கும்பெனியாரது கூலிப்படைகளையும் விரட்டியடித்து ராணி வேலுநாச்சியார் அரசியாகவும் மருது சகோதரர்கள் பிரதானிகளாகவும் பதவி ஏற்றது | — 1780 |
| இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதியை கும்பெனியார் பதவி நீக்கம் செய்து திருச்சி கோட்டையில் சிறை வைத்தது | — 8-2-1795 |
| சிவகிரி பிரதானி சங்கரலிங்கம் பிள்ளையை திரிகோணமலைக்கு கும்பெனியார் நாடு கடத்தியது | — 20-9-1797 |
| முதுகுளத்தூர், அபிராமம், கமுதியில் உள்ள கும்பெனியார் கச்சேரிகளைத் தாக்கி, மக்கள் கிளர்ச்சியை தளபதி மயிலப்பன் சேர்வைக் காரர் துவக்கியது | — 24-5-1799 |
| கட்டபொம்மன் சின்னமருது சேர்வைக்காரரை பழமானேரியில் சந்தித்தது | — 10-6-1799 |
| ஊமைத்துரை பாளையங்கோட்டைச் சிறையில் இருந்து தப்பியது | — 2-2-1801 |
| பாஞ்சாலங்குறிச்சிப் போரில் கும்பெனிப் படைகள் தோற்று ஓடியது. | — 10-2-1801 |
| பாஞ்சாலங்குறிச்சிப்போரில் கும்பெனி யாரிடம் ஊமைத்துரை தோல்வி | — 24-5-1801 |
| ஊமைத்துரைக்கு அரண்மனை சிறுவயலில் சின்னமருது சேர்வைக்காரர் வரவேற்பு | — 29-5-1801 |

| | |
|---|---|
| மருதுபாண்டியர் விடுதலைப் பிரகடனத்தை திருச்சி, ஸ்ரீரங்கத்தில் வெளியிட்டது | 16-6-1801 |
| முதுகுளத்தூர் கச்சேரிக்குத் தீயிட்டு கும்பெனி யாருக்கு எதிரான மறவர் சீமை கிளர்ச்சி துவக்கம் | — 14-6-1801 |
| சிவகங்கைச்சீமை மக்களுக்கு தளபதி அக்கினியூ (உத்தரவு) விளம்பரம் | — 2-7-1801 |
| பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஊமைத்துரைக்கு உதவியதற்காக பாளையங்கோட்டையில் தூக்கில் போடப்பட்டது (தியாகிகள்:ஆதிச்ச நல்லூர் சங்கநாதன் காவல்காரர், மாடசாமி தேவர், மாறமங்கலம் குமாரசாமி, குறளிமுத்து, சக்கமுக்காணி பசுபதி பெருமாள்தேவர் சிவனாண்டி ஆகிய அறுவர்) | — 9-7-1801 |
| திருப்பத்தூர் கோட்டைப்போரும் போராளிகள் தோல்வியும் | — 25-7-1801 |
| கும்பெனிப்படைகள் அரண்மனை சிறுவயலைத் தாக்கியது | — 29-7-1801 |
| கமுதிக்கோட்டையை முற்றுகையிட்டு கும்பெனிப்படையுடன் போர் | — 26-7-1801 |
| (வெள்ளைமருது சேர்வைக்காரர், மீனங்குடி முத்துக்கருப்பத்தேவர், மயிலப்பன் சேர்வைக் காரர் தலைமையில்) | — 27-8-1801 |
| நவாப்பின் சகல அதிகாரங்களையும் கும்பெனி யார் பெற்றது அரண்மனை சிறுவயல் காட்டில் போராளிகளும்கும்பெனிப்படைகளும் போராடியது | — 31-7-1801 to 31-8-1801 |
| புட்டூர் தலைமைல் வாரூரில் கும்பெனிப் படைகளுடன் போராளிகள் போர் | — 26-8-1801 |

| | |
|---|---|
| சோழபுரத்தில் படை மாத்தூர் கௌரி வல்லப உடையாத் தேவரை கும்பெனியார் சிவகங்கை ஜமீன்தாரராக அறிவித்தது | — 3-9-1801 |
| பிரான்மலைக் கோட்டையை கும்பெனிப் படைகள் பிடித்தது | — 18-9-1801 |
| ராஜசிங்க மங்கலம் குமாரத்தேவனுக்கு கும்பெனியார் தண்டனை வழங்கியது | — 15-9-1801 |
| காளையார்கோவில் போரில் தோல்வி | — 1-10-1801 |
| சிவகங்கை மன்னர் வேங்கன் உடையாத் தேவரை கும்பெனிப்படைகள் கைது செய்தது | — 4-10-1801 |
| வெள்ளைமருது சேர்வைக்காரர் மக்கள் கறுத்ததம்பி, மோலிக்குட்டி தம்பி ஆகிய இருவரையும் முத்தூர் அருகே தூக்கிலிட்டது | — 4-10-1801 |
| சின்னமருது மக்கள் முத்துசாமி சிவத்ததம்பி காடல்குடி கீர்த்திவீர குஞ்சு நாயக்கர் ஆகியோரை கண்டிர மாணிக்கத்தில் தூக்கில் இட்டது. | — 12-10-1801 |
| பெரியமருது, சின்னமருது சேர்வைக்காரர்கள் பிடிக்கப்பட்டு சோழபுரம் பாசறையில் காவலில் வைக்கப்பட்டது | — 19-10-1801 |
| இராஜசிங்க மங்கல வீரன் ஜகந்நாத ஐயனைப்பிடித்து அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்து கசையடி வழங்கியது | — 20-10-1801 |
| மருது சகோதரர்களை திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிட்டது | — 24-10-1801 |
| மருது மக்கள் சிவஞானத்தை கமுதிக் கோட்டையிலும், உடையணனைத் திருச்சுழியிலும் தூக்கிலிடப்பட்டது | — 22-10-1801 |

| | |
|---|---|
| சின்னமருது சேர்வைக்காரர் மகன் துரைச்சாமியை மேலூர் அருகே பிடித்து காவலில் வைத்தது | 27-10-1801 |
| மீனங்குடி முத்துக்கறுப்பத்தேவரை குத்தகை நாட்டில் பிடித்து காவலில் வைத்தது | 27-10-1801 |
| வாராப்பூர் பாளையக்காரர் பொம்மை நாயக்கரைப் பிடித்து காவலில் வைத்தது | 27-10-1801 |
| சேடபட்டி அம்பலகாரரையும் அவர் மகனையும் பிடித்து தூக்கிலிட்டது | 1-11-1801 |
| ராஜசிங்கமங்கலம் ஜகந்நாத ஐயனை நாடு கடத்தி கடலுக்கு அப்பால் அனுப்பியது | 1-11-1801 |
| கோபால மணியக்காரரையும் வெங்கடாசலத்தையும் நத்தத்தில் தூக்கிலிட்டது | 2-11-1801 |
| கள்ளர்மக்கள் தலைவர் சேதுபதியை சும்மணப்பட்டியில் தூக்கிலிட்டது | 6-11-1801 |
| அபிராமத்தில் கனக சபாபதித்தேவரை தூக்கில் இடப்பட்டது. | 16-11-1801 |
| சிவத்தையா, ஊமைத்துரையை பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வெளியில் சிரச்சேதம் செய்தது | 16-11-1801 |
| சின்னமருது சேர்வைக்காரர் மகன் துரைச்சாமி சிவகங்கை மன்னர் வேங்கன் பெரிய உடையாத் தேவர்; சடைமாயன் உள்ளிட்ட எழுபத்து இரண்டு பேர்களை நாடு கடத்தி பினாங் தீவிற்கு அனுப்பியது | 11-2-1802 |
| சித்திரங்குடி மயிலப்பன் சேர்வைக்காரர் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டதும் காவலில் வைக்கப்பட்டதும் | 26-3-1802 |

## இந்த வரலாற்று நூல் வரைய பயன்பட்ட தமிழ்நாடு ஆவணக் காப்பக ஆவணங்கள்


1. Revenue Sundries
2. Revenue Consultations
3. Military Country Correspondence
4. Military Consultations
5. Board of Revenue Consultations
6. Political Consultations
7. Public Consultations
8. Secret consultations
9. Political Despatches
10. Revenue Despatches
11. Military Despatches
12. Tiruchi District Collectorate Records
13. Tirunelveli District Collectorate Records
14. Madurai District Collectorate Records


## I இந்த வரலாற்று வரைவிற்கு பயன்பட்ட ஆங்கில நூல்கள்


1. Aitchisrn — Collection of Treaties vol. 5

2. Annasamy Aiyer — Sivaganga its origin and Litigations (1899)

2. Baliga. B. S. Dr, — Studies in Madras Administra tion (1960)

3. Ward B. S — Memoir of Madura and Dindigul countries (1814)

4. Bowring. L — Rulers of India-Hyder Ali and Tippu Sultan (1893)

5. Burgess. Dr. Natesa Sastri — Archalogical Survey of India vol. IV and vol. VIII (1885)

6. Dodwell — Calendar of Madras Records (1917)

7. Francis. W — Madura Gazetteer (1914)

8. Ganapathia pillai — Ettaiyapuram Past and Present (1890)

9. Hill S.C — Yousuff Khan, the Rebel Commandant (1914)

10. Hussain Nainar, Dr. Arab Geographers knowledge of South India (1942)

11. Kathirvelu, S. Dr. History of Marawas (1972)

12. Krishnaswamy W.R. — Old Madras (1965)

13. Macleam C.D — Manual of Administration of Madras Presidency (1885)

14. Mahalingam T.V. Mackenzie Manuscripts (1972)

14. Nagasamy Dr. and Ramasamy. P — Ramanathapuram, an Archaelogical Guide (1979)

15. Nelson — Manual of Madura Country (1868)

16. Northcote Perkinson — Trade with Eastern Seas (1937)

17. Rangachari, K.V. — List of Topographical Inscriptions in Madras Presi dency (1919) vol. 11

18. Rajaram Row. T — Manual of Ramnad Samasthanam (1891)

19. Rajayyan, K. Dr. — Rise and the fall of Polegars in Tamilnadu

20. Rajayyan, K. Dr. — South Indian Rebellion 1800-1801 AD (1977)

21. Rajayyan. K. Dr. — Selections from the History of Tamil Nadu (1978)

22. Rajayyan K. Dr — History of Madurai (1974)

23. Ramasamy. A — Gazetteer of Ramnad (1972)

24. Rathakrishan. R — General History of Pudukottai (1016)

25. " — Manual ot Pudukottai (1987)

26. Sathianathaier. R — History of Madurai Nayak (1924)

27. " — Tamilagam in the 17th Century (1956)

28. Seshadri S. Dr. — Sethupathis of Ramnad (1970)

29. Srinivasa Shastri C. S — The Imwardness of British Annexation in India (1951)

30. Srisnivasa Reghava Iyengar — Memorandum of the Progress of Madras Presidency during the last 50 years (1893)

31. Stuwart. A — Tirunelvely Gazetter (1921)

32. Taylor — Old Historal Manuscripts (1835)

33. Thurston — Caste and Tribes of south India (1909)

34. Vadivelu — Ruling Chiets, Nobles and — Zamindars of south India (1915)

35. Vibart. Maj. H. — Military History of Madras Engineer- and Pioneers (1881)

36. Viswanathan. P. — Tirumeyyam Temple Town and Fort (1985) (Unpublished M. Phil Thesis

37. Welsh J. — Military Reminiscences (1830)


## II தமிழ் நூல்கள்


1. குரு. குகதாசப்பிள்ளை — திருநெல்வேலி சீமைச்சரித்திரம் (1930)

2. மகாவித்வான். மு. ராகவ ஐயங்கார் (பதிப்பு) — பெருந்தொகை (1932)

3. ஜெயங்கொண்டார் — கலிங்கத்துப்பரணி

4. டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் — புறநானூறு

5. பலபட்டடை சொக்கநாதப் புலவர் — பணவிடுதூது (1980)

6. முத்துக்குட்டிப் புலவர் — கண்ணுடையம்மன் பள்ளு (1954)

7. சீழ்திசை சுவடி நிலையம் சென்னை — மறவர் சாதி விளக்கம்

7. „ „ — சேதுபதி உண்டானவிதம்

8. பொன்னாங்கால் அமிர்த கவிராயர் — ஒருதுறைக்கோவை

9. டாக்டர் எஸ். எம். கமால் — விடுதலைப்போரில் சேதுபதிமன்னர்(1987)

10. தொ. மு. சதாசிவ பண்டாரத்தார் — பாண்டியர் வரலாறு(1950)

11. தமிழ்நாடு தொல்பொருள் (பதிப்பு) — பாளையப்பட்டு வமிசாவளி (தொகுதிகள். 3)

12. இராமசாமி சேர்வை — தென்னாட்டு வீரன் மருது பாண்டியன் கும்மி (1955)

13. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (பதிப்பு) — தமிழ்நாட்டுக்கும்மி

14. மகாவித்வான் ரா. ராகவ ஐயங்கார் — ராஜராஜேஸ்வர சேதுபதி ஒருதுறைக் கோவை (1984)

15. ,, — சேதுநாடும் தமிழும் (1932)

16. பக்கீர் முகம்மது (பினாங்) — கெடா வரலாறு (1959)

17. அழகிய சிற்றம்பலக் கவிராயர் — தளசிங்கமாலை.

## இந்த நூலில் குறிப்பிடப்படுபவர்கள் ஊர்கள், பெயர்ப்பட்டியல்


அகமுடையார் 16
அகம்படியார் 11
அகம்படி முதலி 15
அகிலாண்டேஸ்வரி நாச்சியார் 2
அங்கதேசம் 1
அதிகாரக்குடி 105
அத்திபட்டி 107
அபிராமம் 22, 25, 47, 48, 58, 60, 70, 85, 108
அபிராமி 130, 160
அபிராமம் வீசுகொண்ட தேவன் 9
அபிராமம் அப்துல்காதிர் ராவுத்தர் 34
அப்துல்காதிர் மரைக்காயர் 36
அப்பர் 98
அமீர்சிங் 134
அம்மையநாயக்கனூர் 36
அய்யாத்தலைவன் 42
அரண்மனை அட்டவணை 53
அரண்மனை சிறுவயல் 66, 83, 99, 100, 113, 144, 145, 149, 174
அரளிக்கோட்டை நல்லணத் தேவர் 134
அரவக்குறிச்சி 39, 47, 188
அருநூத்தி மங்கலம் 58, 110
அரிக்காரர்கள் 84
அர்ஜுனன் 16
அர்ஜுனப் பெருமாள் 103
அலிஹுசைன் 93
அனுமந்தக்குடி கோட்டை 48, 58, 188,
அறந்தாங்கி 75, 105, 109, 108, 121, 137, 175
அஜும்-உத்-தௌலா 93, 94

ஆப்பநாடு 108
ஆப்பனூர் 95, 108
ஆறுமுகம் கோட்டை மாப்பிளைத் தேவர் 6, 48, 188
ஆண்டன் 162
ஆவியூர் 141
ஆர்க்காடு நவாப் 3, 9, 10, 12, 28, 77, 89, 90, 92, 165
ஆனந்தூர் 52
ஆர்க்காடு வெள்ளிப்பணம் 168
ஆனைமடு தெப்பக்குளம் 141, 152

இபுராகிம் சாயபு 42
இடையக்கோட்டை 36
இராமநாதபுரம் 2, 4, 15, 183
இராமநாதபுரம் கலெக்டர் 41, 42
இராமநாதபுரம் கோட்டை 7, 18, 22, 40, 48, 73, 74, 97, 108, 109
இராமநாதபுரம் சீமை 3, 7, 8, 10, 15, 20, 21, 29, 33, 41, 44, 45, 58, 59, 72, 130, 131, 163
இராமலிங்க விலாசம் 27
இராமன் 1
இர்வின், கலெக்டர் 37
இளவரசி வெள்ளச்சி 12

உஞ்சனை 68
உடையணன் 157, 174
உடையாத்தேவர் 125
உம் தத்துல் உம்ரா 4, 91, 92
உரளிக்கோட்டை 154, 156
உளக்குடி 95

ஊமை குமாரசாமி 61, 65, 66 71, 105, 160
ஊமைத்துரை, 61, 65, 66, 109, 154, 157, 160, 173

எட்டையாபுரம் பாளையக்காரர் 36, 42, 46, 62, 65, 105, 139
எமனேசுவரம் கன்னியப்பபிள்ளை மடம் 55
எரியோடு 36
என்சைன்கௌபில் 115

ஏகலைவன் 16

ஐதர் அலி 5, 140

ஒக்கூர் 99, 135, 140, 147, 172
ஒளிக்குடி முத்துகறுப்பத் தேவர் 134

ஒங்கோல் 91
ஓலம் கலுங்கு 56
ஓரியூர் 110
ஓருர் 56
ஒய்யாத்தேவர் 138,139,148,167,

கங்கை கொண்டான் 184
கட்டபிரம்மய்யா 60
கட்ட பொம்மு நாயக்கர் 26, 27, 28
கட்டனூர் 53, 55
கட்டனூர் திருக்கண்ணத்தேவர் 134
கம்பம் 37, 39, 29, 30
கம்மந்தான் கான் சாயபு 102, 143, 144, 171
கமுதிக் கோட்டை 43, 24, 47, 67, 48, 49, 57 58 70, 69, 110
கணைக்கால் இரும்பொறை 144
கண்டிரா மாணிக்கம் 154, 159,
கண்ணுடையம்மன் பள்ளு 134
கருத்ததம்பி 158
கருணை (கிராமம்) 159
கருநாடகம் 41, 79 80, 88
கருநாடகப்போர் 5, 63, 95
கர்னல் அக்கினியூ 2, 68, 70,0, 71,73,74, 75, 78, 98, 99,101 114, 116, 125, 128, 130, 133, 136 137, 143, 144, 145, 149, 150, 153, 156, 157, 159 172, 173, 175, 186
கர்னல் இன்னிங்ஸ் 99, 101, 104, 114, 116, 118, 119, 124, 136, 137, 145, 147, 149, 153, 154
கர்னல் தாம்பரில் 115, 118, 125,
கர்னல் பிரவுன் 19
கர்னல் பல்லர்டன் 36 ,
கர்னல் மார்ட்டின்ஸ் 19 110
கர்னல் மில்லர் 103, 110,153,164
கர்னல் வெல்ஷ் 13, 16, 18, 24, 65, 113, 138
கர்னல் ஸ்டூவர்ட் 72, 74, 101
கர்னல் ஸ்பிரே 145, 149
கர்னல் ஷெப்பர்டு 72, 145, 149, 153, 155, 158
கர்ணன் 169
கழனிவாசல் 19
கள்ளர் நாடு 9, 13
கள்ளர் கீழ்நாடு 101, 102
கள்ளர் தெற்கு நாடு 101
கள்ளர் பிறமலைநாடு 101
கள்ளர் மேலூர்நாடு 102
கள்ளர் நாட்டுத் தலைவர் 104
கள்ளர் தலைவர் 164
கள்ளர் பட்டி 30
கனக சபாபதி 160
கவர்னர் கிளைவ் 136, 140, 177
கவர்னர் ஹோபர்ட் 85
கவர்னர் ஜியார்ஜ் லீத் 185
கலெக்டர் சுல்லிவன் 12
கலெக்டர் ஜாக்ஸன் 26, 27, 34, 35
கலெக்டர் லூஷிங்டன் 24, 25, 26, 27, 69, 74, 84
கலெக்டர் பவுனி 21
கலெக்டர் பாரிஷ் 186
கலெக்டர் மக்லாயிட் 84
கமுதிக் கோட்டை 24
கனக சபாபதி தேவர் 59, 163, 166
கறுத்த தம்பி 157
கன்னிவாடி பாளையக்காரர் 31, 39
கன்னையன் 135
கழுகுடி 46

காங்கயம் 184
காடல்குடி 8, 42, 67
காடு வெட்டி 113
காட்டுப் பரமக்குடி 50
காதர் மீரான் 57
காதலி நாச்சியார் 2
காதில் குட்டி நாயக்கர் 84
காமன் கோட்டை 69
காமாட்சிநாயக்கன் பாளையம் 161

[illegible] 103
[illegible] 150
[illegible] 101
[illegible] 11, 57, 67, [illegible], [illegible], 108, 113, 126, 131, 136, 134, 135, 139, 144, 145, 148, 149, 150, 155, 157, 158, 170, 57, 58
[illegible] 143
[illegible] 129
காணப்பேர் 129

கிழவன் சேதுபதி 1, 2
கிரீம்ஸ் 26
கீழவளவு 103, 164
கீழாநிலை 49
கீழக்குளம் 25
கீரனூர் 145, 159
கீர்த்தி வீரகுஞ்சு நாயக்கர் 159, 170

குடியம் 33
குத்புதீன்கான் 11
குத்தகைநாடு 58, 68
குப்பம் ஊரணி 158
குமாரப்பிள்ளை 30
குமாரதேவன் 110, 111, 166
கும்பெனி கவர்னர் 70, 77, 82
கும்பெனியார் 7, 8, 9, 14, 21, 23, 24, 25, 29, 30, 75, 78, 84, 167
குண்டாறு 48
குளத்தூர் 2, 8, 25, 40
குற்றாலம் 27
குனியமுத்தூர் 102
குன்றக்குடி குமரன் 141

கேப்டன் ஆலிவர் 39
கேப்டன் காட்பிரே 156
கேப்டன் சுமித் 127, 155
கேப்டன் சூளர் 112
கேப்டன் காரோ 104, 161
கேப்டன் பிளாக் 154
கேப்டன் பாக்ஷா 124, 146
கேப்டன் பிளாக்பர்ன் 75, 104, 106, 109, 158, 159, 121, 135, 13, 161
கேப்டன் மக்ளாயிட் 108, 111, 114
கேப்டன் லங்கோர்டு 155
கேப்டன் வெர்னான் 161
கேப்டன் வெங்டன் 121

கெட்டி பொம்மு 61, 74
கொக்கூரணி 52
கொல்லங்குடி 147, 148
கௌரி வல்லப ஒய்யாத்தேவர் 12, 74, 135

கோபால நாயக்கர் 41, 72
கோட்டைப் பட்டினம்1, 58, 106
கோட்டை பிள்ளைமார் 15
கோட்டை சேர்வைக்காரர் 142
கோயம்புத்தூர் கௌங்கான் 41, 97
கோல்வார் பட்டி 40
கோம்பை 36, 39

சக்கந்தி முத்துகுமாரதேவர் 134
சக்கந்தி வேங்கன் பெரிய உடையாத் தேவர் 12,141, 179, 180
சங்கரப்பதி காடுகள் 154,159,170
சசிவர்ண பெரிய உடையாத்தேவர் 3, 134
சத்திரப்பட்டி 176
சந்தா சாகிபு 171
சத்துரு சங்காரக் கோட்டை 97
சடையவர்மன் 99
சடைக்கன் சேதுபதி 134
சந்தா சாயபு 173
சந்தையூர் 31, 36
சம்பிரிதி 46
சரபோஜி, இரண்டாவது 137
சருகணி 154
சவரிமுத்துப் பிள்ளை 156

சாக்கோட்டை வீரப்பன் 175
சாத்தூர் 8, 26, 27
சாயல்குடி 25, 46
சார்ப்பாய் 109
சாலைக் கிராமம் 50

சிக்கந்தர் மலை 19
சித்திரங்குடி 44,108,167
சிங்கன்ரெட்டி 25,55,166
சிவகங்கைச்சீமை 3,5,6,9,10, 12, 14, 15, 20, 21, 22, 27, 41, 42, 43, 44, 66, 70, 71, 77, 97, 100, 104, 173, 178
சிவகங்கை சேர்வைக்காரர்கள் 23, 24, 36, 40, 47, 72, 76, 77, 78, 80, 89, 97, 134, 158 169 175, 176, 185
சிவஞானம் 157, 174
சிவத்ததம்பி 46, 100, 105, 159, 161
சிவத்தையா நாயக்கர் 160,45, 71
சிங்கன்செட்டி 25, 49, 56, 168,
சிவகிரி 27
சிறுகம்மையூர் 108
சிந்தாலப்பட்டி நல்லப்பக் கவுண்டர் 185
சின்னமருது சேர்வைக்காரர் 9 17, 18, 19, 20, 25, 22, 27 44, 52, 57, 58, 59, 65, 67, 105, 130, 148, 153, 155, 156, 157, 167, 162, 163, 174
சிவசுப்பிரமணியபிள்ளை 26
சிவத்தையா 70, 157
சிறுகும்பையூர் 106
சிறுகுடி 159
சின்னணன்சேர்வை 158

சீனிவாசராவ் 144
சீரங்கப்பட்டினம் 36
சீவல்லபன் 98

சுள்ளி ஊரணி 146
சுப்பையர் 42
சுந்தரபாண்டியன் 130
சுந்தரபாண்டியன் பட்டினம் 56
சும்மணப்பட்டி 163, 161

சூரக்குடி விசயாலயத்தேவன் 98, 141
சூடியூர் 45

செம்பொன்மாரி 145
செங்குடி 51
செங்கல்படை 51
செங்கோட்டைகாடு 159
செட்டிக்கோட்டை 51
செம்பிநாடு 14
செக்காக் கோட்டை 62
சென்னை கவர்னர் 20
செம்பனூர்ராக்கத்தேவர் 137
சொக்கம்பட்டி 27
சொக்கநாத நாயக்கர் 170

சேதுபதி கள்ளர் தலைவன் 161
சேதுபதிகள் 1, 23, 24, 25, 29, 46, 141, 164
சேர்வைக்காரர் 15
சேவற் கோட்டை பொன் உடையாத்தேவர் 134
சேடபட்டி 161
சேடபட்டி அம்பலகாரர் 161
சேரன் கணைக்கால் இரும்பொறை 144

சையது சாயபு 36

சோழகுலாந்தகன் 136
சோழபுரம் 135, 136, 147, 162,
சோழன் பெரு நற்கிள்ளி 128
சோழநாடு 138
சோணமுத்து 174

டச்சுக்காரர் 7, 112, 179
டச்சுக் கிழக்கிந்தியக் கும்பெனியார் 32

தஞ்சாவூர்கலெக்டர் 43
தஞ்சாவூர் சீமை 21, 41, 107
தஞ்சாவூர்மராத்தியர் 103, 136,
தட்டப்பட்டி 161
தமச்சான்பட்டி தண்டு கதிரு நாயக்கர் 180
தலையாலங்கானம் 132
தலையாலங்கான செருவென்ற நெடுஞ்செழியன் 132
தரக்குடி 46
தளபதி அக்கினியூ 62, 68, 89
தளபதி கோப் 16

தளபதி காமேரான் 102
தளபதி மார்ட்டின்ஸ் 11, 18, 19, 67
தளபதி முத்துக்குமாரு பிள்ளை 105
தளபதி புல்லர்ட்டன் 10
தளபதி ரீபே 11
தளபதி ஜோசப் ஸ்மித் 4
தளபதி ஸ்டுவார்ட் 11

தாண்டவராய பிள்ளை 170
தாசசெட்டி 31
தாமஸ் கிரீன் 110
தாராபுரம் 184
தாமோதரம்பிள்ளை 170

திருக்களம்பூர் காடு 105
திருச்சுழியல் 69, 70
திருப்புவனம் 69, 72
திருப்பத்தூர் 67, 87, 97, 98, 141, 157, 160, 162, 172
திருப்பாச்சேத்தி 72
திமிங்கி 130
திருவில்லிப்புத்தூர் 26
திருமெய்யம் 2, 128, 105, 110 123, 124
திருமோகூர் 68, 71, 105
திருமலைநாயக்கர் 3, 81
திருமலை ரெகுநாத சேதுபதி 170
திருவாடானை 20, 110
திருவுடையாத்தேவர் 2
திண்டுக்கல் கோட்டை 5, 36, 41, 97, 100, 107, 160
திண்டுக்கல் சீமை 28, 36, 176, 185
திருஞான சம்பந்தர் 133
திருக்கண்ணத் தேவர் 160
திருக்காணப் போருணையான் 133
திருநெல்வேலி சீமை 28, 105,
திருப்பூவணக் கோட்டை 19, 140
திருப்பத்தூர் திருத்தளியான் 145
திருப்பத்தூர் கோட்டை 11, 98 99, 100, 140
திப்புசுல்தான் 12, 13, 20, 90, 143
திவான் சீனிவாசராவ் 147

திம்மநாதபுரம் 42
துபாஷ் ஆனந்தரங்கம் பிள்ளை 34
துபாஷ் பச்சையப்ப முதலியார் 4
துபாஷ் ரங்கப் பிள்ளை 26, 34, 35, 36
துரியோதனன் 170
துரோணர் 16, 170
துரைச்சாமி 157, 163, 179
துவரங்குறிச்சி 160

தூத்துக்குடி 162
தூந்தியா வாக் 41, 167

தென் கொண்டான் 110
தெற்கத்தியார் 14
தேவாரம் 173
தேவதானப்பட்டி 6
தேவதானப்பட்டி கோபால நாயக்கர் 31, 38, 83
தேசகாவல் 30

தொண்டி 3, 22, 68 105, 112,

நத்தம் 71, 83, 97, 100, 105
நத்தம் தாசில்தார் 71
நத்தம் மணியக்காரர் 71
நயினார் கோயில் 95, 154
நன்னி சேர்வைக்காரன் 157
நமணத்தொண்டமான் 2

நாகலாபுரம் 26, 43, 58, 107
நாகராஜ மணியக்காரன் 42, 46
நாலுகோட்டை பாளையக்காரர் 2, 77, 135

நிலக்கோட்டை 36

நெட்டூர் 45, 51
நெல்லூர் 91

பக்கோடாபணம் போர்ட்டோ நோவா 25
பக்கோடோ ஸ்டார் 25, 91, 94
பசும்பொன் படைமாத்தூர் ஒய்யாத்தேவர் 75, 76, 77, 134, 138, 139, 140, 142

பரஞ்சோதி 16
பணம் விடுதூது 134
பட்டமங்கலம் 127, 135
பரத்தைவயல் 51
பந்தல்குடி 48, 188
பந்தனச்செட்டி 31
பல்லடம் 185
பரமக்குடி 50, 95, 97
பழஞ்சோற்று ஏந்தல் 141
பணியாரநல்லூர் 141.
பழமானேரி 27, 107
பழனி பாளையக்காரர் 29, 38, 39
பள்ளிமடம் 68, 153, 48,70,73,108
பழனி 36, 40, 90, 185
பன்னிக்குடி 70

பாகனேரி 135
பாஞ்சாலங்குறிச்சி கோட்டை
57, 59, 61, 64, 66, 67, 104, 160
பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் 8, 29, 85, 87, 89
பாப்பான்குளம் 46
பார்த்திபனூர் 95
பாலசமுத்திரம் 39
பாரீஸ் 110
பாளையங்கோட்டை 8, 41, 61, 62, 127, 188
பாண்டிய மண்டலம் 3
பாண்டியன்பிள்ளை 40
பாண்டிச்சேரி 92
பாண்டுகுடி 59, 163
பாம்பன் நீர்வழி 6
பாம்பூர் நாயக்கர் 55
பாம்பன் 188
பாவலி 27, 105
பாஸ்கல் திருவிழா 158

பிரதானி
சிவசுப்பிரமணியபிள்ளை 27
பிரதானி தாண்டவராயபிள்ளை 172
பிரதானி பிச்சபிள்ளை 172
பிரதானி தாமோதரம்பிள்ளை 5, 172
பிரெஞ்சுக்காரர் 92
பிரான்மலைக் கோட்டை 97, 101, 154

பிரம்மதேசம் 154
பினாங் 179, 181, 185

பீஷ்மர் 169

புதுச்சேரி ஆனந்த
ரங்கம்பிள்ளை 34
புதுக்கோட்டை தொண்டமான்
71, 73, 102, 104, 105, 108, 118, 131, 141, 153
புல்லுமாரி 58
புருஸ்லீ 101
புட்டூர் 168, 25, 107, 164

பூண்டி பச்சையப்பமுதலியார் 24

பெங்கோலான்தீவு 180
பெரிய உடையாத்தேவர் 2,134, 141
பெரிய மருது சேர்வைக்காரர்
9, 45, 74, 174
பெருங்குடி 157
பெருநாழிக்கோட்டை 48. 188
பெருவயல் 16
பொன்னளிக்கோட்டை உடையாத்தேவர் 56
பொன்பத்தி 105
பொம்மை நாயக்கர் 100, 101, 102

போடிபாளையக்காரர் 39, 185,

பூசாரிப்பட்டி சந்திரன் சேர்வை 185

மதுரை சொக்கர் ஆலயம் 145
மதுரைச் சீமை 29, 30, 31
மதுரை நாயக்கர் 31, 102, 137
மதுரை சுல்தான்கள் 31, 98
மருதங்குடி 144, 141
மருதாபுரிகுளம் 144
மத்தூர் 36
மருது சகோதரர் 15, 16, 26, 80
மருது சேர்வைக்காரர் 5, 6, 10, 11, 19. 23, 24, 52, 59, 75, 77, 102, 134, 140, 141, 142, 158, 160, 173, 174, 178

மருதுசேர்வைக்காரர்மக்கள் 67, 71, 74, 137
மங்களேஸ்வரி நாச்சியார் 91, 92
மலபார் அணி 97
மலபார் கேரளவர்மா 41
மலாய் நாட்டுப்படை 113,115 154
மலையாளப்படை 63
மங்கலம் 56, 152, 154, 168
மத்தூர் 36
மகாராஷ்டிரம் 41, 42
மக்லாயிட் 85
மண்டலமாணிக்கம் 72
மணப்பாறை பாளையக்காரர் 39, 40

மணவாள நாயக்கர் 159
மயிலப்பன் 8, 25, 40, 41, 42, 43, 45, 48, 50, 51, 53, 54, 55, 56, 58, 57,95, 96,108.153,166
மயூரகிரிக்கோவை 141
மறவர்சீமை 1, 4, 22, 29, 30, 166, 181
மாவலிக்கூர் 130
மாங்குடி 105
மாம்பாறை 36
மாறன் சடையன் 98
மாறவர்மன் பராக்கிரமன் 9
மாறனி 141
மாவலி வாணாதரையன் 133
மாவிலோடை 41, 43,
மானாமதுரை 134
முதுகுளத்தூர் 22, 44, 95, 108,
முதலியார்மடம் 46
முக்குளம் 15

மீர்.முகமதுமூசாகான் 19, 20
மீர்காசிம் 139
மீனங்குடி முத்துகருப்பத்தேவர் 59,67,107, 108, 153, 155, 163, 164

முதுகுளத்தூர் மிட்டாதார் 95
முதல்நாடு 48
முத்தபார்கான் 10
முத்துகறுப்பபிள்ளை 166
முத்துச்சாமி 157, 159
முத்துவடுகநாத பெரிய உடையாத்தேவர் 5, 75, 140, 141, 168
முத்தூர் 145, 146, 147, 148
முத்துப்பட்டி 14
முத்துராமலிங்க சேதுபதி 5, 6, 22, 76, 92, 137. 166, 167, 169
முத்துராமலிங்க பட்டினம் 21
முத்து இருளப்ப சேர்வைக்காரர் 96
முத்துக்குமாரு பிள்ளை 106
முத்துஇருளப்ப பிள்ளை 30
முத்தையா பிள்ளை 40
முராரி ராவ் 173
முடுக்கன் குளம் 158
முஸ்டக் குறிச்சி 48
முண்ட வண்டி நஞ்சையன் சேர்வைக்காரர் 185

மேப்பல் பனங்குடி 152
மேய்ஜியர் 35
மேலமாந்தை பாளையக்காரர் 46
மேலூர் 68, 56, 71 103
மேஜர் கிரகாம் 116, 117
மேஜர் கிராண்ட் 123
மேஜர் பான் ஜோர் 4
மேஜர் பெர்ஷன் 117, 118, 121, 124
மேஜர் மக்காலே 105, 108, 149, 155, 158
மேஜர் மேயர் 100
மேஜர் ஷா 158
மேஜர் ஷெப்பர்டு 72, 99, 114, 116, 118, 119, 120, 123, 124
மேஜர் மக்லியாட் 114, 119, 120
மைசூர் கிருஷ்ணப்பா 41
மைசூர் போர் 102, 172
மொக்கை பழனி சேர்வைகாரர் 15, 16, 169
மோலிக்குட்டி தம்பி 157, 158

ரகுநாத கிழவன் சேதுபதி 170, 163, 172
ரகுநாத தொண்டமான் 2, 179, 177

ராணிமங்கம்மாள் 170
ராணிமீனாட்சி 3, 61
ராணி வேலுநாச்சியார் 5, 9 10, 11, 12, 52, 75, 77, 132 133, 141, 145, 147
ராஜமான்யர், 133, 145
ராஜ ராஜசோழன் 98
ராஜசிங்கமங்கலம் 58, 110, 112,

லஸ்கார் கூலி 149

வூஷிங்டன் 24, 52, 87

லோகையா நாயக்கர் 31, 39,

லெப்டி கார்டு 107
லெப்டி கீவ் 117
லெப்டி. கோர்டன் 124,
லெப்டி புருஸ்லீ 100
லெப்டி பிளச்சர் 120
லெப்டி ஒயிட் 127
லெப்டி மில்லர் 49, 50, 51, 52, 58, 53, 111, 158
லெப்டி லாக்ஹீட் 180
லெட்சுமண நாயக்கர் 185

வத்தலக்குண்டு 160
வயநாடு 11, 92
வடுகர் 1
வரவணி 51
வயிரவன் சேர்வைக்காரர் 15
வலம்பட்டி 160.
வன்னியத்தேவன் 110, 112

விருபாட்சி 5, 12, 39, 40, 100, 162, 163, 177, 185

வாணியங்குடி 145
வாரன் ஹேஸ்டிங்ஸ் 33
வாரூர் 106
வாராப்பூர் 100, 162
வாதாபி போர் 16
வாலாஜா முகம்மதுஅலி 3, 4

விஜயகுமார பங்காரு திருமலை 173, 16
விசுவநாத நாயக்கர் 60

விஜய நகர மன்னர் 99
விஜய ரகுநாத சேதுபதி 2, 3
விஜய ரகுநாத தொண்டமான் 105
விருபாட்சி பாளையக்காரர் 38, 39, 41, 160, 176

வெள்ளையன் சேர்வைக்காரர் 15, 16
வெள்ளை மருது 17, 18, 46, 56, 160, 176. 177, 57, 78, 173, 174
வெள்ளச்சி நாச்சியார் 12, 74, 76, 141
வெள்ளிக்குறிச்சி 3

வில்லியம் பிளாக்பர்ன் 103

வீரபாண்டிய குலசேகரன் 98

வெங்கடாசலம் 71, 161
வெந்தோணி 58
வெட்டூர் 145, 146
வெள்ளக்குளம் 26

வேங்கன் பெரிய உடையாத்தேவர் 74, 77, 78, 133, 142, 157, 158
வேங்கன் மார்பன் 133
வேதமய்யா 60
வேம்பாற்றுக்கரை 1
வேலுநாச்சியார் 5, 6, 76
வேடசந்தூர் 184

ஜகத்விசய தண்ட நாயகன் 129
ஜகந்நாதன் ஐயன் 111, 113, 166
ஜப்பான் 181
ஜமீன்தார் 139

ஜாக்ஸன் 8, 33, 35
ஜார்ஜ் பிராக்டர் 37

ஜோசப் ஸ்மித் 4

ஷாமல்ஜி, சென்னை வணிகர் 36



திண்டுக்கல் சீமை
தொண்டமான் சீமை
சோழசீமை
பிரான்மலை
சிங்கம்புணரி
மதுரைச்சீமை
ஒக்கூர்
சோழபுரம்
சிவகங்கை
திருப்புவனம்
திருப்பாச்சேத்தி
மானாமதுரை
கட்டனூர்
திருநெல்வேலி சீமை
இராமநாதபுரம் சீமை



## இந்த நூலாசிரியர் . . . .

இராமநாதபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். வரலாற்று ஆய்வாளர். பல வரலாற்றுக் கருத்தரங்குகளில், இலக்கியம், வரலாறு, கல்வெட்டு, செப்பேடு, நாணயவியல் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகள் வழங்கி வருபவர். இவரது ஆக்கங்கள் :

1) இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் (1984)

2) விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987)
(தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்)

3) தமிழகமும் முஸ்லீம்களும் 1988
(சென்னை சீதக்காதி அறக்கட்டளையினரின் பரிசுபெற்ற நூல்)

4) பாஸ்கர சேதுபதி மன்னர் (1989)

பரணி அச்சகம் மதுரை-625 001